
புலவர்மணி அல்ஹாஜ்

ஆ.மு. ஷரிபுத்தீன்



# மருதமுனையின் வரலாறு

# மருதமுனையின் வரலாறு

# மருதமுனையின் வரலாறு

புலவர்மணி

**அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன்**

(முன்னைநாட் கல்வியதிகாரி)

பதிப்பாசிரியர்

**ஜின்னாஹ் ஷரிபுத்தீன்**

அன்னை வெளியீட்டகம்

மருதமுனை

மருதமுனையின் வரலாறு

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | புலவர்மணி அல்-ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் |
| பதிப்புரிமை | : | ஹம்ஸியா பரீதா ஷரிபுத்தீன் |
| வெளியீடு | : | அன்னை வெளியீட்டகம், மருதமுனை |
| அட்டைப்படம் | : | ஷப்றாஸ் ஷரிபுத்தீன் |
| முதற்பதிப்பு | : | 04.05.2009 |
| அச்சுப் பதிவு | : | குமரன் அச்சகம் |
| விலை | : | ரூபா 350/- |

Maruthamunayin Varalaru

| | | |
|---|---|---|
| Author | : | Pulavarmani Al-Haj A.M. Sherifudeen |
| Copywrite | : | Hamsiya Fareeda Sherifudeen |
| First Published in | : | 04.05.2009 |
| Published by | : | Annai Veliyeetagam,<br>- Maruthamunai<br>- 16, School Avenue, Off Station Road, Dehiwala, Sri Lanka.<br>T.P. 0112 730378 |
| Cover Design | : | Shafraz Sherifudeen |
| Printed by | : | Kumaran Press (Pvt) Ltd.<br>- 361 1/2, Dam Street, Colombo - 12.<br>T.P. 060 2097608 |
| Price | : | |
| ISBN | : | 978-955-0122-00-4 |

# சமர்ப்பணம்

கரம்பற்றிய நாளிலிருந்து

உலகைப் பிரியும் வரை

புலவர்மணி

அல்-ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீனின்

நிழலாய் இருந்து வாழ்ந்த

அன்னை ஆயிஷாவுக்கு

இந்நூல்

சமர்ப்பணம்

# பதிப்புரை

இலங்கையின் வரலாறு இன்னும் பூரணமாய் எழுதப்படவில்லை. அதுபோல் இன்னும் இலங்கை முஸ்லிம்களின் வரலாறும் எழுதப் படவில்லை. இனங்களின் வரலாறுகள் எனக் கொள்ளும் போது சிங்களவர்களின் வரலாறு கே.எம்.டி.சில்வா, பேராசிரியர் இந்திரபால போன்றவர்களால் எழுதப் பெற்றுள்ளது போல தமிழர்களின் வரலாறும் எழுதப் பெற்றுள்ளது.

பிரதேச வாரியாகச் சிற்சில வரலாற்று ஆவணங்கள் வெளியிடப் பட்டிருந்தாலும் இலங்கை முஸ்லிம்களின் முழுமையான வரலாறு இன்னும் எழுதப் பெறவேயில்லை. தற்போது தத்தமது கிராமங்கள் பற்றிய வரலாறுகளை எழுதும் முயற்சியில் சிலர் தனித்தும் சில கிராமியப் பொது அமைப்புகளும் எழுத முயன்று வருகின்றனர். இது அவசிய மானதும் வரவேற்கத்தக்கதுமாகும். இவ்வகையில் மருதமுனை யின் வரலாற்றை எனது தந்தையார் புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

இது அவர்கள் வாழ்ந்த காலப்பதிவுகளோடு நின்றுவிடுகிறது. அதற்குப் பின்னரான காலப்பதிவுகள் பொருத்தமானவர்களால் தொகுத்து எழுதப்பட வேண்டும். இம்முயற்சியில் முன்னாள் கல்வியதிகாரி மருதமுனை மஜீத் அவர்களால் எழுதப் பெற்ற "எனது கிராமத்தைத் தேடுகிறேன்" என்னும் நூல் ஒரு கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது என்பதை உணர்கிறேன். மருதமுனையின் வரலாறு என்னும் இந்நூல் எழுதப் பெற்றுப் பல வருடங்களாகியும் அச்சுப்பதிவு பெறாமல் போனது துர்ப்பாக்கியமே. உரிய காலத்தில் பதிவாகியிருந்திருந்தால் அதன் தொடர்ச்சி மற்றொருவரால் எழுதப்பெற்று நூலாக வெளிவந்திருக்கும். அதனைத் தொடர்ந்து செய்யத் தக்கவர்கள் மருதமுனைக் கிராமத்தில் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதால் அது தொடரப்படும் என்று நாம் முழுமையாக நம்பலாம்.

தந்தையார் வாழ்ந்த காலத்தில் இப்பணியைச் செய்யும்படி பலரைக் கேட்டுக் கொண்டும் அது நிறைவேற்றப்படவில்லை. அதன் பின் எடுக்கப்

**புலவர்மணியின் பிறநூல்கள்**

- சீறாப் புராணம் பதுறுப் படலம் (உரைநூல்)
- நபிமொழி நாற்பது (கவிதை)
  (இலங்கை சாகித்ய மண்டலப் பரிசு பெற்றது)
- வீராங்கனை சாஹிதா (கவிதை)
- புதுகுஷ்ஷாம் காவியம் (நான்கு காண்டங்களுக்கான உரைநூல்)
- புதுகுஷ்ஷாம் காவியம்
  (கல்விப் பொதுத் தராதர பாடத்திட்டத்திற்கான உரைநூல்)
- கனிந்த காதல் (நாட்டார் பாடல் பற்றிய ஆய்வு)
- இசைவருள் மாலையும் மக்கட்கு இதோபதேசமும் (கவிதை)
- உலகியல் விளக்கமும் நம்நாட்டின் நானிலக் காட்சிகளும் (கவிதை)
- முதுமொழி வெண்பாவும் சூறாவளிப் படைப்போரும் (கவிதை)
- புலவர்மணி செய்த தமிழ் (பல கவிதை நூல்களின் தொகுப்பு)

இன்னும் பல கவிதைத் தொகுப்புக்களும், கட்டுரைத் தொகுதிகளும் அச்சில் வரவுள்ளன.

பெற்ற பல முயற்சிகளும் கைகூடவில்லை. இந்நிலையில்தான் மூலப் பிரதியில் எந்தவொரு மாற்றமோ அன்றி புதிதான சேர்க்கையுமோ இல்லாது எனது குடும்பத்தின் சார்பாக இதனைப் பதிவு செய்ய நான் முயன்றேன்.

நூலுக்கான அணிந்துரையை நாடறிந்த அறிஞரும் அன்று கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளராகக் கடமை புரிந்ததுடன் மருதமுனையின் கல்வி வளர்ச்சிக்கும் பங்களிப்புச் செய்தவருமான அல்ஹாஜ் ஏ.எம். சமீம் அவர்கள் என் வேண்டுகோளுக்கிணங்க எழுதித் தந்தார்கள். அவர்களுக்கு நான் என் கிராமத்தின் சார்பாக நன்றி கூறக் கடமைப் பட்டுள்ளேன்.

நூல் வெளியீட்டு முயற்சியில் எனக்குப் பக்கபலமாக இருந்த எனது கிராமத்தைச் சேர்ந்த என் தந்தையின் மாணவர்களான செய்யது ஹஸன் மௌலானா, செய்யது இஸ்மாயில் மௌலானா ஆகியோருக்கும் எனது மருமகன் பொறியியலாளர் நியாஸ் ஏ.சமத் அவர்களுக்கும் நான் நன்றி யுடையவனாவேன்.

இந்நூலின் இறுதி வடிவம் என் அன்புத் தம்பி கவிஞர் அஷ்ரஃப் சிஹாப்தீனின் கைவண்ணத்தால் ஆனது. பல நாட்கள் தொடர்ந்து இதன் வடிவமைப்பை அழகுற அவர் செய்தார். அத்தோடு கணனிப் பதிவில் உண்டான எழுத்துப் பிழைகளையும் நீக்கி அச்சுக் குறைபாடுகளைக் களைந்து நூலை முழுமை பெறச் செய்தவர் அவரே. அவருக்குத் தனிப் பட்ட முறையில் எமது குடும்பத்தின் சார்பில் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூலின் அட்டைப் படத்தை அழகுற வடிவமைத்த எனது இளைய மகன் சப்றாஸ் ஷரிபுத்தீன், அதற்காகப் புகைப்படங்களைத் தந்துதவிய எனது சகோதரர் மகன் முஜீப் ஏ. சத்தார் ஆகியோருக்கும் அச்சுப்பதிவு செய்த குமரன் பதிப்பக உரிமையாளர் திரு. எஸ். குமரன் அவர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

# முன்னுரை

எந்த ஒரு மனிதனும், தனது வரலாறு, தனது குடும்ப வரலாறு, தனது கிராமத்தின் வரலாறு, தனது நாட்டின் வரலாறு என்பவற்றைத் தெரிந்திருத்தல் அவசியம். அது கடந்தகால நிலை எவ்வாறிருந்தது, இன்றைய நிலை எவ்வாறு அபிவிருத்தியடைந்துள்ளது என்பவற்றைத் தெரிந்து, இனி எது எவ்வாறு அபிவிருத்தியடைதல் வேண்டும், அவ்வபிவிருத்தியில் தனது பங்கு என்ன என்பவற்றைத் துணிவதற்கு ஒரு சாதனமாக அமையும். வரலாறு தெரியாத ஒருவன் தன்னை வளர்த்துக் கொள்ளவோ, தனது கும்பத்தை உயர்த்தவோ, தனது கிராமத்தை வளப்படுத்தவோ துணிய மாட்டான். "சரித்திரமறியாதவன் சண்டாளன்" என்றொரு பழமொழியும் உண்டு.

மருதமுனைக் கிராமத்தின் வரலாறு இன்றுள்ள எவருக்கும் நன்கு தெரிந்திருப்பதாகத் தெரியவில்லை. நான் சிறுவனாயிருந்த காலத்தில் வாழ்ந்திருந்த பெரியார்கள் மூலம் சில தகவல்களைக் கேட்டுத் தெரிந்து வைத்திருந்தேன். எனது கிராமத்தின் வரலாற்றினைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல் அன்று முதல் எனக்கு இருந்து வந்தது. அந்த ஆர்வம் பல்வேறு துறைகளில் ஆராய்ச்சி செய்ய என்னைத் தூண்டியது. அத்தூண்டுதலின் பயனாகவே இந்நூல் உருப்பெற்றது. எனக்கு முந்திய வர்களிடம் கேட்டுத் தெரிந்து கொண்டனவும், எனது ஆராய்ச்சியின் முடிவும், எனது சீவிய கால அனுபவமுமே இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இக்கிராமத்தின் ஒவ்வொரு மகனும் மகளும் எனது ஆராய்ச்சியின் முடிவுகளை நன்கு கிரகித்தல் வேண்டும். நான் தந்திருக்கும் தகவல்களில் எவருக்கும் அபிப்பிராயப் பேதங்களிருப்பின் தகுந்த ஆதாரங்களுடன் எனக்கு எடுத்துரைக்கும் படியும் மேற்கொண்டு தகவல்கள் கையிருப்பி லுள்ளவர்கள் அவற்றைத் தந்துதவும்படியும் வேண்டுகின்றேன். சரியான தகவல்களை அடுத்த பதிப்பிற் சேர்த்துக் கொள்வேன். (இன்ஷா அல்லாஹ்)

ஒவ்வொரு துறையிலும் இக்கிராமத்தின் பண்டைய நிலையும் அபிவிருத்தியடைந்து வந்த வரலாறும் ஒருவாறு கூற முடிந்ததேயன்றி அவற்றுக்கான கால எல்லைகளை வகுத்துரைக்கக் கூடிய ஆதாரங் களொன்றுங் கிடைக்கவில்லை. கர்ண பரம்பரையாகவுள்ள தகவல் களேயன்றி எழுத்துருப் பெற்ற ஆதாரபூர்வமான சான்றுகள் எனக்குக் கிடைக்கவில்லை. இதற்கு முன் எவர்தானும் இந்தத் துறையில் முயற்சிக்கத் துணியவுமில்லை. தமிழில் உயர்கல்வி கற்ற இவ்வூரின் முதல் மகன் நான் என்ற காரணத்தால் எனக்கு இப்பணி ஒரு முக்கியமான கடமையென்றுணர்ந்தேன்.

இவ்வளவாவது எழுத்து மூலம் இக்கிராமத்தின் வரலாறு பொறித்து வைக்க முடிந்தமை குறித்து மகிழ்ச்சியடைகிறேன். இந்நூல் எதிர்கால ஆராய்ச்சியாளருக்கு உதவக்கூடிய ஒரு சாதனமாகவும் தூண்டுதலாகவும் அமையலாம்.

வளர்ந்துவரும் இக்கிராமத்தின் வரலாறு இனியேனும் முறையாக எழுதி வைக்கப்படுதல் வேண்டுமென்பது எனது வேணவா!

ஆ. மு. ஷரிபுத்தீன்

# அணிந்துரை

இந்நூல் மருதமுனை என்ற ஒரு கிராமத்தின் வரலாறு. இக்கிராமம் எப்படி உருவானது? இக்கிராமத்தில் குடியேறியவர்கள் எப்படி, எக்காலத்தில் குடியேறினார்கள். அவர்களுடைய நடை, உடை பாவனைகள் அவர்களுடைய பழக்க வழக்கங்கள், அவர்கள் பேசிய மொழி, அவர்களுடைய சுற்றாடல், அவர்களுடைய நம்பிக்கைகள், அவர்கள் பின்பற்றிய மதம், மத அடிப்படையில் இருந்த அவர்களது ஆண்-பெண் உறவுகள், அவர்களுடைய தொழில், இப்படிப் பல இன்னோரன்ன விஷயங்களை எடுத்துக்கூறுகிறது.

இந்நூல் இக்கிராமத்தின் வளர்ச்சி, மக்களின் கல்வித் தராதரம், கல்வியில் ஏற்பட்ட வளர்ச்சி இவைகளைப் பற்றியும் கூறுகிறது. சுருக்கமாகக் கூறுவதென்றால், ஒரு கிராம மக்களின் வரலாறு இந்நூலில் அடங்கி இருக்கிறது. இது ஒரு சமூகவியல் நூல், ஒரு சமூகத்தைப் பற்றிய நூல், இதை ஒரு வரலாற்று நூலாக ஏற்றுக் கொள்ள முடியுமா? என்ற கேள்வி எழும்பலாம். ஆம் இது ஒரு வரலாற்று நூலே. மக்களைப் பற்றிப் பேசும் ஒரு வரலாற்று நூல்.

ஆகவே, வரலாறு என்றால் என்ன? வரலாற்று நூல் என்றால் என்ன? அரசர்களைப் பற்றியும், சாம்ராஜ்யங்களைப் பற்றியும் எழுதும் நூல்தான் வரலாறா? அரசர்களுக்கிடையில் ஏற்பட்ட யுத்தங்களைப் பற்றியும், வீரர்களின் வீரதீர செயல்களைப் பற்றியும் கூறுவதுதான் வரலாறா? அலெக்சாந்தரின் படையெடுப்புக்களைப் பற்றியும், ஜூலிய சீசரின் வெற்றிகளைப் பற்றியும் நெப்போலியனின் வெற்றி, தோல்விகளைப் பற்றியும்தான் அதிகமான வரலாற்று நூல்களில் காண்கிறோம். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய கார்ல்மார்க்ஸ், "இது வரலாறல்ல" மக்களைப் பற்றியும் அவர்களுடைய போராட்டங்களைப் பற்றியும், வர்க்க முரண்பாட்டைப் பற்றியும் கூறுவதுதான் வரலாறு என்றும் ஒரு மாற்றம் தான் மக்களுடைய வாழ்க்கையையே நிர்ணயிக்கிறது என்றும் பொருள் முதல் வாதத்தை முன்வைத்தார் மார்க்ஸ். ஆனால் புதிய தத்துவத்தை உலகுக்கு எடுத்துக்காட்டியவர் இப்னு கல்தூன் என்ற வரலாற்றாசிரியர்.

பதின்மூன்றாம் நூற்றாண்டில் வட ஆபிரிக்காவில் டெருகியர்சினும் ஸ்பெயின் தேசத்திலும் வாழ்ந்த இப்னு கல்தூன், வரலாறு எப்படி எழுத வேண்டும் என்பதற்கு ஒரு புதிய விளக்கத்தை, ஒரு புதிய தத்துவத்தைக் கொடுத்தார். இதற்கு முன்பு கிரேக்க வரலாற்றாசிரியர் ஹோமர் போன்றவர்கள் கர்ண பரம்பரையான கதைகளை உள்ளடக்கி வீரர்களைப் பற்றியும் கூறிய வரலாறு என்று மக்களுக்கு ஒரு மாயத் தோற்றத்தைக் கொடுத்தர்கள். இப்னுகல்தூன், தன்னுடைய ஆய்வில் சமூகத்துக்கு முதலிடம் கொடுக்கிறார். சமூகத்தின் அமைப்பு அதன் தோற்றம், வளர்ச்சி ஆகியவைகளைக் கூறும்போது, வரலாற்றாசிரியருக்குத் தேவையான சம்பவங்களையும், நிகழ்ச்சிகளையும் எடுத்துக் கூறும் போது, வரலாற்றா சிரியனே ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு ஏதுவாயிருக்கும் என்று கூறுகிறார். ஓரிடத்தில் உள்ள தண்ணீர் எப்படிப் பிறிதோரிடத்திலுள்ள தண்ணீரை ஒத்திருக்கிறதோ, அதேபோல என்று கூறுகிறார். ஆகவே சமூகத்தைப் பற்றிய இன்றைய நிலை கடந்த கால வரலாற்றைப் பிரதி பலிக்கின்றது. எனவே சமூகவியல் என்பது, மனித சமுதாயத்தின் வெவ் வேறுபட்ட இயல்புகளையும், அதன் வளர்ச்சியை ஏற்படுத்தும் சட்டதிட்டங்களையும் அறிவதே, அவை, அரசியல் சமூகவியல், நகரப்புற சமூகவியல், பொருளாதார சமூகவியல், அறிவு சமூகவியல் என்று பிரிக்கலாம் என்று இப்னு கல்தூன் கூறுகிறார்.

முதலாவதாக, சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் இயற்கை மாற்றங்கள் போலல்லாமல் ஒரு குறிப்பிட்ட சட்டதிட்டங்களுக்கமைய அமைவ தில்லை. எனவே சமூக மாற்றங்களுக்கான அடிப்படைக் காரணங்களை அறிவதன் மூலம் வரலாற்றுச் சம்பவங்கள் ஏன் ஏற்படுகின்றன என்ற காரணத்தையும் அறியலாம்.

இரண்டாவதாக, சமூகத்தில் ஏற்படும் மாற்றங்கள் பொதுமக்க ளிடையே ஏற்படும் கருத்து மாற்றங்களினால் ஏற்படுபவையே அல்லாமல், தனிப்பட்ட மனிதர்களினால் அல்ல என்ற உண்மையும் விளங்கும், தனி நபர்களுடைய செல்வாக்கு, சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்களினால் மழுங்கடிக்கப்படுகின்றன.

மூன்றாவதாக, சமூகத்திலேற்படும் மாற்றங்களுக்குரிய காரணங்களை அறிவதற்கு, சம்பவங்களையும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்காகக் கோர்க்கும் போதுதான், அச்சமூகத்தின் வரலாற்றை அறியலாம்.

வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு காலங்களில் சமூகங்களில் ஒரே விதமான மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணம், அச்சமூகங்களின் அமைப்பு முறை ஒரே மாதிரியாக இருப்பதனாலும் அம்மாற்றங்களுக்குரிய காரணிகள் மாறுபாடாக இருப்பதனாலுமே.

ஐந்தாவதாக, சமூகங்கள் மாற்றமடையாமல் நிரந்தரமாக ஒரே நிலையில் நிற்கும் தன்மையுடையனவல்ல. அவை மாறிக்கொண்டே இருக்கும். அதில் மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். பிற மக்கள் தொடர்பினாலும், உற்பத்தி சாதனங்களின் மாற்றங்களினாலும், மாற்றங்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். இவைகளை விவரிப்பது தான் வரலாறு.

மேலே குறிப்பிட்ட வரலாற்று நுணுக்கங்கள், மருதமுனை வரலாற்று நூலில் அடங்குவதை நாம் அவதானிக்கலாம். இனி இவ்வரலாற்றுநூலை விரிவாக ஆராய்வோம். தமிழ் நாட்டில் தோன்றிய 'கல்கி", 'சாண்டில்யன்", போன்ற நாவலாசிரியர்கள் மக்களைப் பற்றிக் கூறாமல், வீரதீர செயல் களைக் கூறும் கதாபாத்திரங்களையும், அரசர்களையும், இளவரசர்களையும் கூறி மக்களுடைய வரலாறு பற்றிய அறிவை திசை திருப்பி, மழுங்கடிக்கச் செய்கிறார்கள். ஷரிபுத்தீன் புலவரினால் எழுதப்பட்ட இவ்வரலாற்று நூல், வரலாறு எதுவதற்கு முன் மாதிரியாக அமையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

மருதமுனை மக்களின் வரலாறு எழுதுவதற்குத் தனக்குத் தகுந்த ஆவணங்கள் கிடைக்கவில்லை என்று ஆசிரியர் கூறினாலும், மக்களைப் பற்றிய இவ்வரலாற்று நூலைப் படிக்கும்போது, ஆரம்பத்தில் இக்கிராமங்களில் குடியேறிய முஸ்லிம்கள் எப்படி வாழ்ந்தார்கள் என்ற உண்மையைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல் எனக்கு தென்பட்டது. பதினேழாம் நூற்றாண்டில் இலங்கையில் கைதியாக வாழ்ந்த றொபர்ட் நொக்ஸ் என்ற ஆங்கிலேயர் எழுதிய இலங்கையைப் பற்றிய நூலில் சொல்லப்பட்ட சிங்களவர்களைப் பற்றியும், முஸ்லிம்களைப் பற்றியும் செய்திகள், இந்நூலில் இருப்பதை நான் ஒப்பிட்டுப் பார்த்தேன். அவ்வாங்கிலேயன் எழுதிய நூல் எவ்வளவு பிரபல்யம் அடைந்ததோ அதே பிரபல்யம் இந்நூலும் அடையவேண்டும் என்பது எனது அவா.

சிங்கள மன்னராட்சியின் காலத்தில் சுமார் பத்து மைல்களுக்கப்பால், ஒரு குடியிருப்பை ஏற்படுத்தியிருந்தனர். இப்படித் தோன்றிய குடியிருப்புக்களில் ஒன்றுதான் மருதமுனை. பிரயாணிகள் இரவில் தங்கி இளைப்பாறிப் போவதற்கு இக்குடியிருப்புக்களில் குடியிருந்த தமிழ் மீனவர்கள் மருதமுனை வழியாக மட்டக்களப்பிற்குச் சென்று வந்தனர். மாரிகாலங்களில் மருதமுனையிலிருந்து படகுகளில் மட்டக்களப்பிற்குச் சென்று வந்தனர். துறைநீலாவணையிலிருந்து மருதமுனை வழியாகத் தெற்கே செல்லும் பாதையில் மருதமரங்கள் அடர்த்தியாக இருப்பதனால் இவ்விடத்திற்கு இப்பெயர் வந்திருக்கலாம். படகுகள் நிறுத்தி வைப்பதற்கும், ஞாயிறு நாட்களில் சந்தை நடப்பதற்கும், பிரயாணிகள்

தங்குவதற்கும் இன்னும் பல காரணங்களினால் அந்திமேடும் அதனைச் சுற்றியுள்ள நிலப்பரப்புமே மருதமுனையின் ஆதிக்குடியிருப்பு என்று கூறலாம் என்று ஆசிரியர் கூறுகிறார்.

சுமார் ஐந்நூறு அறுநூறு வருடங்களுக்கு முன், கிழக்கிந்தியத் தீவுகளிலிலிருந்து சில முஸ்லிம்கள் அரசியல் பிரச்சினை காரணமாக கிழக்குக் கரையோரம் வந்தடைந்தார்கள். மட்டக்களப்புக்குத் தெற்கே ஓரிடத்தில் சனநடமாட்டம் இருப்பதைக் கண்டு அங்கே இறங்கினார்கள். அவர்களுக்கு நெசவுத்தொழில் மாத்திரமே தெரிந்திருந்ததனால், நெசவுத் தொழிலில் ஈடுபட்டார்கள். மீன்பிடித் தொழிலைக் கொண்டிருந்த தமிழ் மீனவர்கள் நீலாவணையிலிருந்த முஸ்லிம்களுடன் இடமாற்றஞ் செய்து கொண்டார்கள். துறை நீலாவணையிலிந்த முஸ்லிம்கள் மருதமுனைக்கும் மருதமுனையிலிருந்த தமிழர்கள் துறை நீலாவணைக்கும் இடம்மாறிக் கொண்டனர். இருபதாம் நூற்றாண்டு ஆரம்பத்தில் தான் அரசாங்க ஏடுகளில் மருதமுனை என்ற ஊர் பதிவு செய்யப்பட்டது. 1911ம் ஆண்டில் ஓர் அரசாங்க பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபிறகுதான் மருதமுனை என்ற பெயர் பிரபல்யம் அடைந்தது. முஸ்லிம்கள் ஐநேரத் தொழுகை யிலீடுபடுபவர்களாதலால், தாங்கள் எங்கெல்லாம் குடியேறினார்களோ அங்கெல்லாம் ஒரு பள்ளிவாசலை அமைத்துக் கொண்டார்கள். இக்கிராமம், நாளுக்கு நாள் சனப்பெருக்கம் அதிகரித்ததனால் வளர்ந்து வந்தது. ஒந்தாச்சிமடம் போன்ற இடங்களில் வாழ்ந்த முஸ்லிம்கள் மருதமுனையில் குடியேறினார்கள். தென்னிந்தியாவிலிருந்து அடிக்கடி பாய்மரக் கப்பலில் வந்த முஸ்லிம்களும் இங்கு குடியேறினார்கள். சம்பான் என்ற படகில் வந்ததனால் இவர்களை சம்மான்கள் என்றழைத்தனர் உள்ளூர் வாசிகள். கிழக்கிந்திய ஒல்லாந்தர் படையில் இருந்த அனன் என்ற போர்வீரர், ஆங்கிலேயருக்கு எதிராக சிங்கள மன்னருக்கு உதவியாகப் போரிட்டதனால் அவரை ஒரு தேசிய வீரராக சிங்களவர் கணிப்பிட்டனர். ஆரம்பத்தில் குடியேறியவர்கள் ஜாவா நாட்டிலிருந்து வந்தவர்களாதலால் ஜாவா குடியினர் என்றழைக்கப்பட்டனர். கிழக்குப் பிரதேசத்தில் குடியேறிய தமிழர்கள், கேரள நாட்டுப் பழக்கப்படி தாய்வழி குடும்ப முறையைக் கடைப்பிடித்தனர். ஆகவே தங்கள் குழுக்களுக்குக் குடிப் பெயரைக் கொடுத்தனர். முஸ்லிம்கள் தமிழ்குடும்பங்களில் பெண்ணெடுத்த காரணத்தினால் அந்தக்குடிவழியைப் பின்பற்றினர். என்னுடைய பாட்டனார் மாந்திராக் குடியைச் சேர்ந்தவர் என்று எங்கள் தாயார் கூறுவார். காத்தான்குடியில் மாந்திராக் குடியினர் பெரும் செல்வாக்குப் பொருந்தியவர்களாக இருந்தனர். மாந்திராக் குடியினர் ஒரு கணிசமான அளவு மருதமுனையில் குடியேறினர்.

இக்கிராமத்தில் சிலர் சோழியர் என்றும் வேறு சிலர் மவுலானா என்றும் தம்மைக் கூறிக்கொண்டனர். தென்னிந்தியாவிலிருந்தும் சோழநாட்டிலிருந்தும் வந்தவர்கள்தான் தம்மை சோழியர் என்று கூறிக்கொண்டனர். இது நாளடைவில் சோலியா என்று மருவிற்று. வேறு சிலர் இஸ்லாமிய பிரச்சாரம் காரணமாக சுமார் முன்னூறு வருடங்களுக்கு முன்வந்து இங்கேயே தங்கிவிட்டனர். இவர்களின் சந்ததியினர் தான் தம்மை மவுலானா என்று அழைத்துக் கொண்டனர்.

இவ்வூர் மக்கள் விவசாயத்தில் நாட்டம் கொள்ளவில்லை. அம்பாறை நீர்ப் பாசனத்திட்டத்தில் அரசாங்கம் இவ்வூர் மக்களுக்கு காணி நிலம் கொடுத்து அக்காணியை பண்படுத்த உபகரணங்களையும் கொடுத்தது. ஆனால் இவர்களில் பெரும்பாலோர் தமக்கு அளிக்கப்பட்ட காணிகளை விற்றுவிட்டு ஊரோடு வந்து சேர்ந்தனர். இவர்களுக்கு விவசாயத்தில் நாட்டம் இருக்கவில்லை. திருப்பவும் தங்கள் நெசவுத்தொழிலுக்கே போய்விட்டனர். இக்கிராமத்திலுள்ளவர்கள் கண்டிப் பிரதேசத்திலுள்ள சிங்களவருடன் விவசாயஞ் செய்தனர். 'தவளம்" என்று கூறக் கூடிய மாடுகளின் மேல் பொதிகளை ஏற்றி கண்டிச் சிங்களவருக்கு, வெளிநாட்டுப் பொருட்களையும், கரையோரப் பொருட்களையும் விற்று கண்டி மக்களிடமிருந்து அங்கே விளையும், ஏலம், கறுவா, கராம்பு, சாதிக்காய், கோப்பி, பாக்கு என்பனவற்றை உள்ளூர் மக்களுக்கும். கப்பலில் வரும் வெளியூர் மக்களுக்கும் விற்று சிறப்பாக வாழ்ந்தனர்.

பதினாறாம் நூற்றாண்டில் கண்டியை ஆண்ட செனரத் என்ற சிங்கள மன்னன், போர்த்துக்கீசரின் அட்டகாசம் தாங்கமுடியாமல் மேற்குக்கரை யோரப் பகுதியில் வாழ்ந்த முஸ்லிம்கள் கண்டி மன்னனிடம் தஞ்சம் புகுந்தனர். இப்படித் தஞ்சம் புகுந்த முஸ்லிம்களை சிங்கள மன்னன் கிழக்குக் கரையோரப் பகுதிகளில் குடியேற்றினான். இப்படிக் குடியேற்றப்பட்ட கிராமங்களில் ஒன்றுதான் மருதமுனையும்.காத்தான் குடி, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, போன்ற இடங்களில் குடியேறிய இவர்கள், தங்களின் தொடர்பு அற்றுப் போகாமல், தங்களிடையே திருமண தொடர்புகளை வைத்துக் கொண்டனர். இப்படித் தொடர்பு வைத்த இவர்கள் அவ்வப்பகுதிகளில் குடியேறினர். அதேபோல மருதமுனையில் திருமணம் செய்தவர்கள் மருதமுனை யிலேயே குடியேறினர். ஆகவே மருதமுனை மக்களுக்கு உற்றார் உறவினர் பல முஸ்லிம் கிராமங்களிலும் இருக்கின்றனர்.

தங்களுடைய வீடுகளை இஸ்லாமிய முறைப்படி வாழ்வதற்கு வசதியாகக் கட்டுவார்கள். முன்வாசலில் ஆண்கள் மட்டும் நடமாடுவார் கள். நடுப்பகுதி, முக்கியமான சாமான்களை வைப்பதற்கும், குடும்பத்தார்

உணவு பரிமாறுவதற்கும் பாவிப்பார்கள். பெண்கள் இருக்கக்கூடிய பகுதி தனியாகவே இருக்கும். இப்பகுதிக்கு வீட்டிலுள்ள ஆண்களும் வருவதில்லை. இவர்கள் வீடு கட்டும்போது கிராமத்தவர்கள் எல்லோரும் சேர்ந்து உதவுவார்கள். வீடு கட்டும்போது சிலசடங்குகள் கடைப் பிடிக்கப்படும். 'நாள் பார்த்து நிலமெடுத்துக் கால்நாட்டுதல், வளையேற்றுதல், நிலைநாட்டுதல், குடிபுகுதல் எல்லாச் சடங்குகளும் வீட்டின் சரித்திரத்தில் நிகழும்" என்று ஆசிரியர் கூறுகிறார். அவர்களின் வீட்டின் அமைப்பை ஆசிரியரே பின்வருமாறு கூறுகிறார். 'வீடு மூன்று அறைகளாக தெரிக்கப்படும். வலது புறத்தறை சாப்பு அல்லது நெய்யும் கூடம் எனப்படும். அந்த அறையில் குழித்தறியொன்று இருக்கும். வீட்டுடையார் அதில் நெசவு செய்வார். நடு அறை உள்வீடு எனப்படும் அதனுட்தான் முக்கியமான பொருட்களெல்லாம் வைத்து பாதுகாக்கப்படும். படுக்கையறையும் அதுதான்.

"இடது புறத்தறை ஆலவீடு எனப்பட்டது. அதனுள் பெண்களின் தட்டுமுட்டுச்சாமான்களிருக்கும்". இப்படி வீட்டின் அறைகளைப் பற்றியும் அவைகளின் உபயோகம் பற்றியும் விரிவாகக் கூறுகிறார் ஆசிரியர். மக்களுடைய பழக்க வழக்கங்களைப் பற்றிக் கூறும்போது ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

'கட்டிலோ கதிரையோ மேசையோ அப்பொழுதில்லை வந்தவர்களும் இருக்க, நெய்யற் கூடத்துள் பாயெடுத்துப் போடுவார்கள். உள்வீடு பெண்களின் அந்தப்புரம் வந்த பெண்கள் இடது புறத் திண்ணையில் உட்காருவார்கள். அந்தப்புரத்தைத் தெரித்து வாசலில் தட்டுவேலி சுட்டியிருப்பார்கள் அது சித்திர சகிதம் உறுதியாகக் கட்டப்படும்"

அக்காலத்தில் மின்சார விளக்குகளோ, மண்ணெண்ணை விளக்குகளோ இருந்ததில்லை. ஆகவே, கடற்கரையில் இருந்த புன்னை மரங்களின் விதைகளைச் சேர்த்து ஊற்றிய எண்ணெய், வேப்பங் கொட்டை எண்ணெய், ஆமணக்கங்கொட்டை, தேங்காய் எண்ணெய் ஆகியவைகளை விளக்கெரிக்க பாவிப்பார்கள்.

அந்தக் காலத்தில் தீப்பெட்டி இருக்கவில்லை. வீடுகள்தோறும் உமிச்சட்டங்கள் இருக்கும். நெருப்புத் தேவையான போது அந்தச் சட்டியிலுள்ள நெருப்பை மூட்டிப்பற்ற வைத்துக் கொள்ளுவார்கள். சமூகக் கட்டுப்பாட்டுக்கும் இந்த நெருப்பு பயன்பட்டது. இஸ்லாமிய சமூகம் மிகவும் கண்டிப்பாக இஸ்லாமிய ஒழுக்க முறைகளைக் கடைப்பிடிக்கும். இஸ்லாமிய சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக யாராவது நடந்தால், பள்ளி நிர்வாக சபை அவர்களை சமூகத்திலிருந்து விலக்கி வைக்கும். இக்குடும்பத்துடன் யாரும் எவ்விதத் தொடர்பும் வைக்கக்கூடாது என்று

முடிவெடுக்கும். இக்குடும்பத்துக்கு யாரும் தணல் கொடுக்கமாட்டார்கள். அப்படித் தணல் கிடைக்காவிட்டால், அக்குடும்பம் உணவு சமைக்க முடியாமல் பட்டினியால் இருந்து சாக வேண்டியதுதான். அன்றைய முஸ்லிம் சமூகம் இப்படித்தான் தனது சமுதாயத்தைப் பாதுகாத்தது.

அன்றைய சமுதாயத்தில் ஒரு முக்கிய தேவை ஏற்பட்டால் எல்லோரும் சேர்ந்து உழைப்பர். வீடு கட்டுவதென்றாலோ, கிணறு வெட்டுவதென்றலோ எல்லோரும் சேர்ந்தே இதில் ஈடுபடுவார்கள். ஏற்றத் தாழ்வு இல்லாத இச்சமுதாயத்தை 'Prinitir Commnisim'' 'ஆதிகால பொதுவுடைமை", என்று கூறினார்கள். ஏற்றத்தாழ்வு இல்லாமல் வர்க்க பேதமின்றி இச்சமூகங்கள் சமாதானத்துடனும் சௌஜன்யத்துடனும் வாழ்ந்தார்கள்.

இக்கிராம மக்களுடைய முக்கிய தொழில் நெசவுத்தொழிலாக இருந்தது. பருத்தி நட்டு, அந்தப்பஞ்சை நூலாக்கி பிறகு ஆடையாக நெய்து தமக்கு வேண்டிய ஆடைகளை நெய்தார்கள். ஆண்கள் சாரம் உடுத்தார்கள். பெண்கள் கம்பாயம் என்று சொல்லப்படுகின்ற சேலையை உடுத்தார்கள். நாகரீகம் வளர வளர இக்கிராமத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. அதில் ஒன்று தான் கல்வி வளர்ச்சி. கிறிஸ்தவ மிஷனரிமார் நகர்ப்புறங்களில் ஆங்கிலப் பாடசாலைகளை நிறுவி ஆங்கிலம் கற்பிப்பதோடு தங்களின் மதமான கிறிஸ்தவ சமயத்தையும் பரப்பினார்கள். முஸ்லிம்கள் இவ்வாங்கிலப் பாடசாலைகளில் கல்வி கற்க விரும்பவில்லை யாதலால், தமிழ் மொழியிலேயே கல்வி கற்றனர். ஆங்கில அரசாங்கத்தில், ஆங்கிலம் கற்றவர்களுக்கு மாத்திரமே அரசாங்கத்தில், உயர் பதவிகள் கிடைத்தன. தமிழ் படித்தவர்கள் பெரும்பாலும் ஆசிரியத் தொழிலிலேயே கல்வி கற்றனர். தமிழ் படித்தவர்கள் பெரும்பாலும் ஆசிரியத் தொழிலி லேயே தங்கிவிட்டார்கள். இவர்களில் பலர் கவிஞர்களாகவும் எழுத் தாளர்களாகவும் சிறந்து விளங்கினார்கள். ஆங்கிலம் மட்டும் கற்றிருந்தால் பெரும் உத்தியோகங்களுக்குச் சென்றிருப்பார்கள்.

நான் எழுபதாம் ஆண்டில் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளராக கடமையேற்ற பிறகு, இங்கு பல அறிஞர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தேன். கிராங்களுக்கிடையே இருந்த போட்டியின் காரணமாக, இங்கே அரசியல்வாதிகளால், மருதமுனையின் வளர்ச்சி தடைப்பட்டது. கல்முனையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் பெரும்பாலும் சாய்ந்தமருதுவைச் சேர்ந்தவர்களாதலால், இந்தக் கிராமப்பகை அரசியலிலும் பிரதிபலித்தது. மருதமுனைக்கு இழைக்கப் படும் அநியாயத்தை உணர்ந்த நான், கல்வி அமைச்சரின் அனுமதியுடன் மருதமுனைக்குக் கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தேன். எனக்கும்

இந்தப் பாராளுமன்றப்பிரதிநிதிகளுக்கும் பெரும் யுத்தமே நடந்தது. மருத முனையினால் தெரிவு செய்யப்படாத எம்.பி. என்று நான் அவர்களுக்குக் கூறினேன். மருதமுனையை முன்னேற்ற எனக்கு பணம் தேவைப்பட்டது. எம்.பியின் அனுமதியில்லாமல் கல்முனைக்கு ஒதுக்கப்பட்ட நிதியை என்னால் தொடமுடியாது. ஆகவே, கல்வி அமைச்சுக்கு 22 மாவட்டங் களிலிருந்தும் செலவு செய்யாமல் திருப்பி அனுப்பப்பட்ட நிதியை, அமைச்சரின் அனுமதியுடன் எனக்குத் தேவையான, பின்தங்கிய முஸ்லிம் கிராமங்களுக்கு அவர்களுடைய கல்வி வளர்ச்சிக்காகச் செலவு செய்தேன். அதில் முக்கியமான கிராமம்தான் மருதமுனை. பொத்துவில், ஒலுவில் அட்டாளைச்சேனை ஆகிய இடங்களில் கல்வி வளர்ச்சிக்காகவும் பணம் செலவழித்தேன். இப்படித்தான் கிழக்குமாகாணத்தின் கல்வி வளர்ச்சிக்காக நான் பாடுபட்டேன். அதன் பலாபலன்களை இன்று அனுபவிக்கின் றார்கள்.

அல்-ஹாஜ் அ. முகம்மது சமீம்

(முன்னாள் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர்)

# வெளியீட்டுரை

மருதமுனை அன்னை வெளியீட்டகத்தின் சார்பாக கவிதைத் தொகுப்புகள், காவியங்கள், சிறுகதைத் தொகுப்புகள், நாவல், சிறுவர் இலக்கியங்கள், ஆய்வு போன்ற பல்துறைசார் நூல்களை நாம் வெளியிட்டுள்ளோம்.

இம்முறை புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களால் எழுதப் பெற்ற மருதமுனையின் வரலாறு என்னும் இவ்வரலாற்று நூலையும் வெளியிடுவதில் மகிழ்வு கொள்கிறோம்.


இதுகாலவரை எமது வெளியீட்டக நூல்களுக்கு ஆதரவளித்துள்ள வாசகப் பெருமக்கள் இந்நூலுக்கும் தொடர்ந்து வெளியிடப்படவுள்ள நூல்களுக்கும் ஆதரவு தந்து எமது வெளியீட்டுப் பணிக்கு உதவும்படி கேட்டுக் கொள்கிறோம்.

நன்றி

ஹம்ஸியா பரீதா

அன்னை வெளியீட்டகம்

மருதமுனைப் படம்



# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | பதிப்புரை | vii |
| | முன்னுரை | ix |
| | அணிந்துரை | xi |
| | வெளியீட்டுரை | xix |
| | மருதமுனைப் படம் | xx |
| *1.* | ஆதிக்குடியேற்றம் | *1* |
| *2.* | தொழில் முயற்சிகள் | *24* |
| *3.* | உடை | *44* |
| *4.* | ஊர்ப் பரிபாலனம் | *48* |
| *5.* | விழாக்கள் | *61* |
| *6.* | இயற்கையின் சீற்றம் | *67* |
| *7.* | கல்வி (மார்க்கக்கல்வி) | *70* |
| *8.* | கலைகள் | *95* |
| *9.* | விளையாட்டுக்கள் | *97* |
| *10.* | வைத்தியம் | *99* |
| *11.* | இலக்கிய முயற்சிகள் | *101* |
| *12.* | வர்த்தகம் | *109* |
| *13.* | போக்குவரவு | *118* |
| *14.* | தேர்தற் தொகுதி | *121* |
| *15.* | அலியார்ப் போடி குடியின் வரலாறு | *140* |

# I

# ஆதிக் குடியேற்றம்

இந்த நாட்டைச் சிங்கள மன்னர் ஆட்சி செய்த காலத்தில் பிரதான தெருக்களெல்லாம் சுமார் பத்து மைல்களுக்கப்பால் ஒரு குடியிருப்பை ஏற்படுத்தியிருந்தனர். வாகனப் போக்குவரத்து இல்லாத அந்தக் காலத்தில் ஒரு கால்நடைப் பிரயாணியின் ஒரு பகற் செலவு பத்து மைல் எனக் கொண்டு அவனது இராத்தங்கலுக்காக அக்குடியிருப்புக்களை அரசாங்கப் பொறுப்பில் ஏற்பாடு செய்திருந்தனர். குடியேற்றப்பட்ட மக்களுக்கு வாழ்க்கை வசதிகளுஞ் செய்து கொடுதிருந்தனர். கரையோரப் பாதை களிலிருந்து பிரிந்து உள்நாடு செல்லும் இணைப் பாதைகளின் சந்திப்புகளிலும் அத்தகைய குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தன. பொத்துவில், கருங்கொடித்தீவு, காரைதீவு, களுவாஞ்சிக்குடி என்பன அத்தகைய குடியிருப்புகளாகும். மருதமுனையும் அத்தகைய குடியிருப் பொன்றுதான்.

துறைநீலாவணை வழியே அக்கரைப்பட்டு, அன்னமலையைக் கடந்து உள்நாடுகளுக்கு ஒருபாதை மருதமுனையிலிருந்து பிரிந்து சென்றது. மட்டக்களப்பிலிருந்து தெற்கே செல்லும் பிரசித்த தெருவில் அமைந்த மருதமுனையில் தமிழ் மீனவர்கள் குடியேற்றப்பட்டிருந்தனர். அம்மீனவர்கள் மருதமுனையிலிருந்து தினந்தோறும் மட்டக்களப்பு வாவிக்குச் சென்று மீன்பிடித்து வந்தனர். மாரி காலத்தில் அவர்களின் தோணிகள் மருதமுனையிலிருந்தே புறப்பட்டு வாவிக்குச் செல்லும். இடையிலுள்ள நிலப்பரப்பு நீரால் நிரம்பியிருக்கும். நவியான் குளத்துக்கும் சிறுகுளத்துக்கும் (இவை அன்று குளங்களாகத் தெரிக்கப்படவில்லை) இடையிலுள்ள முனையில்தான் தோணிகள் தரை தட்டும். அந்த முனையையடுத்துத்தான் மக்கள் குடியிருப்பும் இருந்தது. அதற்கான ஆதாரங்கள் பல உண்டு.

1. ஆத்திமேடு என அழைக்கப்படும் அந்த முனைப்பகுதியில் பல மருதமரங்கள் நின்று அழிந்து போனதை நான் கண்டிருக்கிறேன். மாரி காலத்தில் மீனவர் தம்தோணிகளை அந்த மருதமரத்தடி முனைக்குக் கொண்டு வந்து கரை சேர்ந்திருக்கின்றனர். மருத மரத்தடிமுனை காலாந்தரத்தில் மருவி மருதமுனையாகி விட்டது.

2. மாரிகாலத்தில் அக்கரைப்படும் பிரயாணிகளுக்காகத்துறைத் தோணி அரசாங்கப் பொறுப்பில் இருந்தது. அது அக்கரையில் இருந்து வரும் வரை பிரயாணிகள் தங்கியிருப்பதற்கு அம்முனையில் "அம்பலம்" ஒன்று கட்டப்பட்டு இருந்தது. அதனால் அம்முனைக்கு "அம்பலத்தடி" என அழைத்தனர்.

3. மக்கள் குடியிருப்பையடுத்துத்தான் காகங்கள் கூடு கட்டிக் கொண்டு வசிக்கும். அவை தங்கள் பழைமையை மறப்பதில்லை. ஆத்தி மேட்டில் காகங்கள் பன்னெடுங்காலமாக வசித்து வருகின்றன. எத்தகைய தொந்தரவு செய்தாலும் அவை அவ்விடம் விட்டு வேறிடஞ் செல்வதில்லை.

4. துறைநீலாவணை, நற்பட்டிமுனைக் கிராமங்களிலிருந்து பாதைகள் அந்த இடத்தை வந்து சேருகின்றன. பெருந்தெருவும் அவ் விடத்துக் குடியிருப்பை நோக்கி வந்து முடங்கிச் செல்லுகிறது.

5. பலகுடியிருப்புகளின் மத்தியான ஓரிடத்திற்தான் சந்தை கூடும். மிகப் பழங்காலந் தொடக்கம் அவ்விடத்தில் மாலைச் சந்தை கூடி வருகிறது. இது சிங்கள மன்னர் கால ஏற்பாடாயிருக்க வேண்டும். மணற் பாதைகள் வந்து சந்திக்கும் அவ்விடத்துக்குச் "சந்தி மூணல்" என்றார்கள். தெரு முடங்கிச் செல்லும் அவ்விடத்துக்கு "முடக்கு" எனவும், மாரியில் ஊரின் மிதமிஞ்சிய நீர்வெளியேறப் பிற்காலத்தில் "கான்" ஒன்று அவ்விடத்திற் கட்டப்பட்டதால் "கானடி"என்றும் அழைத்தனர்.

6. மிகப் பழைமையான வீடுகள் பல இன்றும் சந்தைக்கு அண்மையில் இருப்பதைக் காணலாம். அத்தகைய பழைய வீடொன்றின் வாசலிலிருந்த மரக்கொட்டுக் கிணறு ஒன்றைப் பிடுங்கி விட்டு நான் அவ்விடத்தில் "கற்கிணறு" ஒன்று கட்டினேன். அங்கே பழங் காலத்தில் நீரெடுப்பதற்குத் தோண்டிய குழியுள் மண் சரியாமல் நான்கு புறத்தும் தென்னங் கட்டைகளையடுக்கி அவற்றை உறுதிப்படுத்த நீண்ட உறுதியான உல்லுத் தடியை நாட்டி இறுக்கி வைக்கப்பட்டிருந்ததைக் கண்டேன். மிகச் சிரமத்தோடு அவற்றை வெளியே எடுத்த பின்னர்தான் கிணற்றை இறக்க முடிந்தது. ஆரம்ப காலத்தில் சேனை வெட்டிப் பயிர் செய்தவர்கள் குடிநீர் பெற உபயோகித்த துரவுதான் அது. பழங்காலத்திலும் சாத்திர முறைப்படி வளவுகளில் நிலமெடுத்து வீடு, கிணறு கட்டியிருக் கின்றனர் என்பதற்கு அந்தத் துரவு ஒரு சான்றாகும்.

7. மக்களின் நீண்டகால வசிப்பிடமாக அவ்விடம் இருந்ததனால் மண் மிக்க தாவரக் கலப்புள்ளதாயிருப்பதை அவதானிக்கலாம்.

8. மிகப் பழைமையான தென்னை மரங்கள் அப்பகுதியிற்தான் இருந்தன. நான் சிறுவனாக இருந்தபோது கண்டிருக்கிறேன். அவையெல்லாம் அழிந்துபோக அவைகளைப் போன்ற மரங்களை இன்று காணக் கூடியதாயிருக்கிறது.

9. மக்காமடி வளவின் பழைய உறுதியில் அதற்குக் கோயிலடி வளவு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இங்கு வசித்த தமிழ் மீனவர்கள் அந்த வளவிற்தான் கோயில் கட்டி வழி பட்டிருக்கின்றனர்.

10. நவியான் குளக்கட்டின் ஆரம்பத்தில் மிகப் பெரிய வம்மி மரமொன்று நின்று அழிந்து போனதை நான் கண்டிருக்கின்றேன். பயணிகள் தங்க, நிழலுக்காக அம்மரம் நடப்பட்டிருக்க வேண்டும். 1922ல் அடித்த சிறிய புயற்காற்றால் விழுந்த மரத்தை அறுத்து அழிக்கப்பட்ட வடதெருப் பள்ளிவாசற் கட்டிடத்துக்கு உபயோகித் ததை நானறிவேன்.

இத்தியாதி காரணங்களைக்கொண்டு ஆத்திமேடும் அதைச் சூழ்ந்துள்ள நிலப்பரப்புமே மருதமுனையின் ஆதிக் குடியிருப்பு எனத் துணிந்து கூறலாம்.

தற்காலப் பிரதேசப் படத்தில் மருதமுனையின் வட எல்லை பெரிய நீலாவணையின் இரு குறிச்சிகளின் மத்தியில் தடித்த கோட்டால் அடையாளஞ் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் பின்னர் 22 1/4 மைல் கல்லுக்கும் 22 3/4 மைல் கல்லுக்கும் இடைப்பட்ட அரை மைல் நீளமும் மேட்டு வட்டைக்கும் கடலுக்கும் இடைப்பட்ட சுமார் அரை மைல் அகலமும் கொண்டு காற்சதுர மைல் பரப்புள்ளதாகத் தெரிக்கப்பட்டுள்ள பிரதேசமே மருதமுனை அரசியற் பிரிவாகும். எனினும் பழங்கால உறுதி சாதனங்களில் பெரிய நீலாவணை இரண்டாங் குறிச்சியுள் அடங்கியுள்ள முஸ்லிம்களுக்குரிய வளவுகளெல்லாம் மருதமுனையில் ஓர் வளவு என்றே குறிக்கப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

## முஸ்லிம்களின் வருகை

சுமார் ஐநூறு, அறுநூறு ஆண்டுகளுக்கு முன் பெரிய ராசா அப்பா என அழைக்கப்பட்ட அபூபக்கர் அலி என்பவரும் அவரின் மைத்துனர் சேர்மன் ஹாஜி என்பவரும் கிழக்கிந்திய தீவுப் பகுதிகளிலிருந்து அரசியற் பிரச்சினை காரணமாகத் தமது குடும்பத்தினருடன் பாய்க் கப்பலில் மட்டக்களப்பையடைந்து அங்கிருந்து வள்ளத்தில் மட்டக்களப்பு

வாவியூடே தெற்கு நோக்கி வந்திருக்கின்றனர். அவர்கள் வந்த வள்ளத்தை ஓட்டிக் கொண்டு வந்தவர் செம்மானோட்டி (தண்டையல்) என அழைக்கப்பட்டார். இவர்கள் நீலாவணைத் துறையில் மக்கள் சஞ்சரிப்பதைக் கண்டு அங்கு இறங்கினர். மனித நடமாட்டமுள்ள அவ்விடத்தில் தங்கி விட்டனர். நாளாந்தம் மீனவர்கள் அங்கு வருவதனாலும். அவ்வழியாக வழிப்போக்கர்கள் அக்கரைப்பட்டுச் செல்வதனாலும் அவ்விடத்தையே நிரந்தர வசிப்பிடமாகத் தெரிந்து கொண்டனர். இவர்களின் வருகையும், குடியேற்றமும் தமக்கேற்பட்ட இக்கட்டான, தவிர்க்க முடியாத ஒரு சூழ்நிலையினின்றும் விடுதலை பெறுவதற்காக ஏற்பட்டன என யூகிக்கக் கூடியதாக இருக்கிறது.

இவர்களுக்கு விவசாயஞ் செய்யவோ மீன்பிடிக்கவோ தெரியாது. நெசவுத் தொழிலே இவர்களுக்குக் கைவந்த தொழிலாயிருந்தது. ஜீவனோபாயத்திற்கு நெசவுத் தொழிலையே தெரிந்து கொண்டனர். பருத்தி நாட்டிப் பஞ்செடுத்து நூல் நூற்றுத்தான் நெசவு செய்தல் வேண்டும். இத்தனைக்கும் நீரில்லாத கட்டாந்தரையான துறை நீலாவணை நிலம் அவர்களுக்குச் சாதகமாக அமையவில்லை. பருத்திப் பயிர்ச் செய்கைக்கும் நெசவுத் தொழிலுக்கும் அன்று தமிழ் மீனவர்கள் வசித்த மருதமுனை நிலம் உகந்ததாயிருந்தது. மீனவர்கள் மருதமுனையிலிருந்து தினமும் வெள்ளாப்பில் (அதிகாலை) மீன்பிடிக்கும் கருவிகளைச் சுமந்து கொண்டு வாவிக் கரைக்குச் சென்று வந்தனர். தங்கள் தோணிகளை அங்கு கரையில் விட்டுவிட்டு வந்தனர். வாவிக்கு அண்மையிற் குடியிருந்தால் தங்கள் மீன்பிடித் தொழிலுக்கு வாய்ப்பாயிருக்குமெனவும், தங்கள் தோணிகளைக் காப்பாற்ற முடியுமெனவும் கருதினர்.

அதனால் அவர்கள் துறைநீலாவணை முஸ்லிம்களுடன் ஒரு ஒப்பந்தஞ் செய்து கொள்ள முன்வந்தனர். அதாவது முஸ்லிம்கள் மருதமுனையிலும் தமிழ் மீனவர் துறைநீலாவணையிலுமாக இடமாற்றஞ் செய்து வாழ்வதே அவ்வொப்பந்தமாகும். முஸ்லிம்களுக்கு இவ்வொப்பந்தம் சாதகமாயமைந்ததனால் சம்மதித்துக் குடியிருப்புக்களை மாற்றிக் கொண்டனர். குடியிருப்பு நிலம் அன்று சிங்கள மன்னர் காலத்தில் விலைக்கு வாங்குவதோ, உறுதிசாதனம் முடிப்பதோ நடைமுறையிலிருக்கவில்லை. அதனால் இடமாற்றஞ் செய்வது இலகுவாயிருந்தது.

மக்கள்தாம் விரும்பிய இடத்தில் குடியேறி வாழ்ந்திருக்கின்றனர். சொற்ப தொகையினரான இவர்கள் இவ்வாறு இடமாற்றஞ் செய்து கொண்ட சம்பவத்தை இரு கிராமத்து மக்களும் கர்ண பரம்பரையாகக் கூறி அதில் நம்பிக்கையுங் கொண்டுதானிருக்கின்றனர். அதற்கான

சான்றுகளும் சில இன்றுமிருக்கின்றன. துறைநீலாவணைக்குச் சமீபத்தில் ஓர் திடர் நிலத்துக்கு இபுறாகீம்பிட்டி என்று இன்றும் அழைக்கின்றனர்.

இன்று துறைநீலாவணை, துரவந்தியமேடு, கிட்டங்கித்துறை என்னுமிடங்களை இணைத்து ஆக்கப்பட்டிருக்கும் "உப்புத் தண்ணீர்க் கட்டு" எனப்படும் வரம்பு அன்று இருக்கவில்லை. மாரி காலத்தில் மட்டக்களப்பு வாவி நீர் தற்போது மேட்டுவட்டை எனப்படும் வயல் நிலமெங்கும், அடுத்துள்ள குளப்பரப்புக்களிலும் பரந்திருக்கும். மேட்டுவட்டையின் மத்தியிலுள்ள "பாவங்கை" எனப்படும் சதுப்பு நிலம் மட்டக்களப்பு வாவியின் ஒரு கூறாயிருந்தது என்பதற்கு அத்தாட்சியாகும்.

ஆங்கிலேயர் காலத்தில் 1830ம் ஆண்டுக்குப் பின்னர்தான் உப்புத் தண்ணீர்க்கட்டு எனப்படும் அந்த வரம்பு செய்யப்பட்டு வாவிநீரை உட்புகாமற் தடுத்து வயல் நிலமாக்கினர். மாரிநீரைச் சேமித்து வைத்துக் கோடையில் விவசாயஞ் செய்ய நவியான்குளம், பெரியகுளம் முதலிய கிராமக் குளங்களை உயர் வரம்புக் கட்டுக்கள் மூலம் தெரித்தனர். அரசாங்க அதிபராயிருந்த வேட்சித்துரையென்னும் வெள்ளையர் அப்பொழுது காணி பெற முன்வந்த முக்குகர்களுக்கு மேட்டுவட்டைக் காணியை பங்கிட்டுக் கொடுத்தார். நெசவுத் தொழிலை மேற்கொண்டிருந்த மருதமுனை முஸ்லிம்கள் காணி பெற முன்வரவில்லை.

பெரும்பாலும் கிராமங்கள் மாங்காடு, பாலமுனை, மகிழடித்தீவு என மரப் பெயர் கொண்டு அழைக்கப்படுவது போலவே இவ்வூரும் மருதமரத்தின் பேரால் அழைக்கப்பட்டிருப்பதை அவதானிக்கலாம். அந்தக் காலத்தில் மக்கள் மதுரமுனையெனவும் அழைத்து வந்தனர். அதற்கு இவ்வூர் மக்களின் வாய்மொழி மருதமானது. பண்பாடும் மதுரமே. அதனால் மதுரமுனை எனப்பெயர் வந்தது எனக்காரணங் கற்பித்தனர். பழைய உறுதி சாதனங்களிலும் மதுரமுனையென்றே எழுதப்பட்டிருப்பதையும் காணலாம். 1911ம் ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர்தான் மருதமுனையென எழுதத் தொடங்கினர். "மதுராச முனை நாடு" எனப் பழங்காலத்தில் கவிதைகளில் அமைத்து புலவர்கள் பாடியிருக்கின்றனர்.

## வணக்கஸ்தலம்

வடக்கு நோக்கி விரிவடைந்துவரும் குடியிருப்பையுத்தேசித்து தற்போது மஸ்ஜிதுந்நூர் அமைந்திருக்கும் காணியில் ஓலைக் குடிசை ஒன்றைக் கட்டிக் கொண்டு தொழுது வந்தனர். அதன் ஆரம்ப கர்த்தா பெரிய ராசா அப்பா என அழைக்கப்படும் அபூபக்கர் அலி என்பவ

ராதாலால் அதற்கு "அவக்கலியப்பா" பள்ளியென அழைத்தனர். பள்ளிவாசலையடுத்து நிழலுக்காக ஆல மரங்களை வைத்து உண்டாக் குவது வழக்கம். பெருநாட் காலங்களில் இந்த ஆலமர நிழல்கள் கொண் டாடும் தலமாக உதவும். பெரிய ஆலமரமொன்று அந்தப் பள்ளிவாசலில் நின்றிருக்கிறது.

கடலுக் கிணக்கம் கப்பலும் பாய்மரமும் - இந்த
ஊருக் கிணக்கம் உயர்ந்த பள்ளி ஆலமரம்

என்று பாடல் பெற்ற ஆலமரம் அது.

## அடக்கஸ்தலம்

ஊருக்கு வெளியே கிழக்குப் புறமாக கபுறிஸ்தானத்தை ஏற்படுத்திக் கொண்டனர். தற்போது மகாவித்தியாலய ஆரம்ப பிரிவு இருக்குங் காணியே அந்த அடக்கஸ்தலமாகும். ஊரின் உயர்ந்த திடர் நிலம் அதுவே. அங்கு மிகப் பெரிய ஆலமரமொன்று நின்றது. அது மையித்து அடக்க வருபவர்களுக்கு நிழலுக்காக நடப்பட்டிருக்கலாம். 1978ன் பெரும் சூறாவளி அதை விழுத்தி விட்டது. பெருநாட் காலங்களில் அந்த ஆலமரம் ஊஞ்சல் போட்டு ஆட உபயோகப்பட்டது. வெளியூரார் கிழங்கு, தேங்காய், நெல், அரிசி முதலியன கொண்டு வந்து வைத்து விற்கும் வியாபாரத் தலமாகவும் அம்மர நிழல் உபயோகப்பட்டிருக்கிறது. பற்றைக் காடுகளையுடையதாயிருந்த அவ்விடம் நான் இங்கு படிப்பிக்குங் காலத்தில் துப்புரவு செய்து விளையாட்டு மைதானமாக உபயோகிக் கப்பட்டது. அப்போது ஊர் கிழக்கே வியாபித்து விட்டதனால் அந்நிலத்தில் மையித்து அடக்கஞ் செய்வது நிறுத்தப்பட்டு விட்டது. கடற்கரையை அடுத்துள்ள ஆலடி மைதானம் அடக்கஸ்தலமாக உபயோகிக்கப்படுகிறது.

## நிலவியல்பு

பழைய மையத்துப் பிட்டியான உயர்ந்த திடர் நிலத்தின் மேலதிக மழைநீர் கிழக்கே வழிந்தோடி வடக்குத் தெற்காக உள்ள சிறுக்கேணியை நிரப்பி அப்பாற் சென்று கடற்கரையையடுத்துள்ள பெருங்கேணிப் பள்ளத்தில் தங்கி நிற்கும். அப்பாற் செல்ல வழியில்லாமையால் நீர் வற்றும் வரை தேங்கி நிற்கும். பிற்காலத்தில் D.R.O. ஆகக் கடமையாற்றிய நடராசா என்பவரால் பெருங்கேணிக்கும் கடலுக்குமிடையில் பழைய மருதமுனை எல்லைக் கோட்டில் வாய்க்காலொன்று வெட்டுவிக்கப் பட்டது. அதனால் பெருங்கேணியில் நீர் தேங்கி நிற்காமல் கடலுக்குள் ஓடிவிடக் கேணி நிலமெல்லாம் குடியிருப்புக்கு உகந்ததாயிற்று. மையத்துப் பிட்டிக்குக்

கிழக்கேயுள்ள மணற் பிரதேசம் முன்னர் காடாயிருந்ததாம். அங்கு புலி, கரடி முதலிய மிருகங்கள், வாழ்ந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். சனப்பெருக்கம் உண்டானதும் அந்தக் காடு அழிக்கப்பட்டு பற்றைக் காடாயிருந்து பின்னர் குடியிருப்பாயிற்று. சமீப காலம் வரை அந்த பகுதியில் சில காட்டு மரங்கள் நின்று அழிந்திருக்கின்றன. ஊரில் குடியேறிய மக்களுக்குக் குடிசை கட்டிக் கொள்ள இந்தக் காட்டு மரங்கள் உதவியிருக்கின்றன.

கிராமத்தின் விறகுக் களஞ்சியமாக இப்பகுதி இருந்தது. பிற்காலத்தில் நிறையக் காசான் பற்றைகள் இருந்தன. பெண்கள் சென்று விறகொடித்துக் கட்டுக்களாகக் கட்டிக்கொண்டு வருவார்கள். இவர்கள்தான் நோன்புக்கு முதல் மாதத்தை கொள்ளியெடுக்கும் மாதம் என அழைத்திருக்கின்றனர். மையத்துப் பிட்டிக்குக் கிழக்கேயும், வடக்கேயும் உள்ள நிலம் ஆங்கிலேயர் காலத்தில் 1874ல் கண்டங் கண்டமாக அளந்து மக்களுக்கு வழங்கப் பட்டிருக்கிறது. முஸ்லிம்கள் கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து கண்டங்களை வாங்கிப் பிரித்தெடுத்திருக்கின்றனர். ஒல்லிக்கேணி, ஆலங்கேணி என்ற பகுதிகளும் இவ்வாறு மருதமுனை மக்களால் வாங்கப்பட்டவையே. நம்மவரால் வாங்கப்பட்ட கண்டங்கள் பல குடியேறாமல் வெற்றிடங் களாகவே கிடந்தன. பெரியநீலாவணை இரண்டாம் குறிச்சியில் பெரும் பகுதி நம்மவரால் கொள்ளப்பட்டிருந்ததனால் அதுவும் மருதமுனை யென்றே அன்று கருப்பட்டது. முக்குக வன்னிமைமார் மருதமுனைக்கு இரண்டு விதானையும், பெரியநீலாவணைக்கு இரண்டு விதானையும் நியமிப்பதற்காகப் பழைய எல்லையை மாற்றித் தற்போதைய எல்லையை யமைத்து விட்டிருக்கின்றனர். பெரியநீலாவணையில் அரசாங்கத்திடம் கண்டங்களை வாங்கிய சிலர் அங்கொருவர் இங்கொருவராகக் குடியேறித் தானிருந்தனர். அவர்களை தமிழ் விதானைமாரே ஆட்சி பண்ணி வந்தனர்.

## குடிப்பெருக்கம்

துறைநீலாவணையிலிருந்து வந்து குடியேறியோர் சொற்ப தொகையினரே. எங்கிருந்தோ சில முஸ்லிம்கள் ஒந்தாச்சி மடத்தில் தங்கியிருந்திருக்கின்றனர். அவர்கள் மருதமுனையில் முஸ்லிம்கள் வசிப்பதையறிந்து அவ்விடத்தை விட்டு இங்கு வந்து இவர்களுடன் சேர்ந்து கொண்டனர். இங்கு வந்த முஸ்லிம் ஆண்கள் தமிழ்ப் பெண்களை வரித்து அவர்கள் மூலம் சனப்பெருக்கம் ஏற்பட்டிருக்க வேண்டும். வியாபார நோக்கமாகவும், இஸ்லாமியப் பிரசார நோக்கமாகவும் தென்னிந்தியாவிலிருந்தும் பலர் காலந்தோறும் வள்ளங்களில் வந்து சேர்ந்திருக்கின்றனர். வள்ளங்களில் வந்தோர் ஆதலால் அவர்களைச்

சம்மான்காரர் என்றழைத்தனர். (சம்மான் - வள்ளம்) 1520ம் ஆண்டளவில் கண்டிச் சிங்கள மன்னன் செனரதன் போர்த்துக்கீசரால் துன்புறுத்தப்பட்டுத் தன்னிடம் அடைக்கலம் புகுந்த மேற்குக் கரைப்பிரதேச முஸ்லிம்கள் நாலாயிரம் பேரைத் தனதாட்சிக்குட்பட்ட கிழக்குக்கரைப் பிரதேசத்தில் தனது காப்பாளராகக் குடியமர்த்தியிருக்கிறான். அவர்களில் ஒரு பகுதியினர் சொறிக்கல்முனையில் வந்திருந்து மருதமுனையிற் குடியேறி யிருக்கின்றனர். இவர்கள் முன்னைய குடியிருப்பின் தென்புறமாகக் குடியமர்ந்திருக்கின்றனர்.

அரபியரும் பட்டாணியரும் வந்து வந்து சேர்ந்திருக்கின்றனர். பிந்திய காலத்திற்தான் மருதமுனையின் இரண்டாம் குறிச்சிப் பகுதி குடி வளர்ந்தது. நானறிய மருதமுனையின் பெரும் பகுதி குடியிருப்பில்லாத வெற்றிட மாகவே இருந்தது. சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்குள் வெகுவேக மாகச் சனப்பெருக்கம் ஏற்பட்டிருக்கிறது. 1963ல் கடற்கரைக் கொலனிக் குடியேற்றமுண்டானது. வடக்கே பெரியநீலாவணைக் குறிச்சியுள் இருந்த வெற்றிடமெல்லாம் முஸ்லிம்கள் குடியேறிவிட்டனர். பெருந்தெரு ஓரமாகக் குடியிருந்த சில தமிழர் தத்தம் வளவுகளை முஸ்லிம்களுக்குக் கூடிய விலைக்குக் கொடுத்துவிட்டு வெளியேறி விட்டனர்.

மருதமுனை மக்கள் என்றும் இராச விசுவாசமுள்ளவர்களாகவே இருந்திருக்கின்றனர். சிங்கள மன்னர் காலத்தில் கிழக்குக்கரையில் ஐரோப்பியராட்சி கோட்டைக் கல்லாற்றுக்குத் தெற்கேயிருக்கவில்லை. 1815ல் கண்டிய ராச்சியம் ஆங்கிலேயரால் கைப்பற்றப்பட்ட பின்னர்தான் மருதமுனை ஆங்கிலலேயராட்சிக்குட்பட்டது. மருதமுனையில் போர்த் துக்கீசர், ஒல்லாந்தர் ஆட்சி நடைபெறவில்லை.

## தேசிய வீரன்

கிழக்கிந்திய தீவுகளிலிருந்து வந்த ஒல்லாந்தர் படையின் ஓர் அதிகாரியான ஜாவா நாட்டு அனஸ் என்பவரும் அவரைச் சேர்ந்தோரும் மருதமுனையிற் குடியேறியிருந்தனர். பிற்காலத்தில் அவர் அனஸ் லெவ்வையென அழைக்கப்பட்டார். "லெவ்வை" என்பது ஒரு கௌரவப் பெயராக அன்று தென்னிந்திய முஸ்லிம்களாற் கொள்ளப்பட்டிருந்தது. அது அவர்களால் இங்கும் நிலை பெற்றது. இந்த அனஸ் லெவ்வை யென்பவர் ஆங்கிலேயர் 1804க்கு முன் சிங்கள நாட்டைக் கைப்பற்ற வந்தபோது சிங்களவருடன் சேர்ந்து அவர்களை எதிர்த்தார். அதனால் அவர் ஒரு தேசிய வீரனாக இலங்கைச் சரித்திரத்தில் இடம் பெற்றுள்ளார்.

## குடிவழி

இந்தப் பிரசேத்தில் தாய்வழி வம்சம் "குடி" என்ற பெயரால் இன்றும் அழைக்கப்படுகிறது. தமிழ்ப் பெண்களின் பரம்பரை வழக்கத்தையொட்டி முஸ்லிம்களிடையேயும் இந்த வழக்கம் இருந்து வருகிறது. தலைவரின் பெயரால் இடப்பட்ட குடிப்பெயர் தாய் வழிப் பரம்பரையாக சொந்த மாயிற்று.

பெரிய ராசா அப்பாவின் சந்ததியினர் ஜாவாவிலிருந்து வந்தோராத லால் ஜாவாக் குடியார் எனப்படுகின்றனர். சேர்மன் ஹாஜியின் பரம்பரை யினர் "சேர்மாது" குடியாராவர். சேர்மன் ஹாஜியென்ற சொல் மருவி "சேர்மாது" ஆயிற்றாம். இவர்கள் வந்த வள்ளத்தை ஓட்டிக் கொண்டு வந்தவரின் சந்ததியினர் சம்மானோட்டி குடியார் எனப்படுவர். வடக்கே (தென்னிந்தியா) யிருந்து வந்து குடியெறியோர் "வடக்கனா " குடியாராவர். இவர்கள் லெவ்வை வடக்கன், மூளிவடக்கன் என இரு பிரிவினர்.

மாந்தறா என்னுமிடத்திலிருந்து வந்து குடியேறியோர் மாந்தறா குடியாராவர்.

வெத்தசிங்க ஆராய்ச்சி (சிங்களத் தலைவன்) என்பவரின் சந்ததியினர் வெத்தசிங்க ஆராய்ச்சி குடியார்.

முத்துநாச்சியின் வம்சத்தினர் மூத்த நாச்சி குடியார். இவர்களெல்லாம் இன்று வடதெருப்பள்ளிவாசல் ஜமா அத்தினராயுள்ளனர்.

இவர்களின் காலத்திலும் இவர்களுக்குப் பின்னரும் வந்து குடியேறிய மேல்வரும் குடியினர் இன்று தென்தெருப்பள்ளிவாசல் ஜமாஅத்தினரா யிருக்கின்றனர்.

சின்னக் கதிரன் என்பவரின் வம்சத்தினர் சின்னக் கதிரன் குடியார். இவர்களுடன் சுலுத்தார்ப்பிள்ளையின் வம்சத்தினரும் சேர்ந்து கொண்ட னர். கொச்சிக் கொட்டான் என்றழைக்கப்பட்டவரின் வமிசத்தினர் கொசுக் கட்டான் குடியினர்.

முன்னாகுடி, உலகிப்போடிகுடி, மோதின்குடி என்ற குடியினருமுளர்.

சம்மானோட்டி குடியினரில் ஒரு பகுதியினர் தென்தெரு ஜமா அத்துடனிருக்கின்றனர். செனரதன் என்னும் சிங்கள மன்னன் காலத்தில் குடியேற்றபட்டோரில் ஒரு பகுதியினரே ஆலங்குடியார் ஆவர். அவர்களில் கொழும்பான் கத்தறை, சிவயில் கத்தறை, கோணவாயன் கத்தறை என மூன்று பிரிவினர் இருக்கின்றனர். "கத்தறை" என்ற சொல் கெதற (வீடு) என்ற சிங்களச் சொல்லின் திரிபாயிருக்கலாம். சிங்கள

நாட்டில் "கெதற" என்ற சொல் இன்றும் வழக்கிலிருந்து வருகிறது. "கத்தறை" என்பது ஒரு தொகுதி என்ற கருத்தில் வழங்கப்படுகிறது என்றும், கோத்திரம் என்ற சொல்லின் திரிபாகலாம் என்றும் சிலர் கூறுகின்றனர். இந்தக் கோத்திரத்தினர் வந்து மருதமுனையின் தெற்கே வெற்றிடமாயிருந்த நிலத்தில் குடியேறினர். இக்குடியைச் சேர்ந்த அலியார்ப்போடி என்பவர் விவாகஞ் செய்திருந்த காத்தான்குடி மனைவியின் பிச்சளத்தினர் அலியார்ப்போடி குடியினர் என அழைக்கப் படுகின்றனர்.

## புதிய வணக்கஸ்தலம்

வடதெருப்பள்ளிவாசல் ஒன்றே ஊருக்கு ஒரு வணக்கஸ்தலமாய் இருந்தது. தெற்கே குடியேறியவர்களுக்குப் பள்ளிவாசல் தூரித்துப்போன காரணத்தால் தொழுவதற்குத் தற்போது பெரிய பள்ளிவாசல் இருக்கும் தலத்தில் "தைக்கா"ஒன்றைக் கட்டிக் கொண்டனர். தற்காலிகக் கொட்டிலாக இருந்த அது பின்னர் கற்கட்டிடமாக்கப்பட்டது. சுமார் 180 ஆண்டுகளுக்கு முன் புதிதாகக் குடியேறியவர்களுடன் முந்திய குடியினர் சிலரும் சேர்ந்து புதிய ஜமாஅத்தொன்றையமைத்துக் கொண்டனர். தைக்காவையும் பெருப்பித்துக் கட்டிக்கொண்டனர். ஆதியில் வடதெருப் பள்ளிவாசலில் மட்டுமே ஜூம்ஆத்தொழுகை நடைபெற்று வந்தது. பெருப்பித்துக் கட்டி முடிந்ததும் தென் தெருப்பள்ளிவாசலிலும் கிழமைக் கொன்றிலாக ஜூம்ஆ நிகழ்த்த ஆரம்பிக்கப்பட்டது. ஊர் ஒன்றானாலும் பள்ளிவாசல் நிருவாகம் மட்டில் இரு ஊர்கள் போன்றே சகல நடை முறைகளும் நடைபெற்று வருகின்றன. ஜமாஅத் பிரிவு இருக்கிறதே யொழிய ஊர்ப்பிரிவு இல்லை. எல்லா ஜமாஅத்தினரும் ஊரெங்கும் செறிந்து வாழுகின்றனர்.

## கொலனிக் குடியேற்றம்

கல்லோயாப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டத்தில் இக்னியா கலைக்குளம் (சேனநாயக்கா சமுத்திரம்) கட்டி முடிந்ததும் இடது கரை வாய்க்காற் பிரதேசத்தில் இலங்கையின் பல பாகங்களிலுமிருந்தும் மக்கள் குடியேற்றப்பட்டனர். நான்காம் ஐந்தாம் வட்டாரங்களில் மருதமுனை மக்கள் 1952ல் குடியேற்றப்பட்டனர். ஒரு வீடும் நாலு ஏக்கர் வயற் காணியும் இரண்டு ஏக்கர் மேட்டுக்காணியும் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வழங்கப்பட்டது. பூமி திருத்துதல் முதலிய செலவுகளுக்குப் பணமும் கொடுத்து உதவினர். மாடும், தளவாடங்களும் கொடுத்தனர். குடியேறிய வர்கள் மத்தியான ஓரிடத்தில் பள்ளிவாசல் ஒன்றைக் கட்டிக் கொண்டனர்.

கல்லோயாச் சபை பாடசாலை ஒன்றைக் கட்டிக் கொடுத்தது. அரசாங்கம் தமக்களித்த இந்தக் கைங்கரியத்தை நல்ல முறையிற் பயன்படுத்தியவர்கள் ஒரு சிலரேதான். பெரும்பாலார் சிலகாலம் அங்கு தங்கியிருந்து விட்டு தமக்களிக்கப்பட்ட நிலபுலங்களைப் பிறருக்கு விற்று விட்டுப் பழையபடி ஊரோடு வந்து விட்டனர். இவர்களோடு ஏககாலத்தில் அடுத்த வட்டாரங் களிற் குடியயேறிய சிங்கள, தமிழ் மக்கள் தங்கள் காணிகளை நன்கு திருத்தி விவசாயஞ் செய்து பெரும்பயனடைந்திருக்கின்றனர். அவர்களின் இவ்விடங்கள் பசுஞ்சோலைகளாகக் காட்சியளிக்கின்றன. அங்கு நிரந்தரவாசிகளாயமைந்த மருதமுனையாரின் அடுத்த சந்ததியினரையும் அங்கு காண்கிறோம்.

புலவர்மணி ஆ.மு.ஷரிபுத்தீன் ஹாஜியார் 1952ல் பெரிய நீலா வணையில் குடியேற வந்த போது அங்கு இரண்டொரு வீடுகள் தானிருந்தன. பெருந்தெருவையடுத்துச் சில தமிழ் மக்களின் வீடுகளைத் தவிர்த்து ஏனைய நிலமெல்லாம் வெற்றிடமாகவேயிருந்தது. அவர் அங்கு நிலைபதியானதும் அவரைத் தொடர்ந்து ஒருவரிருவராய்க் குடியேறி வந்தனர். பழங்காலத்தில் அரசிடம் கிரயம் கொண்டு குடியேறாதிருந்த கண்டங்களை அவர் கண்டு பிடித்து வாரிசுக்காரரிடம் ஒப்படைத்தார். அவை அவர்களால் பங்கீடு செய்யப்பட்டுக் குறைந்த விலைக்கு விற்கப்பட்டன. வாங்கியவர்கள் குடியேறத் தொடங்கினர். கொள்காணி நிரம்பியதும் முடிக்குரிய காணிகளில் மக்களைக் குடியேறச் செய்தார்.

மதுரசா ஒன்றையும், பாடசாலை ஒன்றையும்,ஐக்கிய பண்டகசாலை ஒன்றையும் உருவாக்கினார். முடிக்குரிய காணிகளில் குடியேறியோருக்கு அரசாங்கம் அனுமதிப் பத்திரம் வழங்கியது. அந்நிலம் இனிக்குடியேற இடமில்லாத அளவு நிரம்பிவிட்டது. பிரதேசப் படத்தில் முன்னர் மருதமுனையில் வட எல்லையாகக் குறிப்பிடப்பட்டுள்ள கோட்டுக்கு அப்பாலும் மக்கள் சென்று குடியேறி விட்டனர். பெரியநீலாவணைப் பாடசாலையையடுத்து அரசாங்கம் மருந்துச்சாலையொன்றை நிருமாணித துள்ளது. அடுத்துள்ள வெற்றிடத்தில் அரசாங்க வீடமைப்புத்திட்டத்தில் வீடுகள் கட்டி அவை வீடில்லாதோருக்கு விநியோகிக்கப்பட்டது.

## புதிய ஊரொன்று காண்போம்

காலந்தோறும் சனப்பெருக்கம் அதிகரித்துக் கொண்டே வருகிறது. கிராமத்தையடுத்திருந்த வெளியான இடமெல்லாம் நிரம்பிவிட்டன. இனிக்குடியேற இடமில்லை. சகல வசதிகளையுமுடைய புதிய ஊரொன்று தோற்றுவிக்கப்பட வேண்டியிருக்கிறது. ஏதோ ஒரு ஸ்தாபனம் அரசாங்கத்துடன் தொடர்பு கொண்டு இந்தக் கைங்கரியத்தைச்

செய்தல் வேண்டும். போக்குவரவு தொழில் வாய்ப்புக்களைக் கருத்திற் கொண்டு வெற்றிடமாயிருக்கும் ஒரு பிரதேசத்தைத் தெரிந்து காணியை மொத்தமாகப் பெற்றுக் குடியேற விரும்புபவர்களுக்குப் பங்கீடு செய்து திட்டமிட்ட அமைப்பில் கிராமமொன்றைத் தோற்றுவிக்காத வரையில் மக்களின் குடியிருப்புப் பிரச்சினையை விடுவிக்க வொண்ணாத தாயிருக்கும். இந்த ஆலோசனை மக்கள் பலரின் ஒத்துழைப்பினால் இந்த ஆக்கவேலை நடைபெற வேண்டும். தாமும் குடியேறி மற்றவர்களையும் குடியேறச் செய்தல் வேண்டும். சுயநலம் என்னும் நஞ்சு இந்தக் கைங்கரியத்துள் நுழைந்து விடாதிருக்க வேண்டும். நமது கிராமம் ஒரு கைத்தொழிற் கிராமம். கைத்தொழிற்பேட்டையொன்றையே கிருஷ்டித்து தொழிலாளர் குடியேற ஏற்ற சாதனங்களை அரசுடன் சேர்ந்து அமைத்து மக்களை குடியேற்றினால் அது ஒரு செல்வக் கிராமமாக அமையுமென்பது துணிபு.

## சோலியாவும் மவுலானாவும்

சோலியா வயிற்றுப்பிள்ளை, மவுலானா வயிற்றுப்பிள்ளையென்ற பேச்சு வழக்கு இவ்வூரிலிருந்தது. தென்னிந்தியாவில் சோழ நாட்டிலிருந்து வந்தவர்கள் தம்மைச் சோழியர் எனக் கூறினர். இந்தச் சோழியர் என்ற சொல்லே பின்னர் சோலியா என மருவிற்று. வந்த சோழியர் ஏலவே இங்கு குடியேறியிருந்தவர்களுடன் கலந்துவிட்டனர். எல்லாருமே தம்மைச் சோலியார் எனக் கருதிக் கொண்டனர். அறபு நாட்டிலிருந்து வந்த அறபி வியாபாரிகளைத் தவிர்த்துப் பெருமானாரின் வம்சத்தினர் சிலர் சுமார் இருநூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் இஸ்லாமியப் பிரசாரங் காரணமாக இங்கு வந்து தங்கி விட்டிருக்கின்றனர். அவர்களை மவுலானா என அழைத்தனர். செய்யிது வம்சத்தினரான அவர்கள் இங்குள்ள சோலியாப் பெண்களை விவாகஞ் செய்திருக்கின்றனர். அவர்களின் ஆண் மக்களையும் அவர்களின் சந்ததியினரையும் (ஆண்வழி) மவுலானா என்றே அழைத்தனர்.

செய்யிது வம்சப் பெண்ணைச் செய்யிது வம்ச ஆண் ஒருவருக்கே மணம் முடித்து வைப்பர். முறைசாரா ஆண் இல்லாதபோது, விவாகம் முடிக்க ஆகாதவர்களைத் தவிர்த்து முறை மாற்றியும் மணம் முடிப்பர். செய்யிது வம்சம் தாய்வழி கொள்ளப்படவில்லை. செய்யிதுமார் பெரும்பாலும் மார்க்க அறிஞர்களாவேயிருந்து வந்திருக்கின்றனர். அதனால் அவர்கள் மக்களாற் கௌரவிக்கப்பட்டனர். அன்று மவுலானா அல்லாதவர்களெல்லாம் சோலியார் எனக் கருதப்பட்டனர். இந்தியாவும் இலங்கையும் ஆங்கில ஆட்சிக்குட்பட்டிருந்ததனால் இந்தியர் தங்கு

தடையின்றி வியாபார நோக்கமாகக் காலந்தோறும் வந்து கொண்டே யிருந்தனர். பலர் திரும்பிச் செல்லாது இங்கேயே விவாகஞ் செய்து வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

செய்யிது வம்சம், செய்யிது அப்துல் றகுமான் மவுலானாவிலிருந்து ஆரம்பிக்கிறது. மக்கத்து மவுலானா என்றொருவர் வந்து இங்கு விவாகஞ் செய்திருக்கிறார். செய்யிது அப்துல் றகுமான் மவுலானா ஹலறல் மவுத்திலிருந்து வந்து இங்கு குடிபதியானார். மஸ்ஜிதுல் கபீர் கட்டிடத்தையடுத்து அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிறார். அவரின் சந்ததியினர் இங்கு பலர் இருக்கின்றனர்.

செய்யிது இஸ்மாயில் மவுலானா. இவர் அரசியல் நெருக்கடி காரணமாக பக்தாதிலிருந்து தன்மகன் செய்யிது முகம்மதுவுடன் இங்கு வந்தார். காதிரிய்யாத் தரீக்கின் ஷெய்க்கான இவரைப் பெரிய மவுலானா எனவும் கூறுவர். இவ்வூரில் புகாரி ஷரீபை ஓத ஆரம்பித்தவர் இவரே. மக்காமடி என்ற பெயர் இவரது அடக்கஸ்தலத்தைக் குறித்தே கூறப் படுகிறது. அவர் இங்கு மக்கத்து மவுலானாவின் மகளை விவாகஞ் செய்திருந்தார். செய்யிது முஸ்தபா மவுலானாவும், செய்யிது கலீல் மவுலானாவும் இவருக்கு இங்குள்ள மனைவிக்கும் பிறந்த ஆண் மக்களாவர். இரு பெண் மக்களும் பிறந்தனர். இவர் ஒரு இறைநேசச் செல்வராக மதிக்கப்படுகிறார்.

காயற்பட்டணத்தில் தக்கலை மெய்ஞ்ஞானி பீர்முகம்மது சாகிபு வலியுல்லாஹ் அவர்களின் பௌத்திரர் ஒருவரைச் சந்தித்தேன். என்னை ஓர் இலங்கையன் என்று மட்டும் தெரிந்து கொண்ட அவர், மட்டக் களப்பில் வாழ்ந்த கண் தெரியாத மவுலானா தனது பாட்டனாரின் நண்பரெனவும் அவர் உயிரோடிருக்கும்போது, “மவுலானா எனது மையித்தை நீங்கள்தான் தொழுவிக்க வேண்டும்...” எனக் கேட்டுக் கொண்டிருந்ததாகவும், தனது பாட்டனார் மட்டக்களப்புக்கு விஜயஞ் செய்த போது மவுலானாவைச் சந்திக்க வந்ததாகவும், அன்றே மவுலானா இறையடி சேர்ந்திருந்ததாகவும், அந்த மையித்துத் தொழுகையைத் தனது பாட்டனாரே நிறைவேற்றியதாகவும் இந்தச் செய்தியைத் தனது தகப்பனார் சொல்லக் கேட்டதாகவும் கூறினார். அந்தக் கண் தெரியாத மவுலானா இந்தச் செய்யிது இஸ்மாயில் மவுலானா அவர்களே. செய்யிது முகம்மது மவுலானா (சின்ன மவுலானா) இவர் செய்யிது இஸ்மாயில் மவுலானாவின் மூத்த மைந்தர். பகுதாதிற் பிறந்தவர். தகப்பனாரோடு இங்கு வந்து தங்கினார். இவருக்கு செய்யிது யாசின், செய்யிது மகுமூது, செய்யிது முகுசின் ஆகிய மூன்று ஆண் மக்களும் இரு பெண் மக்களும்

பிறந்திருந்தனர். ஒல்லிக் கேணியில் ஒரு கண்டப் பூமியை அரசாங்கத்திற் பெற்றிருந்தார்.

செய்யிது காசிம் மவுலானா. இவர் எங்கிருந்து வந்தாரோ தெரியாது. செய்யிது அப்துல் காதிர் மவுலானா இவரின் மைந்தராவார்.

செய்யிது முஸ்தபா மவுலானா. இவர் எங்கிருந்து வந்தாரோ தெரியாது. இவருக்கு நான்கு பெண் மக்களும் இரு ஆண் மக்களும் இருந்தனர்.

செய்யிது எகியா மவுலானாவும், செய்யிது உதுமான் மவுலானாவும் எமனிலிருந்து வந்தனர். எகியா மவுலானாவுக்கு ஒரு மகளும் உதுமான் மவுலானாவுக்கு ஒரு மகனும் பிறந்தனர். அல்ஹாஜ் ஐதுறுஸ் மவுலானா உதுமான் மவுலானாவின் மைந்தரே.

## வெளியார் தொடர்பு

காத்தான்குடியைத் தாண்டி வருபவர் காணும் முதல் முஸ்லிம் ஊர் மருதமுனை. அதனால் வெளியிடங்களிலிருந்து வருப்வர்களை வரவேற்கு மிடமாகவும் தங்குமிடமாகவும் இதன் இட அமைப்பு அமைந்து விட்டிருக்கிறது. மக்களின் சாதுவான போக்கும் அந்நியரைக், கவர்ந் திருக்கிறது எனலாம். வந்தவர்களுக்குப் பெண் கொடுக்கும் வழக்கமும் இங்கிருந்தது. இதனால் வெளிநாட்டவரும், வெளியூரவரும் காலந் தோறும் வந்து தங்கி விவாகக் கலப்புச் செய்திருக்கின்றனர். அவர்களின் சந்ததியினர் அவர்களின் பெயரால் அழைக்கப்படுகின்றனர். வந்தவர்களின் பழக்க வழக்கங்களும் இருந்தவர்களிடம் கலந்துவிட்டன. அதனால் பல்வேறு பண்பாடுகளும் ஒன்று சேர்ந்து ஒரு கலப்புப் பண்பாடு உருவாகியிருக்கிறது. அடுத்துள்ள முஸ்லிம் கிராமங்களுக்கும் இவ்வூருக்கும் பண்பாடுகள் வித்தியாசமாக உள்ளன. வந்தவர்களிற் சிலர் தாம்கொண்ட பெண்களைத் தமது ஊர்களுக்குக் கொண்டு சென்றிருக்கின்றனர். திரும்பி வந்தவர்களும் சென்ற இடத்திலேயே தங்கிவிட்டவர்களுமுண்டு.

இதனால் நாட்டின் பல பாகங்களிலும் இவ்வூராருக்குத் தாய்ப் பிள்ளைகளிருக்கின்றனர். இவ்வூர் ஆண்களும் பலர் பிறவிடங்களுக்குச் சென்று விவாகஞ் செய்து வாழ்ந்து வருகின்றனர்.

தொழில் காரணமாகத் தம்பன் கடவைக்குச் சென்ற சிலர் அங்கு விவாகஞ் செய்து அவ்வூர் வாசிகளாகி விட்டனர். முன்னேற்றமில்லாத அக்கிராம வாசிகளுக்கு இவர்கள் முன்னோடிகளாகவும் தலைவர்களாகவும் ஆகிவிட்டனர். பொத்துவில்லிலும் பலர் குடிபதிகளாயிருக்கின்றனர்.

இறக்காமம், அக்கரைப்பற்று முதலிய கிராமங்களிலும் விவாக சம்பந்தம் வைத்திருக்கின்றனர்.

## வாழ்மனைகள்

ஆரம்ப காலத்தில் சிறுச்சிறு குடிசைகள் தான் வாழ்மனைகளாயிருந்தன. குடிசை கட்ட மரமும் கூரை வேய இலுக்கும் சமீபத்திலேயே கிடைத்தன. காலக் கிரமத்தில் குடிசைகள் மண் வீடுகளாக வளர்ந்தன. நிலத்துக்கும் சுவருக்கும் வேண்டிய களிமண் மேற்கேயுள்ள குளப பள்ளத்திற் கிடைத்தது. அன்னமலைத் துறைக்கு அப்பால் பெரிய மரக் காடுகளிருந்தன. அங்கு மரங்களைத் தறித்து வாவி வழியாக தோணியிற் கட்டி இழுத்துக் கொண்டு வந்து சேர்த்தனர்.

பெரிய முழு மரங்கள் வீட்டின் கால்களாகவும் வளைகளாகவும் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. கத்தி, கோடரி கொண்டு வெட்டிச் செதுக்கித்தான் செப்பஞ் செய்திருக்கின்றனர். நீண்ட நேரிய மாங்குக் கம்புகள் கூரைக்கு நெருக்கமாகப் பரவி அடிக்கொரு வரிச்சி வைத்து கொடியால் அல்லது கயிற்றால் கலங்கள் வரிந்திருப்பார்கள். திறமை சாலிகள் இம்மாதிரி வரிச்சல் வேலையை முடித்து பாக்கைச் சீவி அள்ளிக் கூரையின் மேல் வீசுவார்களாம். சீவற் பாக்குக் கீழே விழாதாம். கூரைக்கு இலுக்குப் புல் அல்லது வைக்கோல் தான் வருடந்தோறும் வேயப்படும். கைதேர்ந்தவர்கள்தான் வேய்ச்சல் வேலை செய்வார்கள். இத்தகைய கூரை களை நான் கண்டிருக்கிறேன்.

மேட்டு வட்டை வயற் காணியான பின், சூடடித்து முடிந்ததும் களத்திலிருந்து வைக்கோலைப் பெரிய பீலிக்கட்டுகளாகக் கட்டிக் காத்தடியில் முன்னொன்றும் பின்னொன்றுமாகப் பொருத்திக் காவிக் கொண்டு வந்து விற்றதை நான் கண்டிருக்கிறேன். பிந்தின காலத்தில் ஊரிற் பணக்காரர் சிலரின் வீடுகள்தான் ஓலைக் கிடுகினால் வேயப்பட்டன. கிடுகு ஒந்தாச்சிமடம், கிரான்குளம் என்னுமிடங்களுக்குச் சென்று வாங்கி வண்டிகளிலேற்றிக் கொண்டு வரவேண்டும்.

கூரைக்குக் கிடுகு கட்டுவதற்குச் சம்பளம் கொடுப்பதில்லை. கட்டத் தெரிந்தவர்களுக்கு முதல் நாளிற் சொல்லி வைக்க வேண்டும். அடுத்தநாட் காலையில் எல்லாரும் வந்து கூரையைப் பிரித்துத் துப்புரவு செய்து புதிய கிடுகை குருத்தோலை வாழைநார், தாழம் விழுது கொண்டு கட்டி முடித்துவிட்டுச் செல்வர். மதியமோ இரவோ கிடுகு கட்டினவர்களுக் கெல்லாம் விருந்து நடக்கும் வயிறு புடைக்க உண்டுவிட்டுப் போவர். அவ்வளவுதான்.

நாள்பார்த்து நிலமெடுத்துக் கால் நாட்டுதல் வளையேற்றுதல் நிலை நாட்டுதல் குடிபுகுதல் எல்லாச் சடங்குகளும் வீட்டின் சரித்திரத்தில் நிகழும். சுவருக்கு நிலைக் கட்டையடித்து வரிச்சி பிடித்து களிமண்ணைத் துவைத்து கட்டி நிரப்பி ஓட்டுமண் கொடுத்துப் பூசி மினுக்கிப் புற்று மண் கொண்டு மெழுகித் தீற்றி அழகுபடுத்துவார்கள்.

"பொன்னிடப் பொன்னிடப் பொண்ணு மிலங்கும்
மண்ணிட மண்ணிட மாடமிலங்கும் "

என்ற கவிதைத் தொடர் இதற்காகத்தான் சொல்லப்பட்டது போலும். நிறங்கலந்த மண்ணினால் வர்ண வேலைகள் செய்து அழகு படுத்துவார்கள். வீடு மூன்று அறைகளாகத் தெரிக்கப்படும். வலது புறத்தறை சாப்பு அல்லது நெய்யற் கூடம் எனப்படும். அந்த அறையில் குழித்தறியொன்று இருக்கும். வீட்டுடையார் அதில் நெசவு செய்வார். நடு அறை உள்வீடு எனப்படும். அதனுட்தான் முக்கியமான பொருட்க ளெல்லாம் வைத்துப் பாதுகாக்கப்படும். படுக்கையறையும் அதுதான்.

இடது புறத்தறை ஆலவீடு எனப்பட்டது. அதனுள் பெண்களின் தட்டுமுட்டுச் சாமான்களிருக்கும். பிரசவ அறையும் அதுதான். ஆலவீடு என்று ஏன் அழைத்தனர் என்று தெரியவில்லை. பணிந்த வீடு கட்டுவது "பறக்கத்" என்றும் ஜன்னல் வைத்துக் கட்டுவது ஆபத்து என்றும் கருதப்பட்டது. முன்புறத்துத் திண்ணைதான் புழக்கத்திலிருக்கும். பின்புறத் திண்ணை உபயோகமற்றிருக்கும். கழிவுத் தட்டுமுட்டுப் பொருட்கள் சேமிக்குமிடம் அது. ஆல வீட்டுக்கு முன்னில் "குறுமாணி" எனப்படும் ஒத்தாப்பு இறக்கி அதனுள் அடுப்பு மூட்டும் வழக்கம் ஆதியிலிருந்தது. பின்னர் தாய்வீட்டுக்கு முன் சற்றுத்தள்ளி குடில் ஒன்று கட்டினார்கள். அது சமையல் வீடு. அதற்கும் தாய்வீட்டுக்கும் இடையில் ஒரு யானைப் பிணையல் செல்லும் இடைவெளி இருக்க வேண்டுமாம். அது தீ இடைவெளியென்பது கருத்து.

கதவுகளுக்குப் பூட்டு மரத்தாற் செய்யப்பட்டிருந்தது. அதைத் தாழ்ப் பாள் என்றனர். பின்னர் கொல்லர் செய்த இரும்புப் பூட்டுகள் உபயோகிக் கப்பட்டன. கதவுகளின் பூட்டில்லாத அடுத்த ஓரத்தில் மேலும் கீழும் தடிபோல் நீட்டி உருட்டிப் பூமியில் அது நின்று திரும்ப மரத்தில் துவாரமிட்டுத் தாழ்த்தும், மேலே நிலையில் பொருத்தப்பட்ட துவாரமிட்ட பலகையில் கொழுவியும் கதவை நிறுத்தி அசையச் செய்திருந்தனர். பின்னர் ஏங்சல், கொயின் என்ற இரண்டைக் கதவிலும் நிலையிலும் பொருத்திக் கதவை நிறுத்தினர். கதவெல்லாம் ஒற்றைக் கதவுதான். சில கதவுகள் குறுக்கே அரிந்து மேற்கதவு கீழ்க்கதவாகச் செய்திருந்தனர். அதற்குப் போர்க் கதவு என்றனர்.

“வாள்பூட்டி மரமறுத்து வாந்சையுடன் வீடுகட்டிப் போர்க்கதவும் போட்டுத் தாறேன் பொறுத்திடுகா மாமி மகன்” என்பது சொந்தமாக வீடு கேட்டு மறுகும் மாப்பிள்ளைக்குத் தந்தையைக் கொண்டு செய்வித்துத் தர உறுதி கூறும் புதுப்பெண்ணின் சமாதானக் கவிதை இது. முன் புறத்துத் திண்ணையின் வலதுபுறம் களி மண்ணால் சற்று உயரமாகச் செய்யப்பட்டிருக்கும். அதுதான் வீட்டுடைத் தலைவனின் இருப்பிடம். அந்தத் திண்ணைக்கும் திண்ணையின் வலது கோடியிலும் இடது கோடியிலும் சுவரில் விளக்கு வைக்கும் மாடங்கள் செய்யப்பட்டிருக்கும்.

உள்வீடு அலங்கரிக்கும் விதமே அலாதியானது. வீட்டின் கதவுக்கு நேரெதிரே சுவரோரமாகத் திருகாணி எனப்படும் களி மண்ணாலான உயர்ந்த பீடமொன்று செய்யப்படும். அதில் அடுக்கொன்றுக்கு ஐந்தாறு சட்டிகள் கொண்ட மூன்று அடுக்குச் சட்டிகள் அடுக்கப்படும். சட்டியடுக்குகளின் இடைவெளிகளில் போத்தல்கள் நிரம்பியிருக்கும். ஒவ்வொரு சட்டி அடுக்குக்கும் மேலே ஒவ்வொரு உறி தொங்கும். உறிகளில் சிறுச் சிறு குடுக்கைப் பானைகள் அடுக்கப்பட்டிருக்கும். உறிகளின் இடைச்சுவரை அழகிய பன் தட்டுக்கள் கொழுவப்பட்டு அலங்கரிக்கும். உறிகள் தொங்கும் தடிக்கு மேல் அகப்பைகள் செருகப் பட்டிருக்கும். உறிகளுக்கிடையில் சித்திர வேலைப்பாடமைந்த உமல்கள் தொங்கும்.

உறிவகைகளுக்கு வலப்புறமாகப் பாய் அசைவு தொங்கும். மூன்று சித்திர அசைவுகளில் அழகிய கற்பன் பாய்கள் அடுக்கப்பட்டிருக்கும். அசைவுக்குக் கீழே செப்புக் குடம், வட்டா, படிக்கம் முதலிய வெங்கலச் சாமான்களிருக்கும்.

இடப்புற முகட்டுச் சுவரோரமாகச் சற்று அகலமான களிமண் திருகாணி செய்யப்பட்டிருக்கும். அதில் மூன்று அடுக்கு மிடாப் பானைகள். அடுக்குக்கு ஆறு ஏழு புத்தம் புதிய பானைகள் படித்தரமான அளவுள்ளவையவை. பானை அடுக்குகளுக்கு மேலே பரண் ஒன்று. ஓலைப் பெட்டிகள் அந்தப் பரணை நிறைத்திருக்கும். இந்தப் பானை, சட்டி குடுக்கைப் பானைகளெல்லாம் பவுத்திரம் பண்ணும் பொருட்கள் வைப்பதற்காக உபயோகிக்கப்படும். எதிர்ப்பக்கச் சுவரோரத்தில் பெட்டகமொன்றிருக்கும். முக்கியமாகப் பணம், உறுதி போன்றவை வைத்துக் காப்பாற்றப் பெட்டகம் உதவும். உள்வீட்டுக்குள் எஞ்சிய இடம் படுக்கைக்கு உதவும்.

கட்டிலோ கதிரையோ மேசையோ அப்பொழுதில்லை. வந்தவர் களும் இருக்க நெய்யற் கூடத்துள் பாயெடுத்துப் போடுவார்கள். உள்வீடு

பெண்களின் அந்தப்புரம். வந்த பெண்கள் இடது புறத்திண்ணையில் உட்காருவார்கள். அந்தப்புரத்தைத் தெரித்து வாசலில் தட்டு வேலி கட்டியிருப்பார்கள். அது சித்திர சகிதம் உறுதியானதாகக் கட்டப்படும்.

அப்பொழுது பெருந்தெருவில் நாலைந்து கல்வீடுகள் தானிருந்தன. சில களிமண் சுவர் வீடுகள் நாட்டோடு வேயப்பட்டிருந்தன. சில சொறிக் கல்லால் சுண்ணாம்பு கொண்டு சுவர் கட்டி ஓடு வேய்ந்திருந்தன. நற்பிட்டி முனையில் பூமியை அகழ்ந்தால் சொறிக்கல் கிடைக்கும்.

மருதமுனையில் முதன் முதல் கல்வீடு கட்டியவர் அலியார்ப்போடி என்னும் செல்வந்தர்தானாம். அந்த வீடு இன்னும் உறுதியானதாக இருந்து வருகிறது. பெருந்தெருவில் மத்திய வீதிச் சந்தியில் மேற்குப் புறமாக அது இருக்கிறது. அந்த வீடு சொறிக்கல்லால் தேன் கலந்த சுண்ணாம்புக் கலவை கொண்டு கட்டப்பட்டதாம். அலியார்ப் போடியின் பேத்தியை விவாகஞ் செய்திருந்த செய்யது கலீல் மவுலானா அந்த வீட்டில் குடியிருந்ததைக் கண்டேன்.

நான்கு அறைகளைக் கொண்ட அந்த வீடு மவுலானாவின் பௌத்திரி களின் வசிப்பிடமாக இன்னுமிருக்கிறது.

வட்டவளைச் செங்கல்லும் கல்லாற்றுச் சுண்ணாம்பும் கொண்டு சமீப காலத்திற் தான் வீடுகட்டி நாட்டோடு வேய்ந்தனர். கொம்பனிக்கடை வீட்டுக்குத்தான் முதன் முதற் தட்டோடு வேயப்பட்டது. சீமென்ற் உபயோகமில்லை.

பிற்காலத்தில் களிமண் வீடுகளுக்கு முன்மண்டபம் கட்டும் வழக்கமுண்டானது. அது இப்பொழுது கைவிடப்பட்டுவிட்டது.

சமீப காலத்திற்தான் சீமென்ற்றினால் புதிய மோஸ்தர்களில் வீடுகள் கட்ட ஆரம்பிக்கப்பட்டது.

## விளக்கு

கடற்கரைக் காட்டிற் புன்னைமரங்கள் நிறைய நின்றன. அவற்றின் விதைகளைச் சேர்த்து ஊற்றிய எண்ணெய், வேப்பங் கொட்டை எண்ணெய், ஆமணக்கங் கொட்டை எண்ணெய், அழுகிய தேங்கா யெண்ணைய் என்பன விளக்கெரிக்க உதவின. இந்த எண்ணெய்களைத் தான் விளக்கில் ஊற்றித் திரியிட்டு விளக்கெரித்தனர். திண்ணையின் இரு கோடிகளிலுமுள்ள மாடங்களில் இவ்விளக்குகள் வைக்கப்படும்.

எந்த நேரமும் நெருப்பு அணைந்து விடாமல் காப்பாற்றி வைக்க வீடுகள் தோறும் உமிச்சட்டிகளிருக்கும். நெருப்புத் தேவையானபோது

அந்தச் சட்டியிலுள்ள நெருப்பை மூட்டிப் பற்ற வைத்துக் கொள்வர். தீப்பெட்டி அந்தக் காலத்திலில்லை. சட்டியின் நெருப்பு அணைந்து விட்டால் அடுத்த வீட்டுக்குப் போய் நெருப்பெடுத்து வந்து பற்ற வைப்பதுண்டு.

விழாக்காலங்களில் பழத் தேங்காயுள் தேங்காயெண்ணெயை ஊற்றி அல்லது கொட்டைத் தேங்காயுள் பருத்திக் கொட்டையைப் போட்டு எரித்துப் பெரு வெளிச்சம் உண்டாக்கப்படும். சமீப காலம்வரை தேங்காயெண்ணெய் விளக்கின் உபயோகமிருந்தது. வெங்கலத்தால் செய்த குத்துவிளக்குகள், தூக்கு விளக்குகள், கந்து விளக்குகள் என்பனவும் இருந்தன. இரவிற் பாளைப் பந்தம் கொழுத்திக் கொண்டு வெளியே செல்வதும் வழக்கம்.

அக்காலத்தில் மண்ணெண்ணெய் இறக்குமதியாகவில்லை. ஆங்கிலேயர் காலத்திலும் பிற்பகுதியில்தான் அது இறக்குமதியானது. மண்ணெண்ணெய் விற்பனை செய்யுமிடம் கல்முனையிற் தானிருந்தது. மண்ணெண்ணெய் விளக்குகள் புழக்கத்துக்கு வந்ததும் கல்முனைக்குப் போய்த்தான் எண்ணெய் வாங்கிவர வேண்டும். பின்னர் கரத்தையில் எண்ணெய் கொண்டுவந்து மத்தியான ஓரிடத்தில் நின்று, ஓர் நீண்ட குழலை ஊதி, அந்தச் சத்தங் கேட்டுப் போத்தல்களை எடுத்துச் சென்று எண்ணெய் வாங்குவர். படிப்படியாகத்தான் படல் விளக்குகள் ஒழியத் தொடங்கின.

அரிக்கன் லாம்புகள் உபயோகத்துக்கு வந்தன. சுவீடன் நாட்டு நெருப்புப் பெட்டிகள் இறக்குமதியாயின. நெருப்புச் சட்டிகள் ஒழிந்தன. தூங்கும் சிம்னி லாம்புகள் இறக்குமதியாயின. கல்முனைப் பட்டினத்துத் தெரு விளக்குகளும் அவையாயிருந்தன. அப்பொழுது மின்சாரம் தெரியாது.

பளீல் ஆசிரியரின் தந்தை செய்யிது முகம்மது என்பவர்தான் முதன்முதல் மின்விளக்கு (டோர்ச் லைற்) கொழும்பிலிருந்து கொண்டு வந்தார். அண்மைக் காலம் வரை விவாக களரிக்குத் தேங்காயெண்ணெய் விளக்குப் பற்றவைப்பது ஒரு சம்பிரதாயமாக இருந்து வந்தது. நீர்மின்சாரம் உபயோகத்துக்கு வந்த பின்னர் கிராமச்சங்கத் தலைவராயிருந்த அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம். மஷூர் மவுலானா ஜே.பி அவர்களின் முயற்சியால் மருதமுனை மின்வெளிச்சத்தை அனுபவிக்கிறது.

## வேலி

ஆதியில் தத்தம் வளவுகளைச் சுற்றிக் கொத்து வேலி போட்டிருந்தார்கள். அடுத்துள்ள பற்றைகளை வெட்டிக் குவித்து அதன் மேல் முட்பற்றைகளையடுக்கி வைத்தார்கள். அதன்பின் காட்டுக்கம்பு, முட்கிளுவை, பூவரசு, முள்முருக்குக் கதிகால்களை நாட்டி வேலி கட்டினார்கள். தழை கம்புகளை உண்டாக்கி வேலியை உறுதிப்படுத்தினார்கள். கொடிகளைக் கொண்டு வரிச்சிகளை வரிந்தார்கள். 1938ம் ஆண்டுக்குப் பின்னர்தான் "சீமைக்கிளுவை"யென்னும் கிளிசீரியா உபயோகத்துக்கு வந்தது. அதுவேகமாகப் பரவியது. பழைய தழை கம்புகள் மாந்திப் போயின. வளவுகளுக்கிடைப்பட்ட வேலிப்பங்கு அன்று வகுத்துள்ள முறையில்தான் இன்றும் கட்டப்படுகிறது. முட்கம்பி வேலி அப்பொழுது தெரியாது.

"சுற்றிவர வேலி சூழவர முள்வேலி எங்கும் ஒரே வேலி. நான் எங்காலே வந்திடட்டும்" எனக் களவொழுக்கத்திலீடுபட்ட காதலன் காதலியிடங் கேட்பதிலிருந்து வீட்டைச் சுற்றித் தட்டு வேலிகளும் வளவைச் சுற்றி முள்வேலியும் இடப்பட்டிருந்தன என்பது புலனாகும். சமீபகாலத்திற்தான் வேலி கல் மதிலானது. வேலிகளில் வேப்பங் கன்றுகளையுண்டாக்கினர். வேம்பு இந்த நிலத்துக்குப் பொருத்தமான ஒரு பயனுள்ள மரமாகும்.

## நீர் வாய்ப்பும் கிணறும்

கடலையடுத்து மணல் நிலமான இவ்வூரில் இலகுவாக நீர் பெற முடிந்தது. ஆரம்பத்தில் ஆழத் துரவுகளைத் தோண்டி நான்கு புறமும் கட்டைகளை மண் சரியாமல் அடுக்கி வைத்து நீர் பெற்றிருக்கின்றனர். கிணறு கட்டக் கூடிய சாதனங்கள் அப்பொழுதில்லை. அடுத்து மரக்கொட்டுக் கிணறுகள் தோன்றின.

அன்னமலைக்காட்டில் வேண்டிய மரம் பெற முடிந்தது. ஒரு பெரிய முதிரை மரத்தைச் சாய்த்துவிட்டால் கிணறு துலா எல்லாம் கிடைக்கும். பெரிய மரத்தை ஆறடித் துண்டுகளாகத் தறித்து அத்துண்டுகளைக் கவிந்த கொட்டுளியால் தோண்டிக் குழாய் ஆக்கிக் கொள்வர். மூன்று நான்கு குழாய்களைச் செய்து அவற்றை ஒன்றன் மேலொன்றாய் இணையச் சமைத்துக் கொள்வர். கிளைகளிலிருந்து துலாக் காலும் துலாவும் செய்து கொள்வர். அவற்றைக் கொணர்ந்து வைத்துக் கொண்டு, வீட்டு முற்றத்தில் நிலமெடுத்து நீர்காணும்வரை துரவு தோண்டி அடிக்கொட்டை நீருள் நிறுத்துவர். அது முற்றிலும் நீருள் அமிழும்படி இறக்குவர். அதை நீருள் இறக்கும்விதம் அலாதியானது.

நீண்ட தடியொன்றில் மரத்தாலான குவிந்த பட்டையொன்றை ஏற்றி (திருப்பிப் பிடித்தாற் குடை போன்றிருக்கும்) ஆள் இறங்கி மண் எடுக்க ஒண்ணாத ஒன்றரை அடி விட்டமுள்ள அந்தக் குழாயுள் நிறுத்தி நீருள் இடிக்க இடிக்க மண் பட்டையுள் ஏறும். எடுத்து வெளியே கொட்டுவர். குழாய் நீருள் இறங்கத் தொடங்கும். முழுவதும் இறங்கும் வரை பட்டையால் இடித்திடித்து மண்ணெடுப்பர். முற்றிலும் இறங்கி யதும் அதன்மேல் மற்றைய குழாயை நிறுத்திப் பலப்படுத்தித் துரவை மூடுவர். இப்படியே ஏனைய குழாய்களையும் நிறுத்துவர். தன்னிலத்துக்கு மேலேயும் ஒரு யார் உயரம் இருக்க துரவை மூடி விடுவர்.

"மரத்தைத் தொளைத்துத் தண்ணீர் எடுப்பவன் மட்டக்களப்பான்" என அந்தக் காலத்தில் மரக் கொட்டுக் கிணறுகளைக் கண்ட யாழ்ப்பாணத் தார் சொல்லுவார்களாம்.

துரவு தோண்டுவது, கொட்டுப் பதிப்பது, துலாநடுவது, நீர் மொள்ள ஆரம்பிப்பது எல்லாம் ஒரே இரவில் நிகழும் நிகழ்ச்சிகளாகும். அயலாருக்கு இன்றிரவிற்குக் கிணறு போட வந்து விடும்படி அழைப்பு விடுப்பர். எல்லாரும் மாலையில் மண் வெட்டி சகிதம் வந்துவிடுவர். வளைந்து நின்று துரவு வெட்ட ஆரம்பிப்பர். தண்ணீரைக் கண்டால் ஓரே குதூகலம். குரவையும் கும்மாளமும் வேடிக்கையுந்தான்.

கொட்டுப்பதித்துத் துலாவும் நட்டுத் தண்ணீர் அள்ளிக் குளித்த பின்னர்தான் பசியெழும்பும். தயாராயிருக்கும் விருந்தில் வந்து கூடி விடுவர். முழுப்பிடி பிடித்து விட்டுக் கலைவர். பற்றுக்கைத் தடியை துலாவுட னிணைக்கும் கயிறு நவ்வைக் கொடியை முறுக்கின கயிறுதான். பட்டையும் வாளி போன்று மரத்தாற் செய்யப்பட்டதுதான். இந்த மரவாளி உபயோகத்தை நான் கண்டிருக்கிறேன். மண்ணள்ளும் பட்டை அநேக மாகக் கொட்டுக் கிணறு உள்ள வீடுகளிலெல்லாமிருக்கும். கிணற்றுள் நீர் குறைந்து விட்டால் அந்தப் பட்டையால் இடித்து மண்ணள்ளி எடுப்பார்கள்.

கிணற்றைச் சுற்றி வாழை, கமுகு முதலிய நிலைப் பயிர்களை உண்டாக்குவார்கள். அடுத்த வீட்டுக் கிணற்றுக்குத் தண்ணீரள்ளப் போவது அவமானம் எனக் கருதினர். அதனால் எப்படியும் வாசலில் ஒரு கிணறு அவசியமாக்கிக் கொள்வார்கள். கலியாணப் பேச்சில் வீடு, வளவு, கிணறு என்ற பேச்சு இன்றுமுளது.

பின்னர் செங்கல் கொண்டு நீற்றுச் சுண்ணத்துடன் சர்க்கரைத் தண்ணீர் கலந்து சற்று விசாலமான கிணறு கட்டினார்கள். செங்கல் செய்பவர்கள் கிணற்றுக்கல் என்று ஒரு பக்கம் அகன்றிருக்கச் செய்வார்கள்.

கிணற்றின் அடியில் நாவல்மரப் பலகையால் வட்ட உருளை யொன்று செய்து நிலத்தில் வைத்து அதன்மேல் கற்களை அடுக்கித்தான் கற்கிணறு கட்ட ஆரம்பிப்பார்கள். அந்த வட்ட உருளைக்கு “சங்குவடம்” என்றனர். சலக் கொட்டு இறக்கும்போது பிளந்து விடாதிருக்கச் சங்குவடம் வைக்கப்படும். சீமென்றினால் கிணறு கட்டத் தொடங்கியதும் சங்குவடம் நிறுத்தப்பட்டது. பீப்பாக்களில் வந்த வெளிநாட்டுச் சீமென்றினாற்தான் அன்று கிணறு கட்டப்பட்டது. ஒரு கிணற்றுக்கு ஒரு பீப்பா சீமென்ற் போதும்.

”காலைப் பசியைத் தீர்த்தவரும் கன்னிகாதானம் முடித்தவரும் ஆழக்கிணறு போட்டவரும் அரிய சுவர்க்கம் புகுவரே” என்பது பாட்டு.

தற்போது மரக் கொட்டுக் கிணறு போடும் வழக்கமில்லை. முன் இருந்தவற்றையும் பிடுங்கி விட்டுக் கற்கிணறே கட்டிக் கொள்ளுகின்றனர். இருதெருப்பள்ளிவாசல்களிலும் மரக் கொட்டுக் கிணறுகளிலிருந்தன. நானறிவேன். குடியிருந்து பாழடைந்த வளவுகளில் மூடுண்ட மரக் கொட்டுக் கிணறுகளை இன்றுங் காணலாம்.

## பாவனைப் பாத்திரங்கள்

அன்று மட்பாண்டங்கள்தான் உபயோகத்திலிருந்தன. ஆதியிற் தமக்கு வேண்டிய பாத்திரங்களைத் தாமே செய்து உபயோகித்திருக் கின்றனர். அடுத்துள்ள கிராமத்துத் தமிழ்ப் பெண்களின் கைத்தொழில் அதுவாயிருந்ததால் தாமே செய்து கொள்ளுவதைக் கைவிட்டு அவர் களிடமிருந்து இலகுவில் மட்பாண்டங்களைப் பெற்று உபயோகித்தனர். சைனாக்கோப்பை, பீங்கான்களை அருமையாகப் பெற்று உபயோகித்தனர். செப்புக்குடம், செம்பு, வட்டா, படிக்கம் முதலிய வெங்கலப் பாத்திரங்கள் உபயோகத்திலிருந்தன. புதுமண் குடத்துக்குப் புகையூட்டித் தண்ணீர் அள்ளிக் குளிர வைத்துக் குடிப்பர். அந்தத் தண்ணீருக்குப் ”புகைத் தண்ணீர்” என்றார்கள்.

அலுமினியப் பாத்திரங்கள் வந்த பொழுது ஒரு ரூபாய் பாரம் பத்துச்சதம் விலையாக விற்கப்பட்டது. பின்னர் இரும்புத் தகட்டுப் பீங்கான் கோப்பைகள் வாங்க முடிந்தது.

## வீட்டுத் தளபாடவங்கள்

நிலத்திற் பாய் விரித்து உட்காரும் வழக்கம் பரம்பரையானது. வந்தவர்கள் உட்காருவதற்கென்று வர்ணப் பாய்கள் இழைத்து அசவுகளில் அடுக்கி வைத்திருப்பார்கள். கதிரை, மேசை, கட்டில்களெல்லாம் சமீப

காலத்திற்தான் புழக்கத்துக்கு வந்தன. கயிற்றினாற் பின்னிய அல்லது பலகை போட்ட கட்டில் எங்காவது ஒன்றிருக்கும். கலியாணத்தில் மணமக்களின் உபயோகத்துக்காக அதை இரவலாக வாங்கிக் கொணர்ந்து உபயோகித்தனர். ஏழுநாளின் பின் அது திருப்பிக் கொடுக்கப்படும். மணவறையில் கட்டிலில் ஒரு பாய் விரித்து மேலே ஒரு மெத்தைப்பாய் விரித்து வைத்திருப்பர். கட்டில் இல்லாத காலத்தில் பாய்கள் நிலத்தில் விரிக்கப்பட்டன.

இவ்வூர் ஓடாவிமாருக்குக் கதிரை, மேசை செய்யும் பயிற்சியிருக்க வில்லை. உபயோகிக்கத் தேவையுமிருக்கவில்லை. கல்முனையிலிருந்த பறங்கி ஓடாவிமார்தான் பிந்திய காலத்தில் மேசை, கதிரைகள் செய்து தந்தனர். பெட்டகம் என்ற பெரிய பெட்டி நான்கு கால்கள் உள்ளதாய் தடித்த முதிரைப் பலகையாற் செய்து கருங்காலி மரம் கொண்டு சித்திர வேலைகள் செய்து அழகுபடுத்திப் பெரிய இரும்புப் பூட்டுப் போட்டு உபயோகித்தனர். அதுபோலச் சிறிய உருவில் தயிலாப் பெட்டி என்று ஒன்றும் புழக்கத்திலிருந்தது. உடுப்புக்கள் வைக்கப் பனையோலையாற் செய்த கட்டுப் பெட்டி மூடியுடன் உபயோகிக்கப்பட்டது. அண்மையிற் தான் அலுமாரி உபயோகத்துக்கு வந்தது.

# 2

# தொழில் முயற்சிகள்

## நெசவுத் தொழில்

ஆதியிற் குடியேறியவர்கள் நெசவுத் தொழிலிற் பரிச்சியமுடையவ ராதலால் பருத்தி நடுவது முதல் துணியாக்குவது வரையிலுள்ள சகல கருமங்களையும் இங்கேயே அவர்கள் கையினாற் செய்திருக்கின்றனர். கடலையடுத்த மணற் பிரதேசமும் சுவாத்தியமும் பருத்தி விளைய வைக்க வாய்ப்பாயிருந்திருக்கிறது. பஞ்செடுத்து, வித்து நீக்கி, நூல்நூற்று, நெசவு செய்தனர். பஞ்சிலிருந்து வித்து நீக்கப் பருத்தி மணையென்று மரத்தினாற் செய்த இயந்திரமொன்றிருக்கிறது. (அன்று பருத்திப் பஞ்சரைக்க உபயோகிக்கப்பட்ட அது இன்று பாயிழைக்கும் கற்பன் அரைக்க உபயோகிக்கப்படுகிறது)

கைப்பிடியினாற் சுற்ற அதனாற் சுழலும் இரு உருளைத் தடிகளுக்க ிடையே பஞ்சைச் செலுத்த, பஞ்சு மட்டும் அப்பாற் செல்லும் வித்துக்கள் இந்தப் பக்கம் தங்கிவிடும். வித்து நீக்கிய பஞ்சைப் பதப்படுத்த "வில்லு," "வீசாணம்" என்ற கருவிகளையுபயோகித்தனர். பஞ்சை நூலாக்கும் வரை ஊழியம் அதிகம் என்பதற்கும் "பஞ்சு படாத பதினெட்டுப்பாடும்" என்றொரு பழமொழி வழங்குகிறது கொண்டு அவதானிக்கலாம்.

இராட்டினத்தினால் நூல் நூற்றார்கள். நூற்ற நூலை திருவிடங்களில் வார்த்தெடுத்துப் "பா" ஓடினார்கள். தடிகளை நிலத்தில் நேராக நிரைத்துத் திருவிடத்தைக் கையிலெடுத்துக் கொண்டு ஓடியோடித் தடிகளுக் கிடையே மாறிமாறிப் புணியெழுப்பிக் கொண்டு "பா" ஆக்கினர். ஓடியோடிப் பா ஆக்கினதால் "பாவோடுதல்" எனப்பட்டது. முதன்முதற் பாவோடியவருக்குப் "பாவோடியர்" என்றார்கள். குழித்தறிகளிற் கையினால் நாடாவை எறிந்தெறிந்து நெசவு செய்தார்கள்.

இந்தியாவிலிருந்து நூல் இறக்குமதியாகத் தொடங்கியதும் பருத்தி நடுதல், நூல் நூற்றல் என்பன நின்றுவிட்டன. இறக்குமதியான நூலைக் கொண்டு நெசவு செய்ததைத்தான் நான் கண்டேன். பஞ்செடுத்து நூல் நூற்ற சிலர் தங்கள் அனுபவங்களைச் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதற்காக அவர்கள் உபயோகித்த உபகரணங்களைக் கண்டிருக்கிறேன்.

சூத்திரம் அமைத்துப் பாவோடியவர் "சூத்திரக்காரன்" என அழைக்கப்பட்டார். நூலிழைத்த திருவிடங்களை நிரைத்து வைத்து நூல்களை ஒரு கருவியிற் சேகரமாக்கிச் சூத்திரத்தைச் சுற்றிக் கொண்டு பா அமைப்பார். பின்னர் பாவைக் கழற்றி வெளியே நீளமாகப் போட்டு விரித்துப் பசைபோட்டுச் சுற்றித் தறியிற் பொருத்தி நெசவு செய்வர்.

கையினால் நூற்ற நூல் தடிப்பானதால், அதனால் நெசவு செய்த சீலையும் தடிப்பானதே. சாறம், சோமன், இலேஞ்சி என்பனதான் அன்று நெசவு செய்யப்பட்ட துணிவகைகள். தேவையும் அவையாகத்தா னிருந்தன. அண்மையில் உள்ள காட்டில் சாயவேர், சாயக்காய் கிடைக்கும். அவற்றையெடுத்து நூலுக்குச் சிவப்புச் சாயம் ஊட்டுவர். ஆண்கள் நெசவு செய்வார்கள்.

பெண்கள் நூல் இழைப்பார்கள். "தார்" சுற்றுவார்கள். நாடாவுட் சேர்ப்பது தார். அது மூங்கிற் குழாயில் நூலைச் சொற்பம் சொற்பமாக சுற்றி எடுப்பது. பசை போட்ட நூற்கயிற்றால் விழுது கட்டுவார்கள். மூங்கிற் குச்சைச் சீவி அச்சு கட்டிக் கொள்வர். இவற்றிற் கைதேர்ந்தவர் களிருந்தனர். அவர்களை "அச்சுக்கட்டியர்" என்றார்கள். அவர்கள் அவற்றைச் செய்வதை நான் கண்டிருக்கிறேன். இரண்டு மிதி கொண்டு மட்டுமல்ல, நான்கு, ஆறு மிதி கொண்டு புணியெழுப்பியும் நெசவு செய்வர்.

வெளிநாடுகளிலிருந்து பலதரப்பட்ட நூல்களும் இறக்குமதியாகத் தொடங்கியதும் விசைத் தறி அறிமுகஞ் செய்யப்பட்டதும் நெசவுத் தொழிலில் ஒரு மறுமலர்ச்சியேற்பட்டது.

1922ல் அரசாங்கத்தினால் யூ. சாலிகு லெவ்வையென்பவருக்கு இனாமாக வழங்கப்பட்ட புதிய விசைத் தறியே முதன் முதல் மருதமுனை கண்ட விசைத்தறியாகும். ஆனால் அது அவரின் உபயோகத்தில் மட்டுமே இருந்து வந்தது.

1940ல் அரசினர் மருதமுனையில் நெசவுப் பாடசாலை யொன்றை நடத்தினர். விசைத் தறி கொண்டு மாணவர்களுக்கு நவீன முறையில் நெசவு செய்யப் பயிற்சியளித்தனர். நவரத்தினம் என்பவரும் வேறு சிலரும் ஆசிரியர்களாகப் பணிபுரிந்தனர். மாணவர் பலர் பயிற்சி பெற்றதும் பாடசாலையை அக்கரைப்பற்றுக்கு மாற்றி விட்டனர்.

1947ல் அதுவும் மூடப்பட அந்தத் தறிகள் சிலவற்றை உதுமா லெவ்வையென்பவர் வாங்கிக் கொண்டு வந்து இங்கு இயக்க ஆரம்பித்தார். அதன் பிறகுதான் விசைத்தறி ஊரிற் பரவத் தொடங்கிற்று. குழித்தறி

மறைந்துவிட்டது. என்னால் நெசவுப் பயிற்சிக்காகக் கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரிக்கு அனுப்பப்பட்ட அ. முகையதீன் பாவா, ஆ. முகம்மதிஸ்மாயில் ஆகிய இரு மாணவர்களும் நெசவுப் பயிற்சி பெற்றுத் தராதரங்களுடன் வந்தனர். முகையதின் பாவா சிறந்த ரகப் புடவைகளை உற்பத்தி செய்கிறார். முகம்மதிஸ்மாயில் நெசவு ஆசிரியராகப் பணிபுரிந்து காலமானார்.

1940ல் யுத்த காலத்தின்போது நெசவுத் தொழிலுக்கு அதிக மவுசும் வருமான அதிகரிப்பும் உண்டாயிற்று. பட்டு நூல் இறக்குமதியான போது பட்டுச் சோமன்கள் குழித்தறியில் நெசவு செய்தனர். நவீன உடைப் பழக்கம் ஏற்பட்ட பின் அந்தத் தடித்த சோமன் உடுப்பாரில்லாமற் போக நெசவு செய்வதும் நின்றுவிட்டது. அசனார் தோம்புதோர் கரை மறுத்துப் பட்டுச் சோமன் வகைகள் நெசவு செய்தார்.

## விவசாயம்

வீட்டுக்குள் வருமானம் கிடைக்குந் தொழில் இருக்கும்போது வெளியே சென்று வருந்தித் தொழில் செய்ய யார்தான் விரும்புவார். அன்றைய மக்கள் நெசவே கதியென்றிருந்து விட்டதனால் கமம் செய்யும் எண்ணம் இல்லாது போயினர். மக்கள் தொகை பெருகக் கமச் செய்கையில் எண்ணங் கொண்டனர். அண்மையிலுள்ள கமநிலமெல்லாம் அயலவராற் சுவீகரிக்கப்பட்டு விட்டதனால் நிலம் தேடி வெகுதூரஞ் செல்ல வேண்டியிருந்தது.

அன்னமலைத் துறைவழியே வதுளைக்குச் செல்ல உபயோக மாயிருந்த காட்டுப் பாதையையடுத்து பத்துப் பன்னிரண்டு மைல் களுக்கப்பால் களிமடுக் கண்டம் என்னும் மானாவாரி நிலத்தை விவசாயஞ் செய்வதற்குப் பொருத்தமானதாய்க் கண்டனர். ஒரு சிலரே அப்பகுதிக் காணிகளை வெட்டிக் களனிகளாக்கி வேளாண்மை செய்தனர். சில வேளை காட்டு வெள்ளம் வந்து அழிவு செய்வதுமுண்டு. மழையின்றி வரண்டு போவதுமுண்டு. சேனைப் பயிர்களும் செய்திருக்கின்றனர். "அல்லிப் பிள்ளை சேனை" என்றொரு இடத்துக்குப் பெயரிருக்கிறது.

இவ்வூர்ப் பெரியாரான சின்னாலிம் அப்பாவும் களிமடுக் கண்டத்தில் வேளாண்மை செய்திருக்கிறார். அவர் வாடியமைத்திருந்த திடலுக்கு "ஆலிமின்பிட்டி" என்பார்கள். வருடந்தோறும் அந்தப் பிட்டியில் விளைவில் கந்தூரி கொடுக்கும் வழக்கம் இருந்து வந்தது.

ஒரு பொழுது விளைவு காலத்தில் மழையில்லாது போக பயிர்கள் வாடி வதங்குவது கண்டு பொறுக்க மாட்டாராய் இறைவனையேத்தி

வயலுள் நின்றவாறே மழைக்காவியம் பாடினாராம். பாடி முடியுமுன் வானம் இருண்டு மழை பொழியத் தொடங்கிற்றாம். அம்முறை வயல்கள் நல்ல விளைவு கண்டனவாம்.

"தைமாசியென்றொரு தவணைகளுமுண்டோ
தை தப்பினால் மாரி கைதப்பி விடுமோ "
என்பது அக்காவியத்தில் ஒருவரி.

களிமடுவில் நிரந்தர வாடிகளுமிருந்தன. அந்த வாடிகளில் மாட்டுப் பட்டி ஆட்டுப்பட்டிகள் நிறைய இருந்தன. பால், தயிர், நெய்களுக்குக் குறைவில்லை. பொக்கணியர் பெரிய பட்டிக்காரன். வழிப்போக்கர்களுக்கு அவரின் வாடி ஒரு தங்குமிடமாக அமைந்திருந்தது.

வயல் நிலங்களைச் சுற்றி பெரிய மரக்காடுகள், யானை, புலி, கரடி முதலிய துஷ்ட மிருகங்கள் வசிக்கும் காடுகள். காட்டுமாடு, யானை, பன்றி முதலிய மிருகங்களிடமிருந்து பயிரைக் காப்பாற்ற வட்டையைச் சுற்றி உறுதியான வேலி கட்ட வேண்டும். விரல் அணி போன்று கதிதூண்களை நாட்டி நான்கு வரிச்சி பிடித்து கடின காவல் செய்ய வேண்டும். வேலியை அளந்து செய்கைக்காரருக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்படும். அவரவர் வேலிப் பங்கிற் பரண் கட்டி இரவு முழுவதும் விழித்திருந்து காவல் காக்க வேண்டும். இரவெல்லாம் விழித்திருந்த காவற்காரன் பகலில் தான் கண்ணயர்வான். அப்படிக் கண்ணுறங்கியவன் கண்ட ஒரு கனவைக் கேளுங்கள்.

"காவற் பரணிலே கண்ணுறங்கும் வேளையிலே
கண்ணான மச்சி வந்து காலூன்றக் கண்டேன்"

வேலி நெடுகிலும் "தீனா" போட்டு வெளிச்சம் உண்டாக்கப்படும். மணி, சகடை கொண்டு காவற்காரர்கள் இரவெல்லாம் வேலிக்கால் வழியே சூழ் பிடித்துக் கொண்டு திரிவர். விடியற்காலையில் வட்டை விதானை வட்டையை வளைத்துப் பார்த்துப் பன்றி, காட்டு மாடு உள்ளிட்ட வேலிக்காரனை அழைத்து அடிகொடுப்பார்.

தலை மழைக்கு முன் வயலுக்குள் "ஏர்நாள்" செய்யப்போய் தழைப் பற்றைகளை வெட்டிச் சுட்டுக் கலப்பை முதலிய ஏர்க் கருவிகளைச் செப்பனிட்டுப் பூமியை உழத் தலை மழையை எதிர் நோக்கியிருப்பர். நாட்டுக் கலப்பைக்கு ஏர்க்கால், மேழி, நுகம், கலப்பை நாக்கு என்பன உறுப்புக்கள். மூன்று நான்கு உழவுகள் போட்டுத் தரையைப் பண்படுத்தி நெல்லாகவே புழுதியில் எறிந்து விதைப்பர். மழை பெய்ததும் நெல்

முளைக்கும். அனேகமாக நான்கு மாதத்தான் நெல்தான் விதைக்கப்படும். முருங்கைக் காயன், கறுப்பன் பாற் சம்பா என்பன நெல்லினங்கள்.

பூ வேழு, காயேழு, பழமேழு நாட்கள் விதைத்து 120 நாட்களில் பயிர் வெட்டுக்குத் தயாராகிவிடும். வானம் பார்த்த பயிர் “மானாவாரி” என்பார்கள். ஏக்கருக்குப் பதினாறு பங்குகள் என்ற கணக்கில் அளவுக் கம்பு கொண்டு வயலை அளந்து வெட்டுக்காரருக்குக் கொடுக்கப்படும். பங்குக்கு ஒரு மரைக்கால் நெல் கூலியாயக் கொடுக்கப்படும். வெட்டுக் காரர் கூட்டம் கூட்டமாக வருவர். அவர்களுள் ஒருவர் “முகனைக்காரன்” (மோனை என்ற சொல் முகனை எனத் திரிந்தது. மோனை - முதல்) முகனைகாரன் போடியிடம் வயலைப் பேசியெடுத்து வெட்டுக்காரரைக் கொண்டு வெட்டுவித்துக் கூலியைப் பெற்றுப் பகிர்ந்தளிப்பார். வெட்டிக் கட்டிச் சூடு வைத்துக் கொடுக்கப் பொருந்தி வெட்டுவதுமுண்டு. இத்தகைய வெட்டுக் கூட்டத்தினர் இவ்வூரிலுமிருந்தனர்.

களஞ்செதுக்கி அரக்குப் புதைத்துச் சூடுதள்ளி எருமைக்கடாக்களைக் கொண்டு மிதித்துப் பொலி தெரித்துத் தூற்றி மதிப்பர். தற்காலம்போல் படங்கிற் சூடு தள்ளி உழவு இயந்திரம் கொண்டு சூடு போடும் வழக்கம் அப்பொழுதில்லை.

அந்தக் காலத்திற் சூடடிக்கும் முறை ஒரு சடங்கு போன்றது. சூடு வைத்த பின் சூட்டின் வடக்குப் புறமாகக் களம் செதுக்கப்படும். களித் தரையைப் பார்த்துத்தான் “களவெட்டி” தெரியப்படும். களம் காய்ந்தபின் மேடு, பள்ளந் திருத்தி மத்தியில் “அரக்குப்” புதைப்பர். வெள்ளி, பொன், சங்கு முதலியன அடங்கிய பேழையொன்றைக் களத்தின் மத்தியான இடத்தில் இஸ்முகளுடன் உப்பட்டியுஞ் சேர்த்துப் புதைத்து விடுவர்.

அரக்குப் புதைப்பவர் அன்று முதல் களம் முடிவுறும் வரை அந்த இடத்தை விட்டு அப்பாற் செல்ல முடியாது. அவருக்கெனக் களத்தின் ஒரு புறத்தில் சிறு குடில் செய்திருப்பர். பெரும்பாலும் வயற் செய்கைக் காரனே அரக்குப் புதைப்பான். எட்டு எருமைக் கடாக்கள் கொண்ட ஒரு தொடுவை சூடடிக்கத் தேவைப்படும். களத்தைச் சுற்றி அடம்பன் கொடியாலும் இஸ்முகளாலும் எல்லைப்படுத்தப்படும். கடல் நீர் கொண்டு வந்து களமெங்கும் வேப்பிலையால் தெளிக்கப்படும். போடியார் சூட்டில் கை வைத்திழுத்து எடுத்துக் களத்திற் தெளித்து விடுவார். வேலையாட்கள் சூட்டைப் பிரித்துக் களத்துடன் போர் குவிப்பர். எருமைத் தொடுவையைப் போரின் மேல் ஏற்றி வளைத்து நடத்துவர். பின்னால் ஒருவர் குரற்காட்டிக் கொண்டு செல்வார். அதற்கான களைப்பாட்டைப் பாடிக் கொண்டு செல்வார். பாட்டு நின்று விட்டால் மாடும் நின்று விடும்.

அந்த மாடுகள் சூடடிக்கவென்று பழக்கப்பட்டவை. இரவெல்லாம் நடந்து கதிரைப் பொலியவைக்கும். இடையிடையே நிறுத்தித் திரைவு எடுப்பர்.

வரம்போ தலகாணி வாய்க்காலோ பஞ்சு மெத்தை
பொலி பொலி பொலியம்மா பொலியோ ஓ ஓ ஓ....

இது போன்று மாட்டை வருணிக்கும் பாடல்களை ஓசையெழுப்பிப் பாடுவர். களத்தில் உபயோகிக்கும் வார்த்தைகள் பிரத்தியேகமானவை. சூடடிப்பவர்களுக்கெல்லாம் அந்த வார்த்தைகள் புரியும். அநேகமாகப் பொலி பொலி என்றும் பெருக்கு, கட்டு என்றும்தான் வார்த்தைகள் முடிவுறும். தண்ணீருக்கு வெள்ளம் என்றும் நெருப்புக்கு அக்கினி என்றும், மரக்காலுக்குக் கணக்கன் என்றும் கடகத்துக்குப் பெருவாயன் என்றும், மண் வெட்டிக்கு வெட்டுவாயன் என்றும் மாடுகளுக்கு வாரிக்காலன் என்றும் வைக்கோலுக்குப் பொலிக் கொடியென்றும், நெல்லுக்குப் பொலியென்றும், கயிற்றுக்கு நெடுவாலன் என்றும், பதருக்குக் கள்ளன் என்றும் புனைப் பெயர்கள் கூறுவர். களத்துள் பூதம் புகுந்து நெல்லை அள்ளிக் கொண்டு போய்விடுமென்றும், அதற்கு விளங்காமலிருக்கும் பொருட்டே இப்புனைப் பெயர்களை உபயோகிப்ப தாகவும் கூறுவர்.

வேலைக்காரர் சதி செய்யாதிருக்கவும், கட்டுக் காவலோடு விளைவைப் பெற்றுக் கொள்ளவும் வயற்காரர் பண்டைக் காலத்தில் ஏற்படுத்திய ஒரு இரகசியத் திட்டம் இது. பரம்பரை பரம்பரையாகக் கைக்கொள்ளப்பட்டு வருகிறது. வேலையாட்கள் ஒவ்வொருவரும் கையில் நுனி வளைந்த தடியொன்றை வைத்திருப்பர். அதைக் கொண்டுதான் நெற் போரைக் கிண்டிக் கிளறி வைக்கோல் வேறு பொலி வேறாக்குவர். அந்தத் தடிக்கு வேலைக்காரன் கம்பு என்பர். வெள்ளாப்பில் களம் முழுவதும் திரைந்து விடும். விடிந்ததும் வைக்கோல் வேறு பொலி வேறாக்கிப் பொலியைக் களத்தின் மத்தியில் கூட்டிப் பரப்பிக் காய விடுவர். மதியந் திரும்பி காற்றுப் பெயர்ந்ததும், உயர்ந்த இரு "அவுரி"களில் இருவர் ஏறி நின்று பொலி தூற்றுவர். கீழே நிற்போர் கொம்பு தெரிப்பர்.

மண்ணாங்கட்டி, கருங்காய் நீக்கி வைரப்பொலியை மதித்துப் பட்டடையிற் சேர்ப்பர். வைக்கோலைக் கற்றையாக்கி அடுக்கிச் செய்யப்பட்டது பட்டடை. "வைக்கோலில் விளைந்ததை வைக்கோலிற் கட்ட வேண்டும்" என்ற பழமொழி இச்செய்கையாலுண்டானதே. சூடெல்லாம் அடித்து முடிந்ததும் பட்டடையைப் பிரித்து நெல்லை அளந்து அப்புறப்படுத்துவர். களம் முடிந்ததும் "புற்கை" சமைத்துப்

"பாத்திஹா" ஓதுவர். சூடடித்தவர்களுக்கு ஒரு நாளைக்கு இரண்டு மரைக்கால் நெல் கூலியாகக் கொடுக்கப்படும்.

செப்பமில்லாத காட்டுப்பாதையில் மேட்டிலும், பள்ளத்திலும் வேரிலும், கட்டையிலும் இடறிவிழுந்து பார் பிடித்து மிகுந்த சிரமத்துடன் தான் களிமடுவிலிருந்து வண்டியில் நெல்லேற்றிக்கொண்டு வந்து வீட்டிற் சேர்க்க வேண்டும். சாக்குக்கு ஒரு மரக்கால் நெல் வண்டிக் கூலி கொடுக்கப்படும். நெல்லெல்லாம் வீட்டுக்கு வந்தாலும் உடனே விற்பனையாகாது. பட்டடையில் அட்டுவத்தில் நெல்லைச் சேமித்து வைப்பர். சொந்த முதலில்லாதவர்கள் விளைவில் ஒன்றுக்கு ஒன்றரை தருவதாகக் கடன் வாங்கி செய்கை பண்ணுவதுண்டு.

சில சமயங்களில் விளைவு முதலுக்கும் வட்டிக்கும் சரியாய் விடுவதுமுண்டு. அந்த விளைவில் இறுபடாத கடனுக்கு அடுத்த விளைவில் இரட்டிப்புத் தொகை கொடுக்க வேண்டும். குத்தகைக்கு வயலெடுத்தவர் விளைவில் குத்தகையும் புதிர்க்காவும் போடியார் வீட்டிற்குக் கொண்டு வந்து கொடுப்பர். வாழைக் குலை, தயிர்ப் பானை, புதிர்க் கோட்டை என்பவற்றைக் காத்தடியில் கட்டி வெள்ளை போட்டுக் காவிக் கொண்டு வருவர். புதிர்க்கா - இது போடியாருக்குச் செய்யும் மரியாதை.

சொந்த வண்டியில்லாத போடியாருக்கு "களையேர்வை" செய்யும் வண்டிக்காரரே விதை நெல், வேலிக் கம்பு, விளைந்த நெல் எல்லாம் ஏற்றிக் கொடுப்பார். அதற்காகத்தான் சாக்குக்கு ஒரு மரக்கால் விளைவிற் கொடுக்கப்படும்.

வானம் பார்த்த மானாவாரிச் செய்கை மிகக் கஷ்டமானது. படும்பாட்டுக்குத் தக்க பலன் கிடைத்து விட்டாற் பாதகமில்லை. பலகாலம் நஷ்டத்தையனுபவித்த வயற்காரர் சிலகாலம் செய்கை பண்ணாமலே விட்டு விட்டார்கள். வெட்டாக்காடும் விளையாத் தரையும்தான் மருதமுனையாருக்குக் கிடைத்தது. ஒழுங்கான பாய்ச்சல் வடிச்சற் பூமி இன்னுங் கிடைக்கவில்லை. என்றுதான் விமோசனங் கிடைக்குமோ?

கைவிடப்பட்டுக் கிடந்த களிமடுக் கண்டத்துப் போடிமாரை 1952ம் ஆண்டில் ஷரிபுத்தீன் ஹாஜியார் ஒன்று கூட்டி மீண்டும் வேளாண்மைச் செய்கையை ஆரம்பிக்க உற்சாகமூட்டினார். அவரே முன் நின்று பணம் திரட்டி விவசாயப் பகுதியிடம் உழவு இயந்திரம் பெற்றுக் கண்டம் முழுவதையும் உழவு செய்வித்துக் கொடுத்தார். மானாவரிச் செய்கை நடைபெற்று வந்தது. வெள்ளப் பெருக்கின் அழிவு மேலும் மேலும்

ஏற்பட்டதால் மாரிப் போகத்தை நிறுத்தி கோடைப் போகத்தை ஆரம்பித்தார். தொடர்ந்து ஆறு கட்டி நீர் பாய்ச்சிக் கோடைப் போகமே செய்கை பண்ணப்பட்டு வருகிறது,

களிமடுக் கண்டத்துக்கு சாயிவுத்தம்பி, அதன் பின்னால் ஆதம்பாவா. பின் இஸ்மாலைவ்வைப் போடி, சா. மீரா முகையதீன் என்போர் வட்டை விதானைமாராயிருந்தனர். தற்போது ஆ. மசுகூது லெவ்வையை வட்டவிதானையாக ஆக நியமித்திருக்கிறோம். விவசாயக் குழு ஏற்பட்டபோது முதலில் மு.க. ஆதம்பாவா மரைக்காரும் பின்னர் க. ஆதம்பாவாவும் தலைவர்களாயிருந்தனர்.

முக்குகப் போடிமாருக்கிருந்த மேட்டு வட்டைக் காணியிற் சில வயல்களை மருதமுனையார் வாங்கிச் செய்கை பண்ணுகின்றனர். தம்பன் கடவை, ஹிங்குருக்கொடை, தாண்டியடி, கண்டியக்குளம் என்னுமிடங் களிலும் சிலர் வேளாண்மை செய்து வருகின்றனர்.

அந்தக் காலத்திற் சிலர் வசதியான இடங்களிற் காடு வெட்டி சோளம், குரக்கன் முதலிய பயிரினங்களைச் செய்தனர். அவற்றைத் தொடர்ந்து செய்வாரின்றிக் கைவிடப்பட்டு விட்டது.

கடின உழைப்பும் சொற்ப ஊதியமும் பெற்று வாழ்ந்து வந்த மருதமுனை மக்கள் கஷ்ட சீவிகளாகவே சந்ததி சந்ததியாக வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

## வியாபாரம்

மிகப் பழங்காலத்தில் வியாபார நோக்கமாகச் சிலர் தாவளம் ஏற்றும் தொழிலை மேற்கொண்டனர். எருது மாடுகளில் சாமான் பொதிகளை ஏற்றிச் செல்வதுதான் தாவளம். அரேபியப் பாலைவனத்தில் "கரவன்" வர்த்தகரான அரேபியர் ஒட்டகைகளில் சாமான்கள் ஏற்றிக் கொண்டு சென்று வியாபாரஞ் செய்தல் போன்றது இது. அக்காலத்தில் வியாபார நோக்கமாக இங்கு வந்த அரேபிய வர்த்தகர்கள் காட்டில் ஒற்றையடிப் பாதைகளில் மாடுகளில் பொதியேற்றிச் சென்றனர். வாகன வசதியோ ஒழுங்கான பாதையோ இல்லாத அந்தக் காலத்தில் அவர்களால் அறிமுகப் படுத்தப்பட்ட இம்முறையைப் பின்பற்றி இங்குள்ளவர்களும் மாடுகளிற் பொதியேற்றி மேற்கே காடுகளிடையேயுள்ள சிங்களக் கிராமங்களுக்குக் கொண்டு சென்று பண்டமாற்றுச் செய்தனர்.

கரையோரப் பாதையிலிருந்து மலைநாட்டை நோக்கிச் செல்லும் பாதையிலுள்ள குக்கிராமங்களின் நாகரீகமற்ற சிங்கள மக்கள் சேனைப்பயிர்

செய்து சேகரித்து வைத்திருந்த கோப்பி, பயறு, சோளம், குரக்கன் முதலிய தவச தானியங்களுக்குத் தாம் கொண்டு சென்ற உப்பு, கருவாடு, புகையிலை, புடவை முதலிய பொருட்களைக் கொடுத்து மாற்றிக் கொண்டு வந்து இங்கு விலைப்படுத்தினர்.

மாடுகளின் முதுகிற் கட்டப்பட்ட ஒருவகை உடுப்பில் பக்கத்துக் கொன்றாகப் பொதிகளைப் பிணைத்து. மணி, சகடை கட்டி மாடுகளை ஒன்றன் பின்னொன்றாக நடத்திச் சென்றனர். காவாலி, பின்தட்டு, பண்ணையென்பன மாட்டின் இடுப்பின் உறுப்புக்கள். துட்ட மிருகங் களுள்ள காட்டுப் பாதையில் தனித்துச் செல்லாமற் பலர் ஒன்று சேர்ந்து ஏக காலத்திற் புறப்பட்டுப் போவார்கள். முன்னே வழிகாட்டியாகச் செல்பவருக்கு "துவல்" என்று பெயர். தாவளங்களை ஓட்டிச் செல்லும் போது இடையில் காணும் தளாவாய்களில் தரித்து மாடுகளை மேய விடுவர்.

அறபி வியாபாரியான செய்யிது அப்துல் றகுமான், வஸ்புக் குட்டியார், எனது பாட்டனார் அகமது லெவ்வை, அனஸ் லெவ்வை, இபுறா லெவ்வை, துவ்வார் மரைக்கார், அகமது லெவ்வை, முகம்ம தலியார், இப்றா லெவ்வை மரைக்கார், மீரா லெவ்வைப் பரிகாரி, ஆதம்பாவா ஆகியோர் தாவளமேற்றி வியாபாரம் செய்தவர்களாவர். இவர்களிற் சிலர் விந்தனை வேல்லசைப் பகுதிகளில் தங்கக் கடைகளை வைத்தும் வியாபாரஞ் செய்தனர்.

தாவளமேற்றிய வியாபாரிகள் சிங்களவரோடு உறவாடிச் சிங்களம் பேசக் கற்றுக் கொண்டனர். இவர்கள் இந்தத் தொழிலைச் செய்தமையை அடுத்துள்ள வேறெந்த முஸ்லிம் கிராமத்தவரின் பேச்சு மொழியிலும் காணப் பெறாத ஒரு புதுமையை இவ்வூரின் பேச்சு மொழி நிரூபித்துக் கொண்டிருக்கிறது. சிங்கள மொழியைப் பேசக் கற்றுக் கொண்டவர்கள் சிங்களத்தில் வினாவெல்லாம் "த" என்ற ஈற்றினைக் கொண்டு "ஹொாந்தத" "ஆவாத" என்பன போன்றிருப்பதனால் தமிழ் வினாச் சொற்களையும் வந்தத, இருந்தத என ஈற்றினைக் குறுக்கி உச்சரித்தனர். அது அன்னா ருக்குச் சுவையாயுமிருந்தது. காலக் கிரமத்தில் வினாச் சொற்களில் ஆகார ஈறுகள் அகர ஈறுகளாகக் குறுகின.

அனேகமாக மருதமுனையாரின் வினாச் சொற்களெல்லாம் சிங்கள வினாவோசையைச் சார்ந்திருப்பதை அவதானிக்கலாம். மட்டிப்புளா (யட்டிபுளத்) கோப்பத்தை (கொளாபத்த) கணகாட்டு (கணகாட்டுவ) முதலிய சிங்களச் சொற்களும் அவர்கள் கொண்டு வந்தவைகளே. அன்று குடையாக உதவிய தளப்பத்து ஓலையும், இனிப்பாக உதவிய கித்துள்

கருப்பட்டியும், கொட்டைப் பாக்கும் சிங்கள நாட்டிலிருந்து கொண்டு வந்து அறிமுகஞ் செய்யப்பட்டவையே. இந்த வியாபாரிகளின் மூலம்தான் கோப்பி குடிக்கும் பழக்கமும் ஏற்பட்டது.

நாட்டுப் புறத்துச் சிங்கள மக்கள் விரும்பியுண்ணும் குரக்கன் களியை இவவூராரும் நன்கு சாப்பிட்டனர். வீடுகளில் குரக்கன் அரைக்கும் திரிகைக்கல் வைத்திருந்தனர். தாவளங்கள் வந்து இறங்கி விட்டால் குரக்கன் நிறைய வாங்கலாம். குரக்கன் மா அரைத்ததுக் களி கிண்டி உருண்டையாக உருட்டி கறியிற் புரட்டி விழுங்குவர். உரொட்டியும் சுட்டுண்பர். சோளமும் பயறும் கலந்து அவித்து தின்னும் பழக்கமும் சோளனைத் தீட்டி இடித்து மாவாக்கி உரொட்டி, பிட்டு முதலிய தீன் பண்டங்களைச் செய்துண்ணும் பழக்கமும் இவர்கள் மூலம் வந்தனவே. தாவளத்தில் ஏற்றிக் கொண்டு வந்த தானிய வகைகளை அடுத்துள்ள கிராமத்தவர்களும் வந்து வாங்கிக் கொண்டு போய் உபயோகித்திருக கின்றனர். சோளம் வாங்க வந்த துறைநீலாவணைப் பெண்ணொருத்தி விலையைக் கேட்டுவிட்டு தனது வயிற்றை நோக்கி

சோளம் ஆறுபணம் சோனகத்தி விற்கும் விலை
காந்தாதே என்வயிறே கண்ணாணை ஒன்றுமில்லை

என்று பாடினார். ஒரு மரக்கால் சோளம் ஆறுபணம் முப்பத்தேழரைச் சதம். இது அறாவிலையென்று கூறி வாங்காமற் சென்றிருக்கிறாள்.

தாவள மேற்றுவோரில் மற்றொரு பகுதியினர் பொத்துவில் வழியாக தும்பகஹவெல, மொனறாகலை முதலிய சிங்களப் பகுதிகளுக்குச் சென்று வியாபாரஞ் செய்திருக்கின்றனர். சிங்கள மன்னர் காலத்தில் ஏற்படுத்தப் பட்ட திருக்கோவிற் சந்தையிற் பொருட்களை வாங்கி ஏற்றிக் கொண்டு போய் அங்குள்ள சிங்கள மக்களுடன் பண்டமாற்றுச் செய்திருக்கிறனர். அவர்களிடம் பெற்ற பொருட்களைத் திருக்கோவிற் சந்தைகளிற் கொணர்ந்து விற்றிருக்கின்றனர். காலக்கிரமத்தில் பாதைகள் சீரடைந்ததும் இவர்கள் வண்டிகள் மூலம் இந்த வியாபாரத்தைச் செய்திருக்கின்றனர். சிங்கள நாட்டுப் பார வண்டிகளை இவர்கள் உபயோகித்ததை நான் கண்டிருக்கின்றேன். இவர்களிற் சிலர் பொத்துவில் அக்கரைப்பற்றுக் கிராமங்களிலே குடிபதிகளாகத் தங்கிவிட்டனர்.

தும்பகஹவெலையில் முதலில் "வெதறாளை" என்பவர் ஒரு துண்டுக் காணியை வாங்கிக் குடிசையொன்றைக் கட்டி இருந்து வியாபாரஞ் செய்தார். அவரைத் தொடர்ந்து மேலும் பலர் காணிகளை வாங்கி நிரந்தரக் கட்டிடங்களைக் கட்டி இருந்து வியாபாரஞ் செய்தனர். ஹனிபா ஆலிம், சீனி முகம்மது மரைக்கார், மு. கலந்தர், மீரா லெவ்வை, முகம்மதுக்

காசிம், அப்துல் கரீம், யூசுப்பு லெவ்வை, அலியார் லெவ்வை, அப்துல் றகுமான், யூசுப் சகோதரர், மு.க. ஆதம்பாவா மரைக்கார் என்பவர்கள் அவ்வாறு இருந்து வியாபாரஞ் செய்திருக்கின்றனர். மீரா லெவ்வை என்பவர் முப்பனையில் ஆராய்ச்சியாகவும் இருந்திருக்கிறார்.

பொருட்களைச் சுமந்து சென்ற சிங்களவருடன் வியாபரஞ் செய்தவர்களுமுண்டு. "வனத்தே போதல்" என்ற ஒரு சொற்றொடர் நானறிய நம்மூரிற் பேசப்பட்டிருக்கிறது. தடித்த துணியிலான ஆறு ஏழு அடி நீளமான பை ஒன்றுள் நிறையச் சாமான்களையடுக்கி, நடுவிற் சுருக்கிக் கட்டி, தோளிற் சுமந்து கொண்டு செல்வர். இதற்கு "முன்னடைப்பை, பின்னடைப்பை" என்று பெயர். இந்தப் பைக்குப் "பைக்கறை" என்றனர். பை நிறையச் சாமானை வைத்து மேல்வாயை முறுக்கிக் குனிந்து மூட்டையை முதுகில் ஏற்றி முறுக்கைக் கமுக்கட்டிற் சுற்றிச் சுமந்து கொண்டு செல்வதுமுண்டு. இப்படிப் பத்து மரக்கால் நெல்லையும் சுமந்து வருவராம். இவர்களுக்காகப் பாடப்பட்ட பாட்டு ஒன்று,

வண்டுறை தீவு வனம் போகச் - சிலர்
கண்டிடமெல்லாம் கடன் வாங்கிக்
கொண்டிடுஞ் சாமான் சரக்குச் சுமக்க - ஓர்
கூலிப் பொடியனுஞ் சேர்த்தனரே...

நாற்றப்பவுடர் அரை யடுக்கு - ஒரு
நன்றியில் லாத கறுத்த வண்ணம்
ஊத்தை மறைக்கும் மதுரை மூட்டு - விலை
ஒன்றுக்கு ஒன்றே கால் ரூபா

இக்கவிதையில் வனத்தே போனவர் விற்கக் கொண்டு சென்ற புடவைத் தினிசுகளையும் அவற்றின் விலைகளையும் அவதானிக்கலாம்.

இந்த நாட்டில் கடைத் தெருவொன்று எங்கேனுமிருந்தால் அதை ஒரு முஸ்லிம் கிராமம் என்று யூகிக்கலாம். அதனால் முஸ்லிம்கள் பெரும்பாலும் வியாபாரிகளாகவேயிருந்து வந்திருக்கின்றனர் என்பது துணிபு. சிங்களவர், முஸ்லிம்களை முதலாளி என்றழைப்பதும் இதற்கு அத்தாட்சியாகும். இவ்வூரிலும் பெருந்தெருவில் பிந்தின காலத்தில் சிலர் சில்லறைக் கடைகள் வைத்து வியாபாரஞ் செய்திருக்கின்றனர். கடை அபூபக்கர், அனுஸ் லெவ்வை ஆலிம், செயினுலாபிதீன் மரைக்கார், சின்னவர், யூசுப்பு லெவ்வை, களியர், குஞ்சு நானா, ஐதுருஸ் மவுலானா, சாயிபுப்பிள்ளை, மசுகூது லெவ்வைத் தோம்புதோர் என்போர் அன்றைய சில்லறைக் கடை வியாபாரிகள்.

கிராமத்தில் நெசவாகும் சீலைகளை வாங்கிச் சுமந்து கொண்டு அயற் கிராமங்களில் விற்று வந்தனர். இவ்வகைப் பொட்டணி வியாபாரிகள் வாங்கிக் கொண்டு போன சீலைகளில் விற்றவை போக மீதிச் சீலையையும் பணத்தையும் கொண்டு கொடுக்கும் முறைக்கு ஈரொட்டு வியாபாரம் என்று பெயர்.

சிலர் நெசவுக்கு வேண்டிய நூல் வகைகளை முன்னர் மட்டக்களப்பி லிருந்தும், பின்னர் கொழும்பிலிருந்தும் கொண்டு வந்து வைத்து வியாபாரஞ் செய்தனர். அலியார் போடி, சின்னவர் முதலானவர்கள் முற்காலத்திலும் பிந்திய காலத்தில் மா.மு.உ. அகமது மீரா சாகிபு ஹாஜியார், மு.க. ஆதம்பாவா மரைக்கார், ஆதம் லெவ்வை, ஆலிம் ஹாஜி ஆகியோரைத் தொடர்ந்து மேலும் பலர் நூல் வியாபரத்தில் இறங்கினர். நூற் கடைகளும், புடவைக் கடைகளும் சமீப காலத்திற்தான் தோன்றின.

கல்முனையில் அத்தாக்குட்டியுடன் வியாபாரஞ் செய்த தா. முகம்மது சரீபு தனித்துக் கல்முனைச் சந்தைக்குள் கடை வைத்து வியாபாரஞ் செய்தார். ம.சா. சின்ன லெவ்வை ஹாஜியார் தனது தந்தை காலி மதார் நானா நடாத்தி வந்த பட்டோலைச் சரக்குக் கடையை அவர் காலமானபின் நடாத்தி வந்தார். 1925ல் மட்டக்களப்புப் புகையிரப்பாதை வேலை ஆரம்பித்த காலத்தில் தா. முகம்மது சரீபும், அபூபக்கர் லெவ்வையும் சம்சுத்தீன் ஹாஜியாரும் பொலன்னறுவைப் புகையிரத நிலையத்தையடுத்துப் பலசரக்குக் கடைகளை வைத்து வியாபாரஞ் செய்தனர். இவர்கள் தம்பன் கடவைப் புகையிலைத் தோட்டக்காரருக்குச் சாமான் வினியோகித்து உதவினர். இவர்களே கந்தூரிவெளிப் பள்ளிவாசல் ஸ்தாபகர்களாவர். ஓணாகமையில் பக்கீர்த் தம்பியென்பவர் கடை வைத்திருந்தார்.

1929ல் மன்னார் ஆண்டான் குளத்தில் அ. உதுமா லெவ்வையும் தலை மன்னாரில் மீ. சின்ன லெவ்வைப் புச்சரும், அளவக்கையில் பி. நூர் முகம்மதும், பி. சீனிமுகம்மதும் கடை வைத்திருந்தனர். ஆ. சீனி முகம்மது அங்கே பொட்டணி வியாபாரஞ் செய்தார். இக்கிராமத்தில் சில்லுக்கிராயர் மீரா லெவ்வையும், மக்களும் கடை வைத்திருந்தனர். றானைமடுவில் மு. செயினுலாபிதீன், ஆ. சாகுல் ஹமீது என்பவர்கள் வியாபாரஞ் செய்தனர். கல்முனையில் கடை வைத்திருந்த மு.இ. சம்சுத்தீன், கே.எல்.எச். முகம்மது என்பவர்கள் கடைகளை மூடிவிட்டு ஊரோடு வந்து விட்டனர். தற்போது எம்.வை.எல்.எம். இபுறாகீம் (சொய்ஸ் பலஸ்) ஆ. யூசுப்பு லெவ்வை, யூ.எல், இபுறாகீம் (லக்கி), ஏ.எல்.ஏ. ஹமீது, ஏ. அபூதாகிர், யூ.எல், ஜமாலுத்தீன், மு. உதுமா லெவ்வை, ஏ.ஏ. றஸ்ஸாக், சுலைமா லெவ்வை

என்போர் வியாபாரஞ் செய்கிறார்கள். கிளிநொச்சியில் முகம்மது ஹனீபா என்பவர் வியாபாரஞ் செய்கிறார்.

## பன்னவேலை

மருதமுனைப் பெண்களின் பரம்பரைத் தொழில் பன்னவேலை. பாயிழைக்கத் தெரியாத பெண்ணுக்கு அன்று மதிப்பிருக்கவில்லை. சீவனோபாயத்துக்குப் பெரும்பாலும் இந்தத் தொழில் உதவியது. பாயிழைக்கப்படாத வீடு கிடையாது எனலாம். கைம்பெண்கள் "அல்லை"க்குப் போய் கிராம்பன் பிடுங்கிக் கொண்டு வந்து, காய வைத்து விற்பார்கள். அவற்றை வாங்கித் தோடுகளாகக் கிழித்து நிறமூட்டி வர்ணப்பாய் இழைப்பார்கள். பிற்காலத்தில் தம்பன்கடவைப் பன் லொறிகளிலேற்றி கொண்டு வந்து விற்றார்கள். சிங்கள நாட்டுக் கற்பன்னும் கிடைத்தது. கற்பன்னை நிறமூட்டிப் பருத்தி மணையில் அரைத்தும் பதப்படுத்தி விலையுயர்ந்த உறுதியான சித்திர சகிதமான பாய் இழைத்தனர். மருதமுனைப் பாய் நாட்டின் பல பாகங்களுக்கும் ஏற்றுமதியானது. திருவிழாக் காலங்களில் வியாபாரிகள் பெருவாரியாக கிராம்பன் பாய் வாங்கிக் கொண்டு விற்பார்கள்.

பாயில் ஆங்கில, தமிழ் எழுத்துக்களில் பெயர்கள் பொறித்து இழைக்க நான் சில பெண்களைப் பழக்கியிருக்கிறேன். கற்பன் கொண்டு உணவுப் பொருட்கள் வைத்து வழங்கும் தட்டு இழைக்கச் சிலருக்குத் தெரியும். எனது சிறிய தாயாரைத் தட்டுக்காரி என்பர். பன் தட்டுக்கு நல்ல மதிப்பும் உண்டு. சா.ஆதம்பாவா மரைக்காயர், யூ. மீரா லெவ்வை மரைக்காயர், அ.ம. உமறு லெவ்வை மரைக்காயர், கலந்தர் லெவ்வை, மீரா லெவ்வை என்போர் பாய்க்கடை வியாபாரஞ் செய்து வந்தார்கள். பன் கொண்டு உமல் இழைத்தல், பனையோலைப் பெட்டியிழைத்தல், விசிறி கட்டுதல் முதலிய கை வேலைகளும் இவ்வூர்ப் பெண்களுக்குத் தெரியும். வர்ணப் பெட்டியுமல் கேட்ட மாப்பிள்ளைக்குத் தீன் பண்டங்கள் கட்டியனுப்ப இழைத்து உபயோகித்தனர். பன்னினாற் கைப்பையிழைக்கவும் தெரிந்திருந்தனர். தற்போது நெசவுத் தொழில் அதிகரித்ததனால் பெண்களும் பிள்ளைகளும் நூல் சுற்றும் வேலையில் இறங்கிவிட்டதால், பன் வேலை குறைவு பட்டுக் கொண்டு வருகிறது. சிறிது காலத்தில் பாயிழைக்கத் தெரிந்தவர்கள் இல்லையென்று சொல்லும் நிலையேற்பட்டுவிடும் என்று அஞ்சப்படுகிறது.

## புகையிலைச் செய்கை

*தம்பன் கடவையில் மாட்டுப் பட்டி வைத்திருந்த அண்டக்குளத்து ராவுத்தர்மார் தங்கள் மாடுகளைப் பரிபாலிக்கக் கூலிக்கு ஆள்தேடி வந்தனர். ஒரு சில இளவல்கள் முற்பணமாக ஒரு தொகையைப் பெற்றுக் கொண்டு அவர்களுக்குக் கூலிக்காரராகச் சென்றனர். மகாவலி கங்கைக் கரையில் புகையிலைத் தோட்டங்களையும் ராவுத்தர்மார் ஆரம்பித்தனர். அந்தத் தோட்ட வேலைக்காகவும் பலர் இங்கிருந்து சென்றனர். கூலிக்காரராக அன்றி ராவுத்தர்மாரிடம் முற்பணம் கடனாகப் பெற்றுச் சிலர் சொந்த மாகப் புகையிலைத் தோட்டஞ் செய்ய ஆரம்பித்தனர். யாழ்ப்பாணத்த வர்கள் சுருட்டுக்காக அந்தப் புகையிலைகளை வாங்கினர். அந்தத் தொழிலின் தலைவிதி யாழ்ப்பாணத்து வியாபாரிமாரின் கையிற்தா னிருந்தது. புகையிலைக்கு அவர்கள் விதித்ததுதான் விலை. அதனால் சிலருக்கு யோகம் அடித்தது. பிந்தியவர்கள் பாடு அதோகதிதான். பட்ட கடனுக்கும் விற்ற பணம் போதாமற் போவதுமுண்டு, கூலியாட்களுக்குப் பெற்ற முற்பணந்தான் மிச்சம். அந்தத் தொழிலுக்குச் சென்றால் ஆறு மாதங்களுக்குப் பிறகுதான் ஊருக்கு வரலாம்.*

*இங்கே குடும்பங்கள் படும் அவஸ்தை சொல்லுந்தரமன்று. கணக்குப் பார்த்து வாலும் தலையும் தள்ளிச் சொற்ப தொகையோடு வந்து சேர்வார்கள். ஊருக்கு வந்துவிட்டால் ஒரே கும்மாளம். கையிலிருக்கும் சொற்பமும் செலவாகும் வரை பஜனைக் கச்சேரிகள், பொல்லடிக் கலரிகள், கலியாணங்கள் எல்லாம் நிகழும். ஆறுமாத உழைப்பு ஆறு வாரத்தில் முடிவடையும். இனிப் பழையபடி அடுத்த வருடத் தொழிலுக்கு முற்பணம் வாங்கும் படலம் ஆரம்பமாகும். புகையிலைத் தோட்டக் கூலியாட்களை முதலாளிமார் படுத்தும்பாடோ சொல்லுந்தரமன்று. அத்துணை கொடுமைகளுக்கிலக்காகியும் பட்ட பாட்டுக்கேற்ற பலனையாவது அனுபவிக்கலாமென்றால் அதுதான் இல்லை. கூலிக்குச் செல்வோர் பற்றி ஷரிபுத்தீன் ஹாஜியார் பாடிய கவிதையொன்றைக் கேளுங்கள்.*

### புகையிலைத் தோட்டத்திலே....

புகையிலைத் தோட்டத்திலே உன்றன்
புத்திரர் பலர் சென்று நித்தியம் படும்பாடு
சொல்லநாக் கூசுதம்மா - அவர்
சொந்தத் தொழிலின்றி நொந்து மிடிந்ததால்
தம்பன் கடவையிலே - மாவலிக்

கங்கைக் கரையினி லெங்கும் நிகழ்ந்திடும்
அரிய தொழிலிதனைச் - செய்ய
ஆவல்கொண் டேயங்கே போகிறா ரம்மம்மா
முதலில்லா முதலாளிமார் - தங்கள்
முதல்கொண்டு தொழில்செய்யும் தனவந்த ரிடஞ்சென்று
நல்லது சொல்லித் தம்மை - அவர்
நம்பப் பணம் பெற்றும் நகைநட்டை யீட்டும்
குத்தகைப் பூமி பெற்றும் - கூலி
வேலைக்கு ஆள்ஊரில் தேடித்திரிகிறார்
ஓரிரு நூறு ரூபாய் - கூலி
ஒருங்கே முதற் பணம் ஊரிற் தருகிறார்
இற்ற மேற் கூரைகட்டப் - பணம்
இல்லையே முன்கடன் தொல்லையும் வல்லையே
என்செய் வோமென்றேங்கி - வழி
தெரியா திருக்கையிற் புதிய முதலாளி
இருப்பிடம் வந்து சொல்வார் - உன்றன்
இளைய மகனைத்தா சுளையாகப் பணம்தாறேன்
கவலைகள் ஓடிவிடும் - என்ற
கதை காதில் இதமாக ஒலி செய்ய அம்மம்மா
வாங்கிய நூறுக்குமாய் - நாலு
வார்த்தை படிக்கலை சோற்றுக் கடன் தீரப்
புத்தகம் விட்டொழித்தான் - பாலன்
புரியாத வயதினில் அவருடன் ஏகிறான்
தோட்டப் பணியறியான் - தீயை
மூட்டவுங் காய்ச்சவும் வீட்டி லறிந்தில்லான்
தோட்டத்தி லென்செய் வனோ - அவன்
அறியாத புதுவிடம் ஆற்றைக்கண் டஞ்சுறான்
வேலையைக் காட்டுகிறார் - அவன்
தொட்டதெல்லாந்தப்புத் தப்பென்று கூறுகிறார்
அறியாமற் செய்பிழைகள் - அந்தோ

அறிந்தவர் தாங்காது அதிகோபங் கொள்ளுறார்
தாங்கொணாத் தண்டனைகள் - ஐயோ
தரமல்லச் சொல்லிடத் தயவென்ப தில்லையோ
பகல் முழுதும் வெயிலில் - செக்கு
மாடுபோல் வேலைகள் கூடிப் புரிந்தால்
பிஞ்சுகளைக் காதோ - கண்ணைப்
பிய்த்தாலும் இரவினிற் தூங்க விதியில்லை
மனிதப் பிறவியென் றோ - அன்றி
மாடாடு தானென்றோ மதிக்கிறார் கொடுமையே
போய்ச் சொல்ல யாருமில்லை - காது
பொறுக்காத தூஷணை என் செய்வான் பாலகன்
வெயிலோ பனிமழையோ - இல்லை
விஷசெந் துலாவிடும் வெம்புதரோ அம்மா
தனியே துரத்துகிறார் - பயம்
தன்னை வதைக்கத் தயங்கி யடங்குறான்
அடிவாங்கி அலறுகிறான் - அதை
ஆர்கேட்பார் ஆற்றுவார் உதைகொடுப் பாரன்றி
பாவமென் செய்தனனோ - பாலன்
பதறும் பரிதாபம் யார்பொறுப் பாரம்மா
ஆறுமாதந் தொடராய் - அங்கு
அல்லும் பகலும் அயரா துழைக்கிறான்
வேலை முடித்த பொருள் - அங்கு
விற்பனையாகுமோ விலைகையிற் சேருமோ
விற்பனை கண்டபின்பே - கூலி
வேலையாள் கணக்கிட்டு வீடேக லாமென்பார்
விற்பனை நற்பயனாய் - அன்றி
விலைதரக் குறைவினால் வீழ்ந்துவிட் டாலம்மா
முன்பெற்ற முற்பணந்தான் - உனது
முழுக் கூலியென்றாலும் நூதனமல்லவே
முதலிட்ட முதலாளி - பொருள்

விற்ற தொகை பெற்று முதலுக்கும் வட்டிக்கும்
இத்தொகை போதவில்லை - என்னால்
இந்த முதலாளிஎன் செய்வா ரையையோ
அடுத்து வரும் வருடம் - மீதி
அத்தனையும் முடி இத்தினம் போ என்பார்
வெறுங்கைய ராய்திரும்பி - அவர்
வீட்டுக்கு வரும்மன வேதனை யென்சொல்வேன்
புகையிலைத் தோட்டத்திலே - உன்தன்
புத்திரா நித்தியம் உற்ற கதையிதே
மருதமுனைத் தாயே - உன்தன்
மக்கள் துயரற வழிவேறு சொல்லம்மா!

*ராவுத்தர்மார் ஆரம்பித்த புகையிலைச் செய்கையை 1914ம் ஆண்டு முதல் மருதமுனையாரும் செய்ய முற்பட்டனர். மகாவலி கங்கைக் கரையில் அரசினரிடம் குத்தகைக்குப் பூமி பெற்று வாடியமைத்து மிகப் பிரயாசையோடு அத்தொழிலைச் செய்து வந்தனர். பூமியை உழுது பண்படுத்தி நாற்று மேடையிட்டு மாடுகளையடைத்து எருவிட்டுச் செய்கையை ஆரம்பிப்பர். தோற்பை மூலம் கவலையால் மாடுகளை முன்னும் பின்னும் நடத்திக் கங்கையில் நீரள்ளியிறைத்துப் பயிரிடுவர். அபூபக்கர் லெவ்வை, அலியார் மரைக்கார், பொ.த. காசின் வாவா செய்யிது முகுசின் மவுலானா, செய்யிது உமறு மவுலானா, மலையார் சின்னத்தம்பி, சி. உதுமா லெவ்வை, அ. கப்பல் நெய்னா, இசுமாலெப்பை மரைக்கார், கா. இபுறாலெப்பை, கா. முகம்மது ஹனிபா, அ.ம. யூசுபு லெவ்வை, சுலைமாலெப்பை மரைக்கார், காமீது லெவ்வை, ஆராய்ச்சி யார், பை. ம. ஆதம் பாவா, சேகுத்தம்பி மரைக்கார், ப. சீனிமுகம்மது மரைக்கார், செ.ம. செயினுத்தீன், செ.ம.மு. இபுறாகீம், அப்துல் றகீம், ம. அபூபக்கர், இ. முகையதீன் பாவா, சமுகூன் மரைக்கார் முதலியோர் இந்த தொழில் செய்த முதலாளிமாராவார். இத்தொழிலில் விற்பனையிற் பெருந்தொகையொன்று மொத்தமாய்க் கிடைப்பது ஒரு சூதாட்டம் போன்றிருக்கும். இதில் மயங்கிய வேறு பலரும் பட்டிப்பளையாற்றிலும் பள்ளவன் கிணாத்தையிலும் புகையிலைத் தோட்டங்களைச் செய்து கடனாளியாயினர். பெரும்பாலார் தற்போது அத்தொழிலைக் கைவிட்டு விட்டார்கள்.*

## மாட்டுப்பட்டி

புகையிலைத் தோட்டஞ் செய்யச் சென்ற சிலர் 1922ம் ஆண்டு முதல் ராவுத்தர் மாரைப் பின்பற்றி வெள்ளைப் பசுக்கன்றுகளை வாங்கி வளர்த்துப் பெரும் பட்டிக்காரர் ஆகிவிட்டனர். தம்பன் கடவைத் தளவாய்களில் தங்கள் பட்டிகளை வைத்துப் பெருக்கி வந்தனர். ம. சின்னத்தம்பி, உதுமாலெவ்வை, அ. இசுமா லெவ்வை மரைக்கார், ஆதம்பாவா ஆரய்ச்சியார், அ. கப்ப நெயினா, சமுகூன் மரைக்கார், மு. உதுமா லெவ்வை ம.மு. அபூபக்கர், ப. சீனி முகம்மது மரைக்கார், அப்துல் மஜீது மவுலவி, செ.ம.மு. இபுறாகீம் முதலியோர் பட்டிக்காரராவர்.

சிலர் தொத்தல் மாடுகளை வாங்கிப் புல் நிலங்களில் தெளிய வைத்து அறுவைக்காக கண்டிக்கு ஓட்டிச் சென்று விற்று வந்தனர். இதற்கு ஓட்டுமாடு என்றனர்.

## மீன் பிடித்தல்

காலிச் சிங்கள மீன்பிடிக்காரர் பெரிய கொண்டோடி வலை, தோணி கொண்டு வந்து கல்முனைக் கடற்கரையில் தங்கியிருந்து கரையையடுத்து வரும் மீனை வளைத்து பிடித்து வந்தனர். சிங்களவருக்கு நம்மவர்கள் துணையாகச் சென்று அந்த தொழிலைக் கற்றனர். முதன் முதல் அசனார் தண்டயல் கொண்டோடித் தோணி வலை வைத்து மீன் பிடித்தார். ஒருவர் சொந்தமாகவும் பலர் ஒன்று சேர்ந்தும் தோணிகளை வாங்கி மீன் பிடிக்கத் தொடங்கினர். அசனார் தண்டயலைத் தொடர்ந்து பொல்லடியார், அப்துல் கபூறு லெவ்வை, தாவூது தண்டயல், சீனித்தம்பி பரிகாரி, யூசுப்பு லெவ்வை, அப்துல் மஜீது, நாகூரான் அகமது லெவ்வை ஆகியோர் தண்டயல்களாகத் தோணிகளைச் செலுத்தி மீன்பிடித்தனர். ஆழ் கடலுக்குச் சென்று மீன்பிடிக்கும் முயற்சி இப்பொழுது தான் அரும்பி யிருக்கிறது.

கரையையடுத்து மீன் கூட்டம் வந்தால்தான் இவர்களுக்கு தொழில் கிடைக்கும். ஆழகடலில் சென்று மீன்பிடிக்க ஆரம்பித்தால் அதிக வருவாய் கிடைக்கலாம்.

## தையல் வேலை

அந்தக் காலத்தில் உடைகளைக் கையினாற் தைத்தே உடுத்தி வந்தனர். கைத்தையலில் நன்கு பரிச்சயமுள்ளவர்கள் இருந்தனர். அந்தத் தொழிலால் அவர்களுக்கு வருமானமுமிருந்தது. தையல் இயந்திரம் ஒன்று இருப்பதாகவே தெரியாத காலம் அது. இபுறா லெவ்வை வைத்தியர்

(கண்டியார்) வைத்தியத் தொழிலுக்காக கண்டிப் பகுதிக்குச் சென்றிருந்தார். தங்கள் முரீதீன்களிடத்தில் கண்டிப் பகுதிக்குச் சென்றிருந்த சின்ன மவுலான தன்னுடன் வந்த இபுறா லெவ்வை வைத்தியருக்கு மடவளையில் விவாகம் முடித்து வைத்தார். வைத்தியர் அங்கு தையல் இயந்திரம் உபயோகிக்கப்படுவதைக் கண்டு கைத்தையல் திறமைசாலியான தனது தம்பி மீரா லெவ்வையை அழைத்துச் சென்று தையல் இயந்திரம் மூலம் தையற் தொழிலைப் பழகச் செய்தார். நன்கு பழக்கம் பெற்றதும் தையல் இயந்திரம் ஒன்றை வாங்கி இருசிங்களக் கூலியாட்களைக் கொண்டு தலைச் சுமையாக படிக்கல் மலைப் பாதை வழியே நடந்து கொண்டு வந்து சேர்ந்தார். 1908ம் ஆண்டு அந்த இயந்திரம் முதன் முதல் வந்து சேர்ந்தது. அந்த இயந்திரத்தைக் கல்முனையில் வைத்துத் தையற் தொழில் செய்து வந்தார். அடுத்து அவரின் மச்சான் ஆதம்பாவா கொழும்பில் தையற் தொழில் பயின்றார். அவரும் ஒரு தையல் இயந்திரத்தைக் கல்முனையில் அதே கடையில் வைத்துத் தொழில் செய்தார். இருவரும் அபூபக்கர் என்பவரைப் பழக்கி அத்தொழிலில் ஈடுபடுத்தினர். அதன் பிறகுதான் சிங்கர் தையல் இயந்திர ஸ்தாபனம் கல்முனையில் நிறுவப்பட்டது. தையல் இயந்திரம் உபயோகத்துக்கு வந்த பின்னர்தான் இந்தப் பகுதியிலுள்ள ஆண்களும் பெண்களும் சட்டை போடும் பழக்கம் பெற்றனர். அறபிகள் அணியும் சட்டைக்கு சறுபால் என்று கூறுவர். இங்கு வேலையாட்கள் அணியும் சறுபால் தையல் இயந்திரம் அறிமுகஞ் செய்த உடையாகும்.

## மாந்திரீகம்

மாந்திரீகத்திற் கைதேர்ந்தவர்கள் சிலர் இருந்திருக்கின்றனர். மந்திரங்கால் மதிமுக்கால் என்பார்கள். மந்திரம் என்றதும் அதை பாமர மக்கள் நம்பிப் பயந்து மாந்திரீகர் சொல்லுவதற்கெல்லாம் கட்டுப் பட்டார்கள். பேய் ஆட்டுபவர்களும் பேயாடுபவர்களும் பலர் இருந்திருக் கின்றனர். மதியூகம் படைத்த மந்திரவாதிகள் பொது மக்களை நன்கு ஏமாற்றிப் பணம் பறித்து வாழ்ந்திருக்கின்றனர். இப்பொழுது பொது மக்கள் மத்தியில் மந்திரத்தைப் பற்றிய நம்பிக்கை குறைந்து வருகிறது. கல்வியறிவு வளர வளர மந்திரமும் மதிப்பிழந்து போகிறது. நாட்டின் ஏனைய பகுதிகளிலுள்ளவர்கள் மட்டக்களப்பார் மந்திர வித்தைக்காரர் என்று கூறிப் பயப்படுவார்கள். இங்குள்ள சிலர் தாம் சென்ற இடங்களில் மந்திரஞ் செபித்துப் பலரைப் பயப்படச் செய்திருக்கிறார்கள். இன்றும் சில மந்திரவாதிகள் இருக்கிறார்கள்.

எந்த நோய் வந்தாலும் மந்திரம் தான் முந்தும். அது பலிக்காத போது “பேய் விலகிற்று இனி நோய்க்குப் பாருங்கள்” என்று சொல்லுவார்கள்.

ஐயோ பாவம்! இந்த வேடதாரிகள். இலேசிற் குணப்படுத்தக் கூடிய நோய்களை முதிர வைத்து நோயாளரை இம்சைக்குட்படுத்தி, பின்னர்தான் வைத்தியரை அணுகச் செய்கின்றனர். இனியும் இந்தப் பேயர்களின் பொய்க் கூற்றுப் பலிக்குமா? இந்த விஞ்ஞான உலகத்தில் வைத்தியத்துறை விரிவடைந்திருக்கும் இந்தக் காலத்தில் இவர்களின் பாச்சா பலிக்காது. இஸ்லாமிய வாழ்க்கை முறையில் இவர்களின் மந்திர வித்தைக்கு இடமில்லை.

## தச்சுத் தொழில்

முறையாகப் பயிற்சி பெற்ற தச்சர்கள் அன்று எவரும் இருக்கவில்லை. இயற்கை வல்லபங் கொண்டு சில ஆயுதங்களை உபயோகித்து வெகு சிரமத்துடன் பருமட்டான வேலைகளைச் செய்தனர். நூதனமான சித்திர சகிதமான வேலையொன்றும் அவர்களுக்குத் தெரியாது. மரம் அடுத்துள்ள காடுகளில் இலகுவாகக் கிடைத்தது. இரும்பு ஆணிகள், பிணைச்சல்கள், பூட்டுக்கள் கிடைக்காத அக்காலத்தில் இவற்றை யெல்லாம் மரத்தினாலேயே செய்து உபயோகித்திருக்கின்றனர். வாச்சி, வாள், உளி, சுத்தியல் என்பன தான் அவர்கள் உபயோகித்த ஆயுதங்கள். பிந்தின காலத்தில் வேறு சில ஆயுதங்களையும் உபயோகிக்கத் தெரிந்து கொண்டனர்.

கேதன் ஓடாவியும், உசன்லெவ்வை ஓடாவியும்தான் பழைமையான ஓடாவிமார். அவர்களுக்குப் பின் அவர்களின் சந்ததியினரே பெரும்பாலும் தச்சுத் தொழில் செய்து வந்தனர். காலைக்கார ஓடாவியும், யூசுபு லெவ்வையும் தச்சுத் தொழில் செய்தனர். கேதன் ஓடாவியின் சந்ததியில் பக்கீர்த்தம்பியும், பிச்சை மரைக்காரும் அவரின் மக்களும், உசன் லெவ்வை ஓடாவியின் மக்கள் சாலிகு லெவ்வை, முகம்மதுக்காசிம், முகம்மது இபுறாகீம், ஆதம் லெவ்வை என்பவர்களும் அவர்களின் பிள்ளைகளும் தச்சுத் தொழிலாளிகள். அப்துல் காதர், நெயினா முகம்மது, கச்சி முகம்மதும் அவரின் மகன் நூறு முகம்மது, முகம்மதிபுறாகீம் ஆகியோர் தற்போது திருந்திய முறையில் அத்தொழிலைச் செய்து வருகின்றனர். ஓடாவிமார் தொழிற்சாலைகளை நிறுவி பெரிய கல்லாறு, கல்முனை முதலிய இடங்களிலுள்ள தொழிலாளிகளை அழைத்துத் திருத்தமான தளவாடங்களைச் செய்வித்து வருகின்றனர்.

# 3

# உடை

ஆதியில் தாமே நெய்த துணிகளைத்தான் எல்லாரும் உடுத்தினர். ஆண்கள் சாறமும், உடம்பை மூடிக் கொள்ள பெரிய சால்வையொன்றும் தலைப்பாகையுந்தான் அணிந்தனர். தடித்த நூல் நிறச் சாறம்களைக் கையினால் தைத்து உடுத்தினர். ஒரு யார் சற்சதுரமான இரட்டைச் சிவப்பு லேஞ்சியினால் தலைப்பாகை கட்டினர். அதே அளவு இரட்டை இலேஞ்சி யைத் தோளிற் போட்டுக் கொண்டனர். தடித்த சாறம் அவிழாமற் பிடித்துக் கொள்ள வேறொரு இலேஞ்சியை மூலை மடிப்பாக மடித்து இடுப்பிற் கட்டிக் கொண்டனர். சர்வமும் சிவப்பு மயம்! காலக் கிரமத்தில் இடுப்பு இலேஞ்சிக்குப் பதில் பூச்சிவார் வெங்கலப் பூட்டுடன் கூடியது உபயோகிக்கப்பட்டது. வாலிபர்கள் தலைப்பாகையில் சிறிது மாற்றஞ் செய்தனர். இலேஞ்சியை ஒழுங்காகப் பனையோலை மடிப்புப் போன்று மடித்து நடுவிற் தொப்பியொன்றை வைத்து விசிறிக் கட்டுக் கட்டிக் கொண்டனர். அது அழியாதிருக்கப் பூட்டுசியைக் குத்தி வைத்துக் கொண்டனர். உடலோடு ஒட்டும் பனியன்களைப் போட்டனர். தையல் இயந்திரம் உடையிற் தீவிர மாற்றத்தை ஏற்படுத்தி விட்டது.

பெண்களும் இங்கேயே நெய்த சோமன்களையே உடுத்தினர். பெண்கள் சட்டைபோடும் வழக்கம் அப்பொழுதில்லை. பெரிய சோமன்களையுடுத்தி உடலை மூடிக் கொண்டனர். அவ்வளவுதான்.

சிறுவர் சிறுமியருக்குச் சட்டை போடும் வழக்கமில்லை. துண்டுச் சாறம்கள், ஆறு, ஏழு முழச் சிற்றாடைகள் சற்றுப் பெரிய பிள்ளைகளுக்கு உடுத்துவர். தையல் இயந்திரம்தான் சிறுவர்களுக்கு வகைவகையான உடைகளைத் தைத்துக் கொடுத்தது. எல்லாரும் தவறாமற் தொப்பி யணிவர். தலைமயிர் வளர்க்கும் வழக்கம் அன்று முஸ்லிம்களிடையே இருக்கவில்லை. தலைப்பாகை கௌரவ உடையாகவும் தொப்பி சாதாரண உடையாகவும் எண்ணப்பட்டது. சீலைத் தொப்பி காலக்கிரமத்தில் துருக்கித் தொப்பியாக மாறியது. தலையில் மயிர் வளர்ந்து தொப்பியை ஒழித்து விட்டது.

பிற நாட்டுச் சீலைகள் இறக்குமதியாகத் தொடங்கியதும் இந்திய தடித்த பட்டுச் சோமன்கள் அரையடுக்கு, முக்கால் அடுக்கு வெண்பட்டு மாடா வண்ணம் முதலிய சோமன்களை உடுத்தினர். பின்னர் தடித்த துணிகளை மறந்து மெல்லிய துணி வகைகளை உடுத்த ஆரம்பித்தனர். இங்கிலாந்திலிருந்து இறக்குமதியான காரிக்கன், அறக்கிஸ், பச்சை வடம் (சிவப்புத்துணி) என்பன பெண்கள் உடுக்கவும், சட்டை தைத்துப் போடவும் உதவின. தடித்த பாரமான சோமன்களை உடுத்துப் பழகிய வர்கள் காரிக்கன், அறக்கீஸ் துணிகளை இருபது முழம் வாங்கி இரட்டைப் பட்டாக மடித்து உடுத்தினர். சீத்தை இனங்களும் சட்டை தைக்க உதவின. சாயங் காய்ச்சிய சித்திர சகிதமான நிறைபணி, கருக்குப்பணி முதலிய சோமன்கள் இறக்குமதியாயின.

இந்திய சாறம்கள் சேலைகள் பல தினிசுகளில் வந்தன. உடையில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. புதிய மோஸ்தரில் ஒருவர் உடையணிந்து விட்டால் அவர் பல கண்டனங்களுக்கும் வசைகளுக்கும் ஆளாவார். காலக்கிரமத்தில் அது நாகரிக உடையாக ஆகிவிடும். சொற்ப காலத் துக்குள் உடையில் எத்தனை மாற்றங்கள்? ஆனால் உடையைப் பார்த்துச் சிலர் ஒரு முஸ்லிம் என்று சொல்லக் கூடியதாயிருக்குமன்றி இன்றுபோல் மதிப்பிட ஒண்ணாத நிலைமையிருக்கவில்லை.

சலனப்படக் காட்சியும் உடை மாற்றத்துக்கு ஒரு முக்கிய காரணம் எனலாம். அன்று வெள்ளைத் தொப்பி ஆலிம்கள், மவுலானாமார்தான் அணிந்தனர். இன்று விரும்பிய எல்லாரும் அணிகின்றனர். பாகிஸ்தான் தொப்பி, வியாபரிகளின் தொப்பியாய் அமைந்திருந்தது. முன்னரெல்லாம் ஆங்கிலம் கற்றவர்களே காற்சட்டையணியும் வழக்கமிருந்தது. அட்டா ளைச்சேனை ஆசிரிய கலாசாலை அதிபர் அல்ஹாஜ் ஐ.எல்.எம். மஷூர் அவர்கள் பயிற்சியாசிரியர்களுக்குக் காற்சட்டையைச் சீருடையாக்கினார். பயிற்றப்பட்ட ஆசியர்களெல்லாம் காற்சட்டை அணியத் தொடங்கினர். அவர்களைத் தொடர்ந்து உயர் வகுப்பு மாணவர்களெல்லாரும் காற்சட்டையணிகின்றனர். தொடர்ந்து பொது மக்களும் அணிய முற்பட்டு விட்டனர்.

## காலணி

ஆண்கள் காலுக்கு மிதியடி அணியும் வழக்கம் அன்று தொட்டு இருந்து வந்தது. உள்ளூர் ஓடாவியார் வெட்டிக் கொடுத்த மிதியடி களையே உபயோகித்தனர். வயதாளிகளுக்கு ஒருவிதம் வாலிபர்களுக்கு ஒருவிதம். அவை வெளியிடத்து மிதியடிகள் வரத்தொடங்கியதும். உள்ளூர் ஓடாவிமார் மிதியடி வெட்டாமல் நிறுத்திக் கொண்டனர்.

அன்று செருப்பு அணியும் வழக்கம் இருக்கவில்லை. பாட்டா செருப்புக்கள் மிதியடிகளை மாற்றி விட்டன.

அன்றைய பெண்கள் மிதியடியோ செருப்போ அணிவதில்லை. யாரேனும் அணிந்தால் பரிகாசஞ் செய்யப்படுவர். பாட்டா செருப்புக்கள் பெண்களுக்கும் பயன்படத் தொடங்கி விட்டது.

## ஆபரணங்கள்

ஆரம்ப காலத்திற் பெண்களணியும் ஆபரணங்கள் நிக்கல் வெள்ளி யினாற்தான் செய்யப்பட்டன. பின்னர்தான் பசுமை வெள்ளியினாற் செய்யப்பட்டன. தங்கமென்ற பேச்சேயில்லை. கைகளுக்குப் பூட்டுக்காப்பு (அடுக்குக் காப்பு) அது ஐந்தாறு கம்பிகளையடுக்கி முகவேலை செய்து விரித்துப் பூட்டக் கூடியதாக, மணிக்கட்டு நிறைந்ததாகச் செய்யப்படும். தனிவளையலும் செய்வதுண்டு. முகப்பணிக்காப்பென்பதும் ஒருவகை.

காதுக்கு 16, 17 துளைகளிட்டு அலுக்குத்துச் செய்து போடுவர். மரவட்டை அலுக்குத்து, வைர அலுக்குத்து என இரண்டு வகையுண்டு. போதாக்குறைக்கு காதின் கீழே சோணையில் காதுப்பூவும் மேலே வாளியும் அணிவர். தட்டுவாளி, கூர்வாளி என இருவகை வாளிகளுண்டு.

கழுத்திற் கீரைமணி கழுத்தோடொட்ட எல்லாப் பெண்களும் அணிந்திருப்பர். கீரைப் பருப்பு போன்ற கறுத்தச் சங்குமணிகள் நாலைந்து பட்டுச் சரங்களை ஒன்றிணைத்துச் சிவப்புக்கல்லும் வெள்ளி மணியும் கலந்து கோத்துக் கழுத்தின் முன்பக்கம் "முசவக்கும்" பின்பக்கம் "கொக்கிலும்" இணைத்துக் கட்டுவதுதான் கீரை மணி. கீரைப் பருப்பு போன்ற சங்கு மணிக் கோவை ஆனதால் அதைக் கீரை மணி என்றார்கள். அதையடுத்து மணிக்கோவையொன்று. அது தாலியாகவும் இருக்கலாம். சிறிய, பெரிய மணிப்பட்டுக் கோவைகளையிணைத்துக் கட்டுவதுமுண்டு.

கொண்டைக் குத்தி தனியாகவும், கொண்டையை சுற்றி மாலையாக வும் இருக்கும்.

விரலுக்கு ஐந்தாறாக நான்கு விரல்களுக்கும் மோதிரங்கள், கணையாழி என்பன அணிவர்.

காலுக்குத் தண்டை. அது உட்தொளைவுள்ள வளையம். அதற்குக் கீழே கொலிசம் (சங்கிலி) கால் விரல்களுக்கு மோதிரங்கள் தாயத்துக்கள் பல கோத்துக் கைக்கட்டு என்று ஒன்று வலது மேற் கையிற் கட்டிக் கொள்வர்.

வெள்ளி நகைகளைத் தங்கத்திற் பழுக்கச் சுட்டுக் கொள்ளுவது முண்டு. சிலர் மூக்குத்தியும் போட்டு அழகு பார்த்தனர்.

ஆண் குழந்தைகளுக்கு கழுத்தில் வெள்ளியால் "காறை" சமைத்துப் போடுவர். அது கழுத்தைச் சுற்றிய வெள்ளிக் கம்பி வளையம். முன் பக்கத்திற் கொழுவிக் கொழுக்கியில் ஒரு முழு ரூபாய் தொங்கும். கையிற் காப்பு, இடுப்பிற் கம்பித் துணையுடன் புலிநகம், மாம்பிஞ்சு இணைத்த வெள்ளி அரைஞாண்.

பெண் குழந்தைகளுக்கு "அரை மூடி சதங்கை"யுடன் வெள்ளி அரைஞான். கழுத்தில் பஞ்சாயுதம் கோத்த மணிக்கோவை காலுக்குத் தண்டை. கைக்குக் காப்பு.

வெள்ளி நகைகள் தங்கமானதும் பெண்களின் நகைகள் பல மறைந்து விட்டன. காதுக்கு மின்னி, கழுத்துக்கு அட்டியல் கைக்கொரு காப்பு, அவ்வளவாக நகையின் தொகை அருகிவிட்டது.

குழந்தைகளுக்குச் சட்டைபோடத் தொடங்கியதும் ஆண் குழந்தை களின் ஆபரணங்களொழிந்தன. பெண் குழந்தைகளுக்குக் கழுத்துச் சங்கிலி மட்டுமே. நகையென்றால் தங்கத்தால்தான் என்ற எண்ணம் நிலைத்து விட்டது.

# 4

# ஊர்ப் பரிபாலனம்

சிங்கள மன்னர் காலத்தில் நாட்டில் ஊர்ப்பரிபாலனங்கள் பஞ்சாயத்தின் மூலம் நிகழ்ந்து வந்தது. ஆனால் முஸ்லிம்களைப் பொறுத்தவரை பள்ளிவாசல் நிருவாகிகளுக்கு மக்கள் கட்டுப்பட்டு வாழ்ந்தனர். மக்களிடையே எழும் உலக, சமய விவகாரங்களை மரைக்காயர் குழாம் தீர்த்து வைத்தது. பள்ளிவாசல்களை நிருவகிப்பதற்கு விவாகக் கட்டணங்களை அறிவிட்டனர். பெருநாளின்போது ஜமா அத்தாரிடம் தலைக்கு இவ்வளவென விதித்த தொகையை அறவிட்டு லெவ்வை, மோதின் அதிகாரிகளுக்குப் பகிர்ந்தளித்தனர். காலந்தோறும் நிகழும் சபைத் தீர்மானங்களைப் பள்ளிவாசற் புத்தகத்திற் பதிவு செய்து வைத்தனர். அன்று மக்களிடம் அறவிடும் பணத்திற்குச் சரியான கணக்கு வைக்கப்படவில்லை. அறவிட்ட பணம் அந்தந்த குடிப் பெரிய மரைக்காரிடம் இருந்து வந்தது. சமீப காலத்திற்தான் கணக்குகள் ஒழுங்கான முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தனாதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டது. வக்புக் கொமிஷனின் ஆணைக்குள் பள்ளிவாசல்கள் உட்படுத்தப்பட்ட பின்னர் நிருவாகம் சீர்படுத்தப்பட்டது எனலாம்.

சின்னாலிமப்பாவின் காலத்தில் நிரந்தர கட்டிடமாகக் கட்டப்பட்ட அவக்கலியப்பா பள்ளியிருக்கும் போதுதான் 1862ல் தென்தெருப் பள்ளிவாசல் உருவானதும், தென்தெரு ஜமாஅத்தொன்று வேறு பிரிந்ததுமாகும். பழைய அவக்கலியப்பா பள்ளியைத் திருத்த முயன்ற போது கட்டடத்தையே அழித்துக் கட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. 1912ல் அது அழிக்கப்பட்டுப் புதிதாகக் கட்டப்பட்டது. செ. கா. அப்துல் காதர் மவுலானாவின் மேற்பார்வையில் பழைய பள்ளிவாசல் கட்டிடப் பொருட்களையே பெரும்பாலும் உபயோகித்து அது ஆக்கப்பட்டது. பண வசதியில்லாத நிலைமையில் ஊரூராகச் சென்று பணம் திரட்டி நீண்டகால செலவில் உருவாக்கப்பட்டது. அது கட்டி முடியும் வரை அருகிலி ருந்த வெற்றிடத்தில் தற்காலிகக் கொட்டிலொன்றை அமைத்துத் தொழுகை நடாத்தப்பட்டது. 1914ல் குறை வேலையோடு புதுக்கட்டடம் உபயோகிக்க ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 80 ஆண்டுகளுக்கு முன் தற்காலிகக் கட்டிடமாயிருந்த தென் தெருப்

பாள்ளிவாசல் பெரிய நிரந்தரக் கட்டிடமாக எழுந்தது. முகம்மதிஸ்மாயில் மரைக்காயரின் மேற்பார்வையில் அது கட்டப்பட்டது. அதன் பின்னர்தான் வாரத்துக்கொரு பள்ளியில் கொத்துபா நிகழ்த்தும் ஒழுங்கு ஏற்பட்டது.

இரு பள்ளி வாசல்களிலும் மரக் கொட்டுக் கிணறுகளில் நீரள்ளி முட்டிகளில் நீர் கொண்டு உலூச் செய்தார்கள். பின்னர்தான் நீர்த் தொட்டிகள் கட்டப்பட்டன.

1922க்கு முன் இருபள்ளிவாசல்களிலும் தான் மணிக்கூடுகள் இருந்தன. பொழுதைப் பார்த்து நிழலை அளந்து மணிக்கூடுகளுக்கு நேரம் வைத்தனர்.

1936க்கு முன் கொத்துபா அறபியில்தான் ஓதப்பட்டது. பின்னர் அறபுத் தமிழ் மொழி பெயர்ப்புக் கிதாபுகளை வாசித்தனர். சமீப காலத்திற்தான் தற்போதுள்ள முறையில் காலதேச வர்த்தமானங்களுக் கியையத் தமிழில் உபந்நியாசங்கள் நிகழ்த்த ஆரம்பித்தனர். ஊருக்கு மின்சாரம் வழங்கப்பட்ட பின்னரே ஒலிபெருக்கியில் கொத்துபாப் பிரசங்கம் நிகழ்த்த ஆரம்பிக்கப்பட்டது,

1937ல் தென்தெருப்பள்ளிவாசல் விறாந்தை திருத்தப்பட்டது. அப்பொழுது மா.மு.உ. அகமது மீராசாஹிபு ஹாஜியாரிடத்தில் பண நிருவாகம் இருந்தது. 1978ல் அது அல்ஹாஜ் ஏ.பி.எம். மரைக்காரின் தலைமையில் புனர் நிருமாணஞ் செய்யப்பட்டது. அந்தக் காலத்தில் வடதெருப்பள்ளி வாசலிலேயே வாரந்தோறும் கொத்துபா நிகழ்ந்தது.

மக்கள் தொகை அதிகரித்ததனால் இடவசதி போதாதற்காக வட தெருப்பள்ளி வாசல் பெருப்பித்துக் கட்டுவதற்காக உடைக்கப்பட்டது. கட்டிடப் பொறியியலாளர் ஜனாப் காரியப்பர் அவர்களின் அமைப்புத் திட்டத்தின்படி புதுக்கட்டிடம் அமைக்கப்பட்டு வருகிறது.

விவாகஞ் செய்பவர்கள் கலியாணத்துக்கு முன்போ பின்போ எல்லா மரைக்காயர் மார்களுக்கும் 30 வெற்றிலை 30 பாக்கு வைத்து வட்டா கொண்டு கொடுப்பது வழக்கமாயிருந்து வந்தது. அது மரைக்காயர் மார்களுக்குக் கொடுக்கும் மரியாதையாகும். விவாகக் களரியிலும் வந்தவர்களுக்கு வட்டா கொடுக்கும் வழக்கமுமிருந்தது. தற்போது அவை கைவிடப்பட்டு விட்டன. களரியில் இரு தரப்புக் குடும்ப மரைக்காய மார்களுக்கு முகாமை வட்டா வைக்கும் வழக்கம் இன்றுமுளது.

1937ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம்தான் அரசாங்கம் விவாகப் பதிவுகாரரை நியமித்தது. விவாகங்களைப் பதிவு செய்யச் செய்தது. அதன் முன்னரெல்லாம் விவாகங்கள் பள்ளிவாசற் புத்தகத்திலேயே பதிவு

செய்யப்பட்டு வந்தது. ஆரம்பத்தில் ஊருக்கு ஒருவர் பதிவுக்காரராக நியமிக்கப்பட்டார். பின்னர் பள்ளிவாசலுக்கொருவர் நியமிக்கப்பட்டனர். இவ்வாறு நியமனம் பெற்ற முதலாவது விவாகப் பதிவுக்காரர் செய்யது அப்துல் றஸ்ஸாக் மௌலானா அவர்களாகும்.

பள்ளிவாசலுடன் பொதுசனத் தொடர்பு உண்டாக்கும் நோக்க மாகவே மூன்று மாதங்களில் மவுலூது ஓதுவது, றமழானில் கஞ்சி கொடுப்பது, வித்திரியா ஓதுவது, கந்தூரி கொடுப்பது முதலான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவை தென்னிந்திய முஸ்லிம்களால் இங்கு ஏற்படுத்திய சம்பிரதாயங்களாகும்.

தென்தெருப்பள்ளிவாசலில் மீராசாகிபு ஆண்டவர் பேரில் கொடியேற்றிக் கந்தூரி கொடுப்பது, புறுதா ஓதிக் கந்தூரி கொடுப்பது, வட தெருப்பள்ளிவாசலில் புகாரி ஓதிக் கந்தூரி கொடுப்பது ஆதியன நிகழ்ந்து வந்தன. இவையெல்லாம் தற்காலம் நிறுத்தப்பட்டு விட்டன.

றபியுல் அவ்வலில் வீடுகளில் விருந்து கொடுத்து மவுலூது ஓதும் வழக்கமுமிருந்தது. மீலாது விழாக்கள் ஆரம்பிக்கப்பட்டபின் அந்த வழக்கம் குறைந்து விட்டது.

1976ல் வடதெருப்பள்ளிவாசலுக்கு மஸ்ஜிதுன்னூர் எனவும் தென்தெருப்பள்ளிவாசலுக்கு மஸ்ஜிதுல் கபீர் எனவும் பெயர்கள் சூட்டப்பட்டன.

தீர்மானங்களை ஊருக்கு அறிவிக்க அதிகாரியைக் கொண்டு தீர்மானங்களைச் சொல்லிக் "கூப்போடும்" வழக்கமிருந்தது. தற்போது அது ஒலிபெருக்கி உபயோகத்தால் நிகழ்கிறது.

மரைக்காய மாரின் தீர்மானத்தை அலட்சியஞ் செய்யும் கட்சிக்காரரை ஊரால் விலக்கப்பட்டதாகப் பகிரங்கப்படுத்தப்படும். அவருக்கெதிராக வழக்குத் தொடரப் பட்டால் மரைக்காயமாரின் தீர்ப்புச் சாட்சியமாக அமையும்.

## மரைக்காய மார்

குடும்பத்துக்கொரு மரைக்கார் இருப்பார். அவரைச் சின்ன மரைக்கார் என்றனர். சின்ன மரைக்கார்மாருள்ளே வயதும் அனுபவமுமுள்ள ஒருவர் பெரிய மரைக்காயராகத் தேர்ந்தெடுக்கப்படுவார். பெருங்குடித் தலைவர் அவரே.

## பெரிய மரைக்காயர்மார்கள்

### வடதெருப்பள்ளிவாசல்

*முகம்மதுக் காசிம் மரைக்கார்*

*லுக்குமா லெவ்வை மரைக்கார்*

*செயினுலாபிதீன் மரைக்கார்*

*சுலைமா லெவ்வை போடி மரைக்கார்*

*ச. அனஸ் லெவ்வை ஆலிம்*

*இபுறா லெவ்வை போடி ஹாஜி*

*சுலைமா லெவ்வை மரைக்கார்*

*இஸ்மா லெவ்வை மரைக்கார்*

*இஸ்மா லெவ்வை போடி மரைக்கார்*

*மீ.லெ. சாலிஹுலெவ்வை மரைக்கார்*

*செ.கா. அப்துல் காதர் மவுலானா*

*மு. இபுறா லெவ்வை மரைக்கார்*

*ஆ. சுலைமா லெவ்வை மரைக்கார்*

*கா. இபுறா லெவ்வை மரைக்கார்*

*அ. இஸ்மா லெவ்வை ஹாஜி*

*செ.ம.மு. இபுறாகிம் மரைக்கார்*

*அ.ம. சமுகூன் மரைக்கார்*

*ஜே.எம்.எம். அப்துல் காதிர் அதிபர்*

*அ.ம. அப்துல் ஹமீது ஓவசியர்*

## தென்தெருப்பள்ளி வாசல்

*அலியார் போடி*

*பக்கீர் தம்பி மரைக்கார்*

*ஹனிபாஆலிம்*

*அலியார் மரைக்கார்*

*சீனி முகம்மது மரைக்கார்*

*முகம்மது இபுறா லெவ்வை விதானை*

*சீனி முகம்மது விதானை*

சிக்கந்தர் லெவ்வை

உமறு நெயினா மரைக்கார்

ம.சா. சின்னலெவ்வை ஹாஜி

மா.மு.உ. அகமது மீராசாகிபு ஹாஜி

சா. ஆதம்பாவா மரைக்கார்

யூ. மீரா லெவ்வை மரைக்கார்

இபுறா லெவ்வை மரைக்கார்

அ. கலந்தர் பரிகாரி மரைக்கார்

உ.மு. இஸ்மா லெவ்வை மரைக்கார்

இஸ்மாலெவ்வை வைத்தியர்

முகம்மதிஸ்மாயில் மரைக்கார்

அ.இ. அபூபக்கர் விதானை

க.இ. கிதுரு முகம்மது மரைக்கார்

கி. யூசுபு லெவ்வை மரைக்கார்

பை.ம. ஆதம்பாவா ஆராச்சியார்

இ. அகமது லெவ்வை மரைக்கார்

இ. அப்துல் குத்தூஸ் அதிபர்

மு.இ. ஷம்சுதீன் மரைக்கார்

அனஸ் லெவ்வை மரைக்கார்

அ.ம. அப்துல் கபூர் மரைக்கார்

ஏ.பி.எம். மரைக்கார் ஹாஜி

அகமது லெவ்வை மரைக்கார்

அ. அப்துல் றகுமா லெவ்வை மரைக்கார்

## அரசினரால் நியமனம் பெற்ற நம்பிக்கைப் பொறுப்பாளர்

செ.ம.மு. இபுறாகிம் ஜே.பி

ஜே.எம்.எம். அப்துல் காதர் அதிபர்

எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மவ்லானா அதிபர்.

ஏ.எல்.அப்துல் ஹமீது ஓவசியர்.

ஐ.எல்.எம்.இஸ்மாயில்

ஐ.எல்.இப்றாலெப்பை

எச்.எம்.அபூபக்கர்

ஐ.எல்.முகம்மது தம்பி.

ஆ. நளீம் அதிபர்.

எம்.எச்.அலியார்

எல்.எம்.இப்றாகீம்

மு.இ. அப்துல் காதர்

இ. நெயினா முகம்மது

மு. அலியார் மரைக்கார்

எம்.எம். அப்துல் காதர் அதிபர்

பை. நூறு முகம்மது

அ. இஸ்மா லெவ்வை

ச.மு. சுல்தான் ஜே.பி

அ. சாகுல் ஹமீது

பை. ம. ஆதம்பாவா ஆராச்சியார்.

அல்ஹாஜ் ஏ.பி.எம் மரைக்கார் ஜே.பி

அனஸ் லெவ்வை மரைக்கார்

ஏ.எம். அபூபக்கர் ஆசிரியர்

அ. அப்துல் றகுமா லெவ்வை ஜே.பி

அ.ம. அப்துல் கபூர் மரைக்கார்

மு. இ. சம்சுதீன் மரைக்கார்

ஏ.சி.எம். சாலிகு எஸ்.பி.எம்.

கே.எல். அலியார்

அகமது லெவ்வை மரைக்கார்

அல்ஹாஜ் எஸ்.இஸற்.எம். மஷூர் மவுலானா ஜே.பி

அல்ஹாஜ் ஐ.எல்.எம். இஸ்மாயில் ஜே.பி

மு.இ. அஜ்வாத்

ஏ.எம். அபூபக்கர் ஆசிரியர்

மு. சின்னத்தம்பி

இ.எல். அபூபக்கர்

ஆ. அலியார் மரைக்கார்

ஏ.எல். தாவுது லெவ்வை மரைக்கார் ஜே.பி
பி. முஸ்தபா லெவ்வை மரைக்கார்
மு.இ. சகீது மரைக்கார்
யூசுபு லெவ்வை தண்டயல்
எம்.எஸ். ஐயூப் ஜே.பி
ஏ.எம். இஸ்மாயில்

## கதீப் மார்

வட தெருப்பள்ளிவாசலுக்குச் சின்னாலிம் அப்பாவுக்கு முன் யார் யார் கதீபாய் இருந்தார்களோ தெரியவில்லை. சதக்கத்துல்லா லெவ்வை, அப்துல் காதர் லெவ்வை, சுலைமா லெவ்வை , அஸீஸ் லெப்பை, அலியார் லெப்பை, செயய்து கலீல் மௌலானா, அலியார் லெப்பை ஆலிம், அப்துல் கபூர் லெவ்வை, செய்யிது அப்துல் காதர் மவுலானா, அகமது லெவ்வை ஆலிம், அல்ஹாஜ் ஆதம் லெவ்வை ஆலிம், செய்யது அப்துல் ரஸ்ஸாக் மவுலானா, சதக்கத்துல்லா லெவ்வை, அ. முகம்மது முகையதீன் (ஜமாலி) ஆகியோர் கதீப்மார்களாயிருந்தனர். தற்போது மௌலவி ஒருவர் கொத்துபா ஓத வேண்டுமென்ற சம்பிரதாயம் உருவாகியிருக்கிறது.

தென்தெருப் பள்ளிவாசலுக்கு, இபுறா லெவ்வை, சக்கரிய்யா லெவ்வை, பக்கீர் லெவ்வை, ஆதம் லெவ்வை, அப்துல் காதர் லெவ்வை, முகம்மது நெயினா லெவ்வை, முகம்மது மீரா நெயினா லெவ்வை, ஆதம்பாவா லெவ்வை, ஹாஜி யூனுஸ் லெவ்வை, மகுமூது லெவ்வை, ஆதம் லெவ்வை ஆலிம் ஹாஜி, ஷம்சுத்தீன் ஆலிம் ஹாஜி, அப்துல் மஜீது மவுலவி என்போர் முறையே கதீப்மார்களாயிருந்து வந்தனர். இப்பொழுது முகம்மதிஸ்மாயில் லெவ்வை கதீபாயிருக்கிறார்.

சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன் ஒரு ஹஜ்ஜுப் பெருநாள். பெரிய பள்ளிவாசலில் தொழுகைக்காக மக்கள் நிறைந்திருந்தனர். ஸலவாத்து முழங்கிக் கொண்டிருந்தது. நேரமும் சென்று கொண்டிருந்தது. தொழுகையை ஆரம்பிக்கத் தருமகர்த்தா முஅத்தினுக்கு அனுமதி வழங்கவில்லை. கதீப் தொழுகை நடத்தக் காத்துக் கொண்டிருக்கிறார். அவரது பொறுமை எல்லையைக் கடந்து விட்டது. அந்தக் கதீபைக் கொண்டு தொழுகையை நடத்தக் கூடாது என்பது தருமகர்த்தாவின் எண்ணம். முன்னதாகவே அவரைத் தடுத்திருந்தும் கதீப் விட்டுக்

கொடுப்பதாயில்லை. முஅத்தினுக்கு மிகவும் இக்கட்டான நிலைமை. கதீப் தொழுகையை நடாத்தத் தானாகவே முன்வந்தார். அவரோடு தொழ விரும்பாத மக்கள் பலர் வெளியேறி வறாந்தாவுக்கு வந்து விட்டனர். விஷயம் புரியாத சிலர் தொழுகைக்குத் தயாராய் விட்டனர். தொழுகை ஆரம்பமாய் விட்டது. தொழுகை முடிந்ததும் வழமை போல கதீப் குத்துபா ஓதவே முற்பட்டார். முன்னர் வெளியேறியவர்கள் தாங்கள் தொழ வேண்டுமெனப் பள்ளியுட் புகுந்தனர். முன் தொழுதவர்கள் வெளியேறு வதாயில்லை. வாக்குவாதம் உச்ச கட்டத்தையடைந்துவிட்டது. உட்பள்ளியுட் பெரும் கைகலப்பு ஏற்படும் நிலை உருவாகிக் கொண்டி ருக்கிறது. தலையிட்டுச் சமரசப்படுத்த யாருமில்லை. இன்னும் சில நிமிஷங்களில் என்ன அனர்த்தம் விளையுமோ என்ற பீதி ஏற்பட்டு விட்டது. இரத்தக் களரியேற்பட்டுவிடுமோ என்ற அச்சம் அண்மியது. பெருநாட் தினம், தொழுகை நேரம், புனித ஹஜ்ஜின் கடமை. என்ன செய்வது? இன்னும் நீடிக்க விடவொண்ணாது. "வாங்குச் சத்தம் கேட்டால் ஷெய்த்தான் ஓட்டம் பிடிப்பான்" என்ற மணிமொழி ஷரிபுத்தீன் ஹாஜியாரின் ஞாபகத்துக்கு வந்தது. உடனே அவர் காதுகளுள் விரலை வைத்து "அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்...." என்று உரத்து வாங்கொலியை எழுப்பினார். கண்ணை இறுக மூடிக் கொண்டார். வாங்கு முழுவதையுஞ் சொல்லி முடித்தார். கண்ணைத் திறந்தார். உட்பள்ளியின் கிழக்குக் கோடியில் தன்னிடம்வரை மஃமூம்களின் வரிசை ஒழுங்கு நின்றிருந்தது. முன் தொழாதவர்கள் வெளியேறி விட்டனர். மவுலவி அப்துஸ்ஸமது இமாமாக நின்று தக்பீர் கட்டினார். முன்னர் தொழாதவர்களெல்லாம் தொழுது முடித்தோம். கொத்துபா ஓதக் கதீப் இல்லை. மருதமுனையின் வரலாற்றில் தொழுகை முடித்து ஹஜ்ஜுக் கொத்துபா ஓதப்படாத நாளொன்று அன்றுதான்.

காதி நியமனம் ஏற்பாடானபோது கரைவாகு நிந்தவூர்ப் பற்றுக் காதியாக இளைப்பாறிய வன்னிமை முதலியார் ஜனாப் ஏ.எல். காரியப்பர் நியமனம் பெற்றார். இந்த நியமனத்தால் விவாகம் சம்பந்தமான வழக்குகள் நீதிமான் நீதிமன்றத்துக்குச் செல்வது தவிர்க்கப்பட்டது. மருதமுனை வழக்குகளெல்லாம் சாய்ந்தமருதுக் காதி கோட்டில் விசாரிக்கப்பட்டன. அப்பொழுது பாராளுமன்ற உறுப்பினராயிருந்த திரு எஸ்.எம். இராச மாணிக்கம் அவர்களை நான் வேண்டிக் கொண்டதற்கிணங்க மருதமுனை வழக்குகள் மருதமுனையில் ஓரிடத்தில் விசாரிக்க ஏற்பாடாயிற்று. அப்பொழுது காதியாக இருந்த ஜனாப் எம்.சி. காரியப்பர் இங்கு வந்து இங்குள்ள பெரியார்களை நியாய சகாயர்களாகக் கொண்டு வழக்குகளை விசாரித்து வந்தார். அதற்குப் பின் நிந்தவூர் அல்ஹாஜ் எஸ். அகமது

அவர்கள் காதியாகக் கடமையாற்றினார். கரைவாகுப்பற்றுக்கொருவர் காதியாக ஜனாப் அப்துல் மஜீது அவர்கள் கடமையாற்றுகிறார்கள்.

## தைக்காக்கள்

நான் 1952ல் பெரிய நீலாவணையிற் குடியேறியபோது மக்களும் வந்து என்னைச் சூழ்ந்து குடியேறினர். குழந்தைகள் குர்ஆன் ஓதுவதற்கு மதுரசா ஒன்று அவசியமென உணர்ந்து நானும் மவுலவி செ.ம. அப்துல் கரீம் பாக்கவியவர்களும் எடுத்துக் கொண்ட அயராத முயற்சியால் அல்பாக்கியாத்துஸ் ஸாலிஹாத் மதுரசாவை ஆரம்பித்தோம். அக் கட்டிடம் தொழுகைக்கும் உபயோகப்படுத்தப்பட்டது. அக்காலத்தில் மத்திய தைக்காவும் மதுரசாவும் அல்ஹாஜ் ஆதம் லெவ்வை ஆலிம் அவர்களின் தலைமையில் உதயமாயிற்று. விளையாட்டிடத்தை அண்மியுள்ள தைக்கா மௌலவி அப்துல் றசூல் அவர்களின் தலைமையில் உருவாகியது. புதுக்குடியேற்றக்காரர்களால் அக்பர் தைக்கா உருவாக் கப்பட்டது. அது போலத் தென்பகுதிக் குடியேற்றக்காரர்களும் தைக்கா ஒன்றை உருவாக்கினர். இவையெல்லாம் ஒவ்வொரு நிருவாகச் சபையால் நிருவகிக்க்ப்படுகின்றன.

## கிராம ஆட்சி

1815ம் ஆண்டுவரை இவ்வூர், சிங்கள மன்னரின் ஆட்சியின் கீழேயே இருந்து வந்தது. போர்த்துக்கேய, ஒல்லாந்தராட்சி இங்கு நிகழவில்லை. ஆங்கிலேயராட்சியின்போது மருதமுனை இரண்டு குறிச்சிகளாகப் பிரிக்கப்பட்டு இரண்டு பொலிஸ் விதானைமார் நியமிக்கப்பட்டனர். மருதமுனையின் தற்போதைய வட எல்லைக்கு வடக்கே சில தமிழ்க் குடும் பங்கள் இருந்ததனால் அப்பகுதியைப் பெரியநீலாவணை இரண்டாம் குறிச்சியாக்கி ஒரு தமிழ் விதானையின் பொறுப்பில் விடப்பட்டது. இந்த முறை, அப்பொழுது நற்பிட்டி முனையில் இருந்த சத்துருக்கப்போடி என்னும் தமிழ் வன்னியரால் ஏற்படுத்தப்பட்டது.

கிராமத்தில் மக்களாற் கணிக்கப்பட்ட தலைவர்கள் பொலிஸ் தலைமைக்காரராக நியமிக்கப்பட்டனர். இது சம்பளமில்லாத ஒரு கௌரவ உத்தியோகமாகக் கருதப்பட்டது. கல்வியறிவு கருதப்படவில்லை. மட்டக்களப்பில் மட்டுமே பொலிஸ் நிலையமிருந்ததால் பொலிசாரின் கடமைகளையும் அந்தத் தலைவர்களே கவனித்து வந்தனர். அதனால் அவர்கள் பொலிஸ் தலைமைக்காரர் என அழைக்கப்பட்டனர். மக்கள் அவர்களுக்கு நன்கு அடங்கி நடந்தனர்.

மருதமுனையிற் "கிறிமினல்" குற்றங்கள் நிகழுவதில்லை. நயத்தாலும் பயத்தாலும் பிணக்குகளைச் சமரசஞ் செய்து வைப்பதே பொ. த. மாரின் பணியாயிருந்தது. அதனால் கோட்டுக்கு வழக்குகள் போவதில்லை. மக்கள் அடக்க முள்ளவராதலால் தலைவர்கள் தத்தம் சுய தொழிலைச் செய்வதில் உத்தியோகம் தடையாயிருக்கவில்லை.

1927 ஒக்டோபரில்தான் விதானைமாருக்குச் சகாயப் பணம் வழங்கப்பட்டது. அரசாங்கம் விதானைமார் மூலம் மக்களிடமிருந்து வருடந்தோறும் தலை வரி அறவிட்டது. தலைவரி தலைக்கு ஒரு ரூபாவும் கிராமவரி சதம் இருபத்தைந்தும் அறவிடப்பட்டது. கல்வியறிவு வளர்ந்து வந்ததன் பின்னர்தான் எட்டாம் வகுப்பிற் சித்தியடைந்தவர்கள் வெற்றிடங்களுக்குக் கிராம சேவகர்களாக நியமனம் பெற்றனர். அப்பொழுதுதான் இது வேதனம் பெறும் உத்தியோகமாகக் கருதப் பட்டது.

மிகப் பழங்காலத்தில் மருதமுனையிற் குடிபதியாயிருந்த மன்னாரைச் சேர்ந்த ஒருவர் பொலிஸ் விதானையாக நியமிக்கப்பட்டிருக்கிறார். அவரை மன்னார்ப் பொலிசானை (பொலிஸ் விதானை) என்றழைத்தனர். அவரையடுத்து மருதமுனை முதலாம் குறிச்சிக்கு முறையே அகமது லெவ்வை, அபூபக்கர் லெவ்வை (பதில்), உ.மு. இஸ்மா லெவ்வை மரைக்கார், இ. இசுமா லெவ்வை போடி, அ. கலந்தர்ப் பரிகாரி மரைக்கார், அ. மீரா லெவ்வை, பை.ம. ஆதம்பாவா ஆராச்சியார், உ.மு. இபுறாகீம் ஆகியோர் தலைமைக்காரராய்க் கடமையாற்றினர். தற்போது மு.மு. உவைஸ் கிராம சேவகராயிருந்து வருகிறார்.

இரண்டாம் குறிச்சிக்கு முறையே இபுறாகீம் சாகிபு, சின்ன பொலிஸ் விதானை, அப்துல் காதர் போடி, பை. ம. முகம்மதிபுறா லெவ்வை, ஆதம்பாவா பரிகாரி, வை.ம. சீனிமுகம்மது, க.இ. அபூபக்கர் மரைக்கார், செ.ஐ.செ. செயின் மவுலானா, மீ. லெவ்வைக்கனி ஆகியோர் விதானை மாராய்க் கடமையாற்றினர். தற்போது எச்.எம். அபூபக்கர் கிராம சேகவராயிருந்து வருகிறார்.

இவ்வூரைச் சேர்ந்த இ. முகம்மது முகையதீன் தம்பன் கடவையிலும், ஆ.ம. முகையதீன் நற்பிட்டி முனையிலும் கிராம சேவகர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

சிறந்த சேவையாற்றிய விதானை பை.ம. ஆதம்பாவா என்பவருக்கு ஆராய்ச்சி என்னும் கௌரவப் பட்டத்தை அரசாங்கம் வழங்கியது.

## பதிவுகாரர்

முதன் முதலாக இபுறா லெவ்வையென்பவர் பிறப்புப் பதிவுக்காரராக நியமிக்கப்பட்டார். தொடர்ந்து சக்கரிய்யா லெவ்வை, உதுமா லெவ்வை, மசுகூது லெவ்வை, அசனார், ஆதம்பாவா, இபுறா லெவ்வை என்பவர்கள் பதிவுகாரராயிருந்து வந்தனர். தற்போது சீ.மு. சாகுல் ஹமீது என்பவர் பிறப்புப் பதிவுகாரராய்க் கடமையாற்றுகிறார்.

## விவாகப் பதிவுகாரர்

முதன் முதலாக 1937ல் ஊருக்கொரு பதிவுகாரராக ஜனாப் உ.மு. இஸ்மா லெவ்வை மரைக்கார் நியமிக்கப்பட்டார். பின்னர் அவர் தென்தெருவுக்கும் செ.க.செ. அப்துல் றஸ்ஸாக் மவுலானா வட தெருவுக்கும் விவாகப் பதிவுகாரராயினர். மவுலானாவுக்குப்பின் அ. சதக்கத்துல்லா லெவ்வையும் தென்தெருவுக்கு ஷம்சுத்தீன் ஆலிம், உதுமா லெவ்வை என்பவர்களுக்குப் பின் தற்போது முகம்மதிஸ்மாயில் லெவ்வை கடமையாற்றுகிறார்.

ஜனாப் ஜே.எம்.எம். அப்துல்காதர் அதிபர் இளைப்பாறியதும் பிரசித்த நொத்தாரிஸ் பரீட்சையிற் தேறிய ஒரேயொரு முஸ்லிம், ஆங்கிலம், தமிழ் மொழிகளில் உறுதி சாதனம் எழுதும் அம்பாறை மாவட்டப் பிரசித்த நொத்தாரிசாக நியமனம் பெற்றார். மருதமுனைக்குக் கிடைத்த ஒரு பெரும் பாக்கியம். நீண்ட நாட்கள் அனுபவிக்கக் கொடுத்து வைக்காமல் அவர் 01.08.80ல் றமழான் பிறை 19ல் காலமானார்.

## சனசமூக நிலையம்

1952ல் சனசமூக நிலையமொன்று எனது தலைமையில் ஏற்படுத்தப் பட்டது. இச்சபையின் ஆதீனத்தில் முதன் முதல் வானொலிப் பெட்டியொன்று தொலைபேசித் திணைக்களத்தால் மருதமுனை ஆண் பாடசாலைக்கு வழங்கப்பட்டது. அப்போது அப்பாடசாலையில் நான் அதன் தலைவனாயிருந்த காரணத்தால் எனது பராமரிப்பில் வைக்கப் பட்டது. கிராம முன்னேற்றச் சங்கங்கள் இளந் தலைமுறையினரின் நிருவாகத்தில் இயங்கி வருகின்றன.

## பழக்க வழக்கங்கள்

பண்டுதொட்டு மருதமுனை மக்கள் சமயப் பெரியார்கள் பலரின் சகவாசத்தால் நல்ல பண்பாடுள்ளவர்களாகவே வாழ்ந்து வந்திருக்கின்றனர். மருதமுனை மக்கள் "நல்லவர்கள், சாதுக்கள், அமைதியானவர்கள்" என்று

பலராலும் எண்ணப்பட்டு வந்திருக்கின்றனர். அரசாங்கமும் மருதமுனையைப் பொறுத்தவரை நல்லெண்ணமே கொண்டுள்ளது. சமரச மனப்பான்மை, விட்டுக் கொடுக்கும் தன்மை, இனிமையாகப் பேசும் சுபாவம் உள்ளவர்கள். ஆனால் ஏழைகள். தகாத முறையில் உழைத்துப் பணம் திரட்டத் தெரியாதவர்கள். ஏதோ உள்ளதைக் கொண்டு நிம்மதியாக வாழும் இயல்பினர். பெரியார்களைக் கௌரவிக்கத் தெரிந்தவர்கள். அனாவசியமாக மற்றவர்களுடன் மோத அறியாதவர்கள். நெசவுத் தொழிலுக்குப் பொறுமை மிக மிக அவசியமானது. தொழில் பற்றி அமைந்த பொறுமை வாழ்வின் எல்லாத் துறைகளிலும் பரிணமித்துள்ளது எனலாம்.

எந்தப் பிரச்சினையையும் நாலுபேர் கூடித் தீர்மானிப்பதை ஏற்றுக் கொள்வார்கள். கோடேறித் திரியும் வீணர்களல்லர். ஆத்மீகப் பெரியார்களின் ஆசீர்வாதம் நிறைய உள்ளமையும் இந்நிலைக்குக் காரணம் எனலாம்.

சமயப் பற்றும் சமூகப் பழக்கவழக்கங்களும் மருதமுனை மக்களோடு இரண்டறக் கலந்த பண்புகளாகும். அன்னியர் அச்சமின்றி நடமாடக் கூடிய ஒரு கிராமம் மருதமுனையெனப் பலர் கூறக் கேட்டிருக்கின்றேன்.

## மதானுஷ்டானம்

ஆரம்பத்திற் குடியேறியோரும் காலந்தோறும் “வந்த சமயப்” பெரியார்களும் இஸ்லாமிய நெறி வழுவாது வாழ்ந்து வந்திருக்கின்றனர். அதனால் வழிவந்தோரெல்லாம் மதானுஷ்டானமுள்ளோராக வாழ்ந்து வந்திருக்கின்றனர். பொது மக்களைப் பள்ளிவாசலோடு தொடர்பு படுத்தும் பல கிருந்தியங்கள் தென்னாட்டு முஸ்லிம்களால் ஏற்பாடு செய்யப்பட்டன. காலந்தோறும் சமயப் பெரியார்கள் வந்திருந்து மார்க்க உபந்நியாசங்கள் நிகழ்த்தி வந்திருக்கின்றனர். ஹதீதுக் களரிகள் நிகழும். களரிகளுக்கு மக்கள் திரண்டு வந்திருந்து கேட்பர். மக்களின் அனுஷ்டானங்களில் தலைவர்கள் மிகக் கண்டிப்பாயிருந்தனர். யாவரும் தலையிற் தொப்பியோ, தலைப்பாகையோ அணிந்திருப்பர். தலைமுடி களைவது கட்டாயமாயிருந்தது. ஆண்களில் பக்கீர்மார் மட்டுமே தலைமுடியை நீளமாக வளர்த்திருந்தனர். வயது வந்தவர்கள் நீண்ட அழகிய தாடியுடன்தான் காணப்பட்டனர். காலுக்கு மிதியடியில்லாமல் வெளியே வரமாட்டார்கள்.

றமழானில் யாவரும் நோன்பாளிகளாகவே காணப்படுவர். அக் காலத்தில் அன்னிய மதத்தவர்களும் நோன்பாளிகளையும் நோன்பு காலத்தையும் கௌரவிப்பர். அவர்கள் இவ்வூருக்குள் நடமாடும் போது வெற்றிலை போடுதல், புகைத்தல் ஒன்றுஞ் செய்யார்கள். ஜும்ஆத் தொழுகையின் பின் நிச்சயமாக சமய உபந்நியாசம் நிகழ்த்தப்படும்.

தாம் பேசுவது தமிழ் மொழி என்றறியாதோர் அநேகர். நிறைய அறபுச் சொற்களைக் கலந்து மணிப்பிரவாள நடையில் தமிழைப் பேசினர். அதுதான் முஸ்லிம்களின் பாஷை என்பது அவர்களின் எண்ணம். அவர்கள் பேசும்போது உபயோகிக்கும் அறபுச் சொற்கள் பல அடுத்துள்ள தமிழ் மக்களுக்கும் தெரியும். அவர்களும் சில சமயங்களில் அச்சொற்களிற் சிலவற்றை உச்சரிப்பர். அவையும் தமிழ்ச் சொற்கள் தான் என அவர்கள் கருதியிருந்தனர்.

மருதமுனை மக்களின் உடை, நடை பாவனைகளெல்லாம் இவர்கள் தனியொரு வகுப்பார் என மற்றவர்களிலிருந்து பிரித்துணரக் கூடியன வாகவேயிருந்தன. ஒருவர் மற்றவரைச் சந்திக்கும்போது சலாம் சொல்லும் வழக்கம் நிறைய இருந்தது. அப்படிச் சொல்லாதிருப்பது அநாகரிமாகக் கருதப்பட்டது. இரவு நேரங்களில் எல்லா வீடுகளிலும் குர்ஆன் ஓதும் சப்தம் கேட்கும். ஏவல் விலக்கல்கள் மிகக் கண்டிப்பான முறையில் கைக்கொள்ளப்பட்டன. அஸறுத் தொழுகை, சுப்ஹூத் தொழுகை களுக்குப் பின் எல்லாரும் "முஸாஹபா" செய்யும் வழக்கமிருந்தது. புதுச்சந்திப்பின் போதும் அது நிகழும்.

# 5

# விழாக்கள்

## ருது சாந்திக் கலியாணம்

ஒரு பெண்குழந்தை பெரிய பிள்ளையானால் அதற்கொரு கலியாணம். முதலில் தகப்பன் வீட்டாருக்கு அதனை அறிவிப்பார்கள். மாமி மதினிமார் சந்ததியிலுள்ள பெண்களை அழைத்துக் கொண்டு ருது சாந்திக்கான மங்கலப் பொருட்களுடன் செல்வார்கள். மதினிமார் பெண்ணுக்கு நீராட்டுச் சடங்கு நிகழ்த்துவர். அப்போது மஞ்சட் குளிப்பு விளையாட்டு நிகழும். விளையாட்டு. மஞ்சளை அரைத்துக் கரைத்து வைத்திருப்பார்கள். முறைகாரப் பெண்களையெல்லாம் துரத்தித் துரத்தி அவர்கள் என்ன புடவையுடுத்திருந்தாலும் அந்த மஞ்சள் நீரை ஊற்றி நனைத்து விடுவார் கள். ஆண்களையும் முறைப் பெண்கள் விட்டு வைக்கமாட்டார்கள். அந்த விழாவிற் கலந்து கொண்டு வருபவர்களை நன்கு அடையாளங் காணலாம். வட்டா கொண்டு போகும் வழக்கம் "என்வலப்" வழங்கும் வழக்கமாக மாறிவிட்டிருக்கிறது.

## கருப்பிணிகளுக்குக் கொழுக்கட்டை கொட்டுதல்

தலைப்பிள்ளைத் தாய்ச்சிக்கு எட்டாம் மாதத்தில் அவளின் தாய் கொழுக்கட்டை சுட்டு அடுத்தவர்களையழைத்து குரவை வெடியுடன் கருப்பிணியின் முந்தானையுட் கொட்டுவாள்.

தலைப்பிள்ளை பிறந்ததும் குரவையிடும் வழக்கமுமிருந்தது. குழந்தைக்குப் பல் முளைத்தால் பல்லுக் கொழுக்கட்டை சுட்டுச் சொரிவதும் ஒரு விழா.

தென்னம்பிள்ளை, கமுகம்பிள்ளை பாளை போட்டால் அதற்கும் ஒரு விழா.

தம்பி குர்ஆன் ஓதி முடித்து மவுலூது, கத்தம், பாத்திஹாவும் பாடம் பண்ணி விட்டானென்றால், அவனுக்குப் பட்டுக் கலியாணம் பண்ணு வதும் ஒரு விழா. தொழிலொன்று பழகிவிட்டால் அதற்கும் ஒருவிழா.

## விருத்த சேதன விழா

சிறுவர்களுக்கு விருத்த சேதனஞ் செய்யும் விழா ஒரு பெருவிழா. கொட்டு முழக்கம், குரவை வெடியெல்லாம் நிகழும். ஊருக்குச்சோறு கொடுத்து, வண்ணான் பறையன் எடுத்துச் சுன்னத்துக் கலியாணம் நடத்த வேண்டுமென்று பெண்கள் அடம் பிடிப்பார்கள். இரவு நேரங்களில் ஏழு நாட்களுக்கு இசைக் கச்சேரிகள், பொல்லடி, சிலம்பு விளையாட்டுக்கள் நிகழும். ஏழுநாட் சென்று தண்ணீர் வார்த்து ஊர் சுற்றுவார்கள். தாய் பிள்ளைகள் சிறுவர்களையழைத்து விருந்து கொடுத்துச் சன்மானம் வழங்குவர். விழாவுக்கு வருபவர்கள் இருப்பதற்கு வாசலில் பந்தல் போட்டிருப்பார்கள். வண்ணான் வெள்ளை கட்டுவான். கட்டிய வெள்ளை, விழா முடியும் வரை இருக்கும். விழாவுக்காக வீடு அலங்காரஞ் செய்யப்படும். வந்தவர்களை ஆதரிக்கப் பலகாரம் சுட்டு வைத்திருப் பார்கள். வாழைப் பழமும் சேர்த்து வழங்குவர். கோப்பி, தேனீர் வழக்கம் அப்பொழுதில்லை.

சுன்னத்துக் கலியாணத்துக்குப் பறையன் வந்து மேளம் அடிக்கா விட்டாற் சிறப்பில்லையென்பார்கள். தென்னம்பாளை நிறைகுடம் வைப்பது, குத்துவிளக்கேற்றுவது, பெண்கள் குரவையிடுவது, வெற்றிலை பாக்கு காலால் மிதிக்க வைத்துச் சிறுவர்களுக்குத் தண்ணீர் வார்ப்பது எல்லாம் சம்பிரதாயங்கள். சிறுவர்கள் ஊர் சுற்றச் செல்லுகையில் அவர்களுக்கு உடையணியும் விதம் அலாதியானது. பெண்களணியும் பட்டுச் சட்டை மணிக் கோர்வை, காப்பு முதலிய ஆபரணங்களெல்லாம் அணிவித்து வண்டியிலேற்றிக் கொட்டு முழக்கத்துடன் பொல்லடிகாரர் பொல்லடித்துக் கொண்டு முன்செல்ல பறையன் மேளம் அடிக்க ஊர்வலம் நிகழும்.

## காதுகுத்துக் கலியாணம்

ஊருக்குச்சொல்லிச் சிறுமிகளுக்குக் காதுக்குத்துக் கலியாணம் நடத்துவர். கைதேர்ந்த பெண் கொண்டை ஊசியால் சிறுமியின் வலது காதில் எட்டும், இடது காதில் ஏழும் அலுக்கத்துத் துவாரமும் காதுச் சோணைகளில் காதுப்பூத் துவாரமும் மேலே வாளித் துவாரமும் குத்துவர். பிள்ளை பதறப்பதற இந்த ஆக்கினை நிகழும். விழா நிகழ்ச்சிகள் சம்பிரதாயப்படி நிகழும்.

## சம்பிரதாயங்கள்

பழங்காலத்திலிருந்தே கூட்டுறவு வாழ்க்கை குறித்துப் பல நிகழ்ச்சிகள் சம்பிரதாயமாக நிகழ்ந்து வந்திருக்கின்றன. காலக்கிரமத்தில் அவற்றுள் பல கைவிடப்பட்டுவிட்டன. பள்ளிக் கூடத்துக்கு முதன்முதல் பிள்ளைகளை அழைத்துச் செல்லும்போது 30 பாக்கு 30 வெற்றிலையுடன் காணிக்கையும் வைத்து வெள்ளை கட்டி வட்டாக் கொண்டுபோய் லெவ்வைக்கோ, ஆசியருக்கோ கொடுப்பது ஒரு சம்பிரதாயமாக நடந்து வந்தது. அந்த முறை தற்போது கைவிடப்பட்டு விட்டது.

ஊருக்கு விருந்து கொடுத்துக் கலியாணம் நிகழ்த்தும் வழக்கமு மிருந்தது. உணவு சமைக்கு முன் விருந்தினரின் வீட்டுக்குச் சென்று சாப்பாட்டுக்குச் சொல்ல வேண்டும். உணவு தாயாரானதும் அழைக்கப் பட்டவரை வீட்டுக்குச் சென்று அழைத்து வரவேண்டும். அழைப்பாளர் வரும் வரை விருந்தினர் வீட்டிற் காத்துக் கொண்டிருப்பர். அழைப்பாளர் வராவிட்டால் அந்த விருந்துக்குப் போக மாட்டார்கள். இரண்டாம் முறை போய் அழைத்து வரும் வழக்கம் இப்பொழுதில்லை. அழைப்புப் பத்திரம் வினியோகிக்கப்பட்டாலும் சம்மதமானாற் தாமாகவே விருந்திற்குச் செல்வார்கள். பெரும்பாலும் விருந்தில் சோற்றுடன் இறைச்சிக் கறியும் துணைக் கறியொன்றும் புளியாணமும் வழங்கப்படும். "சகன்"பீங்கானில் நால்வர் சேர்ந்து உண்ணும் வழக்கமுமிருந்தது. விருந்து கொடுப்பவர் சகனெல்லாம் வைத்து முடிந்ததும் "பிஸ்மில் சொல்லுவார்." அதன் பிறகே அனைவரும் உண்ணத் தொடங்குவர். இடையிடையே சோறு கறி கேட்டால் கொடுக்கச் சோற்றுப் பெட்டியும் கறிவாளியும் கொண்டு கொடுக்கத் தாயாராயிருப்பர். சாப்பிட்டு முடிந்ததும் வெற்றிலைச் சுருள் வினியோகிக்கப்படும். விருந்து கொடுத்தவர் ஏதும் ஏறக்குறையச் செய்திருந்தால் "மாப்புச் செய்யுங்கள்" என்று சபையோரை வேண்டிக் கொள்வார். முதற் சகன் உணவு பள்ளிவாசல் கதீபுக்கு வெள்ளை போட்டுக் கொண்டு வைக்கப்படும். இது அவருக்குக் கொடுக்கும் மரியாதை. உணவை உண்ண ஆரம்பிப்பவரும் அவரே.

பெண் வீட்டார் ஒருவரும் மாப்பிள்ளை வீட்டார் ஒருவரும் ஆண்களுக்கு ஆண்களும் பெண்களுக்குப் பெண்களும் சேர்ந்து வாழ்வு கலியாணத்துக்கு வரும்படி வீட்டுக்கு வீடு சென்று அழைப்பு விடுக்கும் வழக்கமிருந்தது. அழைப்பிதழ் அச்சிட்டு வினியோகிக்க ஆரம்பித்ததும் அந்த வழக்கம் கைவிடப்பட்டது.

மாப்பிள்ளை கேட்கக் கேள்விச் செப்புக் கொண்டு போகும் வழக்கமுமிருந்தது. விவாகப் பேச்சு அரும்பிச் சம்மதம் தெரிவித்ததும்

பெண் வீட்டார் எண்ணெய்ப் பணியாரம், சோகிப் பணியாரம் சுட்டு ஓலைப் பெட்டிகளில் அடுக்கி வெள்ளை கட்டிச் சுமந்து கொண்டு மாப்பிள்ளை வீட்டிற்குப் போவர். ஏலவே தெரிவிக்கப்பட்டிருந்த மாப்பிள்ளை வீட்டார் கலியாணப் பேச்சுக்கென ஊர்ப் பெரியார்கள் சிலரையும் அழைத்து வைத்து ஆயத்தமாயிருப்பர். விவாகப் பேச்சு ஆரம்பமாகும். கொடுக்கல் வாங்கல் பற்றித் தமக்குள்ளே ஒரு ஒப்பந்தம் ஏலவே செய்து கொண்டிருந்தாலும் சபைக் கட்டுக்கெனப் பலவாறு சம்பாஷணைகள் நிகழும். அது சுவாரஸ்யமான ஒரு நிகழ்ச்சியாயிருக்கும். இறுதியில் முந்திய ஒப்பந்தத்தில் சிறு திருத்தங்களுடன் பேச்சு முடிவுடையும். நாளும் திகதியுங் குறித்துக் கொண்டு கலைவர்.

பேசிய மாப்பிள்ளை பயணம் புறப்பட்டால் பெண் வீட்டார் அவருக்குப் "பயணச்செப்புக்" கட்டியனுப்புவதுண்டு. வர்ணப்பெட்டி உமல்களில் பயற்றங்கொட்டைப் பணியாரம், சீனிப் பாகிட்ட சோகிப் பணியாரம், வறுத்த சீனிமா, முந்திரிப் பருப்பு என்பன கட்டிக் கொடுத்தனுப்புவது சம்பிரதாயமாக இருந்தது. அது கைவிடப்பட்டது.

பயணம் முடித்து வந்த மாப்பிள்ளை கேட்ட பெண்ணுக்குச் "சமுக்கட்டு" அனுப்புவதுமுண்டு. பயணம் முடித்து வந்த மாப்பிள்ளையைப் பார்க்கச் செப்பேந்திச் செல்வதுண்டு. பெருநாட்களுக்குப் பெண்ணுக்குப் புடவை, சட்டை, சீப்பு, கண்ணாடி சேர்த்துப் பெட்டி தட்டியனுப்புவதுமுண்டு.

கலியாணத்துக்குப் பணியாரஞ் சுடும் வழக்கம் இப்பொழுதில்லை. ஹஜ்ஜுப் பெருநாளுக்கு எல்லா வீடுகளிலும் கட்டாயம் பணியாரஞ் சுடுவார்கள்.

பெண்கள் கூடி நின்று விவாக தினங்களில் குரவையிடும் வழக்கம் அருகி வருகிறது. "மக்கம் தப்பினால் மருதமுனை" யென்றொரு பழமொழியிருந்தது. அது பெண்கள் குரவையிடுவதற்காகத்தான் சொல்லப்பட்டது போலும். மக்கத்தில் மருதமுனைப் பெண்கள் போலத் தொடர்ந்து குரவையிட்டதைக் கேட்டிருக்கின்றேன்.

கலியாணத்துக்குப் பறையனெடுக்கும் வழக்கமிருந்தது. அது நிறுத்தப்பட்டுவிட்டது. கலியாணத்தின்போது மரத்துவக்குள் வெடி மருந்தைத் திணித்துத் திரி வைத்துக் கொழுத்திச் சத்த வெடியெழுப்பினார்கள். பின்னர் "கெப்" துவக்குள் வெடிமருந்தைக் கொட்டி இடித்து கெப் வைத்துச் சத்த வெடியெழுப்பினார்கள். அப்பால் எறிவெடி கட்டியெறிந்து ஒலியெழுப்பினார்கள். சீனவெடி வந்ததும் அதுவும் நின்று விட்டது.

கலியாண இரவில் நிகாகுக்கு முன் மருதோன்றிக் கலியாணம் நடக்கும். முதலில் பெண் வீட்டார் மருதோன்றியிலை அரைத்துக் கிண்ணியில் வைத்து மூடி பெண்ணின் தமக்கை அல்லது தங்கை குரவை வெடியுடன் பெண்கள் பலரோடு கொண்டு சென்று மாப்பிள்ளையின் கையிற் தடவுவார்கள். மாப்பிள்ளை அவளுக்கு மோதிரமோ பணமோ சன்மானமளிப்பார். வருகிறோமென அறிவித்து விட்டுத்தான் போவார்கள். குரவைச் சத்தங் கேட்டு மாப்பிள்ளை வீட்டார் எதிர் சென்று வரவேற்று மருதோன்றிக் கிண்ணத்தை மாற்றிக் கொண்டு வருவார். அது மாற்று மிடத்தில் ஒரு போலி வாய்ப்போர் நிகழும். கேட்கச் சுவாரஸ்யமாயிருக்கும். பக்கத்துக்கொரு பயிற்றப்பட்ட தளபதி போருக்கு ஆயத்தமாயிருப்பாள். அடுத்துப் பெண்ணுக்கும் இவ்வாறே மருதோன்றி போடும் நிகழ்ச்சி நடைபெறும். தற்போது மருதோன்றிக்குப் பதில் "அத்தர்" பூசும் வழக்கமுண்டாயிருக்கிறது. அதுவும் அருகி வருகிறது. மருதோன்றிக் கலியாணங்கள் முடிய இரவிற் பாதி நேரம் சென்றுவிடும். கலியாண வீட்டில் றபான் அடிக்கும் வழக்கம் ஒலிபெருக்கி வந்ததும் நின்றுவிட்டது.

கலியாணக் களரியில் ஒலிகாரன் மாப்பிள்ளைக்கு மோதிரம் அணிவதும் கைக்கூலி வட்டாவை பலரறிய மாப்பிள்ளையிடம் கையளிப்பதும் சம்பிரதாயமாயிருந்தது. மாப்பிள்ளை வட்டாவைத் தகப்பன் தமையன், மச்சான் என்பவருள் ஒருவரிடம் ஒப்படைப்பார். பாடகர்கள் விருத்தம் பாடி மாப்பிள்ளையை மறித்துக் கொள்வதும், அவருக்குச் சன்மானம் வழங்குவதுமுண்டு. களரியில் அன்பர்கள் மாப்பிள்ளைக்கு முக்காடு போடுவதும் சன்மானம் வழங்கிச் சலாம் சொல்லுவதும் சம்பிரதாயம். தற்போது "என்வலப்" வழக்கமாகி விட்டது.

மாப்பிள்ளை பெண் வீட்டு வாசற்படிக்கு வந்ததும் மைத்துனன் தேங்காய்ப் பாலால் கால் கழுவுவதும் அவருக்கு மாப்பிள்ளை மோதிரமோ, பணமோ சன்மானம் வழங்குவதும் சம்பிரதாயங்கள். வீட்டுக்குள் மாப்பிள்ளை நுழைவதற்கு முன் ஆலத்தியெடுக்கும் வழக்கமுமுண்டு. அது குறைந்து வருகிறது. தாலிகட்டி முடிந்ததும் தம்பதிகள் ஒரு கலத்தில் உணவருந்துவது வழக்கம். கறிக்கு முட்டைப் பொரியல் முக்கியமாகும்.

ஏழுநாட் சென்றதும் தண்ணீர் வார்க்கும் கலியாணம் மாப்பிள்ளை வீட்டுக்காரர் வந்து மங்கல விளக்கு வைத்துத் தம்பதிகளை முழுக்காட்டி ஆலத்தியெடுத்துக் கொண்டு வந்து கூறையைப் பெண்ணுக்கு உடுத்துவர். பெண்வீட்டார் மாப்பிள்ளைக்கு உடையளிப்பர். பெண்வீட்டார் சிலரையும் தம்பதிகளுடன் அழைத்துச் செல்வர். இதற்குக் "கால் மாறிப்

போதல்" என்பர். அங்கு வந்த பெண் வீட்டாருக்கு விருந்து நடக்கும். "பூதக்கலம்" சாப்பிட்டு விட்டுத் திருப்புவர். தாய் பிள்ளைகள் தம்பதிகளுக்கு விருந்தளித்துச் சந்தோசஞ் செய்வர். தம்பதிகள் பெண்வீட்டுக்குத் திரும்பும்போது மாமியார் மருமகளுக்கு ஆளும் தட்டு முட்டுச் சாமான்கள் பரிசாகக் கொடுத்தனுப்புவர். பெண்ணின் தாயார் மணமக்களுக்கு ஆறு மாதத்துக்கு உணவளிப்பார். "தலைப்பிள்ளைச் செலவு தாயோடு" என்ற வழக்கமும் "தாய் பெற்றது தலைப்பிள்ளைக்கு" என்ற வழக்கமுமிருந்தது.

மாப்பிள்ளையின் தாய் சக பெண்களுடன் ஏழு நாட்களுக்குத் தினமும் பெண் வீட்டுக்கு வட்டாக் கொண்டு குரவையிடும் வழக்கமுண்டு. இவையெல்லாம் அடுத்த சமுதாயத்தினரைப் பின்பற்றியவையே.

ஒரே குடிக்குள் சம்பந்தஞ் செய்வது அன்று பழிப்புக்குரியதா யிருந்தது. காலக்கிரமத்தில் அது மாறிவிட்டது. சில குடிகள் சம்பந்தக் குடிகளாகவே கருதப்பட்டன. "நல்லது நடுத்தெருவில்" என்றொரு பழமொழியுண்டு. இப்பொழுது யாதும் ஊராய் விட்டது.

விராத்துப் (பறாஅத்து) பெருநாளுக்கு உரொட்டி சுட்டு பகிர்ந்த ளிப்பது வழக்கமாயிருந்தது. இப்பொழுது யாராவது செய்வார்கள்.

# ௬

# இயற்கையின் சீற்றம்

1845ம் ஆண்டில் பெரும் புயலொன்றடித்திருக்கின்றது. அதைப் பற்றிய விவரமொன்றும் தெரியவில்லை. 62 ஆண்டுகளுக்குப்பின் 1907.03.09 ஞாயிறு பின்னிரவு ஒரு பெரும் புயல் அடித்திருக்கிறது. அப்பொழுது மட்டக்களப்பிலிருந்த அரசாங்க அதிபரான வெள்ளையர் 1907.03.10 திங்கள் அதிகாலை ஒரு மணி முதல் 8 மணிவரை பெரும்புயல் அடித்ததெனவும், இலங்கையைச் சுற்றி ஏற்றிறக்குமதி செய்து வந்த "லேடி ஹவ்லொக்" என்னும் வியாபாரக் கப்பல் கற்குடா முகத்துவாரத்தை வந்தடைந்ததெனவும், அது சேதமுறவில்லையெனவும், முகத்துவாரத்துக் கலங்கரை விளக்கங்கள் மூன்று அழிந்து விட்டன எனவும், "அப்துல் ஹமீது" என்னும் பாய்க்கப்பல் உடைந்து ஆறு பேர் மரணித்தனரெனவும், மற்றொரு பாய்க்கப்பல் பூநொச்சி முனையையடைந்ததெனவும் குறிப்பிட்டிருக்கிறார்.

அக்கரைப்பற்று வரகவி செய்கு மதாறுப் புலவர் தான் பாடிய அந்தப் புயற் காவியத்தில்,

வந்திடு பெரும்புயலோர் தோளாயிரத் தேழில்
வளர்கின்ற பங்குனியில் ஒன்பதாம் நாளில்
இந்துவரு மிரவுமணி பனிரண்டு நேரமதில்
எனவரும் கிழமை ஞாயிறு தானே

சோலைதரு பனைதென்னை கதலிகமு கன்னாசி
சொல்லரிய மாபலா முந்திரி முருங்கை
ஆலரசு பூவரசு புளியமர மும்வம்மி
அனல்வாகை சமுளைவிளா பாலையின மரங்கள்

இன்னமு மனேகமர மானவைகள் வேரோடு
இடையிடை தெறித்தவைகள் எண்ணவரி ததனால்
மண்ணிலுதிர் தேங்காய்கள் பலாக்காய்கள் மாங்கனிகள்
மணமான வாழைமறு காலெண்ண வரிதே

என்று பாடுகிறார்.

1922 டிசம்பரில் சிறு புயலும் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டன. அவற்றாற் பெருஞ்சேதமேற்பட்டது.

1957 டிசம்பர் 25ல் பெருவெள்ளம் ஏற்பட்டது. அதனால் மண் சுவர் வீடுகள் பெரும்பாலானவை அழிந்து நாசமாயின. மட்டக்களப்பு வாவி வெள்ளம் ஊருக்குள் நுழைந்து விட்டது. அரசு மக்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்கிற்று.

பெரும்புயல் அடித்து 21 ஆண்டுகளுக்குப்பின் 1978 நவம்பர் 23 வியாழன் மாலை சூறாவளி வீசியது.

1907ம் ஆண்டுப் புயலாற் தாக்குண்ட பிரதேசமான வாகரை முதல் ஒலுவில் ஈறாகவுள்ள கிழக்குப் பிராந்தியத்திலேயே இந்தச் சூறாவளியும் வீசியது. பெரும் நாசகார வேலையைச் செய்தது. நூற்றுக் கணக்கான உயிர்களைப் பலிவாங்கியது. சோலை வனமாயிருந்த பிரதேசத்தைப் பாலைவனமாக்கிவிட்டது. நான் பாடிய சூறாவளிப் படைப்போரில்,

செந்நெற் களஞ்சிய மென்னத் தோன்றுங் குணவீழம்
முன்னொரு போதுங் கண்டறியாத சுழல் சூறை
துன்னிய கோரப் போர்க்களமாக்கிய புதுமையினைப்
பன்ன முயல்வதோர் பயங்கர வனுபவ மாமம்மா

வருடமோ ராயிரத் தொன்பது நூற்றேழு பானெட்டில்
வருமது கார்த்திகை யிருபதின் மூன்று வியாழன் பகல்
கருதினர் வாடைக் கால்பெரிதென்ன வன்சினத்துக்
கருதலர் மன்னன் போர்க்கறை யென்ப தாரறிவார்

அந்தியிற் சோனையொ டார்ப்பரித் தூரறிய மாருதத்தான்
முந்தைய பூமியின் பொலிவினைப் போக்க முனைந்தவன் போல்
வந்தனன் சேனையெ லாமொருங் கேவிய பான்மையினில்
பந்தம தில்லையோ பாரொடு கொண்டவெம் பகையெதுவோ?

என்று பாடியிருக்கிறேன்.

மருதமுனையில் ஆண்களும் பெண்களுமாய் பதினேழு பேர் மாண்டொழிந்தனர். வீடுகள் பெரும்பாலானவை தரைமட்டமாயின. விடிந்தது வெள்ளிக்கிழமை. மக்கள் வழிகண்டு வெளியே போக முடியாத நிலைமை.

வீடுகளோ தெருக்களோ அடையாளங்காண முடியவில்லை. எங்கும் விழுந்த மரங்களும் வேலிகளும் வீடுகளுமே காணப்பட்டன. யாரும் யாருக்கும் உதவுவதற்கில்லை. பள்ளிவாசலும் கூரை பிடுங்கப்பட்டுச்

சீரற்றுப்போயிற்று. தினசரி வணக்க ஒழுங்குகளும் தடைப்பட்டன. எனது சூறாவளிப் படைப்போரில்,

கோயிற் பூசை நிகழாநாள் குருவா ராதனை புரியாநாள்
தூய பள்ளி வாசலிலே கூட்டுத் தொழுகை நடவாநாள்
மேய புத்த விகாரையினில் விழுந்து வணக்கம் புரியாநாள்
ஆய நாளொன்று ண்டானால் அதுவே புயல்நாள் தானம்மா

என்று பாடியிருக்கிறேன்.

ஜும்ஆத்தொழுகை புயற்பிரதேசமெங்கும் அன்று நிகழவில்லை. ஒதுங்க நிழலின்றியும் உண்ண உணவின்றியும் மக்கள் தவித்தனர். அரசு நிவாரணம் வழங்கியது.

அறபு நாட்டின் நன்கொடைப் பணத்தைக் கொண்டு கொழும்பு வை.எம்.எம்.ஏ. இயக்கத்தினர் வீடிழந்த 14 ஏழைகளுக்கு மருதமுனைக் கிளை மூலம் இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுத்தது. முற்றாகவே அழிந்துவிட்ட பெரியநீலாவணை அல் - பாக்கியத்துஸ்ஸாலிஹாத் மதுரசாவைப் புனர்நிருமாணஞ் செய்ய எனது தலையீட்டினால் ரூ பதினையாயிரம் உதவிற்று.

# 7

# கல்வி (மார்க்கக்கல்வி)

எழுத்தறிவென்பது அந்தக் காலத்தில் குறுஆன் ஓதுவதுதான். லெவ்வையின் வீட்டில் நடந்து வந்த ஓர் ஓதற் பள்ளி மாணவன் தனது ஓதற்கால வாழ்க்கைப் பற்றிக் கூறுவது போன்ற எனது கவிதையைப் படித்துப் பாருங்கள்.

## நான் குறுஆன் ஓதியது

எனக்கு வயதோர் ஐந்தப் போது
எந்தை யொருநாள் என்னை யழைத்து
குறுஆ னோதப் பள்ளிக் குன்னைக்
கொண்டுபோய் விடுவேன் புறப்படு என்றார்
வெற்றிலை பாக்கும் பழமும் வைத்து
வட்டா வெள்ளையுள் வைத்துக் கட்டி
எடுத்துக் கொண்டு என்னையுங் கூட்டி
லெவ்வையின் வீட்டுக்கு நேரே நடந்தார்.
இவனென் மகனுக்கு ஓதிக் கொடுங்கள்
என்று கூறி என்னையொப் பித்தார்
மண்மெழுக் கிட்ட குறுஆன் பலகையில்
அரிசிமை கொண்டு ஈர்க்கினா லெழுதி
பிஸ்மிலுடனே அலிப்பே தேயை
சொல்லித் தந்தார் சொல்லிச் சொல்லி
பாட மாக்கினன் வரவர எழுத்துக்கள்
கூட்டிக் கூட்டிச் சொல்லித் தந்தார்
குறுஆன் பலகையி லெழுதிய பாடம்
பலமா தங்கள் பயின்றதன் பின்னர்
எழுத்தைச் சேர்த்துச் சொற்களைச் சேர்த்து

வசனங்கள் பார்த்து வாசிக்கத் தொடங்கினேன்
வருடங்கள் சில வளர்ந்து சென்றன
வகுப்போ திட்டமோ வழக்கத்தி லில்லை
பரம்பரை முறையிற் பயின்று வந்தனன்
எனக்கு மட்டும் தனியொரு பாடம்
பலகைப் பாடம் படித்து முடிந்ததும்
ஆரம்பக் குறுஆன் ஐந்தாறு கிழிந்தது
அம்மஜூசுவை அறுதி முதலாய்
அச்சிற் பதித்த ஆரம்பக் குறுஆன்
அல்ஹம்து சூறா ஆரம்பித்தது
அம்மஜூசுக்குறான் அதற்கென் றிழைத்த
கட்டுப் பெட்டியுள் வைத்துத் தூக்கித்
தலையிற் சுமந்து சென்றக் குறானை
ஓதிமுடித்தேன் ஐந்து ஜூசுக்குறான்
விரித்து மடக்கும் "றேகாற்" பலகை
குறுஆன் வைத்து ஓதுதற் கதையும்
எடுத்துச் சென்றனன் இளம்பொழுதான
காலைப்பள்ளி கதிரவன் திரும்ப
மாலைப்பள்ளி மதியம்வரத் தெழுதல்
இப்படியாக இயங்கும் பள்ளியில்
ஒவ்வொரு வருக்கு முரிய பாடத்தைத்
தனித்தனி யாகச் சொல்லிக் கொடுப்பார்
பிறரிடம் கேட்டுப் பண்ணிய பாடம்
அறப்பிழை யின்றி ஒப்பு விக்கணும்
தவறினால் முதுகு தடித்து வீங்கிடும்
ஓது ஓதென ஓங்கிய பிரம்பு
ஒவ்வொரு முதுகையும் உறுத்திச் சென்றிடும்
லெவ்வையின் பிரம்புக்கு நிறைந்த வேலை
பள்ளிக்கூடம் கலைந்திடு நேரம்
பள்ளிக்கு வந்த படிமுறை யாக

நிற்க வைத்துப் படியடி கிடைக்கும்
வந்த எண்ணின் படியடி வாங்குவர்
ஏனென்று கேட்பார் இல்லை ஆதலால்
தண்டனை கொடுக்கத் தயங்க மாட்டார்
சட்டம்பி யென்பான் சற்று மிரங்கான்
சட்டம்பி தானே பள்ளி நடத்துவான்
புரியாத மொழியும் பொறுக்காத அடியும்
வேப்பங் காயாய் வெறுக்குஞ் சிலர்க்கு
பள்ளிக்குச் செல்ல மறுப்பார் பலரே
பெற்றார் ஒறுப்பர் என்பது மறுபயம்
கண்ணீர் ஒட்டாக் கல்வி யில்லையாம்
என்ன செய்வான் இடையிலே பாலன்
துன்பம் தாங்கித் தொடருவார் சிலரே
அல்ஹம்து தொடங்க அப்பால் வஷ்ஷம்ஸ்
ஜூசுஉ தொடங்கக் கொடுபடும் கட்டணம்
ரூபாயொன்று ஜூசுவுக்குக் கட்டணம்
வெள்ளிக்கிழமை விதித்த கட்டணம்
கொடுக்கத் தவறினாற் கொடுபடும் அடிபல
எழுத்துப் பிடிபடின் இனியென்ன தாமதம்
இழுத்துக் கொண்டு எல்லா ஜூசுவையும்
ஓதிமுடித்துப் பேர்த்தும் ஓதினன்
சந்தைக்குப் போதல் சாமான் வாங்குதல்
குழந்தையைத் தூக்குதல் குடிசை கட்டுதல்
வேலியடைத்தல் வேண்டிய முடிப்பம்
எண்ணெய்ச் சிந்து இல்லங்கள் தோறும்
சட்டம்பி தலைமையிற் சென்று படிப்பம்
ஒருவர்முன் பாட மற்றவ ரெல்லாம்
பின்னே பாடுவர் வீட்டுடை யவர்கள்
அரிசியுங் காசும் அவரிட முள்ள
தேங்காய் முதலன தெரிந்து கொடுப்பர்

லெவ்வையின் வீட்டில் நிறைந்திடும் பொருட்கள்
அவ்வல் கலிமா ஆமன்து பில்லாஹ்
செவ்வையாய்ப் பாடம் செப்பிட வேணும்
கத்தம் பாத்திஹா கவிதை மவுலூது
சுத்தமாய்ப் பாடம் பண்ணிய பின்னர்
பிள்ளையின் வீட்டிற் பெரியவர் லெவ்வையை
அழைத்து விருந்தும் அளித்துச் சன்மானம்
வழங்கி யாசிகள் வழங்கிடு வாரே!

அறபியை வாசிக்க அறிந்தவர் அறபுத் தமிழில் எழுதப்பட்ட பிக்ஹூக் கிதாபுகளைப் படித்து மார்க்க அனுஷ்டானங்களைத் தெரிந்து கொள்வர். இப்படித் தெரிந்து கொள்வோர் ஆயிரத்திலொருவர்தான். கத்தம், பாத்திஹா ஓதத் தெரிந்துவிட்டால், அவர் ஒரு அறிஞர் என மக்கள் கருதுவர். அறபுத் தமிழ் மூலம் மார்க்க ஞானம் பெற்றவர்கள்தான் பள்ளிவாசல் கதீபுமாராகவும், லெவ்வைமாராகவும் இருந்தனர்.

அறபி மொழி மூலம் மார்க்கக் கல்வி பெற விரும்புவோர் பெற்றாருக்குத் தெரிந்தோ தெரியாமலோ தமிழ் நாட்டுக்குச் சென்று அங்கு உணவும் கல்வியும் இலவசமாக வழங்கும் மதுரசாக்களில் பல ஆண்டுகள் தங்கியிருந்து மார்க்கக் கல்வி பெற்று ஆலிம்களாகப் பட்டம் பெற்று வந்தனர். அவ்வாறு ஆலிம்களாக வருபவர்களை எதிர் சென்று வரவேற்று அழைத்து வருவது வழக்கமாயிருந்து வந்தது. அவர்கள் வந்து சேர்ந்த முதல் வாரங்களில் பள்ளிவாசல்களில் உபந்நியாசம் நிகழ்த்துவர். அன்று அவர்களை அன்னாரின் வீட்டுக்கு ஊர்வலமாக அழைத்துச் சென்று சன்மானம் வழங்குவதுண்டு. காலி, மஹரகம, அட்டாளைச்சேனை மதுரசாக்கள் உண்டானதும் தென்னிந்தியாவுக்குச் செல்ல வேண்டிய அவசியமில்லாது போயிற்று.

உபந்நியாசங்கள் மூலம் உலமாக்கள் சொல்லக் கேட்ட அளவிற்தான் பொது மக்களின் மார்க்க ஞானமிருந்தது. உள்ளூர் உலமாக்கள் மட்டுமன்றி வெளியிடத்து உலமாக்களும் காலந்தோறும் வந்து வந்து உபந்நியாசங்கள் நிகழ்த்துவதுண்டு. அன்னாருக்கு ஆதரவு நல்கிப் பண முடிப்பும் கொடுத்துக் கௌரவிப்பதுண்டு

நம்மூரில் இருந்த, இருந்து கொண்டிருக்கின்ற உலமாக்களைப் பற்றிய விவரங்களை இங்கு தருதல் பொருந்தும்.

## உலமாக்கள்

வெளிநாடுகளிலிருந்து வந்த சாதாத்துமார்களான செய்யிது அப்துல் றகுமான் மவுலானா, செய்யிது இஸ்மாயில் மவுலானா, செய்யிது முகம்மது மவுலானா ஆகியோர் சிறந்த உலமாக்களாவர். அவர்கள் அறபு மொழியினராயினும் இங்கு வந்து தமிழ் பேசக் கற்றுக் கொண்டு மக்களுக்கு இஸ்லாமியக் கருத்துக்கள் விதிமுறைகளை உபதேசித்தனர். மதபோதனையே இவர்களின் முக்கிய பணியாயிருந்தது. சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னே இவர்களின் வருகையிருந்தது.

தமிழ்நாட்டிலிருந்து அபூபக்கர் (பருத்திக் கொட்டை) ஆலிம், ஷம்சுத்தீன் ஆலிம், முகம்மதிஸ்மாயில் ஆலிம் என்பவர்கள் இங்கு வந்து குடிபதிகளாகத் தங்கிவிட்டனர். தமிழ்நாட்டில் அப்பொழுதெல்லாம் செல்வந்தர்கள் பெரிய பெரிய மதுரசாக்களை அமைத்து தமிழ் பேசும் முஸ்லிம்களுக்கு அரபு, உர்து, பார்சி முதலிய மொழிகளில் சமயக் கல்வியைக் கற்பித்து சிறந்த உலமாக்களை உருவாக்கி அனுப்பியிருக் கின்றனர். காயற்பட்டணம், தேவிபட்டணம், கீழக்கரை, வேலூர், சென்னை முதலிய இடங்களில் அத்தகைய மதுரசாக்கள் இன்றும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. நம்மவர் பலர் அங்குள்ள மதுரசாக்களிற் கல்வி பயின்று பட்டம் பெற்று வந்திருக்கின்றனர்.

இபுறா லெவ்வை ஆலிம், மீரா லெவ்வை ஆலிம், சலாகுத்தீன் ஆலிம் வெலம்படை ஆலிம் முதலியோர் அத்தகையவர்கள். இவர்களில் மீரா லெவ்வை (சின்னாலிமப்பா) ஆலிம் அவர்களைத் தவிர ஏனையோரைப் பற்றிய தகவல் ஒன்றும் தெரியவில்லை.

## மீரா லெவ்வை ஆலிம் (சின்னாலிமப்பா)

இவர் இபுறாலெவ்வை ஆலிமின் மைந்தர். தந்தையைப் பெரிய ஆலிம் என்றும் மகனைச் சின்ன ஆலிம் எனவும் மக்கள் அழைத்தனர். சிறந்த உலமாவாகவும், தமிழ்ப் புலமைச் சான்றோராகவும், மெய்ஞ்ஞானி யாகவும் திகழ்ந்தார். போலி ஞானிகளுக்கு வாயாப்பாக இவர் பாடிய "ஞானரை வென்றான்" என்னும் கவிதை நூல் விளங்குகிறது. வடதெருப் பள்ளிவாசல் கதீபாகவும் இருந்திருக்கிறார். களிமடுக் கண்டத்தில் வேளாண்மை செய்து வந்த போது ஒருமுறை மழையின்றிப் பயிர்கள் வாடிய சமயத்தில் மழைக்காவியம் ஒன்று பாடி மழை பொழியச் செய்வித் தாராம். வாழ்க்கையின் இறுதிக் காலத்தை திரிகோணமலையை அடுத்துள்ள சீனன்குடாவில் கழித்திருக்கிறார். அங்கேயே அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிறார்.

*1926ல் திரிகோணமலைக்குப் புகையிரதப்பாதை அமைப்பு வேலை நிகழ்ந்து கொண்டிருக்கையில் சீனன்குடாவில் அவரது அடக்கஸ்தலத்தின் ஓரமாகப் பாதையமைத்து "வேலைக்கோச்சி"யை ஓடவிட்டபோது, அது அவ்விடத்தை அண்மியதும் அப்பால் ஓடாமல் நின்றுவிட்டதெனவும், எத்தனை முயற்சி செய்தும் ஓடவில்லையெனவும், அங்கே இருந்தவர்கள் அப்பாவின் அடக்கஸ்தலம் இருப்பதையும், அவரின் பெருமையை எடுத்துக் கூறியபோது அதிகாரிகள் பாதையைச் சற்று விலக்கியமைத்துக் கோச்சியைச் செலுத்த அது ஓடிற்றெனவும் கூறுவர். பாதை சீனன்குடாப் புகையிரத நிலையத்தை அடுத்து வளைந்து செல்வதையவதானிக்கலாம். அந்த அடக்கஸ்தலம் அரசாங்கப் பாதுகாப்பிலிருப்பதையும் எல்லா மக்களாலும் கௌரவிக்கப்படுவதையும் இன்றும் காணலாம்.*

## செய்யிது கலீல் மவுலானா

*இவர் செய்யிது இஸ்மாயில் மவுலானாவின் (பெரிய மவுலானா) மருதமுனை மனைவியின் மகன். காயற்பட்டணத்தில் கல்வி பயின்றார். சிலகாலம் வடதெருப்பள்ளிவாசலின் பேஷ் இமாமாயிருந்தார். காதிரியா தரீக்கின் ஷெய்கான இவருக்கு, மருதமுனையில் முரீதீன்கள் பலர் இருந்தனர். அலியார்ப் போடியின் பேத்தியை விவாகஞ் செய்திருந்தார். செய்யிது அப்துல் காதிர் மவுலானா, செய்யிது அப்துல் றஸ்ஸாக் மவுலானா, செய்யிது தாகா மவுலானா, ஆகிய மூவரும் ஒரு மகளும் இருந்தனர்.*

## அலியார் லெவ்வை ஆலிம் (கொத்தவால் ஆலிம்)

*செய்யிது கலீல் மவுலானாவின் மைத்துனர். சென்னையை அடுத்துள்ள கொத்தவால் என்னுமிடத்தில் கல்வி பயின்றதனால் இவர் கொத்தவால் ஆலிம் என அழைக்கப்பட்டார். நெடுங்காலமாகத் தனது வீட்டில் குறுஆன் மதுரசா நடாத்தி வந்தார். களிமடுவில் வேளாண்மை செய்தார். வடதெருப்பள்ளிவாசல் பேஷ் இமாமாகவுமிருந்தார். மௌலவி முகம்மது முகையதீன் ஜமாலி இவரது மைந்தராவார். எனது உஸ்தாதும் இவரே.*

## ஹனிபா ஆலிம்

*இவர் அபூபக்கர் ஆலிமின் மகன் தும்பக்கஹவெலையில் கடை வைத்து வியாபாரஞ் செய்து வந்தார். அங்கு சொந்தமாகக் காணியும் வாங்கியிருந்தார். இவருக்கு ஆண் மக்கள் இருந்ததாகத் தெரியவில்லை.*

## அனுஸ் லெவ்வை ஆலிம்

மருதமுனையிற் கடை வைத்து வியாபாரஞ் செய்து வந்த இவர் சேர் மாதுகுடிப் பெரிய மரைக்காராகவும் கடமை புரிந்தார்.

## அல்ஹாஜ் செய்யிது ஐதுருஸ் மவுலானா

இவர் ஷாதுலிய்யா தரீக்கின் ஷெய்காவார். மருதமுனையிலும் கொழும்பிலும் கடை வைத்து வியாபாரஞ் செய்தார். கொழும்பு கண்டிப் பகுதிகளில் செல்வாக்குப் பெற்றிருந்தார். முகம்மது சாலிகு மவுலானா, செயின் மவுலானா, பளீல் மவுலானா முதலியோர் இவரின் மைந்தராவர்.

## அப்துல் மஜீது மவுலானா

இவர் சின்ன மவுலானாவின் மகளின் மகன். கண்டியிற் செல்வாக்குள்ள வராயிருந்தார். தனது மகன் அப்துல் லதீப் மவுலானாவைக் கண்டியில் விவாகஞ் செய்வித்திருந்தார்.

## செய்யிது அப்துல் காதிர் மவுலானா

இவர் செய்யிது கலீல் மவுலானாவின் மூத்தமகன். இவர் சாய்ந்த மருதில் தனது பெரியப்பாவின் மகளை விவாகஞ் செய்திருந்தார். புத்திரப் பேறில்லை.

## அகமது லெவ்வை ஆலிம்

இவர் சில காலம் வடதெருப்பள்ளிவாசல் பேஷ் இமாமாக இருந்தார். முதன் முதல் மருதமுனையில் அறபியாசிரியராகக் கடமை புரிந்த இவர் பிற்காலத்தில் கொலணி 5ம் வட்டாரத்திற் குடியேறினார்.

## செய்யிது முகம்மது சாலிகு மவுலானா

இவர் செய்யிது ஐதுருஸ் மவுலானாவின் மூத்தமகன். தென்தருப் பள்ளிவாசலில் மஜ்மஉல் ஹைறாத் மதுரசாவை நடாத்தியதால் மதுரசா மவுலானா என அழைக்கப்பட்டார். வியாபாரஞ் செய்தார். கொழும்பில் செல்வாக்குள்ளவராயிருந்தார். கரைவாகு வடக்குக் கிராமச் சங்க உறுப்பினராகவும் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். பொதுப் பணியில் அதிக ஆர்வமுள்ளவர். மருதமுனைத் தபாற் கந்தோர் இவரது முயற்சியினாலேயே உருவானது.

## அல்ஹாஜ் ஆதம் லெவ்வை ஆலிம்

*இவர் இருபள்ளிவாசல்களிலும் பேஷ் இமாமாக வெவ்வேறு காலங்களில் கடமையாற்றினார். வியாபாரமே செய்து வந்தார். அல்ஹாஜ் முகம்மது சாலிகு, மௌலவி முபாறக் ஆகியோர் இவரது மைந்தராவார்.*

## மௌலவி அப்துல் கரீம் பாக்கவி

*வேலூர் அல் - பாக்கியாத்துஸ் ஸாலிகாத் மதுரசாவில் கல்வி பயின்றதனால் "பாக்கவி" என்றழைக்கப்பட்டார். முதன்முதல் மருதமுனையில் அறபியாசிரியராகக் கடமையாற்றிய இருவருளொருவர். இளைப்பாறியபின் வியாபாரஞ் செய்து வந்தார். அப்துல் மாஜிது மவுலவியின் தந்தையாவார். பெரியநீலாவணை அல்-பாக்கியத்துஸ் ஸாலிஹாத் மதுரசாவின் அமைப்பாளருள் ஒருவராவார். இளைப்பாறிய பின், வியாபாரஞ் செய்திருந்து காலமானார்.*

## செய்யிது அப்துல் பாரி மவுலானா

*இவர் செய்யிது ஐதுருஸ் மவுலானாவின் இளைய மைந்தர். கொழும்பில் விவாகஞ் செய்து வாழ்ந்தார். முதன் முதல் வானொலியில் திருக்குறுஆன் விளக்கப் பிரசங்கஞ் செய்த மருதமுனை மகன் இவரே.*

## அபூசாலிகு மவுலானா

*இவர் சின்ன மவுலானாவின் பௌத்திரர். மெய்ஞ்ஞான தீபம் என்னும் நூலை எழுதினார்.*

## செய்யிது தாகா மவுலானா

*இவர் செய்யிது கலீல் மவுலானாவின் இளைய மைந்தர். ஆங்கில மொழியறிவு பெற்றிருந்தார். இளம் வயதிற் காலமானார்.*

## யாஸீன் ஆலிம்

*காலியில் கல்வி பயின்றார். "சனது" பெறாமலே கல்வியை நிறுத்திக் கொண்டார்.*

## ஜலாலுத்தீன் மவுலவி

*தென்னிந்தியாவிற் கல்வி பயின்ற இவரது திறமை கண்டு மஹ்ரகமை அறபிக் கல்லூரியில் பேராசிரியராக நியமனம் பெற்றிருந்தார். பிந்திய காலத்தில் மருதமுனையில் அறபியாசிரியராகக் கடமையாற்றினார்.*

## அப்துல் கனி மவுலவி

*மார்க்க அறிஞரான சின்னலெவ்வை ஹாஜியாரின் மைந்தரிவர். கல்முனைக்குடியில் விவாகஞ் செய்து அங்கேயே அறபியாசிரியராகக் கடமை புரிந்து கொண்டிருக்கிறார்.*

## முகம்மது முகைதீன் ஜமாலி

*இவர் அலியார் லெவ்வை ஆலிமின் மைந்தர். அறபியாசிரியராகப் பதவியேற்றுத் தமிழ் ஆசிரிய தராதர பத்திரப் பரீட்சையிற் தேறி ஆசிரிய கலாசாலையிற் பயிற்சி பெற்றுத் தமிழாசிரியராகவும், தலைமையாசிரியராகவும் கடமையாற்றினார். இளைப்பாறியபின் வடதெருப் பள்ளிவாசல் பேஷ் இமாமாக இருக்கிறார். மௌலவி அப்துல் மலிக்கின் தந்தையாவார்.*

## அப்துல் கரீம் மவுலவி

*காலியிற் கல்வி பயின்ற இவர், அறபியாசிரியராகக் கடமையாற்றி இளைப்பாறினார்.*

## அல்ஹாஜ் முகம்மது ஷம்சுதீன் ஆலிம்

*தென்தெருப் பள்ளி வாசல் பேஷ் இமாமாக இருந்த காலத்தில் விவாகப் பதிவுகாரராகவும் கடமையாற்றினார். தமிழ் எஸ்.எஸ்.ஸி. பரீட்சையிற் தேறிய இவர் வியாபாரமே செய்து வந்தார். நெசவுத் தொழிலுஞ் செய்தார். அட்டாளைச்சேனை, சம்மாந்துறை அறபிக் கல்லூரிகளில் போதனாசிரியராகக் கடமை புரிந்தார்.*

## யூ.எல். அப்துஸ் ஸமது மவுலவி

*காலியிற் கல்வி பயின்ற இவர், அறபியாசிரியராகக் கடமை புரிந்தார்.*

## முகைதீன் பாவா ஆலிம்

*இவர் காலியிற் கல்வி பயின்றார். நோய்வாய்ப்பட்டு இளவயதிலேயே அகால மரணமடைந்தார்.*

## முகம்மது யூசுப் ஆலிம்

*யாசின் ஆலிமின் தம்பியான இவர், நோய்வாய்ப்பட்டு அகால மரணமடைந்தாார்.*

## செய்யிது முஸ்தபா மௌலானா

*அறபியாசிரியராயிருந்து இளைப்பாறிய இவர், செய்யிது மகுமூது மவுலானாவின் மைந்தர். ஆராய்ச்சியாளர், எழுத்தாளர் "முபானா" என்ற புனைப்பெயரில் கட்டுரைகள் எழுதி வந்தார். "ஜோதிமதம்" என்னும் இஸ்லாம் பாடநூலை அல்ஹாஜ் எம்.எம். இபுறாகீம் அதிபருட னிணைந்து எழுதி வெளியிட்டார். "பதுறு சகாபாக்கள்" என்னும் மொழிபெயர்ப்பு நூலையும் எழுதினார். பறகஹதெனிய மதுரசாவின் பொறுப்பாசிரியராயிருந்து வருகிறார்.*

## அல்ஹாஜ் அப்துல் லத்தீப் மவுலவி

*இவர் அப்துல் மஜீது மௌலவியின் மைந்தர். கெக்குணுகொல்லை யில் விவாகம் செய்து அங்கேயே அரபியாசிரியராப் பணியாற்றி அகால மரணமடைந்தார்.*

## சாஹுல் ஹமீது மவுலவி

*இவர் அறபியாசிரியராகக் கடமையேற்று தமிழ் எஸ்.எஸ்.சி. பரீட்சையில் தேறி ஆசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்று தமிழாசிரிய ராகப் பணிபுரிந்து இளைப்பாறினார்.*

## அப்துல் மஜீது மவுலவி

*அல்ஹாஜ் யூனுஸ் லெவ்வை அவர்களின் மைந்தரிவர். வியாபாரஞ் செய்து வருகிறார். சிலகாலம் தென்தெருப்பள்ளிவாசல் கௌரவ பேஷ் இமாமாக இருந்து வந்தார்.*

## அப்துல் றசூல் மவுலவி

*முதலாவது பயிற்சி பெற்ற மௌலவியாசிரியர் இவரே. கல்முனை யில் அறபியாசிரியராயிருந்து வருகிறார்.*

## மௌலவி முகம்மது முபாறக்

*அல்ஹாஜ் ஆதம் லெவ்வை ஆலிமின் மைந்தர். அறபியாசிரியராகக் கடமை புரிந்து வெளிநாடு சென்றிருக்கிறார்.*

## மௌலவி ஹசன் ஷர்கி

*அட்டாளைச்சேனை அரபிக் கலாசாலையின் முதலாவது பட்டதாரி யான இவர், நெசவுத் தொழிலும் வியாபாரமும் செய்து வருகிறார்.*

## மௌலவி முகம்மது ஹனீபா

*பிரபல வியாபரியாகவும் மில் முதலாளியாகவும் இருந்து வருகிறார்.*

## மௌலவி அப்துல் மாஜிது

*அப்துல் கரீம் பாக்கவியின் இளைய மைந்தர். இவர் பயிற்றப்பட்ட அறபியாசிரியர்.*

## மௌலவி அப்துல் மலிக்

*இவர் மௌலவி முகம்மது முகையதீன் ஜமாலியின் மைந்தர். அறபியாசிரியராயிருந்து வந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் பயிற்சி பெற தேர்ந்தெடுக்கப்பட்டார். தற்போது ஆசிரியராகவும் மதுரசாவின் பேராசிரியராகவும் இருந்து வருகிறார்.*

## மௌலவி அபூ உபைதா

*மதீனா பல்கலைக்கழக வித்தியாவிருத்திப் பணம் பெற்று அங்கு உயர்தரக் கல்வி பெற்று வருகிறார்.*

## மௌலவி செய்யிது கலீல் மவுலானா

*இவர் செய்யிது அப்துல் றஸ்ஸாக் மவுலானாவின் மைந்தர். மதுரசாக்களில் கற்பித்துக் கொண்டு வருகிறார்.*

## மௌலவி நதீர்

*இவர் மௌலவி செயினுலாபிதீன் அவர்களின் மைந்தர். சர்வ கலாசாலைப் பட்டப்படிப்பை மேற் கொண்டிருக்கிறார்.*

## மௌலவி ஜலாலுத்தீன்

*அகில இலங்கைப் பேச்சுப் போட்டியில் வெற்றிக் கேடயம் பெற்றவர். சர்வகலாசாலைப் பட்டப்படிப்பை மேற்கொண்டிருக்கிறார்.*

## மௌலவி நயீம்

*வியாபாரஞ் செய்து வருகிறார்.*

## மௌலவியாமார்

*கல்எலியா அறபிக் கல்லூரியிற் பயின்று மௌலவியாமார்களாக எண்மர் பட்டம் பெற்றுள்ளனர். முதலாவது பட்டதாரி எனது மகள் நூறுன் நஜீமா ஆவார். ஆசிரிய பயிற்சி பெற்ற முதலாவது அறபியாசிரி யையும் அவரே. தொடர்ந்து சித்தி மர்ளியாவும் ஆசிரிய பயிற்சி பெற்று அறபியாசிரியையாகப் பணிபுரிகிறார். மேலும் எனது மகள் துர்றுல்*

முயினாவும் எனது பௌத்திரி சித்தி றுபைதாவும், நூறுல் ஐன், ஐனுல் பரீதா, சித்தி மாஜிதா, பௌசுல் இனாயா என்பவர்களும் மௌலவியா மார்களாகப் பட்டம் பெற்றுள்ளனர்.

பட்டம் பெற்று வந்த பெண்கள் தாம் பெற்ற கல்வி தமக்கு மட்டும் சொந்தமென்று கருதலாகாது. இஸ்லாத்தைப் பற்றி ஏதுமறியாத தம்மைச் சூழ்ந்துள்ள பெண்பாலாருக்குத் தாமறிந்தவற்றைக் கற்பித்துக் கை தூக்கி விடவேண்டிய மிகப் பெரும் பொறுப்புடையவர்களாவர்.

வசதி படைத்த, திறமை வாய்ந்த பெண்கள் மேலும் பலர் உயர் கல்வி பெற்றுப் பெண்கள் சமுதாயத்தின் மணிவிளக்குகளாகத் துலங்க வேண்டுமென ஆசைப்படுகிறேன்.

## தமிழ்மொழி

தாம்பேசுவது தமிழ் மொழியென்றறியாத பெரும்பாலான அன்றைய மருதமுனை மக்கள் தமிழைப் படிப்பது "ஹறாம்" என்ற மனப்பான்மை உள்ளவராயிருந்தனர். கையெழுத்துப் போட மாத்திரம் தெரிந்தாற் போதும் என்றுதான் கூறினர். சிலர் அறபியிற் கையொப்பமிட்டனர். பெரும்பாலார் கைக்கீறுதான் இட்டனர். எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள் வெகுசொற்பமானவரே. பேச்சுத் தமிழிலும் நிறைய அறபுச் சொற்கள், கலந்தே உச்சரித்தனர்.

தமிழைப் படிக்க இவ்வூரில் பாடசாலையொன்றிருக்கவில்லை. பெரிய நீலாவணைக் கோயிலடியிலும், பாண்டிருப்பு அரசடியிலும் உவெஸ்லியன் மிஷன் தருமப் பாடசாலைகளிருந்தன. அந்தப் பாடசாலை களையடுத்துள்ள மருதமுனைப் பிள்ளைகள் சிலர் அங்கு சென்று படித்து வந்தனர். பனையோலையில் எழுத்தாணியால் எழுதி ஏட்டுப் பாடம் படித்தனர். கற்பலகையோ புத்தகமோ இல்லை. மணலில் எழுதிப் பழகினர். பின்னர் "அரிச்சுவடி" என்றொரு புத்தகம். பத்து ஒற்றைகள் படித்தனர். அப்புறம் "ஆத்திசூடி", "கொன்றை வேந்தன்" முதலிய நீதி நூல்களை மனப்பாடஞ் செய்தனர். அவ்வளவோடு அவர்களின் படிப்பு முடிந்துவிடும். 1911ல் தான் மருதமுனையில் அரசாங்கம் பாடசாலை யொன்றைக் கட்டியது. மு.சு. இபுறா லெவ்வைப்போடி மரைக்காயரால் அரசாங்கத்துக்கு நன்கொடை வழங்கிய காணியில் தான் அக்கட்டிடம் கட்டப்பட்டது.

1912 நவம்பரில் தான் மருதமுனையின் கல்வித்தீபம் ஏற்றி வைக்கப்பட்டது. திரு. சின்னையா என்றொரு யாழ்ப்பாணத்து ஆசிரியர் தலைமையாசிரியராக வந்தார். ஒரு சிறிய ஆரம்பப் பாடசாலையாக

நடைபெற்று வந்தது. பிள்ளைகளின் தொகை அதிகரித்து வந்ததும் வடக்குப் புறமாகத் தற்காலிகக் கொட்டிலொன்று அமைக்கப்பட்டது. 1918ல் பெரிய நீலாவணைப் பாடசாலையை மிஷனரிமார் மூடி விட்டதனால், அங்கு படித்த பிள்ளைகளும் மருதமுனைப் பாடசாலைக்கே வந்து படித்தனர். 1922ம் ஆண்டுவரை ஐந்தாம் வகுப்புடன் மாணவர் படிப்பை முடித்துக் கொண்டனர்.

அடுத்து வந்த தலைமையாசிரியர் திரு ஜே.எஸ். வேலுப்பிள்ளை அவர்களின் முயற்சியால் 1922ல் இரு சிறகுக் கட்டிடங்களும் கட்டப் பட்டன. இதுவரை நிழலில் அடியளந்து நேரங்கணித்துப் பாடசாலை நடத்தப்பட்டது. புதுக்கட்டிடத் திறப்பு விழாவின்போதுதான் புதிய சுவர் மணிக்கூடு ஒன்று பாடசாலையில் உபயோகிக்க ஆரம்பமானது.

எல்லாரையும் போல் நானும் ஐந்தாம் வகுப்புடன் படிப்பை முடித்துக் கொண்டு வெளியேறினேன். எனக்கு உயர்தரக் கல்வி கற்பிக்க வேண்டுமென்ற என் பெற்றோரின் ஆசையை நிறைவு செய்ய விரும்பிய தலைமையாசிரியர் திரு ஜே.எஸ். வேலுப்பிள்ளை அடுத்த ஆண்டு ஐந்தாம் வகுப்பிற் சித்தியடைந்த சில மாணவரைச் சேர்த்து எனக்காக ஆறாம் வகுப்பு வைத்துக் கற்பித்தார். ஏனையோர் ஆறாம் வகுப்போடு படிப்பை முடித்துக் கொள்ள எனக்காக மாணவ ஆசிரியர் வகுப்புப் பதிவு செய்து என்னை மாணவ ஆசிரியனாகக் கற்பித்தார். காலையில் பாடசாலை நேரத்தில் வகுப்பொன்றைக் கற்பிக்க வேண்டும் மாலையில்தான் பாடத்திட்டத்தைப் படிக்க வேண்டும்.

திரு ஜே.எஸ். வேலுப்பிள்ளை ஆசிரியருக்குப்பின் திரு கே.எஸ். வயிரமுத்து அவர்கள் தலைமையாசிரியராக வந்தார்கள். அன்னாரின் நிறைந்த தமிழறிவும், தாராள மனப்பான்மையும் நிருவாகத் திறனுமே நான் ஒரு திறமையுள்ள ஆசிரியனாக அமையக் காரணங்களாயிருந்தன.

மூன்று வருடங்கள் படித்து வருடந்தோறும் மட்டக்களப்பில் நடைபெற்ற பகிரங்கப் பரீட்சைக்குத் தோற்றி 1927ல் மூன்றாம் வருடப் பரீட்சையிற் சித்தியடைந்தேன். மூன்றாம் வகுப்பு ஆசிரிய தராதர பத்திரம் பெற்று 1.10.27ல் மருதமுனைப் பாடசாலையிலேயே உதவியாசிரியனாகப் பதவியேற்றேன்.

எனக்கு உள்ளன்போடு கற்பித்த அன்னாருக்குக் கீழேயே உதவியாசிரி யனாகவும் கடமையாற்றும் பாக்கியம் பெற்றேன். இந்த ஊரில் மட்டுமல்ல இந்தப் பிராந்தியத்திலேயே தமிழில் உயர் கல்வி பெற்று ஆசிரியனா யமர்ந்த முதல் முஸ்லிம் நானேயாவேன்.

நான் உயர் கல்வி கற்க முனைந்தபோது தமிழைப் படிக்க வேண்டாம் எனத் தடையுத்தரவு போட்ட நம்மூர்ப் பெரியார்கள் பலர் என்னைத் தொடர்ந்து தமது பிள்ளைகளையும் தமிழில் உயர்கல்வி பெற அனுப்பி வைத்தனர். உயர் கல்வி பெற என்னைத் தூண்டிய திரு ஜே.எஸ். வேலுப்பிள்ளை ஆசிரியரதும் தொடர்ந்து எனக்குக் கல்வியூட்டிய திரு கே.எஸ். வயிரமுத்து ஆசிரியரதும் ஆசீர்வாதங்கள் எனக்கு நிறைய உண்டு. அவர்கள்தான் மருதமுனையின் உயர் கல்விக்கு வித்திட்ட மகான்கள் ஆவர். இவர்களை மருதமுனை மக்கள் மறந்துவிட வொண்ணாது.

1927ம் ஆண்டுவரை வெள்ளிக் கிழமைகளில் ஜும்ஆவுக்குப் போகும் வாய்ப்பு ஆசிரியருக்கோ மாணவருக்கோ இருக்கவில்லை. நான் ஆசிரியனாக அமர்ந்ததும் துருக்கித் தொப்பி வழக்குப் பேசி வெற்றி பெற்ற அம்புக் காத்தர் ஜனாப் அப்துல் காதர் பி.ஏ. அவர்களின் உதவியால் அரசாங்கத்துக்குச் செய்து கொண்ட விண்ணப்பங் காரணமாக வெள்ளிக்கிழமை மதியம் பதினொன்றரை மணியுடன் ஜும்ஆவுக்குப் போகும் வாய்ப்பு கிடைத்தது.

ஆங்கில மொழி கற்றவருக்கே அரசாங்க உத்தியோகங்கள் கிடைத்தன. கல்முனையில் மாதாந்தக் கட்டணம் பெற்று ஆங்கிலம் கற்பிக்கும் மிஷனரிமாரின் பாடசாலைகளிருந்தன. அப்பாடசாலைகளின் ஆசிரியர்களின் வேண்டுதலுக்காக வசதி படைத்தோர் தம்மக்களை ஆங்கிலம் கற்க அப்பாடசாலைகளுக்கு அனுப்பி வைத்தனர். அது தற்காலிகமான ஒரு ஒழுங்காகத்தானிருந்தது. அப்பிள்ளைகள் தமிழைப் படித்ததுமில்லை. ஆங்கிலத்தைத் தொடர்ந்து படித்ததுமில்லை. நின்றுவிட்டனர்.

எனக்குப்பின் மாணவ, ஆசிரியர் பரீட்சையில் ஜனாப் கே.எம். ஷம்சுத்தீன் ஆசிரியர் சித்தியடைந்தார். அந்தப் பரீட்சை அவர் சித்தியடைந்ததும் நிறுத்தப்பட்டுவிட்டது. அதன் பின்னர் ஆரம்பிக் கப்பட்ட தமிழ் SSC பரீட்சைக்குத் தோன்றிய பலர் சித்தியடைந்து ஆசிரியர்களாக அமர்ந்தனர்.

திரு கே.எஸ். வயிரமுத்து ஆசிரியருக்குப்பின் தலைமையாசிரியராக வந்த திரு. சாமித்தம்பி இது தான் படித்த பாடசாலையென்ற அபிமா னத்தோடு மாணவருக்கு நன்கு கற்பித்ததன் பயனாகப் பல மாணவர்கள் தமிழ் எஸ்.எஸ்.ஸி. பரீட்சையிற் தேறினர். அவரின் காலத்தில் பாடசாலைக் கட்டிடடத்தின் தென்புறச் சிறகிலிருந்து மேற்கே தொடரும் கட்டிடமும் சாரணர் அறையும் கட்டப்பட்டன.

அடுத்து வந்த திரு ரி. சீனித்தம்பியாசிரியரின் முயற்சியால் 1941ல் இரு மாணவர்கள் ஐந்தாம் வகுப்பு வித்தியாவிருத்திப் பணம் பெற்று சிவானந்த வித்தியாலயத்தில் சேர்ந்து ஆங்கிலம் படித்தனர். அவ்விரு வருமே முதன் முதலில் ஆங்கில மொழி மூலம் உயர் கல்வி பெற்றவர் களாவர். அவ்விருவரும் இன்று உயர் ஸ்தாபனங்களிலிருந்து மருத முனையின் பெயரை விளங்கச் செய்து கொண்டிருக்கின்றனர். முன்னை நாள் மூதவை உறுப்பினர் அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம். மஷூர் மவுலானா ஜே.பி., கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ.எம். மஜீது ஆகிய இருவருமே அவர்கள். அவர்களைத் தொடர்ந்து வித்தியாவிருத்திப் பணம் பெற்று ஆங்கில மொழி மூலம் உயர் கல்வி பெற்ற ஜனாப் ஐ.எம். அப்துல் காதர் இன்று மின்னியற் பொறியியலாளராக அமர்ந்து மருதமுனையின் பெயரை விளக்கிக் கொண்டிருக்கிறார். இவர்களுக்குப் பின் வித்தியாவிருத்திப் பணம் பெற்றோரெல்லாம் தமிழ் மொழி மூலமே உயர்கல்வி பெற்றனர். கல்வித்திட்டம் மாற்றியமைக்கப்பட்டதே இதற்குக் காரணமாகும். அத்தகையோர் வருமாறு :

அல் மனார் மகா வித்தியாலயத்திலிருந்து....

ஜனாப் எஸ்.எம். பழீல் ஆசிரியர்

ஜனாப் ஐ.எல்.ஏ. லத்தீப் ஆசிரியர்

ஜனாப் ஏ.எம். முஸ்தபா ஆசிரியர்

ஜனாப் எஸ்.எம்.ஏ. மத்தீன் ஆசிரியர்

ஜனாப் எஸ்.எம். மூசா ஆசிரியர்

ஜனாப் எஸ்.எல். அபுல் ஹசன்

ஜனாப் பி.எம். சித்தீக்

செல்வன் ஏ. சுல்பிகார்

செல்வி ஏ. ஜஸ்மின் றவூப்

செல்வன் ஏ.எச்.ஏ. கையூம்

செல்வி எஸ்.எச். பல்கீஸ்

செல்வன் ஏ.எல்.ஏ. வதூத்

செல்வன் சித்தீக் சிறாஜ் ஷரிபுத்தீன்

செல்வன் மாஜித் சர்ராஜ் ஷரிபுத்தீன்

ஷம்சுல் இல்மா வித்தியாலயத்திலிருந்து...

செல்வன் ஏ.ஆர்.எம். கலீல் லிகிதர்

செல்வன் ஐ.எல். அமீனுல் பாரி

செல்வன் எம்.பி.ஏ. நாசர்

செல்வன் ஏ.ஆர்.ஏ. ஹரிஸ்

செல்வன் எம்.சி.எம். அஸ்வர்

செல்வி ஐ.எல். மாஜிதா

செல்வி எம்.ஐ. இர்பானா

செல்வன் ஏ.சி.எம். நியாஸ்

செல்வன் இஸட். ஜஉபர் சாதிக்

அல்ஹம்றா வித்தியாலயத்திலிருந்து...

ஜனாப் ஏ.எல்.எம். முனாஸ் லிகிதர்

ஜனாப் ஐ.எல்.ஏ. ஹமீது

1941ல் அட்டாளைச்சேனை ஆசிரிய கலாசாலை ஆரம்பிக்கப் பட்டது. முதலாவது தேர்வில் இவ்வூர் மாணவர் பலர் சேர்ந்து பயிற்சி பெற்றுப் பயிற்றப்பட்ட ஆசிரியர்களாயினர். அக்காலாசாலை மாணவர் இடாப்பில் மருதமுனை மகன் ஜனாப் அ. அப்துல் றகீம் என்பவரே முதலாவதாக இடம் பெற்றார். அட்டாளைச்சேனை, அளுத்கம, கோப்பாய், கண்டி ஆசிரிய கலாசாலைகளில் இவ்வூர் மாணவர்கள் பயிற்சி பெற்றனர். பயிற்சி பெற்றுக் கொண்டுமிருக்கின்றனர்.

தமிழில் உயர் கல்வி பெற்றவர்களுக்கு ஆசிரியத் தொழில் ஒன்றுதான் கை வந்தது. ஆரம்பித்த என்னைத் தொடர்ந்து அதையே எல்லாரும் விரும்பினர். ஆங்கிலம் கற்றவர்களும் கூட ஆசிரியர்களாகவே அமர்ந்தனர்.

## பெண் பாடசாலை

1941ல் தென்தெருப்பள்ளிவாசலுக்குச் சொந்தமான காணியில் பெண் பாடசாலையொன்று கட்டப்பட்டது. பல்லாண்டுகளாக இவ்விரு பாடசாலைகளுமே இயங்கி வந்தன. பெண்களுக்கென்று தனித்து ஒரு பாடசாலையிருந்த போதிலும் பெண்கள் உயர் கல்வி பெற விரும்பினார் களில்லை. அதனால் எனது முயற்சியால் இரண்டும் கலவன் பாடசாலை களாக்கப்பட்டன.

பதினைந்து ஆண்டுகள் உதவியாசிரியனாக நான் எனது தாயகத்தில் கடமையாற்றக் கிடைத்தமை இவ்வூருக்கு அது ஒரு பொன்னான காலமென்று சொல்ல வேண்டும். அது இவ்வூரிலுள்ள ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளையேனும் உயர் கல்வி பெறவேண்டும் என்ற எனது கொள்கை

யைச் சாதிக்க ஏற்ற ஒரு தருணமாக அமைந்தது. ஒழிந்த நேரமெல்லாம் படிக்கக் கூடிய விவேகமுள்ள பிள்ளைகளின் பெற்றோரைச் சந்தித்துப் புத்தியேவித் தொடர்ந்தும் படிக்க வைத்தேன். அதன் பயனை இன்று காண்கிறேன்.

1911ம் ஆண்டு முதல் 1949ம் ஆண்டுவரை தமிழர் தலைமையாசிரியர்களால் நிருவகிக்கப்பட்டு வந்த மருதமுனை வடக்குக் கலவன் (அல்மனார் மகா வித்தியாலயம்) பாடசாலை 1949 பெப்ருவரியில் எனது தலைமையில் நிகழ ஆரம்பித்தது. பலவகையிலும் ஒரு கல்லூரிக்குச் சமதையானஸ்திதியில் இயக்கி சாதி, மத, பேதம் பாராது சமகல்வியூட்டியதன் பயனாக மருதமுனையின் கல்வித் தீபம் சுடர் விட்டொளிரத் தொடங்கிற்று. எட்டு வருடங்கள் எனக்கு உதவியாசிரியர்களாய் அமைந்த எனது மாணவர் பலரின் ஒத்துழைப்போடு ஆற்றியபணி மருதமுனைச் சரித்திரத்தில் ஒரு மலர்ச்சியை ஏற்படுத்திற்று. இன்று நூற்றுக் கணக்கானோர், ஆசிரியர்களாய்ப் பணிபுரிவதைக் கண்டு நிம்மதியடைகிறேன்.

தாய்மொழி மூலம் கல்வி புகட்டும் திட்டம் ஏற்பட்டதும் கல்முனைக்கு ஆங்கிலம் படிக்கச் சென்ற மாணவர் பலர் மீண்டும் வந்து சேர்ந்து தமிழ் மொழி மூலம் உயர் கல்வி பெற்றனர்.

கொழும்பு தொழில் நுட்பக் கல்லூரிக்கு நெசவுப் பயிற்சிக்கு இருவரையும் பிரம்பு வேலைப் பயிற்சிக்கு ஒருவரையும் அனுப்பிப் பயிற்சி பெற வைத்தேன்.

சுய மொழி ஆசிரியர்களுக்கு நிருவாகத்தில் பதவியுயர்ச்சி கொடுக்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் முன்வந்தபோது முதன் முதலாக உதவி வித்தியாதரிசித் தேர்வில் மருதமுனை மகனாக நான் தேர்ந்தெடுக்கப் பட்டேன். பட்டிருப்பு வட்டாரத்துப் பாடசாலைகளை மேற்பார்வை செய்து கொண்டிருந்த நான் வித்தியாதரிசியாகவும் பின்னர் கல்வி அதிகாரியாகவும் பதவியேற்றேன். செல்வன் அ.மு. முனாஸ் சுயபாஷா லிகிதர் சேவையிற் சேர்ந்தார். 1.9.59ல் மருதமுனை ஆலடிப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. 1961ல் எனது முயற்சியால் பெரியநீலாவணை அ.மு.க. பாடசாலையும், மருதமுனை கிழக்கில் ஷம்சுல் இல்ம் வித்தியாலயமும் பாண்டிருப்பு அ.மு.க. பாடசாலையும் உருவாயின. மருதமுனை தெற்கு அ.மு.க. பாடசாலை ஆண், பெண் பாடசாலைகளாகப் பிரிக்கப்பட்டது. ஆண் பாடசாலைக்கு ஜனாப் கே.எம். ஷம்சுத்தீன் தலைமையாசிரியராக நியமனம் பெற்றார்.

மருதமுனை வடக்குக் கலவன் பாடசாலை ஆண்கள் மகா வித்தியாலயமாகவும் தெற்குப் பாடசாலைப் பெண்கள் பிரிவு பெண்கள் மகா வித்தியலாயமுமாக்கப்பட்டன.

1962ல் ஜனாப்களான ஏ.எச். முகம்மது, ஏ. அகமது லெவ்வை ஜே.எம்.எம். அப்துல் காதர் ஆகிய மூவரும் மகா வித்தியாலய அதிபர்களாகப் பதவியுயர்வு பெற்றனர். அவர்களுள் ஜனாப் ஜே.எம்.எம். அப்துல் காதர் முதலாம் வகுப்பு விசேட தர அதிபராகப் பதவியுயர்வு பெற்றார். ஜனாப் ஏ. அகமது லெவ்வை மருதமுனை ஆண்கள் மகாவித்தியாலய அதிபராகப் பதவியேற்றார். அவர் அதிபராய் இருந்த காலத்தில் கிராமத்தில் மூன்று ஆரம்ப பாடசாலைகள் தோன்றிய காரணத்தால் அவ்வப்பகுதி மாணவர்கள் ஆங்காங்கு தாமதித்து விட மாணவர் தொகை குறைவாயிற்று.

உயர்தர வகுப்புக்களில் ஆண்கள் மட்டுமே படிக்க வேண்டியிருந்தது ஒரு காரணமாகும். சில மாணவர்கள் பட்டப்படிப்பை மேற்கொண்டனர். பாடசாலைக்கு அல்மனார் மகா வித்தியாலயம் எனப்பெயர் சூட்டப்பட்டது. முதலாவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாடு ஜனாப் எஸ்.ஏ.ஆர்.எம். செயித் ஹசன் மவுலானாவின் முயற்சியால் 1966ல் இம்மகா வித்தியாலய மண்டபத்தில் நிகழ்ந்தது. ஒரு சரித்திர முக்கியத்துவமுள்ள நிகழ்ச்சியாகும்.

அதிபர் அகமது லெவ்வைக்குப்பின் அதிபர் ஏ.எச். முகம்மது பதவியேற்றார். பெண்கள் மகா வித்தியாலயம் ஆதரிப்பாரின்றி அது ஆரம்ப கலவன் பாடசாலையாக்கப்பட்டதும் அங்கு உயர்தர வகுப்புக்களிற் படித்த பெண்களெல்லாம் அல்மனார் மகா வித்தியாலயத்துக்கு வந்து சேர்ந்தனர். ஆலடிப் பாடசாலையும் இதனுடனிணைக்கப்பட்டது. அதனால் மாணவர் தொகை அதிகரித்தது. கட்டிட விஸ்தரிப்புக்காக இரு பாடசாலைக் கட்டிடங்கள் கட்டப்பட்டன. தற்காலிக விஞ்ஞான கூடம் தெரிந்தெடுக்கப்பட்டது.

அடுத்து ஜனாப் ஏ.எச்.எம் மஜீது அதிபர் பதவியேற்றார். ஆசிரியர் தொகை அதிகரித்தது. நிலப்பரப்பும் விரிவடைந்தது. தளவாடங்கள் அதிகரித்தன. ஜனாப் எம்.எஸ். ஐயூப் ஜே.பி காணியொன்றை உபகரித்தார். குழாய் நீர் விநியோகம், மின் விளக்கு, விஞ்ஞான கூடம், மாணவர் விடுதி என்பன தோன்றின. க.பொ.த. (உயர்தர) வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. பல மாணவர்கள் ஏ.எல். பரீட்சையிற் சித்தியடைந்து சர்வ காலாசாலைக்குச் சென்றனர். பெண்கள் இருவர் பட்டப்படிப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். புதிய மூன்று மாடிக்கட்டிடமொன்று

உருவாகிக் கொண்டிருக்கிறது. தொலைபேசிச் சேவை ஆரம்பித்திருக்கிறது. இவ்வாறு பலவகையிலும் அபிவிருத்தியடைந்து கொண்டிருக்கிறது. ஆசிரியர்கள் நன்கு ஒத்துழைப்பு நல்கி வருகின்றனர்.

## ஆசிரியர்கள்

01. அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் CEO
02. ஜனாப் கே.எம். ஷம்சுத்தீன் அதிபர்
03. ஜனாப் ஐ.எம்.ஏ. குத்தூஸ் அதிபர்
04. ஜனாப் ஏ.எச். முகம்மது அதிபர்
05. ஜனாப் இ. அலியார் அதிபர்
06. ஜனாப் ஐ.எம். ஐயூப் அதிபர்
07. ஜனாப் ஏ.ஏ. றகீம் அதிபர்
08. ஜனாப் யூ.எல். இஸ்மாயில் மரைக்கார் அதிபர்
09. ஜனாப் ஜே.எம்.எம். அப்துல் காதர் அதிபர்
10. ஜனாப் ஏ. அகம்மது லெவ்வை அதிபர்
11. ஜனாப் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மவுலானா CEO
12. ஜனாப் ஏ.எல்.எம். இபுறாகீம் அதிபர்
13. ஜனாப் கே.எல்.எம். இபுறாகீம் அதிபர்
14. ஜனாப் எம்.எம். அப்துல் காதர் அதிபர்
15. ஜனாப் மௌலவி எம்.ஏ.எம். முகையதீன் அதிபர்
16. ஜனாப் இ. உதுமா லெவ்வை அதிபர்
17. ஜனாப் ஏ.ஏ. றகீம் அதிபர்
18. அல்ஹாஜ் எம்.எம். இபுறாகீம் அதிபர்
19. ஜனாப் வை. செயினுலாபிதீன் அதிபர்
20. ஜனாப் எஸ். செயினுலாபிதீன் அதிபர்
21. ஜனாப் ஏ.எம். சாலிஹ் அதிபர்
22. ஜனாப் எம்.எம். இஸ்மாயில் அதிபர்
23. ஜனாப் ஜே.எம்.எம். அபூபக்கர் அதிபர்
24. ஜனாப் ஏ.எம். மஜீது BSc D.E
25. ஜனாப் எஸ்.இஸட்.எம். மஷூர் மவுலானா
26. ஜனாப் ஐ.எம்.ஏ. காதர் பொறியியலாளர்

27. ஜனாப் எம்.வை.எம். முஸ்லிம் B.A அதிபர்
28. ஜனாப் வி.எம். இஸ்மாயில் அதிபர்
29. ஜனாப் ஏ.எச்.எம். மஜீது அதிபர்
30. ஜனாப் எஸ்.எம். நழீம் அதிபர்
31. ஜனாப் ஏ.எம்.ஏ. ஜலீல் அதிபர்
32. ஜனாப் ஏ.ஆர்.ஏ அஸீஸ் B.A அதிபர்
33. ஜனாப் கே.எல்.ஏ. வாஹித் அதிபர்
34. ஜனாப் ஏ.எம்.ஏ. கரீம் அதிபர்
35. ஜனாப் எஸ்.எம்.எம். பழீல்
36. ஜனாப் ஏ.எம். ஷாபி
37. ஜனாப் யூ.எம். ஹனீபா
38. ஜனாப் இ.எம். றாசீக்
39. ஜனாப் ஏ.எம். அபூபக்கர்
40. ஜனாப் ஏ.எம். அபூபக்கர் (English)
41. ஜனாப் எம்.ஏ.எம். ஜலாலுத்தீன்
42. ஜனாப் பீ. மீரா லெவ்வை அதிபர்
43. ஜனாப் ஏ.எல். முகம்மது
44. ஜனாப் ஏ. நெயினா முகம்மது
45. ஜனாப் எஸ்.எல்.எம். ஷாபி
46. ஜனாப் எம்.ஐ.எம். அமீன் CEO
47. ஜனாப் எஸ்.எம். இஸ்மாயில்
48. ஜனாப் எஸ்.ஏ.ஆர்.எம்.எஸ். ஹசன் மவுலானா
49. ஜனாப் எஸ்.எல். ஹமீது லெவ்வை
50. ஜனாப் ஐ.எல்.ஏ. லத்தீப்
51. ஜனாப் எம்.எம். நிசாமுத்தீன் அதிபர்
52. ஜனாப் எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மவுலானா அதிபர்
53. ஜனாப் இ.எம். பதுறுத்தீன்
54. ஜனாப் எம்.என். ஷரிபுத்தீன் அதிபர்
55. ஜனாப் எஸ்.இஸற். சக்காப் மவுலானா
56. ஜனாப் ஏ. சகாப்தீன்

57. ஜனாப் ஏ.எல்.ஏ. சமது அதிபர்
58. ஜனாப் யூ. இஸ்ஸதீன்
59. ஜனாப் மௌலவி கே. சாகுல் ஹமீது
60. ஜனாப் ஐ.எம். இபுறாகீம்
61. ஜனாப் எஸ்.எம். ஷம்சுத்தீன்
62. ஜனாப் ஏ.எம். அப்துல்லா
63. ஜனாப் கே. அல்லாபிச்சை அதிபர்
64. ஜனாப் எஸ்.எம்.ஏ. மத்தீன் அதிபர்
65. ஜனாப் ஏ.எம்.ஏ. சமது அதிபர்
66. ஜனாப் வை.எல்.ஏ. றஸ்ஸாக்
67. ஜனாப் எம்.ஏ.எம். ஜலீல் BA
68. ஜனாப் ஐ. ஹபீபு முகம்மது
69. ஜனாப் எஸ்.எம்.எஸ். ஹசனுல் பாரி மவுலானா
70. ஜனாப் ஏ.சி. நூறு முகம்மது
71. ஜனாப் ஏ. மீரா முகையதீன் BA
72. ஜனாப் எம்.எச். காதர் இபுறாகீம்
73. ஜனாப் ஏ.எம். முஸ்தபா
74. ஜனாப் எஸ்.எம். மூஸா
75. ஜனாப் ஏ. செயினுலாபிதீன்
76. ஜனாப் ஐ.எல்.ஏ. றகீம்
77. ஜனாப் எம்.பி.ஏ. றகீம்
78. ஜனாப் ஏ.எம்.ஏ. வதூத்
79. ஜனாப் எம்.பி. முகையதீன்
80. ஜனாப் எஸ்.எம். பீர் முகம்மது
81. ஜனாப் எம்.எம். ஜமால் முகம்மது
82. ஜனாப் ஏ.எம். தாகிர்
83. ஜனாப் எம்.சி. அகமது முகையதீன்
84. ஜனாப் ஏ.எச்.எம். புகாரி
85. ஜனாப் ஏ.எம். முசாதிக்
86. ஜனாப் எப்.ஏ. ஷரிபுத்தீன்

87. ஜனாப் எச்.எல். ஜமாலுத்தீன்
88. ஜனாப் எஸ்.எல்.எம். ஜலாலுத்தீன்
89. ஜனாப் யூ.எல்.ஏ. கரீம்
90. ஜனாப் எம்.ஐ.எம். சலாகுத்தீன்
91. ஜனாப் ஏ.எம். கமாலுத்தீன்
92. ஜனாப் எம்.எம். செயினுலாபிதீன்
93. ஜனாப் ஐ.எல்.எம்.ஏ. காதர்
94. ஜனாப் எஸ்.ஏ.எம். இஸ்மாயில் மவுலானா
95. ஜனாப் ஏ.ஆர். அலாவுத்தீன்
96. ஜனாப் எச்.எம். பாறுக்
97. ஜனாப் கே.எல். அலீம்
98. ஜனாப் எம்.எல்.எம். இஸ்மாயில்
99. ஜனாப் எஸ்.எம். சம்சுத்தீன்
100. ஜனாப் இஸட்.எம்.ஏ. வக்கீல் Bsc
101. ஜனாப் எஸ்.எம். அக்பர்
102. ஜனாப் வை.எல். இஸ்மாயில் முகாந்திரம்
103. ஜனாப் என்.எம்.எம். அமீர்
104. ஜனாப் ஐ.எல்.எம். அக்றம்
105. ஜனாப் எப்.எம். அமீறுல் அன்சார்
106. ஜனாப் எச்.எம். முஸம்மில்
107. ஜனாப் எச்.எம்.ஏ. வதூத் BA
108. ஜனாப் எம்.எச்.எம். சுபைர்
109. ஜனாப் எஸ்.ஏ.ஆர்.எம்.எஸ். அகமது மவுலானா
110. ஜனாப் ரி.எம். அமீனுத்தீன்
111. ஜனாப் என்.எம். இஸ்மாயில்
112. ஜனாப் ஏ.ஆர்.ஏ. றாசிக்
113. ஜனாப் ஏ.ஆர்.எம். தௌபீக்
114. ஜனாப் எஸ்.எச். ஷாஜஹான்
115. ஜனாப் எஸ்.எம். இபுறாகீம்
116. ஜனாப் ஏ.சி.எம். தௌபீக்

117. ஜனாப் ஏ.எம். மத்தீன்
118. ஜனாப் பீ.எம். சகீது
119. ஜனாப் ஏ.ஆர்.ஏ. றசூல்
120. ஜனாப் ரி.எல்.எம். இஸ்மாயில்
121. ஜனாப் ஏ.எச்.எம். மர்சூக்
122. ஜனாப் எஸ்.ஏ. பஷீர்
123. ஜனாப் ஏ.ஆர்.ஏ. ஜவாத்
124. ஜனாப் எம்.சி.எம். அபூபக்கர்
125. ஜனாப் ஏ. ஹாமீது
126. திருமதி றேகானத் தாகிர்
127. செல்வி சித்தி பரியா Ac
128. செல்வி சித்தி ஜெஸீலா MM

நான் கல்முனை வட்டாரக் கல்வியதிகாரியாகப் பணி புரிகையில் ஜனாப் ஐ.எஸ்.எம். பழீல் மவுலானா வட்டாரக் கல்வியதிகாரியாக நியமனம் பெற்றார். பின்னர் அவரின் மருகர் எம்.ஐ.எம். அமீனும் வட்டாரக் கல்வியதிகாரியாக நியமனம் பெற்றார்

சுய மொழி மூலம் சர்வ கலாசாலைப் பட்டப்படிப்புக்கு வசதி கிடைத்தபோது முதன் முதலாக ஜனாப் ஏ.ஆர்.ஏ. அஸீஸும், அடுத்து ஜனாப் எம்.வை.எம். முஸ்லிமும் தொடர்ந்து வேறு பலரும் BA பட்டதாரிகளாயினர்.

## ஏனைய பட்டதாரிகள்

ஜனாப் ஐ.எல்.எம். அமீன்
ஜனாப் ஏ.எம். கமறுத்தீன்
ஜனாப் இஸட்.எம். இக்பால்
ஜனாப் இஸட்.எம். வக்கீல்
ஜனாப் எம்.ஏ.எம். ஜலீல்
ஜனாப் ஏ.மீரா முகையதீன்
ஜனாப் எச்.எம். வதூத்
ஜனாப் பீ.எம். இக்பால்
ஜனாப் ஏ.எல்.எம். ஜஃபர்
ஜனாப் எம்.எல். அப்துல் காதர்
ஜனாப் எஸ்.எம். முகையதீன் பாவா

ஜனாப் எம்.ஐ.எம். றபீக்
ஜனாப் ஏ.எம். பதுறுத்தீன்
ஜனாப் எம்.ஐ.எம். முசாதிக்
ஜனாப் எம்.ஐ.எம். முஸம்மில்
ஜனாப் ஐ.எல்.ஏ. ஹமீது IPT

மேலும் பலர் பயிற்சியிலிருக்கின்றனர்.

மேல் வருவோர் நிர்வாகத் துறையிலும் எழுது விளைஞர்களாகவும் பணி புரிகின்றனர்.

ஜனாப் ஏ.எல்.எம். முனாஸ்
ஜனாப் எம்.ஏ.எம். அலாவுத்தீன்
ஜனாப் ஐ.எல். ஷம்சுத்தீன்
ஜனாப் எம்.எம்.ஏ. முகைமின்
ஜனாப் ஏ.எம். ஜூனைத்
ஜனாப் ஏ.எல்.எ. மஜீது
ஜனாப் எம்.எம். நக்ஸபி
ஜனாப் பி.எம். சித்தீக்
ஜனாப் ஏ.ஆர்.ஏ. ஹமீது
ஜனாப் ஏ.எம். அபுல் ஹூதா
ஜனாப் ஏ.எம். சபீக்
ஜனாப் எஸ்.எம். அப்துல்லா
ஜனாப் ஏ.ஆர்.ஏ. சத்தார்
ஜனாப் ரி.எல். றகுமத்துல்லா
ஜனாப் எம்.எல். நஜ்முத்தீன்
ஜனாப் எஸ்.எம். மசூத்

அல்ஹாஜ் எம்.எம். இபுறாகீம், எஸ். செயினுலாபிதீன் ஏ.ஆர்.ஏ. அஸீஸ் ஆசிரியர்கள் அதிபர்களாகப் பதவியுயர்ச்சி பெற்றனர். எனது மருமகன் ஜனாப். இ.மு. நசுறுத்தீன் முதலாவது பொலிஸ் உத்தியோகத்தராவார். எச்.எல். ஜமாலுத்தீன் S.I. ஆகக் கடமை புரிகிறார்.

1979ல் ஷம்சுல் இல்ம் வித்தியாலயம் மகா வித்தியாலயமாக்கப்பட்டது. ஜனாப் ஐ.எம்.எஸ்.எம்.பழீல் மவுலானா அதிபராகப் பதவியேற்றார். அவரையடுத்து ஜனாப் A.R.A. அஸீஸ் B.A. அதிபரானர். அல்ஹாஜ் ஐ.எல்.எம். இஸ்மாயில் ஜே.பி.கட்டிடமொன்றைக் கட்டி

உபகரித்தார். மூன்று மாடிக்கட்டிடமொன்று உருவாகிக் கொண்டிருக்கிறது. மின்விளக்கு ஒளிர்கிறது. தீவிர வளர்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

## குறுஆன் பாடசாலைகள்

அல்மனார் மகா வித்தியாலயம் இருக்கும் வளவில் குறுஆன் பாடசாலையொன்றிருந்ததாம். அதில் யார் ஓதிக்கொடுத்தார் என்று தெரியவில்லை.

நானறிய ச. அப்துல் காதர் லெவ்வையும், அ. அப்துல் காதர் லெவ்வையும் அலியார் லெவ்வை (ஆத்திமோட்டார்) யும், அஸீஸ் லெவ்வையும், கொத்துவால் ஆலிமும் தங்கள் வீடுகளில் பள்ளிக் கூடங்கள் வைத்து ஓதிக் கொடுத்து வந்தனர். பின்னர் தென்தெருப்பள்ளிவாசலில் மஜ்மஉல் ஹைறாத் என்ற பெயரில் ஜனாப் முகம்மது சாலிகு மவுலானாவும் வடதெருப்பள்ளிவாசலில் அல்ஹாஜ் இஸ்மா லெவ்வை மரைக்காயர் கட்டிக் கொடுத்த கட்டிடத்தில் மன்பஉல் ஹஸனாத் என்ற பெயரில் செய்யிது அப்துல் றஸ்ஸாக் மவுலானாவும் ஓதிக் கொடுத்து வந்தனர். அவை தற்போதும் நடைபெற்று வருகின்றன. மத்திய றோட்டில் அல்ஹாஜ் ஆதம்லெப்பை ஆலிமின் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்ட மத்ரஸாவும் பெரிய நீலாவணையில் என்னால் நிர்மாணிக்கப்பட்ட 'அல் பாக்கியாத் ஸாலிஹாத் மத்ரசாவும் அப்துஸ்ஸமது மௌலவியினால் தொடங்கப்பட்ட அல் மத்ரஸதுஸ் ஸாலிஹாத் மத்ரசாவும் அக்பர் தைக்காவில் ஒரு மத்ரசாவும் விளையாட்டு மைதானத்தையடுத்து அப்துல் றசூல் மௌலவியால் ஆரம்பிக்கப் பட்ட மத்ரசாவும் தெற்குக் கொலனியில் தைக்காவில் ஒரு மத்ரசாவும் மத்தியில் முகைதீன் ஜமாலியின் மத்ரசாவும் தற்போது நடைபெற்று வருகின்றன.

ஒரு காலத்தில் ஒரு சிலர் மாத்திரம் குறுஆன் வாசிக்கும் அளவு எழுத்தறிவு பெற்றிருந்த ஒரு சமுதாயத்தின் இன்றைய சந்ததி அழகிய தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் சரளமாகப் பேசவும் எழுதவும் வல்லமை பெற்றிருப்பதையும், ஒரு தாய் தன் பிள்ளைக்குத் தமிழ், ஆங்கிலம், சிங்களம், அறபு ஆகிய மொழிகளில் பாடம் சொல்லிக் கொடுக்கக் கூடிய நிலையையடைந்திருப்பதையும் அறிந்து அளவிலா ஆனந்தமடைகிறேன். நான் திறந்து விட்ட பாதையில் ஆண்களும் பெண்களும் பிரவேசித்து இந்நிலையையெய்தியிருக்கின்றனர். இந்நிகழ்வு எனது பிறவியின் பயன் நிறைவெய்தியிருக்கிறது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக அமைகிறது என எண்ணி நான் மனநிறைவு கொள்கிறேன்.

# 8

# கலைகள்

## பொல்லடி

கைக்கொரு வயிரத்தடி கொண்டு எண்மர் சுற்றிச் சுற்றி பலதரமான சந்தங்களிற் பாடிக் கொண்டு தாள விகற்பங்களுடன் அடிப்பது பொல்லடி என்பர். விழாக்காலங்களில் நிகழும் காலட்சேப நிகழ்ச்சிகளிலொன்று இது. விவாக வீடுகளில் முக்கியமாக நிகழும். கூட்டங் கூட்டமாகச் சேர்ந்து இக்கலையைப் பழகுவர். பழக்குபவருக்கு அண்ணாவியார் என்று பெயர். பழங்காலத்திலிருந்தே அண்ணாவிமார் ஒவ்வொருவரும் பல கூட்டத் தினரைப் பொல்லடி பழக்கி வைத்திருந்தனர். விழா எடுப்பவர் அண்ணாவியாருக்கு வெற்றிலை வட்டா வைத்து அழைப்பு விடுப்பர். அண்ணாவியார் கூட்டத்தினரைச் சேர்த்துக் கொண்டு போய் ஆட்டத்தை நடாத்துவார். அவர் கையில் சல்லாரியை வைத்துக் கொண்டு பாட்டுப் பாடித் தாளத்துக்கு அடிப்பார். ஏனையோர் உட்கை புறக்கை நின்று தருச்சொல்லிச் சுற்றிச் சுற்றியடிப்பர். ஆரம்பத்தில் அண்ணாவியார் விருத்தம் பாடுவார். ஈற்றில் மற்றையோரும் சேர்ந்து ஓசையெழுப்புவர். அத்தருணம் பெண்கள் குரவையிடுவர். பாட்டுக்குப் பாட்டு அடி முறைகளும் விகற்பப் படும். அலிபாத்துஷா நாடகம், அப்பாஸ் நாடகங்களிலுள்ள கீர்த்தனைகளைப் பாடி பலவகைப்பட்ட விதங்களில் பொல்லடிப்பர்.

ஆதம்பாவா அண்ணாவியார், அவரது மகன், அலியார் அண்ணாவி யார், அகமது லெவ்வை அண்ணாவியார், பக்கீர்த்தம்பி அண்ணாவியார், இபுறாலெவ்வை அண்ணாவியார் என்பவர்கள் இருந்திருக்கின்றனர். எம்.ஜி.ஆர். என்றழைக்கப்படும் இபுறா லெவ்வை அண்ணாவியார் இப்பொழுது இக்கலையைப் பழக்கிக் கொண்டிருக்கிறார். புகையிலைத் தோட்ட வேலை முடிந்து வந்து மறுபோகத்துக்குப் போகும் வரை இரவு நேரங்களில் இந்தக்கலை பழக்கப்படும். தற்போது இக்கலை அருகி வருகிறது.

## கொட்டிப்படித்தல் (இசைக்கச்சேரி)

பழைய இசைக் கவிதைகளை மனனஞ்செய்து கொண்டு பல பாடகர்கள் கச்சேரி நடத்தினர். விழாக் காலங்களில் நிகழும் காலட்சேப நிகழ்ச்சிகளில் இதுவும் ஒன்று. பண்டைக் காலத்தில் இக்கலை உச்ச நிலையிலிருந்தது. விவாகம், விருத்தசேதனம், காது குத்துக் கலியாணம் முதலானவற்றில் இரவு நேரங்களில் கொட்டிப்படித்தல் நிகழ்ச்சி நிகழும் பாடகர்கள் வட்டா வைத்து அழைக்கப்படுவர். களரியில் பாடகர்கள் வட்டமாக உட்கார்ந்திருப்பர். தட்டுக்கட்டை (டோல்) செப்புக் குடமும் வட்டாவும் பாக்கு வெட்டியும் பக்கவாத்தியங்கள். ஆரம்பத்தில் ஆளுக்கொரு விருத்தம் பாட ஈற்றில் மற்றையோர் தொடர்ந்து ஓசையெழுப்புவர். பெண்கள் குரவையிடுவர். பெரும்பாலும் விருத்தங்கள் மஸ்தான் சாகிபு பாடல்களாயிருக்கும். ஒவ்வொருவராகக் கீர்த்தனைகளைப் பாடுவர்.

மற்றவர்கள் பக்கப் பாட்டுப் பாடுவர். இரவு முழுவதும் கச்சேரி நடக்கும். சில சமயங்களில் போட்டா போட்டியும் நடக்கும் வசைக் கவிதைகளும் பாடுவர். எதிர்த்தவர்களுக்கு வசைக்கவிதைகளை உடனுக்குடன் இயற்றிப்பாடும் திறமும் அவர்களுக்கிருந்தது.

அச்சுக் கட்டிக் காசின் பாவா, காலைக்கார ஓடாவி, முகம்மதுத் தம்பி, இபுறா லெவ்வை நானா, முகம்மது மீராநெயினாலெவ்வை, அபூபக்கர் மோதின், பக்கீர்த்தம்பி, உசன் லெவ்வை ஓடாவி, சாலிகுலெவ்வை ஓடாவி, அலியார்ப் போடி அப்துல் கபூர் லெவ்வை, முகம்மதுக்காசிம் ஓடாவி, உசனார், முகம்மத்திஸ்மாயில் செயினுலாபிதீன் முதலானோர் நான் அறிந்த பாடகர்கள். இவர்களெல்லாம் முறையாகச் சங்கீதம் பயின்றவர் களல்ல. தாளத்துக்குப் பாடத் தெரியும். இசைத்தட்டுக்களில் இனிமையான பாட்டுக்கள் வரத்தொடங்கியதும் இவர்களின் கச்சேரியும் ஒழிந்து விட்டது.

# 9

# விளையாட்டுக்கள்

காலட்சேப நிகழ்ச்சிகளாகப் பல போட்டி விளையாட்டுக்கள் அன்று நிகழ்ந்து வந்தன. மைதானங்களில் விளையாடுவார்கள். முதலில் இரண்டு கட்சிகளாகப் பிரிவர். பயிற்சியுள்ளவர்கள் தங்களுக்குச் சமதையானவர் களுடன் கை கோத்துக் கொண்டு வரிசையாக நிற்பர். தலைவர்கள் இருவர் இருபக்கங்களிலும் நின்று வரிசைகளையுன்னி வீரர்களை சமப்படுத்த மாற்றிக் கட்டிக் கொண்டு பங்கெடுத்து விளையாட்டை ஆரம்பிப்பர். தலைவர்களை ராஜாள் (ராச ஆள்) என்று அழைத்தனர். நேரெதிர்த் தேர்விலன்றி மறைமுகத் தேர்விலும் வீரர்களைப் பங்கீடு செய்வதுண்டு.

கிளித்தட்டு, நெடுங்கவடி, கவடிப்பாய்தல், கோட்டுப்பந்து, அடிபந்து, நொண்டியடித்தல், கசை விளையாட்டு, முயற்பாய்தல், வார்விளையாட்டு, கிட்டியடித்தல், காகம் விளையாடுதல் முதலிய சுதேச விளையாட்டுக்கள் விளையாடப்பட்டன. பின்னேரங்களிலும் இரவில் நிலவு காலங்களிலும் இவ்விளையாட்டுக்கள் நிகழும். பெருநாட் காலங்களில் உயர்ந்த மரங்களில் ஊஞ்சல் போட்டு இருபக்கமும் இருவர் நின்று உந்த பலகையில் இருப்போர் ஊஞ்சற் பாட்டுப்பாடுவர். ஒருவர் பாட மற்றையோர் தருச்சொல்லுவர். சக்கரத்திற் சுழலும் தொட்டில் ஊஞ்சல் ஆடுவதுமுண்டு. முந்திரி பழுத்த காலங்களில் முந்திரியம் விதைகளைக் கொண்டு கோலியாட்டம் ஆடுவதும் உண்டு. மேல்நாட்டு விளையாட்டுக்களின் வருகையால் இவை ஒழிந்தன.

## சிலம்ப விளையாட்டுக்கள்

தற்காப்பு நிமித்தம் கிண்ணியாக்காரரிடமிருந்து பலர் காலந்தோறும் சிலம்ப விளையாட்டுக்கள் பயின்றிருக்கின்றனர். கால்மானம், கைம்மானம், கம்பு வீச்சு, நெருப்புப் பந்தம் வீசுதல் முதலான விளையாட்டுக்கள் தெரிந்திருந்தனர். விழாக்காலங்களிலும் ஊர்வலங்களிலும் இத்தகைய விளையாட்டுக்கள் நிகழும். ஊர்வலங்களில் கம்பு வீசிக்கொண்டு முன் செல்வர். சனக் கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும் இவ்விளையாட்டுக்கள் உதவின.

ஆதம்பாவா மரைக்காயர், கொண்டை கட்டி அலியார், சாலிகு லெவ்வை ஓடாவி, அப்துல்லா மவுலானா, நூகு லெவ்வை, நெயினா ஆதம் லெவ்வை ஓடாவி, இஸ்மாயில் புச்சர், அப்துல் கரீம் மரைக்கார், மாகாத்து, முஸ்தபா, அப்துல் ஹமீது ஓடாவி, செய்யிதலி, சபுறுத்தீன் மர்சூக், ஷம்சுத்தீன். மஃறூப் ஆகியோர் இந்த விளையாட்டுக்கள் பயின்றிருந்தனர்.

## மல்யுத்தப் பயிற்சி

அப்துல்லா பயில்வானிடம் மல்யுத்தப் பயிற்சி பெற்ற சாகுல் ஹமீதுப் பயில்வான், அலியார் பயில்வான், சகீதுப் பயில்வான், அப்துல் மஜீது, அறபா, இபுறா லெவ்வை, செய்யதலி ஆகியோர் மல்யுத்தப் பயிற்சி பெற்றிருந்தனர்.

## மகுடி வித்தை

மந்திர சக்தி கொண்டு சிலர் மகுடியெடுத்ததாகக் கேள்விப் படுகிறோம். பழங்காலத்தில் மகுடியெடுத்த இடத்தை இன்றும் மகுடி வெட்டையென்று கூறுகின்றனர். இப்பொழுது இது செய்வாரில்லை.

# 10

# வைத்தியம்

ஆயுள் வேத வைத்தியர்களே பண்டுதொட்டு வைத்தியஞ் செய்து வருகின்றனர். வாகடங்களைப் படித்துப் பாட்டுக்களைக் பாடமிட்டுத் தமது சொந்த அனுபவங்களைக் கொண்டு வைத்தியத் தொழிலைச் செய்து வந்தனர். சிலருக்கு அது குடும்பத் தொழிலாகவும் இருந்து வருகிறது. முறையாகக் குருவிடமிருந்து பயிற்சி பெற்றோர் மிகச்சிலரே. மூலிகை களைத் தேடியெடுத்துக் கடைச் சரக்குகளுடன் சேர்த்து மருந்துகளைச் செய்தனர். குளிகை, குழம்பு, எண்ணெய், தூள் முதலிய மருந்தினங்களைச் செய்து வைத்துக் கொண்டு நோயாளிகளின் நாடியைப் பரிசோதித்து மருந்து கொடுத்து அனுமானங்களைக் கூறுவர். குறித்த அனுபானங் களைத் தேடி மருந்தை உபயோகிக்க வேண்டும். அவசர சிகிச்சை இல்லை.

மகுடிப்பரிகாரி, மாவடியார், கொண்டைக்காரன், அக்கரைப் பற்றுப் பரிகாரி, கலந்தர் பரிகாரி, மீரா லெவ்வைப் பரிகாரி, கும்புளாப் பரிகாரி, வெ.பெ.ஆதம்பாவா, பாபனூர், உதுமா லெவ்வை, ஆதம் லெவ்வை, காரியப்பர், பொல்லடியார், முகம்மதுக் காசிம், முகையதீன் பாவா, அகமது லெவ்வை, முகம்மது இபுறா லெவ்வை, சிலுப்பாப் பரிகாரி, போடிப்பிள்ளை, இசுமா லெவ்வை, இபுறாலெவ்வை, ஆதம்பாவா, சாய்வுத் தம்பி, அப்துல் ஹமீது, முகையதீன் பிச்சை, உதுமா லெவ்வை, சீனித்தம்பி, அசனா லெவ்வை, பை. அலியார் முதலியோர் ஆயுள் வேத வைத்தியர்கள். இவர்களுட் சிலரே இன்று வைத்தியத் தொழில் செய்து வருகின்றனர். இவர்களுக்கு நோயாளர் கொடுக்கும் சன்மானமே வருமானமாகும். கல்முனை அரசாங்க வைத்தியசாலையில் இலவசமாக மருந்து பெற்றனர். சமீப காலத்தில்தான் ஆங்கில வைத்தியர்கள் ஊருக்குள் மருந்துச்சாலைகளை வைத்து வைத்தியஞ் செய்ய ஆரம்பித்தனர்.

வைத்தியத்துறையில் முதன் முதலாக கொழும்பு பல்கலைக்கழக சுதேச வைத்தியத்துறையில் பயிற்சி பெற்று வைத்தியக் கலாநிதியாகப் பட்டம் பெற்று வந்தவர் எனது மகன் அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஆவார். அடுத்துப் பல்கலைக்கழகத்தில் பல் வைத்தியக் கலாநிதியாகப் பயிற்சி பெற்று வந்தவர் ஜனாப் ஜே.எம்.எம். அப்துல் காதர் அதிபர் அவர்களின் மகன் முகம்மது சித்தீக் ஆவார். அடுத்து முகம்மது முகையதீன்

அவர்களின் மகன் முகம்மது ஜமீல் நவீன வைத்தியத்துறை கலாநிதியாகப் பட்டம் பெற்றார்.

பாராளுமன்ற உறுப்பினரும் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான ஜனாப் ஏ.ஆர்.மன்சூர் அவர்களின் பேருதவியால் பெரிய நீலாவணையில் மருந்துச்சாலையொன்று அரசாங்கம் கட்டியுதவியது. 24.5.81 ல் அது பிரதர் ஆர். பிரேமதாச அவர்களாற் திறந்து வைக்கப்பட்டது. நிரந்தரமாக நோயாளர்களுக்கு மருந்து கொடுக்கப்பட்டு வருகிறது. இது மருத முனைக்கு ஒரு வரப்பிரசாதமாகும். நோயாளர் இடாப்பில் பிரதமரால் எனது பெயர் முதலாவதாக எழுதப்பட்டுள்ளது.

## முறிவு வைத்தியம்

மணலைப் போடியாரும் அவரின் மகனும் முறிவு வைத்தியர் களாயிருந்தனர். அந்த வைத்தியத்தைத் தொடர்ந்து செய்வார் இன்று யாருமில்லை. தமக்குப் பின் பலர் இந்த பேருதவியை மக்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்னும் பரந்த நோக்கம் நமது கலைஞர்களுக்கு இருந்திருக்குமானால் தமது கலையை விவேகமுள்ள பலருக்குப் பகிர்ந்தளித்திருக்கலாம். அப்படிச் செய்யாமையினால் இந்த முறிவு வைத்தியக்கலை அடிமாந்திப் போயிற்று. இதுபோன்று பல அபூர்வ கலைகள் நம்மத்தியிலிருந்து அகன்று விட்டன.

## விஷ வைத்தியம்

விஷ வைத்தியர்கள் பலர் இருந்திருக்கின்றனர். செய்யதுப்போடி, இரட்டையிற் பாதி, பை. அலியார், இபுறா லெவ்வை போடி, முகம்மது நெயினா, கா.இபுறா லெவ்வை, எகியா லெவ்வை, சீனித்தம்பி, முகம்மது றாசிக் ஆசிரியர், அப்துல் றகுமா லெவ்வை மரைக்கார், கச்சி முகம்மது ஆகியோர் விஷ வைத்தியர்கள். இந்த வைத்தியத்தைக் குருவினிடமிருந்து முறையாகப் பயிலப் பலர் முன் வர வேண்டும்

# 11

# இலக்கிய முயற்சிகள்

## கவியாக்கம்

இவ்வூர்ப் பெண்பாலாரிடத்தில் இயல்பாகவே கவிபாடும் திறன் இருந்து வந்திருக்கிறது. பெரும்பாலும் அவை அகப்பொருள் சம்பந்த மாகவே உருவானவை. ஆதலால் பெரியவர்களின் எதிர்ப்புக்கு அஞ்சி அத்திறம் நசுக்கப்பட்டுப் போயிற்று. எனினும் அத்திறம் முற்றிலும் அழிந்துவிடவில்லை. உள்ளத்திலெழும் உணர்ச்சிகளைக் கவியாகச் சொல்லுபவர்கள் ஆங்காங்கு இன்றும் இருந்து கொண்டுதானிருக் கின்றனர். உவமான உவமேயங்களுடன் திறமையான கவிகளையியற்றிப் பாடுவர். எழுத்தறிவில்லாத அவர்கள் அருமையான கவிகளைப்பாடியிருக் கின்றனர். யாப்பமைதி இல்லாதிருப்பினும் ஓசை நயமுள்ள அக்கவிகள் ஆதரிப்பாரின்றி இருக்கின்றன.

சந்தர்ப்பங்களை உண்டாக்கி ஏற்ற கவிகளை இணைத்துக் கதையுருவில் சங்க இலக்கியங்களை மேற்கோள் தந்த ”கனிந்த காதல்” என்னும் நூலொன்றை நான் இயற்றியிருக்கிறேன். அதில் ஒரு பகுதி மட்டக்களப்பில் நிகழ்ந்த தமிழாராய்ச்சி மாநாட்டில் வாசிக்கப்பட்டுப் பாராட்டைப் பெற்றுள்ளது.

சுமார் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன் சின்னாலிமப்பா (மீரா லெவ்வை ஆலிம்) என்னும் புலவரிருந்தார். அவர் “ஞானரை வென்றான்” என்னும் கவிதை நூலை இயற்றினார். “மழைக்காவியமும்” வேறு சில தனிப்பாடல்களும் இயற்றியுள்ளார். தனிப்பாடல்கள் மறைந்துவிட்டன. வேறு சிலர் ஊஞ்சற் பாட்டு, பொல்லடிப்பாட்டு, வழிநடைச்சிந்து, ஒப்பாரி முதலிய கவிதைகளும் இயற்றிப் பாடியதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்தக் கவிதைகளெல்லாம் சாதாரண பேச்சுத் தமிழில் அமைந்தன வேயன்றி இலக்கண அமைதி பெற்றனவல்ல. தமக்கியைந்த சந்தங்களிற் பாடியிருக்கின்றனர். சின்னாலிமப்பாவின் “ஞானரை வென்றான்” என்னும் நூல் ஒன்றே இலக்கண அமைதி பெற்று விருத்தப்பாக்களாக அமைந்தது.

1864ல் அபூபக்கர் லெவ்வையென்பவரால் தப்பும் தவறுமாக எழுதப்பட்ட ஏட்டுப் பிரதியொன்று எனக்குக் கிடைத்தது. அதை என்னால் இயன்ற அளவு செப்பஞ் செய்து அச்சேற்றினேன். அது இன்று தமிழறிஞர்களால் வரவேற்கப்படுவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன். நான் அதனை அன்று அச்சேற்றாதிருந்தால் ஏனையவை போன்று அதுவும் அழிந்துபட்டிருக்கும். தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்கும் வாய்ப்புப் பலருக்கிருந்தும் அதைப் பயன்படுத்திக் கொண்டார்களில்லை. தமிழ் இலக்கிய இலக்கணங்களை ஆர்வமோடு படிக்கும் உணர்வையூட்டி எனக்குக் கற்பித்த ஸ்ரீமான் கே.எஸ்.வயிரமுத்து ஆசிரியருக்கும் விபுலானந்த அடிகளாருக்கும் எனது உளப்பூர்வமான நன்றியறிதலைச் சமர்ப்பிக்கிறேன். அவர்களின் அன்பும் ஆசீர்வாதமும் எனக்குப் பொற்கிழிகளையும் பொன்னாடைகளையும் பரிசுகளையும் ஏன்? புலவர் மணியென்ற பட்டத்தையுங் கூட பெற்றுக் கொடுத்தன.

தமிழ் இலக்கிய இலக்கணங்களைப் பயின்றதன் காரணமாக நம்முன்னோர் அருளிய இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களைக் கற்கவும், ஆராய்ச்சி செய்யவும் அவர்களின் உயர் இலக்கியங்களுக்கு உரை செய்யவும், புதிய இஸ்லாமிய இலக்கியங்களை உருவாக்கவும் முடிந்தது. எனது கவிதை நூல்கள், வசன நூல்கள், உரை நூல்கள் பல வெளிவந் துள்ளன. அச்சேறாத நூல்களும் பல உள்ளன. நாட்டின் உயர் வகுப்பு இஸ்லாமிய மாணவருக்கான இலக்கிய நூலும் என்னால் ஆக்கப் பட்டுள்ளது. இன்னும் ஆக்கிக் கொண்டிருக்கிறேன். நான் தமிழ் கற்பித்த மாணவர்கள் பலர் தமிழ் அறிஞர்களாக, கவிஞர்களாக, நூலாசிரியர்களாக விளங்குவதைக் கண்டு ஆனந்தமடைகிறேன்.

அதிபர் மர்ஹூம்ஜே.எம்.எம் அப்துல் காதர் நொத்தாரிஸ், தமிழ் இலக்கண இலக்கியப் பயிற்சியும் ஆய்வு முள்ளவராயிருந்தார். பல இலக்கிய உரை நூல்களையியற்றினார். இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சியிலீடுபட்ட அன்னார் 1.8.80ல் சடுதி மரணமடைந்தார்.

ஜனாப் வி.எம்.இஸ்மாயில் (மருதூர் கொத்தன்) கவிஞரும், சிறுகதை ஆசிரியருமாவார். இலக்கிய ஆர்வமுள்ளவர். காவியத் தலைவன் என்ற கவிதை நூலையியற்றினார்.

தீன்தமிழ்க் கவிஞர் செ.அ. செய்யிது ஹசன் மவுலானா தமிழில் ஆர்வமுள்ளவர். கவிதை இயற்றுந்திறமும் இலக்கணப் பரிச்சியமுள்ளவர். 1966ல் முதலாவது இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டை மருதமுனை அல்மனார் மகா வித்தியாலயத்தில் நடாத்தினார். பல தமிழ், முஸ்லிம் அறிஞர்களைக் கொண்டு சொற்பொழிவுகளை நிகழ்த்துவித்த

பெருமை இவருக்குண்டு. சின்னாலிமப்பா அரங்கு, உமறுப் புலவர் அரங்குகளில் நிகழ்த்திய சொற்பொழிவுகளைத் திரட்டிய "இஸ்லாமிய தமிழ் இலக்கியச் சொற்பொழிவுகள்" என்ற தொகுப்பு நூலை வெளியிட்டார். முகையதீன் புராணத்துக்கு உரை எழுதிக் கொண்டிருக்கிறார்.

வேறு சில சிறுகதை எழுத்தாளர்களும், புதுக் கவிதை இயற்றுவோரும் உளர்:

| வெளிவந்த நூல்கள் | ஆக்கியோர் |
|---|---|
| ஞானரைவென்றான் (கவிதை) | சின்னாலிமப்பா |
| மழைக்காவியம் (கவிதை) | சின்னாலிமப்பா |
| மெய்ஞான தீபம் (வசனம்) | அபூசாலிகு மவுலானா |
| உபாக்கியான அந்தாதி | உ.மு. இஸ்மாயில் மரிக்கார் |
| சீறா பதுறுப்படலம் (உரை) | அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் |
| நபி மொழி நாற்பது (வெண்பா) | அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் |
| (சாகித்திய மண்டலப் பரிசு பெற்றது) | |
| க.பொ.த.இலக்கியத் தொகுதி உரை | அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் |
| வீராங்கனை சைதா | அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் |
| பதுறு சஹாபாக்கள் | மௌலவி எஸ்.எம்.முஸ்தபா மவுலானா |
| ஜோதி மதம் | அல்ஹாஜ் எம்.எம்.இபுறாகீம் அதிபர் |
| | மவுலவி.எஸ்.எம் முஸ்தபா மவுலானா |
| இக்னியாக் கலைக்காவியம் | யூ.எல்.தாவூது லெவ்வை |
| இஸ்லாமிய இலக்கியச் | |
| சொற்பொழிவுகள் (தொகுப்பு) | செ.அ.செ.ஹசன் மவுலானா |
| முகையதீன் புராணம் | |
| (ஹஜ்ஜுக்குப் போந்தபடலம்(உரை) | அதிபர் ஜே.எம்.அப்துல் காதிர் |

| | |
|---|---|
| புதுகுஷ்ஷாம் உரை | |
| முதலிரண்டு தொகுதிகள் | அதிபர்.ஜே.எம்.எம்.அப்துல்காதிர் |
| தியாகம் (உருவக்கதை) | எம்.ஐ.எம்.முஸம்மில் |
| இறவாச் செல்வம் (கவிதை) | அதிபர்எம்.வை.எம்.முஸ்லிம்B.A |
| காவியத் தலைவன் (கவிதை) | அபூஹபீனா-அதிபர் வி.எம். இஸ்மாயில் (மருதூர் கொத்தன்) |
| கலங்கரை (சஞ்சிகை) | மருதமுனை அல்மனார் மகாவித்தியாலயம் |
| இசைவருள் மாலையும் மக்களுக்கு இதோப தேசமும் | புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் |
| கனிந்த காதல் | புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் |
| புதுகுஷ்ஷாம் (உரை) ஆறு தொகுதிகள் | புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |
| புதுகுஷ்ஷாம் (வசனம்0 | புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |
| க.பொ.த.இலக்கியம். | புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |
| நபிமொழி நாற்பது (கவிதை) | புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |
| உலகவியல்விளக்கம் (கவிதை) | புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |
| முதுமொழி வெண்பா (கவிதை) | புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |

| | |
|---|---|
| சூறாவளிப் படைப்பபோர் (கவிதை) | புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |
| அறபு நாட்டு அனுபவங்கள் | புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |
| ஈழத்து நானிலக் காட்சிகள் | புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |
| இஸ்லாம் பாட வினாவிடை | புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |
| சீறாப்புராண சாரம் | புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |
| சீறாப்புராணம் பாதைபோந்தப்படலம் (உரை) | புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |
| இஸ்லாமிய கலாசார இலக்கியத் தொடர் (1-6) | புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் |

**வானொலிக் கலைஞர்கள்**

இலங்கை வானொலியில் செய்யிது அப்துல் பாரி மவுலானாவின் திருக்குறுஆன் விளக்கப் பிரசங்கம் முதன் முதலொலித்தது. 1951ல் நான் தொகுத்துக் கொடுத்த நாட்டுக் கவித் தொகுதி அப்பொழுது மாணவரா யிருந்த எம்.வை.எம்.முஸ்லிமால் கிராமச் சஞ்சிகையிற் பாடப்பட்டது.

எனது நற்சிந்தனைகள், இலக்கியப் பேச்சுக்கள், கவிதைகள், பேட்டிகள், அனுபவங்கள் பல ஒலிபரப்பாயின. கவியரங்குகளிலும் பங்குபற்றிக் கொண்டு வருகிறேன். அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம் மஷூர் மௌலானா அவர்களின் பேச்சுக்கள் அடிக்கடி ஒலிபரப்பாகிக் கொண்டி ருக்கின்றன.

அதிபர் ஜே.எம்.எம். நொத்தாரிசு அவர்களின் இலக்கியப் பேச்சுக்கள் ஒலிபரப்பீாயின. எம்.வை.எம்.முஸ்லிம் B.A பல இலக்கியப் பேச்சுக்கள் நிகழ்த்தியுள்ளார். 1979ல் இஸ்லாமிய நிகழ்ச்சியில் "இலக்கிய மஞ்சரி"

என்னும் பகுதியை வாரந்தோறும் நிகழ்த்தினார். அதிபர் வி.எம். இஸ்மாயிலின் கவிதைகள், கட்டுரைகள், கிராமிய நிகழ்ச்சிகள், பேட்டிகள் இடம் பெற்றுள்ளன. கவியரங்குகள் பல இவரது தலைமையில் நடைபெற்றுள்ளன. கல்வியதிகாரி எம்.ஐ.எம். அமீனின் கட்டுரைகளும் ஒலிபரப்பாயின.

எம்.எஸ்.நூறுல் அமீன் சிலகாலம் முஸ்லிம் செய்திச் சரம் என்னும் நிகழ்ச்சியை நடாத்தினார்.

எஸ்.இஸட்.எஸ். சக்காப் மவுலானா "முதுசொம்" என்ற நிகழ்ச்சியை வாரந்தோறும் நிகழ்த்தி வந்தார். முத்தாரத்திலும் கலந்து கொண்டார்.

குழந்தை மரிக்காரின் மெல்லிசைப் பாடல்கள் இஸ்லாமிய நிகழ்ச்சியில் இடம் பெற்றன. முகம்மது நயீம் ஆசிரியர் வானொலியில் கவியரங்கு நடாத்தினார். சட்டத்தரணி எம்.எம்.அபுல்கலாம் நாட்டு நலனில் நம்மவர் பங்கு என்ற நிகழ்ச்சியை நடத்தினார்.

## பத்திரிகை

1927ம் ஆண்டு முதல் ம.சா அலியார் மரைக்கார் என்பவரும் பீ.சீனிமுகம்மது என்பவருமே ஆரம்பத்தில் சென்னையிலிருந்து தபால் மூலம் "தாறுல் இஸ்லாம்" என்னும் வாரச் சஞ்சிகையை வரவழைத்துப் படித்தனர். அவர்களைத் தொடர்ந்து நானும் தாறுல் இஸ்லாம், ஆனந்த விகடன் பத்திரிகைகளைச் சென்னையிலிருந்து வரவழைத்துப் படித்தேன். இஸ்லாம்மித்திரன் பத்திரிகையைக் கொழும்பிலிருந்து நானும் முகம்மது சாலி மவுலானாவும் வரவழைத்துப் படித்தோம். தினகரன் அன்று தரம் குறைவானதாக இருந்தாலும் வாசிப்பாரில்லை. வீரகேசரி தோன்றி வெகுவான விளம்பரத்தின் மூலம் பிரகாசிக்க தொடங்கிற்று. மக்களிடையே பத்திரிகை வாசிக்கும் பழக்கம் இருக்கவில்லை. எஸ்.டி. சிவநாயகத்தை ஆசிரியராகக்கொண்ட தினபதி பத்திரிகை ஆரம்பித்த காலத்தில்தான் ஓரளவு மக்கள் பத்திரிகை வாசிக்கத் தொடங்கினார்கள். ஐந்து சதம் கொடுத்துத் தினசரிப் பத்திரிகையை ஒரு சிலரே வாங்கி வாசித்து வந்தனர்.

கல்வியறிவு அதிகரித்த பின்னர் வாசிப்புப் பழக்கமும் அதிகரித்தது. அப்பொழுது நூலகமொன்று இருக்கவில்லை. 1950ல் தான் எங்கள் வீட்டில் பொது நூலகமொன்று ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அது கரைவாகு வடக்குக் கிராமச் சங்கத்தினரால் பொறுப்பேற்கப்பட்டுக் கிராமச் சங்கத் தலைவராக அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம்.மஷூர் மௌலானா இருந்த போது அவரின் முயற்சியால் தற்போதைய நூலகம் கட்டப்பட்டு

நிர்வகிக்கப்பட்டது. முதலில் ஜனாப். ஏ.சி.எம்.சாலிகு.பி.எம்.அவர்களின் தலைமையில் நடைபெற்ற நூலகக் குழுவே பொது நூலகத்தை ஆரம்பித்த பெருமைக்குரியது. கிராமச்சங்கம் பொறுப்பேற்றதும் ஜனாப் ஏ.எல்.எம். அப்துல் மஜீது என்பவர் நூலகராகக் கடமையாற்றி வருகிறார்.

**கலைக்கூடல்**

எனது போஷணையின் கீழ் கலைக்கூடல் என்றொரு ஸ்தாபனம் இயங்கி வருகிறது. நாடகங்களை நிகழ்த்தி வரும் அந்த ஸ்தாபனம் தனது பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடியது. ஆரம்ப காலத்தில் நாடகங்கள் காட்ட விரோதம் காணப்பட்டது. நாடகம் நடாத்தக் கூடாது எனப் பலமான எதிர்ப்பு ஊரிலிருந்தது. சுய முயற்சியினால் செய்யிது சக்காபு மவுலானாவின் வழிநடாத்துதலால் நூற்றுக் கணக்கான நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. கிராமத்தில் நிகழும் ஊழல்களை எடுத்துக்காட்டி மக்களை நல்வழிப்படுத்தும் நோக்கோடு இந்த நாடகங்கள் நடாத்தப்பட்டன. ஆரம்பத்தில் நாடகங்கள் இலவசமாகக் காண்பிக்கப்பட்டன. சமயக் கட்டுப்பாடுகளை மீறாத வகையில் நாடகங்கள் உருவாக்கப்பட்டன. சமீப காலத்தில் பிரவேசச் சீட்டுக்கள் மூலம் சிறு தொகையைப் பெற்று நாடகங்கள் காண்பிக்கப் பட்டன. சேர்ந்த பணம் கிராமத்தில் பொதுத் தேவைகளுக்குச் செலவிடப்பட்டது. 10 ஏழைப் பிள்ளைகளுக்கு விருத்த சேதனஞ் செய்விக்கப்பட்டது. பேச்சுப் போட்டிகள் நடாத்திப் பரிசுகள் வழங்கப் பட்டன. சில ஏழைகளுக்கு ஓலைக் குடிசைகள் கட்டிக்கொடுக்கப்பட்டன. மதுரசாக்கள், பாடசாலைகளுக்கு நிதியுதவிகள் வழங்கப்பட்டன. மலசல கூடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டன.

மருதூர் கொத்தன் வீ.எம்.இஸ்மாயில் அவர்களின் நாடகங்களும் பலமுறை மேடையேறி வரவேற்புப் பெற்றன.

இசைமுரசு நாகூர் ஈ.எம்.ஹனிபா, காயல் ஷேக் முகம்மது இரு வரையுங் கொண்டு தனித்தனி இசைக்கச்சேரிகள் நிகழ்த்தப்பட்டன. அல்ஹாஜ் எஸ்.எஸட்.எம். மஷூர் மவுலானாவின் அரசியல் வாழ்வின் 25வது நிறைவு விழாக் கொண்டாடியது. புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்துக் கௌர வித்தது. மந்திரிமார்களுக்கு வரவேற்புகள் அளிக்கப்பட்டன. முதியோ ரைக் கனம் பண்ணும் கட்சிச் சார்பற்ற இந்த ஸ்தாபனம் மேலும் பல கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு வளர்ந்து வர வேண்டும்.

## பரிசு பெற்றோர்

*1965ல் அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம்.மஷூர்மவுலானா அகில இலங்கைப் பேச்சுப் போட்டியில் முதற் பரிசு பெற்றார்.*

*1968ல் அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் நபிமொழி நாற்பது வெண்பா நூலுக்கு இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்றார்.*

*1970ல் ஜனாப் எம்.ஐ.எம்.அமீன் அகில இலங்கைப் பேச்சுப் போட்டியின் முதற் பரிசு பெற்றார்.*

*1972, 1973, 1976 ம் ஆண்டுகளில் செல்வன் ஏ.வி.எம். மகுதூம் அகில இலங்கை 100, 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதற் பரிசு பெற்றார்.*

*1976ல் செல்வன் எஸ்.எம்.எ.கையூம், 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதற் பரிசு பெற்றார்.*

*1978ல் காயற்பட்டணத்தில் நிகழ்ந்த மூன்றாவது அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டில் இலக்கிய சேவைக்காக புலவர் அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் பொற்கிழி வழங்கிக் கௌரவிக் கப்பட்டார்.*

*1978ல் மௌலவி யூ.எல்.ஏ. சமது அவர்களின் புத்திரி மௌலவியா சித்தி றுவைதா அகில இலங்கை கிறாஅத் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றார்.*

*1997 ல் ஷெய்க்கப்துல் காதிர் நெயினா லெவ்வை ஆலிம் புலவர் இயற்றிய புதுக்குஷ்ஷாம் காவியத்திற்கு உரை செய்தமைக்காகக் கொழும்பில் நிகழ்ந்த நான்காவது அனைத்துலக இஸ்லாமியத் தமிழ் இலக்கிய ஆராய்ச்சி மாநாட்டின் போது புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் பொற்கிழி வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.*

*1979ல் செல்வன் ஏ.ஆர்.எம்.கலீல் அகில இலங்கைப் பேச்சுப் போட்டியில் முதற் பரிசு பெற்றார்.*

*1980ல் வைத்திய கலாநிதி அகமது ஜின்னாஹ் ஷரிபுத்தீன் ஹிஜ்ரி விழாவில் கவிதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றார்.*

*1981ல் அகில இலங்கைக் கட்டுரைப் போட்டியில் செல்வன் எம்.எம்.மிஹ்ழார் முதற் பரிசு பெற்றார்.*

# 12

# வர்த்தகம்

## சந்தை

*சிங்கள மன்னர்கள் மக்களின் தேவை நோக்கி மத்தியான இடங்களில் சந்தைகளைத் தோற்றுவித்திருந்தனர். அவை வாரச் சந்தை, நாட் சந்தை, காலைச் சந்தை, மாலைச் சந்தை எனப் பலவகையின. பண்டுதொட்டு மாலைச் சந்தையாக நடந்து வந்த மருதமுனைச் சந்தையும் சிங்கள மன்னர்களின் ஆக்கமே. ஆதியில் பெருந்தெருவில் அமைந்திருக்கும் வளவிலேயே சந்தை கூடிவந்தது. சந்தைக் கட்டிடமொன்று அப்பொழு திருக்கவில்லை. கிராமச் சங்கம் உருவான பின்னர் அதன் தலைவர் கனகசபையின் காலத்தில்தான் மத்தியிலுள்ள சந்தைக் கட்டிடம் கட்டப்பட்டது. வருடந்தோறும் சந்தை ஏலத்திற் கூறிக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டு வந்தது. தெரு வளைந்து செல்லும் இடத்தில் அது அமைந்திருப்பதால் போக்குவரத்து வாகனங்கள் அதிகரிக்கத் தொடங்கி யதும் மக்களின் பாதுகாப்பு நோக்கி மஸ்ஜிதுல் கபீரின் முன்றலில் அப்பொழுது கிராமச் சங்க உறுப்பினராயிருந்த பள்ளிவாசல் தரும கர்த்தா அல்ஹாஜ் ஏ.பீ.எம்.மரைக்கர். ஜே.பி.யின் அயரா உழைப்பினால் காலைச் சந்தையொன்று தோற்றுவிக்கப்பட்டது. பள்ளிவாசலின் ஆதீனத்தில் இயங்கியது. அதனையடுத்துக் கடைகளும் தோற்றுவிக்கப்பட்டன.*

*முந்திய மாலைச் சந்தையை விடப் பிந்திய காலைச் சந்தை பிரபல்யமடைந்து விட்டது. ஊருக்குள் அமைந்திருக்கும் அச்சந்தைக்குப் பெண்களும் சென்று சாமான் வாங்க வாய்ப்பாய் அமைந்துவிட்டது. இந்தச் சந்தையின் மூலம் வருடந்தோறும் ஒரு தொகைப் பணம் பள்ளிவாசலுக்கு வருவாய் கிடைத்து வருகிறது. தற்போது பழைய சந்தைக் கட்டிடம் அழிக்கப்பட்டு அவ்விடத்தில் ஜனாப் காதர் இபுறாகீம் ஆசிரியரால் மக்கள் மண்டபம் அமைக்கப்படுகிறது.*

## நாணயப் பரிவர்த்தனை

1815ல் கண்டியரசு ஆங்கிலேயராற் கைப்பற்றப்பட முன் மருதமுனை கண்டி சிங்கள மன்னர் ஆட்சிக்குட்பட்டிருந்தது. போர்த்துக்கேய, ஒல்லாந்தர் ஆட்சி மருதமுனையில் நிகழவில்லை. அவர்களின் ஆட்சி கோட்டைக் கல்லாற்றுக்கும் தெற்கே செல்லவில்லை. சிங்கள மன்னர் காலத்தில் பெரும்பாலும் பண்டமாற்று முறையேயிருந்து வந்திருக்கிறது. வியாபாரிகளாக வந்த அரேபியரின் செல்வாக்குச் சிங்கள மன்னரிடையேயும் நாட்டு மக்களிடையேயும் மிகுதியாக இருந்தது என்பதற்குத் தக்க சான்றுகளுண்டு. இங்கு அவர்கள் கொண்டு வந்த அவர்களின் நாட்டு நாணயங்களைக் கொடுத்துச் சுதேசிகளிடம் பொருட்களை வாங்கினர். அதன்பின் அறபு நாணயங்கள் புழக்கத்துக்கு வந்திருக்கின்றன. றியால் எனப்படும் அறபு நாணயம் இங்கு "இறசால்" என அழைக்கப்பட்டது.

புலவல்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை அவர்களின் ஈமச் சடங்கின் போது தகனம் பண்ணுமிடத்தை மூப்பன் ஏல விலை கூறினான். ஐந்து இறயால், பத்து இறயால், பதினைந்து இறயால் என்று விலை வைத்தார்கள். அந்த றியால் என்ற அறபு நாணயத்தின் பெயரைத் தமிழ் மக்களாகிய அவர்கள் உபயோகிக்கக் காரணமென்ன? அவர்களின் பேச்சு வழக்கில் அது எவ்வாறிருந்தது? அறபிகளின் வியாபாரச் செல்வாக்கு நாட்டிலுள்ள சகல மக்கள் மத்தியிலும் வியாபித்திருக்கிறது என்பதற்கு அது ஒரு அத்தாட்சியாகும்.

பாவைக்கொட்டைப் பவுண் என்றொரு தங்க நாணயம் பல இடங்களில் புதையல்களில் கண்டெடுத்திருக்கின்றனர். அதில் அறபி எழுத்துக்கள் இருந்ததைத் தான் கண்டதாக இளைப்பாறிய மாவட்ட நீதிபதி எம்.எம்.ஹுஸைன் அவர்கள் கூறக் கேட்டேன். அறபு நாட்டில் தினார் எனப்படும் தங்க நாணயம் இன்றும் வழக்கிலிருக்கிறது. அறபியர் அந்த நாணயத்தையும் கொடுத்து இங்கு வியாபாரஞ் செய்திருக்கின்றனர். மருதமுனையில் முன்னொருபோது ஒரு மாப்பிள்ளைக்குக் கொடுத்த உயர்ந்த கைக்கூலிப்பணம் ரூபாய் முன்னூறைக் குறிப்பிட்டு ஒருவர் பாடிய ஊஞ்சற் பாட்டில் நானூறு இறசால் என்று அமைத்துப்பாட நான் கேட்டேன். எனவே றியால், தினார் என்னும் அறபு நாணயங்கள் இந்த நாட்டில் சிங்கள மன்னர் காலத்தில் உபயோகத்திருக்கின்றன எனலாம்.

ஆங்கிலேயர் ஆட்சி செய்ய வந்த பொழுது தமது நாட்டு நாணயங்களை இந்த நாட்டிலும் புழக்கத்தில் விட்டிருக்கின்றனர். எனது பாட்டி பவுண், சிலின், பென்ஸ் என்று கணக்குப் பார்த்ததை நான் கேட்டிருக்கிறேன். 12 பென்ஸ் ஒரு சிலின். 20 சிலின் ஒரு பவுண் என்று

அவர்களுக்குத் தெரிந்திருந்தது. இந்நூலின் மற்றொரு பக்கத்திற் பிரசுரிக்கப்பட்டிருக்கும் 1852ம் ஆண்டில் எழுதப்பட்ட பற்றுச் சீட்டொன்றில் "பற்றிக் கொண்ட ரொக்கம், பவுண் ஒன்று சிலின் பதினேழு பென்ஸி ஆறுக்கு விவரம் இறயால் இருபத்தைந்து" என்றும் மற்றொரு பக்கத்திற் காணும் 1857ல் எழுதப்பட்ட பற்றுச் சீட்டொன்றில் இதன் விலை இலங்கையில் வழங்கும் நாணயம் சிலின் பதினாறு பென்சி ஆறுக்கு விவரம் இறயால் பதினொன்று என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம்.

அறபு நாணயப் பரிச்சயமுள்ள மக்கள் ஆட்சி மாற்றத்தினால் ஆங்கில நாணயங்களைக் கையாள வேண்டியேற்பட்டது. அப்பொழுது ஒரு இறயால் ஒன்றரைச் சிலின் எனக் கணித்துக் கொண்டனர். சிலகாலத்தின் பின்னரே ரூபா சத நாணயப் பரிவர்த்தனை அறிமுகஞ் செய்யப்பட்டது. அப்பொழுது பவுண் என்பது பத்து ரூபாய் எனவும், சிலின் ஐம்பது சதம் எனவும், பென்ஸ் நாலு சதம் எனவும் கணித்துக் கொண்டனர். இறயால் என்பது எழுபத்தைந்து சதம் எனக் கணித்தனர்.

அறபு நாணயத்தைக் கையாண்ட மக்கள் திடீரென ஆங்கில நாணயத்தையும் அப்பால் ரூபா சத நாணயங்களையும் ஒரே தலைமுறையினரே கையாள நேர்ந்தது. அது ஒரு குழப்பநிலை. அரசாங்க மாற்றத்தால் ஏற்பட்ட நிலை அது. ஆரம்பத்தில் புழக்கத்தில் விடப்பட்ட பவுண் நோட்டுக்களுக்குப் பதில் அதேபோன்ற பத்து ரூபா. ஐந்து ரூபா நோட்டுக்களை அச்சிட்டுப் புழக்கத்துக்கு விட்டனர். ஐந்து ரூபாவுக்குக் குறைந்த காகித நாணயங்கள் இருக்கவில்லை. காற் சதம், அரைச்சதம், ஒரு சதம், ஐந்து சதங்களெல்லாம் செம்பினாலானவை.

அளவும் நிறையும் பெறுமானத்தில் அளவையொத்தன. ஐந்து சதம் தற்போதைய ஒரு ரூபா நாணயத்தின் அளவும் நிறையுமுள்ள செம்பிலானது. அது பின்னர் மாற்றப்பட்டுத் தற்போதுள்ளது போன்ற சதுர வடிவில் நிக்கல் உலோகத்தினாற் செய்து வழங்கப்பட்டது. பத்துச் சத நாணயம் மீன்செதில் அளவு வட்ட வடிவான வெள்ளி நாணயமாயிருந்தது. இருபத்தைந்து சதம் ஐம்பது சதம் ஒரு ரூபா நாணயங்கள் வெள்ளியால் இன்றுள்ள அளவுகளில் செய்யப்பட்டிருந்தன. ஐம்பது ரூபா, நூறுரூபா நோட்டுக்கள் பிற்காலத்திற்தான் தோன்றின. யுத்த காலத்தில் ஒரு ரூபா, ஐம்பதுசதம், இருபத்தைந்து சதம், பத்துச் சதம், ஐந்து சதங்களுக்கெல்லாம் நோட்டுக்களாகப் புழங்கின.

ஜனாப் இ.ஹா.யாசின் ஆலிமிடமிருந்து பெற்றுக் கொண்ட இரு பற்றுச் சீட்டுக்களின் பிரதிகளை இந்நூலில் காணலாம். 1852லும் 1857லும்

எழுதப்பட்ட அவ்விரு பற்றுச் சீட்டுக்களையுங் கொண்டு நான் அனுமானித்த சில யூகங்களை இங்கு குறிப்பிடுகிறேன். அப்பொழு தெல்லாம் தமிழ் எழுத்து இலக்கங்களே உபயோகத்திலிருந்தன. ஆறு பென்ஸ் பெறுமதியான முத்திரை பொறிக்கப்பட்ட அரசாங்கப் பத்திரங்களிலேயே பற்றுச்சீட்டுக்கள் எழுதப்படவேண்டியிருந்திக்கிறது. ஆங்கில ஆட்சி ஆரம்பித்த காலமது. மக்கள் அறிந்திருந்த நாணயப் பெறுமதியும் அரசாங்க நாணயப் பெறுமதியும் ஒப்பு நோக்கிப் பற்றுச் சீட்டு எழுதப்பட்டிருக்கிறது. அரசினால் நியமிக்கப்பட்ட அதிகாரி யொருவரே பற்றுச் சீட்டுக்களை எழுத வேண்டும் போல் தெரிகிறது.

றியால் என்ற அறபுச் சொல் இங்கு இறயால் என வழங்கியிருக்கிறது. கையெழுத்துப் போடத் தெரியாதவர்கள் கைக்கீறு இட்டிருப்பதையும், இடப்பட்ட கையொப்பத்தை கைநெட்டெழுத்தென அத்தாட்சிப்படுத்தி யிருப்பதையும் அவதானிக்கலாம். பற்றுச் சீட்டெழுதிய இடம் வீட்டின் வலது புறத்து நெசவுத்தறியிருந்த அறையில் வைத்து எழுதப்பட்டது என்பதை இசுமாயில் பிள்ளை நெய்யற் கூட்டத்திலிருந்தெழுதியது என்பதனாலறியலாம். எழுதிய லெவ்வைக் கண்டு நொத்தாரிஸ் என்பவர் மட்டக்களப்புத் தெற்குப் பிரதேசங்களுக்கெல்லாம் நொத்தாரிசாக இருந்திருக்கிறார். அவர் எந்த ஊரவர் என்று தெரியவில்லை.

காலந்தோறும் பெரும்பாலான இந்தியர்கள் இங்கு வந்து வியாபாரஞ் செய்திருக்கின்றனர். குடிபதிகளாகவும் அமர்ந்து விட்டிருக்கின்றனர். அவர்களின் நாட்டில் பதினாறு அணா ஒரு ரூபாய் என்று கணக்கிடப் பட்டது. அதுவும் ஆங்கிலேயரின் வைப்பு முறைதான். இந்தியர் அணாவை இங்கு பணம் என்றார்கள். கால் ரூபாவை நாலு பணம் என்று அவர்கள் கூறியதை, இங்குள்ளவர்கள் இன்றும் கூறக் கேட்கலாம். அரை சதத்துக்குத் தம்பிடியென்றார்கள். ஒன்றரைச் சதத்துக்குத் "துட்டு" என்றார்கள்.

## நிறையளவு

துலாப்படியென்றொரு நிறுவைக் கருவி அக்காலத்தில் உபயோ கிக்கப்பட்டது. தராசு படிக் கற்கள் இல்லாத காலமது. துலாப்படி கருங்காலி மரத்தால் அடி தடித்து நுனி சிறுத்து ஆக்கப்பட்ட ஒரு முழு நீளத் திரட்டு வடிவத் தடியின் நுனியில் நான்கு கயிற்றில் சிறிய தட்டு ஒன்று தொங்கவிடப்படும். தடியில் சமனான ¼ , ½ , ¾ , 1, 2, 3, 4, 5, 6, 7 இறாத்தல் நிறையைக் குறிக்கும் கீறுகள் இடப்பட்டிருக்கும். தடியின் மத்தியில் பிடித்துத் தூக்கக் கூடிய கயிறொன்று நகர்த்தக் கூடியதாகக் கட்டப் பட்டிருக்கும். நிறுக்க வேண்டிய பொருளைத் தட்டில் வைத்துப்

பிடிக்கயிற்றைப் பிடித்துத் தூக்குவர். தடி நடுநிலைக்கு வரும்வரை கயிற்றை நகர்த்துவர். எந்தக் கயிறு நிற்கையில் தடி சமநிலைக்கு வருமோ அதைக் கண்டு நிறையைக் கணிப்பர். 7 இறாத்தல் ஒரு தூக்கு, 24 இறாத்தல் ஒரு துலாம் என்றார்கள். தராசுப் படி வந்ததும் துலாப்படி வழக்கம் ஒழிந்தது. தற்போது இறாத்தல் நிறையொழுங்கு ஒழிக்கப்பட்டு 1.10.80 முதல் கிலோ அளவு முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திரவப் பதார்த்தங்களைப் போத்தல், கலன் கணக்கில் கணித்தனர். ஒரு கலன் 6 போத்தல். 1.10.80 முதல் லிற்றர் அளவு முறை ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

## பிரதி - (பற்றுச் சீட்டு)

த அருளய உ ஆண்டு ஆடி மியாஎ திகதி கரைவாகுப்பகுதி மருதமுனை அலியார் மீரா லெவ்வைக்கு அவ்வூர் மீரா லெவ்வை இசுமாஇற் பிள்ளையாகிய நான் சீதனப் பணப் பற்றுச் சீட்டுறுதி கொடுக்கும் விபரம் மேற்சொல்லிய மீரா லெவ்வை இன் புத்திரியாகிய ஆசியத்தும்மாவை எனக்குக் கலியாணம் முடித்துத் தரும் போது எனக்குச் சீதனமாகத் தருவேனென்று பொருத்தம் பண்ணிய துகையிஇற் சொல்லப்பட்ட மீரா லெவ்வையிடம் இத்தைக்கு முன் குறித்த இசுமாஇற் பிள்ளாகிய நான் பற்றிக் கொன்ர ரொக்கம் 1 பவுண் ஒன்று சிலி, பதினேளு பெ.ஆறுசவ விபரம் உயரும் பற்றிக் கொன்றிப் பற்றுச் சீட்டுறுதி கொடுத்தர் க்கறியுஞ் சாட்சிகள் மருதமுனை மீரான் பைக்கீர் பரிகாரி சாலைக்குட்டியும் இசுமாஇற் பிள்ளை சாலைக் குட்டியுமிவர்கள் முகதாவில் இசுமாய்ற்பிள்ளை னெய்யக் கூடத்திலிருந்தெழுதினர்.

இந்தக் கையொப்பக்கீறு ஓ இசுமாயிஇற் பிள்ளை

சாட்சி - சாலைக்குட்டி

சாட்சி- சாலைக்குட்டி

இப்படிக்கு மட்டு கிழக்கு கரைவாகு சம்மாந்துறை நிந்தவூர் அக்கரைப்பற்று இப்பகுதிகளின் பிரசித்த நொத்தாரீ லெவ்வைக்கண்டு லெவ்வை.......

## பற்றுச்சீட்டு திருத்தற் பிரதி - 1

1852ம் ஆண்டு ஆடி மாதம் 17ம் திகதி கரைவாகுப்பகுதி மருதமுனை அலியார் மீராலெவ்வைக்கு அவ்வூர் மீரா லெவ்வை இசுமாயில் பிள்ளையாகிய நான் சீதனப்பற்றுச் சீட்டுறுதி கொடுக்கும் விவரம்.

மேற்சொல்லிய மீரா லெவ்வையின் புத்திரியாகிய ஆசியத்தும்மாவை எனக்குக் கலியாணம் முடித்துத் தரும் போது எனக்குச் சீதனமாகத் தருவேனென்று பொருத்தம் பண்ணிய தொகையிற் சொல்லப்பட்ட மீரா லெவ்வையிடம் இத்தைக்கு முன் குறித்த இசுமாயில் பிள்ளையாகிய நான் பற்றிக் கொண்ட ரொக்கம் பவுண் ஒன்று, சிலின் பதினேழு, பென்ஸ் ஆறுக்கு விவரம் இறசால் இருபத்தைந்தும் பற்றிக் கொண்டு இப்பற்றுச் சீட்டுறுதி கொடுத்ததற்கு அறியும் சாட்சிகள் மருதமுனை மீரான் பக்கீர் பரிகாரி சாலைக்குட்டியும் இசுமாயில் பிள்ளை சாலைக் குட்டியும் இவர்கள் முகதாவில் இசுமாயில் பிள்ளை நெய்யற் கூடத்திலிருந்து எழுதினது.

இந்தக் கையொப்பக்கீறு ஓ இசுமாயில் பிள்ளை (ஒப்பம்)

சாட்சி - சாலைக்குட்டி (ஒப்பம்)

சாட்சி - சாலைக்குட்டி (ஒப்பம்)

இப்படிக்கு மட்டக்களப்பு, கரைவாகு, சம்மாந்துறை, நிந்தவூர், அக்கரைப்பற்று இப்பகுதிகளின் பிரசித்த நொத்தாரிஸ் லெவ்வைக்கண்டு லெவ்வை ... (ஒப்பம்)

## பிரதி - (பற்றுச்சீட்டு)

த அருளய ஆண்டு அற்பசிமீ ய சா திகதி கரைவாகு மதுரமுனை இபுறாகீம்லெவ்வை ஆலி மீரா லெவ்வை ஆலிஞ்சாகிபு அவர்களுக்கு அவ்வூட மீரா லெவ்வை அகமது லெவ்வை நெல்வாங்கியதன் போரால்ப் பணக்கடனுறுதி கொடுக்கும் பரிசு... குறித்த மீரா லெவ்வை ஆலிஞ்சாகிபு அவர்களிடத்தில் இத்திகதியில் நான் வாங்கிய நெல் அவணமொண்ணு இதின் விலை இலங்கையில் வழங்கும் நாணயம் சிலின் பதினாறு பெனிசி ஆறுக்கு விபரமிறசால் பதினொண்ணு மிதினெதிராய் வரும் ஆண்டின் தைமாத்தைக் கடைசியில் யிவ்வுறுதி விலக்கும்போது கைமாற்றிப் பற்றுச்சீட்டு வாய்ச்சாட்சிகளலிக்கடனிறுபடாமல் முழுதுமொரு வாயிதாவில் கொடுத்துயிவ்வுறுதி விலக்குவோனாகவும்படியே கொடுக்கத் தவறினால் பவுண் ஒண்ணுக்கு நிதியிற் துரந்து என்னிலுமினக்குருத்துள்ள சகல ஆதனத்திலுமறவிட்டுக் கொள்ளும்படி சம்மதித்து இவ்வுறுதி எளுதுவித்துக் கொடுத்தேன் மீராலெவ்வை ஆலிஞ்சாகிபு அவர்களுக்கு அகமது லெவ்வையாகிய நானொ மிதர்க்கறியுஞ் சாட்சிகள் மதுரமுனையில் செயினுலாபிதின மரைக்காயார் இமாம் சாபிபுப் பரிகாரியுமல்வூடயாக்குப் பிள்ளை லுக்குமா லெவ்வையு காதர் பிள்ளை

அலியார் அலவ்வையுமிவர்கள் சாட்சியாயிருவருடைய சம்மதிக்கு இவ்வுறுதி எளுதினது.

அகமது லெவ்வை

சாட்சி - யிமாம் சாயிவு பரிகாரி

சாட்சி - லுக்குமாலெவ்வை

இப்படிக்கி மதுரமுனையில் அவுவக்கா போடியார் அகமது லெவ்வை கை நெட்டெழுத்து

## பற்றுச் சீட்டுத்திருத்தப்பிரதி -2

1857 ம் ஆண்டு ஐப்பசி மாதம் 16ம் திகதி கரைவாகு மதுரமுனை இபுறாகீம் லெவ்வை ஆலிம், மீரா லெவ்வை ஆலிம் சாகிபு அவர்களுக்கு அவ்வூர் மீரா லெவ்வை அகமது லெவ்வை நெல்வாங்கியதன் பேரால் பணக்கடனுறுதி கொடுக்கும் பரிசு குறித்து மீரா லெவ்வை ஆலிம் சாகிபு அவர்களிடத்தில் இத்திகதியில் நான் வாங்கிய நெல் அவணமொன்று. இதன் விலை இலங்கையில் வழங்கும் நாணயம் சிலின் பதினாறு பென்ஸ் ஆறுக்கு விவரம் இறசால் பதினொன்றும் இதன் எதிராய் வரும் 58ம் ஆண்டின் தை மாதக் கடைசியில் இவ்வுறுதி விலக்கும்போது கைமாற்றி இப்பற்றுச் சீட்டு வாய்ச் சாட்சிகளால் இக்கடன் இறுபடாமல் முழுதும் ஒரு வாயிதாவில் கொடுத்து இவ்வுறுதி விலக்குவேனாகவும் அப்படியே கொடுக்கத் தவறினால் பவுண் ஒன்றுக்கு நீதியிற் துரந்து என்னிலும் எனக்கு உரித்துள்ள சகல ஆதனத்திலும் அறவிட்டுக் கொள்ளும்படி சம்மதித்து இவ்வுறுதி எழுதுவித்துக் கொடுத்தேன். மீரா லெவ்வை ஆலிம் சாகிபு அவர்களுக்கு அகமது லெவ்வையாகிய நானும் இதற்கு அறியும் சாட்சிகள் மதுரமுனையில் செயினுலாபிதீன் மரைக்காயார் இமாம் சாகிபுப் பரிகாரியும் இவ்வூர் யாக்கூப் பிள்ளை லுக்குமா லெவ்வையும் காதர் பிள்ளை அலியார் லெவ்வையும் இவர்கள் சாட்சியாய் இருவருடைய சம்மதத்திற்கு இவ்வுறுதி எழுதினது.


(ஒப்பம்) அகமது லெவ்வை

சாட்சி - இமாம் சாகிபு பரிகாரி (ஒப்பம்)


சாட்சி - லுக்குமா லெவ்வை (ஒப்பம்)

இப்படிக்கு மதுரமுனையில் அபுபக்கர்ப் போடியார் அகமது லெவ்வை கை நெட்டெழுத்து.

# பற்றுச் சீட்டுகள் புகைப்படப் பிரதிகள்



## பற்றுச் சீட்டுகள் புகைப்படப் பிரதிகள்



# 13

# போக்குவரவு

சிங்கள மன்னர் காலத்தில் மட்டக்களப்பிலிருந்து கரையோரமாக ஒரு மணற்பாதை தெற்கு நோக்கிச் சென்றது. வாகனப் போக்குவரத்து இல்லாத அந்தக் காலத்தில் பிரயாணிகள் கால் நடையாகவே பிரயாணஞ் செய்தனர். ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1833ம் ஆண்டுக்குப் பின்னர்தான் அது வாகனப் போக்குவரத்துக்கான கற்பாதையாக ஆக்கப்பட்டது. ஆங்கிலேயரால் SOUTH COAST ROAD என அழைக்கப்பட்ட இவ்வீதி மணல் றோடாக இருந்ததைக் தான் கண்டதாக எனது பாட்டி சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆங்கிலேயர் றோட்டை அமைத்த பின் றோட்டின் இரு மருங்கிலும் நிழலுக்காக நிழல் வாகை மரங்களை வைத்து வளர்த்து விட்டிருக்கின்றனர்.

ஒரு நூற்றாண்டுகளுக்கு மேல் வாழ்ந்து அம்மரங்களிற் பெரும் பாலானவை இறந்தொழிந்து போயின. மருதமுனையிலும் அத்தகைய நிழல் மரங்கள் நின்றதை நான் கண்டிருக்கிறேன். ஒடுக்கமானதாக இருந்த இந்த வீதி வாகனப் போக்குவரத்து அதிகரித்ததும் 1933ல் அரசாங்க அதிபராக வந்த குமாரசாமியென்பவரால் இரு மருங்கும் விஸ்தரிக்கப் பட்டன. மருதமுனை றோட்டை விஸ்தரிக்கும் வேலையை ஜனாப் பை.ம.அப்துல் ஹமீது பொறுப்பேற்றுச் செய்வித்தார். இந்தக் கற்பாதை வருடந்தோறும் மாரி காலத்தில் பிக்காசி கொண்டு கொத்தி அள்ளி அரித்துப் புதுக்கற்கள் பரப்பி நான்கு மாடுகள் கட்டியிழுக்கும் உருளை கொண்டு நசித்துச் செப்பஞ் செய்யப்பட்டது.

மூன்று பாகங்களாகப் பிரித்து றோட்டைச் செப்பஞ் செய்தனர். இயந்திர உருளை வந்ததும் மாடு கட்டியிழுக்கும் உருளை செயலற்றது. சமீபகாலத்திற்தான் றோட்டுக்குத் தார் ஊற்றும் ஒழுங்கு வந்தது. பிரதான வீதியைத் தவிர வேறு றோட்டுக்கள் ஊரில் இருக்கவில்லை.

1925க்குப் பின்னர்தான் கிராமச் சங்கம் களி, கிறவல் கொண்டு உள்றோட்டுக்களையமைக்கத் தொடங்கியது. முதன் முதல் மத்திய றோட்டு, பகுதி பகுதியாகப் போடப்பட்டது. 1939ல் பஞ்ச நிவாரண வேலையாகப் பெருந் தெருவிலிருந்து கடற்கரை நோக்கிச் சில ஒழுங்கைகள்

மணல் சுமந்து கொட்டி றோட்டுக்காக விஸ்தரிக்கப்பட்டன. பின்னர் அவற்றைக் கிராமச் சங்கம் களி கிறவல் போட்டு றோட்டாக்கியது.

பஞ்ச நிவாரண வேலைக்கு ஜனாப் மு. செயினுலாபிதீனும், செ.க.செ.தாகா மவுலானாவும் ஓவசியர்களாகக் கடமையாற்றினர். இவ்விருவரும் அன்று ஆங்கிலம் எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாய் இருந்தமையால் அந்தப் பதவியை வகிக்க முடிந்தது.

கால்நடைப் பிரயாணிகள் சோற்றுப்பட்டை, வெற்றிலைப் பை, தளப்பத்து (குடைக்காக) சகிதம் விடியுமுன் புறப்பட்டுச் செல்வர். வெயிலேறமுன் பிரயாண தூரத்தில் பெரும்பகுதியை நடந்து முடித்து விடுவர். தெருவில் ஆங்காங்கே அம்பலங்களும், கிணறுகளும் தரும சிந்தனையுள்ளவர்கள் கட்டிவிட்டிருந்தனர். அவற்றைப் பிரயாணிகள் தங்குமிடங்களாக உபயோகித்தனர். இவர்களுக்காகவே நிழல் மரங்கள் உண்டாக்கப்பட்டிருந்தன. சோற்றுப்பட்டை மதிய உணவாக உதவிற்று. இராத்தங்கலுக்கு மனித குடியிருப்பொன்றை அடைந்துவிடுவர். அங்கே சமைத்துண்ணும் வசதிகள் இருந்தன. “கேட்பார் புத்தியும் கட்டுச் சோறும் நிலை நில்லாது” என்ற பழமொழி அந்த காலத்தில் இதற்காகத்தான் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

றோட்டுக்கள் அமைக்கப்பட்டபின் தாவளங்கள் நிறுத்தப்பட்டு வண்டிகள் உபயோகிக்கப்பட்டன. சாமான்கள் ஏற்றிச் செல்ல இரட்டை மாட்டு வண்டி, ஒற்றை மாட்டு வண்டிகளை உபயோகிக்கத் தொடங்கினர். இவை கூட்டுப் பிரயாணத்துக்கும் உபயோகமாயின. அதற்காக வண்டிகளுக்குக் கூடாரங்கள் கட்டி வைத்திருந்தனர். தனியொருவரின் பிரயாணத்துக்கென வில்லுக் கரத்தைகள் வைத்திருந்தனர். போடிமார் தமது தேவைக்கென வண்டிகளைக் கூலிக்காரரைக் கொண்டு நிருவகித் தனர். கூடு கட்டிய “கமான் கரத்தைகள்” பெரியார்களால் உபயோகிக்கப் பட்டன. வன்னியனார் கூட்டம் வைக்கக் குதிரைக் கரத்தையில் வருவார். அரசாங்க அதிபர் ஏறு குதிரையில் வருவார். இயந்திர வாகனங்களெதுவும் அப்பொழுதில்லை. நீண்ட தூரப் பிரயாணங்களும் கால்நடையாகவே நிகழ்ந்தன.

கிட்டங்கியிலிருந்து மட்டக்களப்புக்கு, மட்டக்களப்பு வாவியினூடே வெள்ளையர்களால் மோட்டார் வள்ளச் சேவை நடத்தப்பட்டது. அவர்கள் திருக்கோவிற் பகுதியிலுள்ள தங்கள் தென்னந்தோட்டங்களில் சேகரமாகும் கொப்பறாவை ஏற்றிச் செல்வதற்கென அம்மோட்டார் வள்ளச் சேவை. அது மக்களின் பிரயாணத்திற்கும் உதவிற்று. காலை ஆறு மணிக்கு கிட்டங்கியிலிருந்து புறப்பட்டு மதியம் மட்டக்களப்பையடைந்த வள்ளம்

அங்கிருந்து ஒரு மணிக்குப் புறப்பட்டு மாலை ஆறு மணிக்கு கிட்டங்கியை வந்தடையும். வழியில் துறைநீலாவணை, மண்டூர், களுவாஞ்சிக்குடி, அம்பலாந்துறை, காத்தான்குடி முதலிய இடங்களில் நின்று பிரயாணி களை ஏற்றியிறக்கிச் செல்லும்.

1924ல் நான் மட்டக்களப்புக்குப் பரீட்சையெடுக்க அந்த வள்ளத்திற் தான் சென்றேன். பாண்டிருப்பு தம்பிராசா ட்றைவர் பழைய மோட்டார் வண்டிகளை பஸ் போல மாற்றிப் பிரயாணிகளை ஏற்றிச் சென்றார். இதுவே முதல் பஸ் போக்குவரத்தாகும். 1925ல் மட்டக்களப்புப் பாலம் கட்டுவதற்கு முன் வாகனங்கள் கல்லடித்துறை வரை செல்லும் பிரயாணிகள் படகுப்பாதை மூலம் துறையைக் கடந்து கச்சேரி வாசலையடைந்து அப்பாற் செல்வர்.

இசுமாலெவ்வைப் போடியென்ற மருதமுனை மகன்தான் முதன் முதல் துவிச்சக்கர வண்டியோடினார். நாளடைவில் ஒன்றுமிரண்டுமாகத் துவிச்சக்கர வண்டிகள் வரத்தொடங்கின. மட்டக்களப்பு அரசாங்க அதிபர் மோட்டார் வண்டியொன்று வைத்திருந்தார். அது கல்லாற்றினூடே வரும்போது சத்தங் கேட்டு அதைப் பார்க்க கடற்கரைப் புறத்திலிருந்தே மக்கள் ஓடிவந்து பெருந்தெருவை அடைய அதுவும் வரச் சரியாயிருக்கும்.

தனியார் பஸ் சேவை ஒன்றன் பின்னொன்றாக வரத்தொடங்கின. அவை பிரயாணிகளைக் கண்ட இடங்களில் நிறுத்தி ஏற்றிச் செல்லும். பின்னர்தான் மோட்டார் வண்டிகள் உபயோகத்துக்கு வந்தன. இங்குள்ள வர்களிற் சிலர் மோட்டார் ஓட்டப் பழகினர். சிலர் சொந்தமாக வைத்து மக்களை ஏற்றிச் சென்றனர். மு.க.ஆதம்பாவா மரைக்கார் முதன் முதலில் மோட்டார் செலுத்தப் பழகினார். அல்ஹாஜ் ஐ.எல்.எம்.இஸ்மாயில் ஜே.பி.சொந்தமாக மோட்டார் வைத்திருக்கிறார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபை பஸ் சேவையைப் பொறுப்பேற்ற பின்னர் இவ்வூர் வாலிபர்கள் காப்பாளர்களாகவும், பஸ் செலுத்துனர் களாகவும் D.I மார்களாகவும் பதவி வகித்து வருகின்றனர்.

## 14

# தேர்தற் தொகுதி

சர்வஜன வாக்குரிமையளிக்கப்பட்டு 1931ல் பாராளுமன்ற சபை ஆரம்பிக்கப்பட்டபோது மருதமுனை, மட்டக்களப்பு தெற்குத் தேர்தற் தொகுதியுள்ளிருந்தது. அரசாங்க சபையில் போக்குவரத்து அமைச்சரா யிருந்த சேர்.முகம்மது மாக்கான் மரைக்கார் பிரதிநிதியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். மருதமுனை அவரையே ஆதரித்தது.

1946ல் மருதமுனை பட்டிருப்புத் தேர்தற் தொகுதியுள் அமைந்தது. அத்தேர்வில் முதலில் எஸ்.யூ.எதிர்மன்னசிங்கமும் பின்னர் எஸ்.எம். இராசமாணிக்கமும் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1958ல் மருதமுனை கல்முனைத் தேர்தற் தொகுதியுள்ளாக்கப்பட்டது. அத் தேர்வில் கேட் முதலியார் எம்.எஸ்.காரியப்பர் பிரதிநிதியாகத் தேர்ந் தெடுக்கப்பட்டார். அவரால் பெரியநீலாவணை முஸ்லிம்,மருதமுனை கிழக்கு வித்தியாலயம், பாண்டிருப்பு முஸ்லிம் வித்தியாலங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவருக்குப்பின் எம்.சி. அகமது பிரதிநிதியானார். அவர் மருதமுனை வடக்குப் பாடசாலையை மகா வித்தியாலயமாக்கினார். அவரின் பின் ஏ.ஆர்.மன்சூர் பிரதிநிதியானார். அவர் பெரியநீலா வணையில் ஆஸ்பத்திரியொன்றைத் தோற்றுவித்தார். வீடமைப்புத் திட்டத்தில் பல வீடுகளைக் கட்டுவித்தார். மேலும் பல அபிவிருத்தி வேலைகளைச் செய்தார். அம்பாறை மாவட்டம் பிரிக்கப்பட்ட பொழுது மருதமுனை அதனுள் சேர்க்கப்பட்டது.

### கிராமச் சங்கம்

பெரியகல்லாறு, பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்பு ஆகிய நான்கு கிராமங்களுக்கும் கரைவாகு வடக்குக் கிராமச்சபையொன்று அந்தக் காலத்திலிருந்தது. பெரிய கல்லாற்றைச் சேர்ந்த கனகசபை யென்பவர் அதன் தலைவராயிருந்தார். அப்பொழுது மருதமுனை இரு குறிச்சிகளும் இரு வட்டாரங்களாயிருந்தன. கிராமத் தலைமைக்காரரே பிரதிநிதிகளாவுமிருந்தனர். விதானைமார் சபை உறுப்பினர்களாயிருக்க வொண்ணாது என்ற விதி ஏற்பட்டதும் ஆதம்பாவா விதானையும்

சீனிமுகம்மது விதானையும் தவிர்க்கப்பட்டு அ.கலந்தர்ப் பரிகாரி மரைக்காரும், உ.மு.இஸ்மாயில் மரைக்காரும் உறுப்பினர்களாயிருந்து வந்தனர். மூன்று வட்டாரங்களாக்கப்பட்டதும் இ.இஸ்மாலெவ்வை போடியும் உறுப்பினரானார். இவர்களின் பதவிகள் பகிரங்கத் தேர்வினால் ஏற்பட்டனவல்ல. பகிரங்கத் தேர்வு மூலம் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்ட பொழுது நானும் ஷம்சுத்தின் ஆசிரியரும் முகம்மது சாலிகு மவுலானாவும் எடுத்த முயற்சியின் பயனாக மருதமுனை மூன்று வட்டாரங்களுக்கும் முறையே செ.ம.தாவூது லெவ்வை, செ.ஐ.செ. முகம்மது சாலிகு மவுலானா, பை.அப்துல் ஹமீது மூவரும் தேர்தலின்றி ஊராரால் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பெரிய கல்லாறு, பாண்டிருப்புத் தமிழ் உறுப்பினர் கிராமச்சங்கத் தலைவர்களாய்ப் பெரும் பணச் செலவுடன் பதவி வகித்தனர். தலைவர் பதவியை மருதமுனைக்குக் கொண்டு வந்த பெருமை செ.ஐ.செ.முகம்மது சாலிகு மவுலானாவையே சாரும். அவருக்குப் பின் பை.ம.அப்துல் ஹமீதும் , எஸ்.எம்.எஸ்.அகமது மவுலானாவும் சி.ஹா.மு. புர்ஹானும் அல்ஹாஜ்.எஸ்.இஸட்.எம்.மஷூர் மவுலானாவும், அல்ஹாஜ் ஐ.எல்.எம்.இஸ்மாயிலும் கிராமச் சங்கத் தலைவர்களாகப் பதவி வகித்தனர். தலைவர்களும் ஆர்வமுள்ள உறுப்பினர்களும் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாய் குறுக்கும் நெடுக்குமுள்ள ஒழுங்கைகளெல்லாம் றோட்டுக்களாக்கப்பட்டன. பொதுக் கிணறுகள் பல கட்டப்பட்டன. பெருந்தெருச் சந்தைக்கட்டிடம் கட்டப்பட்டது. சில நெடுந்தெருக்கள் தார் றோட்டுக்களாக்கப்பட்டன. நூல் நிலையம் ஒன்று உருவாக்கப்பட்டது. பொது விளையாட்டு மைதானம் கடற்கரையில் ஆக்கப்பட்டது. கிராமமெங்கும் மின்னொளி பிரகாசிக்கிறது. இவ்வேலைகளில் அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம்.மஷூர் மவுலானாவின் அரசியற் செல்வாக்குப் பெரிதும் பயன்படுத்தப் பட்டுள்ளது. கிராமச் சங்கக் காரியாலயமும் மருதமுனையின் ஆக்க வேலையே. மருதமுனை ஐந்து வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தனர். இறுதியாகக் கிராமச் சங்கம் கலைக்கப்பட்டு சில காலம் அதிபர் ஏ.ஆர்.ஏ.அஸீஸ் அவர்களை விசேட ஆணையாளராகக் கொண்டு இயங்கி வந்தது. மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்ந்தெடுக்கப்பட்டதும் கிராமச் சங்கத் திட்டமும் காலா வதியாயிற்று. தற்போது எம்.எச்.காதர் இபுறாகீம் அவர்கள் விசேட ஆணையாளராயிருந்து வருகிறார்.

## கிராமச்சங்க உறுப்பினர்களாயிருந்தோர்:

ஜனாப் பை.ம.ஆதம்பாவா ஆராய்ச்சியார் -கி.த
ஜனாப் பை.ம.சீனிமுகம்மது -கி.த
ஜனாப் அ.கலந்தர் பரிகாரி மரைக்கார்
ஜனாப் உ.மு.இஸ்மாயில் மரைக்கார்
ஜனாப் இ.இஸ்மா லெவ்வைப் போடி மரைக்கார்
ஜனாப் செ.ஐ.செ.முகம்மது சாலிகு மவுலானா - தலைவர்
ஜனாப் பை.ம.அப்துல் ஹமீது - தலைவர்
ஜனாப் செ.ம.தாவூது லெவ்வை
ஜனாப் இ.சின்னத்தம்பி
ஜனாப் அ.சீனி முகம்மது
ஜனாப் பீ.வி.எம்.அபூவக்கர்
ஜனாப் செ.ம.முகம்மதிபுறாகீம் ஜே.பி.
ஜனாப் சி.ஹா.மு.புறுஹான் ஜே.பி. தலைவர்
ஜனாப் செ.ம.செ.அகமது மவுலானா ஜே.பி. தலைவர்
ஜனாப் மு.செயினுலாபிதீன்
ஜனாப் இ.உதுமா லெவ்வை
ஜனாப் அல்ஹாஜ் ஏ.பீ.எம்.மரைக்கார் ஜே.பி.
ஜனாப் எம்.எஸ்.எம் அபூபக்கர்
ஜனாப் எஸ்.இஸட்.எம்.மஷூர் மவுலானா ஜே.பி. தலைவர்
ஜனாப் அல்ஹாஜ். ஐ.எல்.எம்.இஸ்மாயில் ஜே.பி. தலைவர்
ஜனாப் இ.ம. முகம்மதுத் தம்பி
ஜனாப் ச.மு.சுலுத்தான் ஜே.பி.
ஆகியோராவர்.

## சந்தை

*ஊர் தோன்றிய காலத்தில் சந்தை எங்கு உண்டாக்கப்பட்டதோ அந்த இடத்திலேயே இன்றும் கிராமச்சங்கத்தின் பரிபாலனத்தின் கீழ், மாலைச் சந்தை நடந்து வருகிறது. இது சிங்கள மன்னர் காலத்திற் தோன்றியது. ஆதியில் தனியாருக்குச் சொந்தமான அந்த வளவிற் கட்டிடமொன்று*

மின்றி வெளியான இடத்தில் சந்தை கூடி வந்தது. நற்பிட்டிமுனை, துறைநீலாவணைக் கிராமங்களிலிருந்து மீன், அரிசி உபஉணவுப் பொருட்கள் கொண்டு வந்து வைத்து விற்பனை செய்தனர். நீலாவணை, பாண்டிருப்புக் கிராமங்களிருள்ளவர்களும் இங்கு வந்து சாமான் வாங்கிச் சென்றனர். வெற்றிலை, கிழங்கு, தேங்காய், நெல், புகையிலை முதலான பொருட்களெல்லாம் வியாபாரிகள் கொண்டு வந்து விற்றனர். ஊருக்குள் சாமான்களை கொண்டு போய் விற்கும் வழக்கம் அண்மைக் காலத்திற்தான் தோன்றியது. 1930ம் ஆண்டில் கிராமச் சங்கம் சந்தைக் கட்டிடம் ஒன்றைக் கட்டியது. அருகிலுள்ள கடைகளையும் கட்டி வாடகைக்கு விட்டது. வருடந்தோறும் சந்தை ஏலத்தில் கூறிக் குத்தகைக்கு விடப்படும். காணி தனியாருக்குச் சொந்தமாயிருந்த காலத்தில் வியாபாரிகளிடம் அவர்கள் சந்தைக்காசு அறவிட்டனர். கிராமச்சங்கம் பொறுப்பேற்றதும் குத்தகைக்குப் பெற்றவர்கள் அறவிட்டு வருகின்றனர்.

தென்தெருப்பள்ளிவாசல் முன்னறில் ஆரம்பிக்கப்பட்ட காலைச் சந்தை பள்ளிவாசற் பொறுப்பிலிருந்து வருகிறது. வருடந்தோறும் பள்ளிவாசல் கிராமச் சங்கத்துக்கு வரிகொடுத்து வருகிறது. காலையில் கல்முனைச் சந்தைக்கு வியாபாரிகள் சென்று சாமான்களை வாங்கிக் கொண்டு வந்து மதியம் வரை வைத்து விற்பார்கள். ஊருக்குள் இச்சந்தை இருப்பதால் பெண்களும் சென்று சாமான்களை வாங்கிக் கொள்கின்றனர். மீன் வியாபாரிகள் துவிச்சக்கர வண்டிகளில் ஊருக்குள் சென்றும் விற்று வருகின்றனர்.

## தபால், தந்திப் போக்குவரத்து

மிகப் பழங்காலத்தில் வாய்மொழி மூலமாகவே செய்திகள் அனுப்பப்பட்டன. அதற்கு "விசகளம்" என்றார்கள். சாதுரியமுள்ளவர்கள் "கவி" மூலமும் செய்திகள் அனுப்பியிருக்கிறார்கள். தபால், தந்திப் போக்குவரவு இல்லாத காலமது. ஒரு பெண் தன் கணவனுக்குத் தனது மகள் பெரியவளான நற்செய்தியை அவர் இருக்குமிடத்துக்குப்போன காக்கா ஆதம் என்பவரிடம் ,

"ஆதங்காக்கா ஆதங்காக்கா அவரைக் கண்டால் சொல்லிடுகா
மாதுவிளங்கன்னி மடல் விரிஞ்சி போச்சிதென்று...."

என்று கவி மூலம் சொல்லியனுப்புகிறாள். கிராமத்தவர்கள் 99 சத வீதமும் எழுத வாசிக்கத் தெரியாதவர்கள்தான். கையெழுத்துப் போடவும் சிலர்தான் தெரிந்திருந்தார்கள். சம்பளம் பெற்றுக் கொண்டு கடிதம் எழுதிக் கொடுக்க ஒரு சில அனுபவசாலிகள் இருந்தனர். அவர்கள் கடிதம் எழுதுவதற்கு ஒரு ஆரம்ப வசனத் தொடர் வைத்திருந்தார்கள்.

எந்தக் கடிதத்திற்கும் அத்தொடர் ஆரம்ப வாசகமாக இருக்கும். "எனது இரு கண்ணிலும் மணியிலும் ஒளியிலும் தெளிவிலும் இரக்கத் திலும் ஆதரவிலும் அன்பிலும் ஒருபோதும் பட்சம் மறவாத..." என இன்னும் பலவும் சேர்ந்து உள்ளது அந்த வாசகத்தொடர். "அவியளுக்கு ஒரு கடதாசி எழுதித்தாகா..." என்று சொல்லிக் கடுதாசியும் கூடும் கட்டணத்துடன் கொடுத்தால் போதும். கடிதத்தை அவரே எழுதிப் படித்துக் காட்டுவார். எழுத சொன்னவரின் சொந்த விஷயம் எதுவா யிருப்பினும் அவர் எழுதியதுதான் சொந்த விஷயம். கடிதத்தை ஆள்வசம் கொடுத்தனுப்புவார்கள். கடிதம் வந்திருக்கிறது என்றால் உரியவருக்கு விஷயம் புரிந்துவிடும்.

ஆங்கிலேயர் காலத்தில் இந்தப் பிரதேசத்துக்கெல்லாம் கல்முனை யில் ஒரு தபாற்கந்தோர் தானிருந்தது. அது தற்போது இருக்கும் கல்முனைப் பள்ளிவாசலுக்குத் தெற்குப் புறமாயிருந்த பெரிய வீட்டில் இருந்தது. மருதமுனைக்குத் தபால் அனுப்புபவர்கள் கல்முனையில் தையற் தொழில் செய்து கொண்டிருந்த மருதமுனைத் தையற்காரரர் மேற்பார்த்துக் கொடுத்து அனுப்புவார்கள். அப்பொழுது தபாற் சேவகர் மருதமுனைக்கு வருவதில்லை. வரத் தேவையுமிருக்கவில்லை. பின்னர் தான் தபாற் சேவகர் மருதமுனைக்குத் தபால் கொண்டு வந்து கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது.

தபால் அனுப்புபவர்கள் கல்முனைத் தபாற் கந்தோருக்குச் சென்று தான் தபால் போட வேண்டும். தபால் முத்திரைக் கட்டணம் ஐந்து சதம், அஞ்சல் அட்டை மூன்று சதம்.

கையினாற் தட்டித் தந்தியடிக்கப்பட்டது. மட்டக்களப்பிலிருந்து கல்முனைக்கு ஒரு தந்திக் கம்பி இழுக்கப்பட்டிருந்தது. அன்று தொலைபேசி தெரியாது. ஆபத்தான ஒரு கருமத்துக்குத்தான் அன்று தந்தியடிக்கப்பட்டது. அதனால் தந்தியென்றதும் மக்கள் திகிலடைவது வழக்கம். சிலர் கடிதம் எழுதும்போது இதைத் தந்தியென்று கருதிப் பதிலெழுதுங்கள் என்று அவசிய கருமங்களைக் குறிப்பிடுவதுண்டு.

**1948**ல் தான் மருதமுனை உப தபாற்கந்தோர் திறக்கப்பட்டது. செ.ஐ.செ.முகம்மது சாலிகு மவுலானாவின் அயரா முயற்சியினால் அது கிடைத்தது. ஜனாப். சி.ஹா.அப்துல் றகீம் என்பவர் அஞ்சல் அலுவலராகக் கடமையாற்றினார். அவருக்குப்பின் ஜனாப் ஏ.சி.எம்.சாலிகு அப்பதவியை வகித்தார். தொலைபேசித் தொடர்பும் கிடைத்தது. அவரின் மரணத் தின்பின் ஜனாப் அகமது முகையதீன் அதனை நிருவகித்து வருகிறார்.

## மருதமுறை ஹாஜிமார்

1. அல்ஹாஜ் ம.சா.சின்னலெவ்வை 1927
2. அல்ஹாஜ் மு.சு.இபுறா லெவ்வைப் போடி மரைக்கார் 1930
3. அல்ஹாஜ் அ.ஜமால் முகம்மது 1931
4. அல்ஹாஜ் செ.உ.செ.ஐதுறுஸ் மவுலானா 1945
5. அல்ஹாஜ் ம.ஆதம் லெவ்வை ஆலிம் 1946
6. ஹாஜியானி திருமதி.முகம்மது முத்து ஆதம் லெவ்வை 1946
7. ஹாஜியானி திருமதி ஆசியா உம்மா இபுறாகிம் சாகிபு 1947
8. அல்ஹாஜ் அ.யூனுஸ் லெவ்வை 1948
9. அல்ஹாஜ் மு.ம.அசனார் 1953
10. அல்ஹாஜ் தா.ஆதம் சாகிபு 1954
11. அல்ஹாஜ் உ.இஸ்மா லெவ்வை 1955
12. ஹாஜியானி திருமதி சரிபா உம்மா இஸ்மா லெவ்வை 1955
13. அல்ஹாஜ் ஆ.முகம்மது சாலிகு 1955
14. அல்ஹாஜ் அ.முகம்மது ஹனிபா 1957
15. அல்ஹாஜ் அ.இசுமா லெவ்வை மரைக்கார் 1961
16. அல்ஹாஜ் மு.மீரா லெவ்வை 1962
17. அல்ஹாஜ் அ.ம.ஆதம்பாவா 1962
18. அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் 1963
19. அல்ஹாஜ் அ.ம.யூசுப்பு லெவ்வை 1963
20. அல்ஹாஜ் அ.ம.இபுறா லெவ்வை 1963
21. அல்ஹாஜ் இ.அகமது லெவ்வை 1964
22. அல்ஹாஜ் மீ.மு.இபுறாகீம் 1965
23. ஹாஜியானி திருமதி முகம்மதாயிஷா உம்மா ஷரிபுத்தீன் 1965
24. அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம்.மஷூர் மவுலானா 1966,1978
25. அல்ஹாஜ் ஏ.பீ.எம். மரைக்கார் 1966
26. அல்ஹாஜ் ம. சின்னப்பிள்ளை 1966
27. அல்ஹாஜ் இ.ஹிதுறு முகம்மது 1968
28. ஹாஜியானி திருமதி அ. செமிலத்தும்மா இஸ்மா லெவ்வை 1969
29. ஹாஜியானி திருமதி கதிசா உம்மா கலந்தர் லெவ்வை 1969

30. அல்ஹாஜ் மு.உதுமா லெவ்வை 1969
31. ஹாஜியானி திருமதி அலிமாக்கண்டு உதுமா லெவ்வை 1969
32. அல்ஹாஜ் அ.முகம்மதுகாசிம் 1969
33. ஹாஜியானி திருமதி பாத்திமா முகம்மதுக்காசிம் 1969
34. அல்ஹாஜ் அ.முகையதீன் 1969
35. அல்ஹாஜ் கா.முகம்மதிபுறாகீம் சாகிபு 1970
36. ஹாஜியானி திருமதி செயினப் முகம்மதிபுறாகீம் சாகிபு 1970
37. ஹாஜியானி திருமதி முகம்மது செயினப் பதுறுத்தீன் மவுலானா 1970
38. அல்ஹாஜ் அ.முகம்மது ஷம்சுத்தின் அலிம் 1972
39. ஹாஜியானி திருமதி ஹாஜறாஉம்மா ஷம்சுத்தீன் ஆலிம் 1972
40. அல்ஹாஜ் மு.க.ஆதம்பாவா மரைக்கார் 1975
41. அல்ஹாஜ் அ.அப்துல் லத்தீப் மவுலானா 1976
42. அல்ஹாஜ் ஐ.எல்.எம். இஸ்மாயில் 1977
43. ஹாஜியானி திருமதி லைலத்தும்மா இஸ்மாயில் 1977
44. அல்ஹாஜ் மௌலவி ஆ.அபுல்ஹுதா 1977
45. அல்ஹாஜ் எம்.எம்.பதுறு நயீம் 1980
46. அல்ஹாஜ் சா.ம.மு.பாறுக் 1980
47. ஹாஜியானி திருமதி ஆமினா உம்மா ஆதம்பாவா 1981
48. அல்ஹாஜ் முகையதீன்பாவா அலியார் 1982
49. அல்ஹாஜ் ஆதம்பாவா முகம்மது சுபைர் 1982
50. அல்ஹாஜ் ஆதம்பாவா அப்துஸ் ஸமது 1985

## மருதமுனை முஸ்லிம் வாலிபர் இயக்கம் (Y.M.M.A)

*அறிஞர் மர்ஹூம் ஏ.எம்.ஏ. அஸீஸ் அவர்களாற் தோற்றுவிக்கப்பட்ட அகில இலங்கை முஸ்லிம் வாலிபர் இயக்கக் கிளையொன்று மருதமுனையில் 1955ல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அது ஜனாப் பி.எம்.ஏ.முஸ்தபா அவர்களைத் தலைவராகவும், ஜனாப் ஐ.எம்.எஸ்.எம். பழீல் மவுலானா அவர்களைச் செயலாளராகவும், ஜனாப் கே.எல்.எச். முகம்மது அவர்களைத் தனாதிகாரியாகவும் கொண்டு இயங்கி வந்தது. அது தெமட்டக்கொடையிலுள்ள அகில இலங்கை Y.M.M.A பேரவையின் கிளையாக அமைந்து பல பொதுப் பணிகளைச் செய்து வந்திருக்கிறது. ஏழு ஆண்டுகளின் பின் அது செயலற்றுப் போயிற்று.*

*கருத்த வேற்றுமை காரணமாக தெமட்டக்கொடைப் பேரவை யிலிருந்து பிரிந்த மற்றொரு இயக்கம் மாளிகாவத்தையில் Y.M.M.A தேசியக் கவுன்சில் என்ற பெயருடன் இயங்கி வருகிறது. இன்றைய மருதமுனை Y.M.M.A இயக்கம் அதன் ஒரு கிளையாகும். இது ஜனாப் எப்.எம். அமீருல் அன்சார் மவுலானா, ஜனாப் எஸ்.ஏ.ஆர்.எம். செய்யது அகமது மவுலானா என்பவர்களின் முயற்சியால் 6.6.78 ல் அல்மனார் மகாவித்தியாலயத்தில் அங்குரார்ப்பணஞ் செய்யப்பட்டது.*

## தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவினர்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | ஜனாப் ஐ.ஏ.அமீன் B.A |
| உபதலைவர் | - | ஜனாப் எஸ்.ஏ.ஆர்.எம். செய்யதுஅகமது மவுலானா |
| செயலாளர் | - | ஜனாப் எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மவுலானா |
| உபசெயலாளர் | - | ஜனாப் என்.எம்.அமீன் |
| பொருளாளர் | - | ஜனாப் எஸ்.எம்.அக்பர் |
| கணக்காளர் | - | ஜனாப். ஏ.ஐ.எல்.அக்றம் |
| நிருவாக சபை | - | ஜனாப் ஐ.எல்.அபுல் ஹுதா |
| | | ஜனாப் ஏ.ஆர்.ஏ.ஹமீது |
| | | ஜனாப் எம்.சி.எம்.அப்துல் காதிர் |
| | | ஜனாப் ஏ.எம்.எம்.இஸ்மாயில் |
| | | ஜனாப் ஏ.ஆர்.எம்.தௌபீக் |
| | | ஜனாப் எம்.எம்.நக்ஷபி |
| | | ஜனாப் எம்.எம் சுபியான் |
| | | ஜனாப் எம்.சி.எம்.இஸ்மாயில் |
| | | ஜனாப் ஏ.எம்.பாறூக் |
| | | ஜனாப் யூ.எல்.இஸ்மாயில் |
| | | ஜனாப் ஏ.சி.ஏ. மாஜிது மவுலவி |
| | | ஜனாப் ஏ.எல்.கமறுத்தீன் |
| போஷகர் | - | அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம்.மஷூர் மவுலானா |
| உபபோஷகர் | - | ஜனாப் ஏ.ஆர்.ஏ.அஸீஸ் B.A அதிபர் |

ஜனாப் ஏ.எச்.எம்.மஜீது அதிபர்

ஜனாப் எம்.எஸ்.ஐயூப் ஜே.பி

கௌரவ ஆலோசகர்கள்

- புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் Ex.C.E.O
- ஜனாப் ஐ.எம்.எஸ்.எம்.பழீல் மவுலானா Ex.C.E.O
- பிரசித்த நொத்தாரிஸ் ஜே.எம்.எம். அப்துல்காதிர் அதிபர்

*செயலாளர் ஜனாப் எஸ்.ஏ.எஸ். இஸ்மாயில் மவுலானா அவர்கள் விலகியதால் ஜனாப் எப்.எம்.அமீறுல் அன்சார் மவுலானா செயலாளராகக் கடமையாற்றுகிறார்.*

## இவ்வியக்கம் புரிந்துள்ள சேவைகள்

1. *பல ஏழை மாணவருக்கு இலவசமாக குர்ஆன் பிரதிகளை வழங்கியது.*
2. *ஹதீது மஜ்லிசுகள் சமய விழாக்களை நடாத்தியது.*
3. *சூறாவளியாற் பாதிக்கப்பட்டோருக்கு உணவு, உடை, பால் முதலியன விநியோகிக்கப்பட்டது.*
4. *சூறாவளியாற் பாதிக்கப்பட்ட வீடுகளைப் புனரமைப்புச் செய்ய உதவியது.*
5. Y.M.M.A *தேசியப் பேரவையின் உதவியைப் பெற்று ஒவ்வொன்றும் ரூ 14 500.00-பெறுமதியான 14 வீடுகளைக் கட்டி ஏழைக் குமர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இக்கைங்கரியத்துக்குப் பக்கபலமாக நின்று சீரமைப்புச் செய்ய ஜனாப் எம்.எஸ்.ஐயூப் ஜே.பி. அவர்களும் புலவர் மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களும் உதவினர்.*
6. *சூறாவளியாற் சேதமுற்ற பெரியநீலாவணை அல்- பாக்கியத்துஸ் ஸாதுலிஹாத் மதுரசாவைப் புனரமைப்புச் செய்யப் புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் அவர்களுக்கு இக்கிளை மூலமாக ரூ 14 500.00 அன்பளிப்பு வழங்கியது.*

7. கண்பார்வை குறைந்த மூவருக்கு மூக்குக் கண்ணாடி வழங்கியது.

8. மீலாது விழாவையொட்டிப் பல போட்டி நிகழ்ச்சிகள் நடாத்தப் பட்டன.

9. ஏழை மாணவருக்கு இலவசமாக அப்பியாசப் புத்தகங்கள் வழங்கப்பட்டன.

மேலும் பல நற்பணிகளைச் செய்ய இருக்கும் இவ்வியக்க உறுப்பினர் களின் உற்சாகத்தை மெச்ச வேண்டும்.

## இணக்க சபை

ஆங்கிலேயர் காலத்தில் சிறிய வழக்குகளெல்லாம் கல்முனைக் கிராமக் கோட்டில் விசாரிக்கப்பட்டன. பெரிய வழக்குகள் நீதிமான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டன. 1971ல் அரசைக் கையேற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கம் கிராமக் கோடுகளை நிறுத்தி நீதி நிருவாகத்தில் ஒரு புதிய மாற்றத்தையேற்படுத்தியது. மக்கள் கோட்டுக்குச் சென்று பொருட் செலவையும் கால விரயத்தையும் அடையாது தமக்குள்ளே ஏற்படும் விவகாரங்களைக் கிராமங்களிலேயே தகுதி வாய்ந்த உறுப்பினர் களைக் கொண்ட ஒரு சபையின் மூலம் இலகுவாகத் தீர்த்துக் கொள்ளத் தக்கதாக இணக்கசபையென்றபெயரால் உள்ளூராட்சி எல்லை ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு சபையை நியமித்தனர். அது அரசாங்க ஆதரவில் பிரச்சினைகளை விசாரித்து சமரசமாகத் தீர்த்து வைத்தது. ஒற்றுமைப்படுத்த முடியாத பிரச்சினைகளை மட்டும் கோட்டுக்கு அனுப்பியது. இந்த வகையில் 1974ம் ஆண்டில் கரைவாகு வடக்கு உள்ளூராட்சி எல்லைக்குட்பட்ட பெரியநீலாவணை, மருதமுனை, பாண்டிருப்புக் கிராமங்களுக்கென இணக்கச்சபையொன்று குறித்த மூன்று கிராமங்களிருந்தது தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது.

எனது தலைமையில் நடைபெற்ற அந்தச் சபையால் பல ஆயிரக் கணக்கான வழக்குகள் சமரசஞ் செய்து வைக்கப்பட்டன. சகல மக்களாலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக நீதிநடுத் தவறாது நடைபெற்ற அந்தச் சபை தமிழ்பேசும் மக்களிடையே திகழ்ந்த சில இணக்க சபைகளிலும் சிறந்த ஒரு சபையென அரசாங்கத்தாலும் மக்களாலும் போற்றப்பட்டது. வியந்து பேசப்பட்டது என்பதை ஈண்டு குறிப்பிட வேண்டும். 1977ல் ஆட்சியை ஏற்ற ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் நாட்டின் சகல இணக்கசபை களையும் கலைத்து ஆரம்ப நீதிமன்றங்களை ஏற்படுத்தியது.

## கரைவாகு வடக்கு இணக்கசபை உறுப்பினர்கள்

1. அல்ஹாஜ் ஆ.மு.ஷரிபுத்தீன் ஜே.பி
2. அல்ஹாஜ் ஏ.பி.எம்.மரைக்கார் ஜே.பி
3. ஜனாப் ஆர்.எம்.எச்.ஹுசைன்
4. ஜனாப் எம்.ஆதம்பாவா
5. ஜனாப் ஏ.எம்.சதக்கதுல்லா லெவ்வை
6. ஜனாப் மௌலவி ஏ.ஏ.கரீம்
7. ஜனாப் அதிபர் எம்.எம்.இஸ்மாயில்
8. ஜனாப் எஸ். நாகூர் மீரா
9. ஜனாப் ஏ.எல்.ஏ.ஹமீது ஓவசியர்
10. ஜனாப் எம்.எம்.சாலிகு லெவ்வை
11. ஜனாப் ஐ.எல்.அலியார் மரைக்கார்
12. ஜனாப் எம்.பீ.முகையதீன் ஆசிரியர்
13. ஜனாப் எம்.ஐ.எம். அப்துல் காதர் மனேஜர்
14. ஜனாப் பீ.நூறுமுகம்மது
15. திரு. சிவகுரு
16. திரு. ஐ. பொன்னுத்துரை
17. ஜனாப் ஐ.எல்.ஏ.சலாம்
18. ஜனாப் எஸ்.எம்.சாகுல் ஹமீது
19. ஜனாப் ஏ.ஏ.கரீம்
20. ஜனாப் ஈ.எம்.றாசிக் ஆசிரியர்
21. ஜனாப் ஏ.சி.எம்.சாலிகு
22. ஜனாப் ஏ.எம்.அப்பாஸ்
23. ஜனாப் யூ.எல்.ஏ.அஸீஸ்
24. திரு. பீ.சின்னத்தம்பி

25. ஜனாப் பீ.எம்.உதுமா லெவ்வை

26. ஜனாப் யூ.எல்.மீரா லெவ்வை

27. ஜனாப் எஸ்.எம் மஷுர்

## சமாதான நீதிபதிகள்

ஆதியில் மக்களிடையே ஏற்படும் பிரச்சினைகளைத் தலைமைக்காரர் தீர்த்து வைத்தார்கள். அரசாங்கத்தோடு தொடர்புபட்டபின் வாயுரைகளை அத்தாட்சிப்படுத்தவென அன்று சமாதான நீதிபதிகள் எவரும் இவ்வூரில் இருக்கவில்லை. கல்முனையில் வசித்த நொத்தாரிஸ் ஜனாப் ஏ.கே. காரியப்பர் ஜே.பி. அவர்களைக் கொண்டே அத்தகைய பத்திரங்களை அத்தாட்சிப்படுத்த முடிந்தது. இவ்வூரில் வசித்த ஜனாப் முகையதீன், மீரா சாகிபு கிளாக்கர் முதன் முதல் சமாதான நீதிபதியாக நியமிக்கப்பட்டார். அடுத்து 1968ல் அல்ஹாஜ் ஏ.பீ.எம்.மரைக்கார் ஜே.பி.யாக நியமனம் பெற்றார். கிராமச் சங்கத் தலைவராயிருந்த ஜனாப் எஸ்.எம்.எஸ். அகமது மவுலானா, ஜனாப் எஸ்.எச்.எம்.புறுஹான், அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம். மஷூர் மவுலானா என்போர் பதவிக் காலத்தில் மட்டும் சமாதான நீதிபதிகளாயிருந்தனர். இணக்க சபைத் தலைவராயிருக்குந்தனையும் நானும் சமதான நீதிபதியாகக் கடமை செய்தேன். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசாங்க காலத்தில் கட்சிக் கிளைத் தலைவர்களான ஜனாப் எம்.எச். ஹூசைன், ஜனாப் பீ.நூறு முகம்மது, ஜனாப் எம்.ஆதம்பாவா என்போர் சமாதான நீதிபதிகளாயினர். அரசாங்கம் மாறியதும் இவர்களின் பதவியும் தீர்ந்தது. பின்னர் 1979ல் நிரந்தர சமாதான நீதிபதிகளாக ஜனாப் எம்.எஸ்.ஐயூப், அல்ஹாஜ். ஐ.எல்.எம்.இஸ்மாயில், எஸ்.எம்.எஸ். அகமது மௌலானா, அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம்.மஷூர் மவுலானா, ஜனாப் ஐ.எம்.எஸ்.எம்.பழீல் மவுலானா, ஜனாப் எஸ்.எம்.முகம்மதிபுறாகீம் மரைக்கார், ஜனாப் எஸ்.எம்.சுல்தான், ஜனாப் ஏ.எல்.தாவூது லெவ்வை மரைக்கார், ஜனாப் ஏ.அப்துல் றகுமா லெவ்வை மரைக்கார் என்போர் நியமனம் பெற்றிருக்கின்றனர். அதன்பின் நானும் சமாதான நீதிபதியாக நியமனம் பெற்றேன்.

## ஊர்ப் பெரியார்கள்

மார்க்கக் கல்வி பெற்றிருந்த உலமாக்களைத் தவிர்த்து அறபு மொழி மூலம் சமய அறிவு பெற்றிருந்தோரும் செல்வத்திலும் செல்வாக்கிலும் முன்னணியில் நின்றோரும் குடும்பத் தலைவர்களாக குடிகளின் தலைவர்களாக அமைந்த மரைக்காயர்மார்களும் கிராமத்தின் பெரியார்

களாக எண்ணப்பட்டனர். அவர்கள் பள்ளிவாசற் பரிபாலன கர்த்தாக்களாக கிராமத்தில் எழும் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்போர்களாக அமைந்திருந்தார்கள். நானறியாப் பிராயத்தில் வாழ்ந்து மறைந்த பெரியார்களைப் பற்றிய பூரண தகவல்கள் ஏதும் கேட்டறியக் கூடியதாகயிருக்கவில்லை.

சிங்கள அரசர் காலத்தில் சிங்களவர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயரை எதிர்த்த தேசிய வீரர்களிலொருவர் **அனஸ் லெவ்வை** என்பவர் மருதமுனை மகன் என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

**அலியார்ப்போடி, சின்னாலிமப்பா, பக்கீர்த்தம்பி மரைக்காயர், சின்னவர் களியர், சுலைமா லெவ்வைப்போடி** முதலியோர் தலைவர்களாயிருந்தனர் என்று கேள்விப்படுகிறேன். நானறிய இருந்து மறைந்த சில பெரியார்களைப் பற்றி சுருக்கக் குறிப்புக்களை இங்கு கூறுகிறேன்.

**அல்ஹாஜ் மா.மு.உ.அகமது மீரா சாகிபு :** இவர் மட்டக்களப்பைத் தாயகமாகக் கொண்டவர். இங்கு விவாகஞ் செய்து குடிபதியாக வாழ்ந்தார். வியாபாரி. பெரிய நிலச்சுவான்தாரர். மட்டக்களப்பில் வியாபார ஸ்தலம் வைத்திருந்தார். தென்தெருப்பள்ளிவாசல் தர்ம கர்த்தாவாக நீண்ட காலம் இருந்தார். பள்ளிவாசற் பண நிருவாகம் அவரது பொறுப்பிலேயே இருந்தது. வரவு செலவுக் கணக்கைச் சீர்நிலையில் வைத்திருந்தார். சமய ஞானமுள்ளவர். மக்களாற் கௌரவிக்கப்பட்டவர். இவருக்கு ஆண் மக்களில்லை.

**ஜனாப் சா.ஆதம்பாவா மரைக்கார் :** இவர் தென்தெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களில் ஒருவர். பாய்க்கடை வைத்து வியாபாரஞ் செய்தார். சந்தானமில்லை.

**அல்ஹாஜ் மு.சு.இபுறா லெவ்வைப்போடி :** இவர் வட தெருப் பள்ளிவாசல் தருமகர்த்தாக்களில் ஒருவர். பெரிய நிலச்சுவான்தாரர். கமம் செய்தார். யாசின் ஆலிம், முகம்மது யூசுப் ஆலிம், உதுமா லெவ்வை ஆசிரியர் ஆகியோரின் தந்தை. அல்மனார் மகாவித்தியாலயம் கட்டுவதற்கு முதலில் காணியை அரசாங்கத்துக்கு நன்கொடையாக அளித்தவர் இவரே.

**அல்ஹாஜ் ம.சா.சின்னலெவ்வை :** இவர் தென்தெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். சமயஞானமும் வழிபாடுமுள்ளவர். வியாபாரஞ் செய்தார். அப்துல் றகீம் பி.எம்.அப்துல் கனி மவுலவி, முகம்மது புறுஹான் (கி.ச.தலைவர்) ஆகியோரின் தந்தை.

**அல்ஹாஜ் அ.ஜமால் முகம்மது :** இவர் ஒரு மார்க்க அறிஞர். வடதெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். வியாபாரஞ் செய்தார். அதிபர் ஜே.எம்.எம்.அப்துல் காதர் நொத்தாரிஸ், ஜே.எம்.எம். அபூபக்கர் அதிபர் ஆகியோரின் தந்தை.

**ஜனாப் உ.மு.இஸ்மாயில் மரைக்கார் :** இவர் பெரிய பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். சிலகாலம் பொலிஸ் தலைமைக்காரராகக் கடமையாற்றினார். மருதமுனையின் முதலாவது விவாகப் பதிவுக்காரர் இவரே. சில்காலம் கிராமச்சங்க உறுப்பினராக இருந்தார். அதிபர் அப்துல் குத்தூஸ், அதிபர் ஐயூப் ஆகியோரின் தந்தை.

**ஜனாப் அ.கலந்தர்ப் பரிகாரி மரைக்கார் :** இவர் ஒரு பிரபல வைத்தியர். தென்தெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களில் ஒருவர். சிலகாலம் பொலிஸ் தலைமைக்காரராகக் கடமையாற்றினார். கிராமச்சங்க உறுப்பினராகவுமிருந்தார். அதிபர் கே.எம்.ஷம்சுத்தீனின் தந்தை.

**ஜனாப் அ.வ.வி.ஆதம்பாவா மரைக்கார் :** இவர் கொழும்பில் தையல் தொழில் படித்த ஒரு தையற்காரர். வடதெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். களிமடுக் கண்டத்தில் கமம் செய்தார். அந்தக் கண்டத்து வட்டை விதானையாகவும் கடமையாற்றினார். தம்மகனை முதன் முதலில் உயர்தரக்கல்வி கற்கச் செய்து மருதமுனையில் புதிய சகாப்தம் ஒன்றை உருவாக்கிய பெருமை இவருக்குண்டு. நானும் நூகு லெவ்வை ரெயிலரும் அதிபர் அப்துல் றகீமும் இவரது மைந்தர்கள்.

**ஜனாப் இ.இபுறா லெவ்வை வைத்தியர் (கண்டியார்) :** கண்டியைச் சேர்ந்த மடவளையில் விவாகஞ் செய்து குடிபதியானார். இன்று அவருக்கு அங்கு ஒரு பெரிய சந்ததியிருக்கிறது. புதிய சோனகத்தெரு அஞ்சல் அலுவலக அதிபர் அபுல் ஹசனின் தந்தை.

**ஜனாப் இ.மீரா லெவ்வை ரெயிலர் :** இவர் கண்டியில் தையற் கலை பயின்றவர். முதன்முதல் தையல் இயந்திரம் கொண்டு வந்து தையற் தொழில் செய்தவர். களிமடுக் கண்டத்தில் வேளாண்மைத் தொழிலும் வியாபாரமுஞ் செய்தார். அதிபர் அல்ஹாஜ் எம்.எம்.இபுறாகீம் இவரது மைந்தர்.

**ஜனாப் இ.இஸ்மா லெவ்வைப் போடி மரைக்கார் :** இவர் அலியார்ப் போடியின் பௌத்திரர். களிமடுவில் வேளாண்மை செய்தார். சிலகாலம் அக்கண்டத்தின் வட்டை விதானையிருந்தார். கிராமச்சங்க உறுப்பினராகவும் இருந்தார். வடதெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். முதன்முதல் துவிச்சக்கர வண்டியோடிய மருதமுனை மகன் இவரே.

மின்னியற் பொறியியலாளர் ஐ.எம்.அப்துல் காதர் இவரது மைந்தர்.

**ஜனாப் அ.அசனார் மரைக்கார் தண்டயல் :** இவரே முதன் முதல் கடலில் கொண்டோடிவலை போட்டு மீன் பிடித்த தண்டயல். அல்ஹாஜ் யூசுப்பு லெவ்வை தண்டயல், இறமுளான் தண்டயல் ஆகியோரின் தந்தை.

**ஜனாப் கா.செ.அப்துல் காதர் மவுலானா :** இவர் வடதெருப் பள்ளிவாசல் தருமகர்த்தாக்களில் ஒருவர். அழிக்கப்பட்ட வடதெருப் பள்ளிவாசலை முகாமையாயிருந்து கட்டியவர். ஆண் சந்ததியில்லாத இவர், சில அநாதைப் பிள்ளைகளைப் பொறுப்பேற்று வளர்த்தார்.

**ஜனாப் செ.மு.மகுமூது மவுலானா :** இவர் ஒரு கமக்காரர். சின்ன மவுலானாவின் மைந்தர். மருதமுனையிலும் தம்பன்கடவையிலும் விவாகஞ் செய்திருந்தார். கிராம சங்கத் தலைவர் செய்யிது அகமது மவுலானா ஜே.பி., மௌலவி செய்யிது முஸ்தபா மவுலானா ஆகியோரின் தந்தை.

**அல்ஹாஜ் மு.ம.அசனார் :** பிறப்புப் பதிவுகாரரர். சிறந்த பட்டுச் சோமனங்கள் நெய்து வந்தார். அதிபர் அப்துல் றகீமின் தந்தை. நெசவு ஸ்தாபனம் ஒன்றை நடாத்தி வந்தார்.

**ஜனாப் இ.உமறு நெயினா மரைக்கார் :** இவர் தென்தெருப் பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். செல்வந்தர், நெசவு ஸ்தாபன அதிபர். மருதமுனை உப அஞ்சல் அலுவலக அதிபர் முகம்மது சாலிகுவின் பாட்டனார்.

**அல்ஹாஜ் அ.யூனுஸ் லெவ்வை :** இவர் நெசவுத்தொழில் அதிபர். தென்தெருப்பள்ளிவாசல் பேஷ் இமாமாகச் சிலகாலம் கடமையாற்றினார். மவுலவி அப்துல் மஜீதின் தந்தை.

**ஜனாப் அபூபக்கர் மோதினார் :** இவர் சீறாப்புராணத்துக்கு பயான் செய்ய வல்லவர். தென்தெருப்பள்ளிவாசல் முஅத்தினாகச் சிலகாலம் கடமை செய்தார். மௌலவி அப்துல் கரீம், மௌலவி அல்ஹாஜ் முகம்மது ஷம்சுத்தீன், அதிபர் முகம்மது சாலிகு ஆகியோரின் தந்தை.

**ஜனாப் சி.உதுமா லெவ்வை :** இவர் புகையிலைத் தோட்டச் சொந்தக்காரரர். தம்பன் கடவையில் வெள்ளை மாட்டுப்பட்டி வைத்திருந் தார். கிராம சேவகர் முகம்மதிபுறாகீம் லெவ்வையின் தந்தை. மாட்டுப் பட்டிக்காரரின் முன்னோடி.

**ஜனாப் பை.ம.ஆதம்பாவா :** ஆராய்ச்சியார். இவர் மருதமுனை முதலாம் குறிச்சியின் பொலிஸ் தலைமைக்காரராக நீண்ட காலம் சேவை

செய்தார். இவரின் சிறந்த சேவையைக் கௌரவித்து ஆங்கில அரசு இவருக்கு, "ஆராச்சி" பட்டம் வழங்கிற்று. தென்தெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். கல்விப் பணிப்பாளர் ஜனாப் ஏ.எம்.மஜீத் BSc யின் தந்தை. புகையிலைத் தோட்டக்காரர். மாட்டுப் பட்டியும் வைத்திருந்தார்.

**ஜனாப் பை.ம.சீனிமுகம்மது :** இவர் மருதமுனை இரண்டாம் குறிச்சியின் பொலிஸ் தலைமைக்காரராக நீண்ட காலம் சேவை செய்தார். தென்தெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். பிறப்புப் பதிவுகாரர் சாகுல் ஹமீதின் தந்தை.

**ஜனாப் சி.மக்கூது லெவ்வை :** பிறப்பிறப்பு பதிவுகாரரான இவர் வடதெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். மௌலவி ஜலாலுத்தீனின் தந்தை. வியாபாரஞ் செய்தார்.

**ஜனாப் க.இ. அபூபக்கர் மரைக்கார் :** தென்தெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களில் ஒருவரான இவர், மருதமுனை இரண்டாம் குறிச்சி பொலிஸ் தலைமைக்காரராயிருந்தார். வியாபாரஞ் செய்தார். ஆசிரியர் ஜலீல் முதலியோரின் தந்தை.

**ஜனாப் க.இ.கிதுறு முகம்மது மரைக்கார் :** இவர் தென்தெருப்' பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். வியாபாரஞ் செய்தார்.

**ஜனாப் இ.யூசுப் லெவ்வை மரைக்கார் :** இவர் தென்தெருப் பள்ளிவாசல் தருமகர்த்தாவாக இருந்தார். முகம்மது முகையதீன் வாத்தகர், செயினூ லாபிதீன் ஆசிரியர் ஆகியோரின் தந்தை.

**ஜனாப் யூ.மீராலெவ்வை மரைக்கார்:** தென்தெருப்பள்ளிவாசல் தர்மகர்த்தாக்களில் ஒருவரான இவர் ஒரு வியாபாரி. அப்துல் கரீம் வர்த்தகர் முகம்மதிஸ்மாயில் அதிபர் ஆகியோரின் தந்தை

**இ.இஸ்மா லெவ்வை மரைக்கார் :** இவர் ஒரு பரம்பரை வைத்தியர். தென்தெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர்.

**செ.ம.இஸ்மா லெவ்வை மரைக்கார் :** இவர் வடதெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். வியாபாரி, வர்த்தகர் செயினூலாப்தினின் தந்தை.

**ஜனாப்.இ.இபுறா லெவ்வை மரைக்கார் :** இவர் தென்தெருப் பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். வியாபாரஞ் செய்தார்.

**ஜனாப்.கா.இபுறா லெவ்வை மரைக்கார்:** இவர் வடதெருப் பள்ளிவாசல் தரும கர்த்தாக்களிலொருவர். புகையிலைத் தோட்டஞ் செய்தார். தம்பன் கடவையில் மாட்டுப்பட்டி வைத்திருந்தார்.

**அல்ஹாஜ் அ.இஸ்மா லெவ்வை மரைக்கார் :** இவர் வடதெருப் பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். செல்வந்தர். நிலச்சுவான்தாரர். புகையிலைத் தோட்டக்காரர்.வெள்ளை மாட்டுப்பட்டி வைத்திருந்தார்.

**ஜனாப் அ.கப்பநெயினா :** இவர் புகையிலைத் தோட்டக்காரர். மாட்டுப்பட்டி வைத்திருந்தார். அல்லாப்பிச்சை ஆசிரியரின் தந்தை.

**செ.ஐ.செ.முகம்மது சாலிகு மவுலானா :** சிலகாலம் கரைவாகு வடக்கு கிராம சங்க தலைவராயிருந்தார். பொதுச் சேவையாளர். செய்யிது ஹசனுல் பாரி மவுலானா ஆசிரியரின் தந்தை. வியாபாரஞ் செய்தார்.

**ஜனாப் அ.சுலைமா லெவ்வை மரைக்கார் :** இவர் வடதெருப் பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். புகையிலைத் தோட்டஞ் செய்தார். கொந்தராத்துக்காரர். ஆசிரியர் ஷம்சுத்தீனின் தந்தை.

**ஜனாப் கே.எம்.மீரா சாகிபு கிளாக்கர், ஜே.பி :** இவர் மட்டக் களப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அகமது மீரா சாகிபு ஹாஜியாரின் மகளை விவாகஞ் செய்து இங்கு குடிபதியானர். மட்டக்களப்புக் கோட்டு லிகிதராயிருந்த இவர், ஒரு செல்வந்தர். உத்தியோகத்தை விட்டுவிட்டு வியாபாரஞ் செய்தார்.

**ஜனாப் செ.ஐ.செ.செயின் மவுலானா :** இவர் மருதமுனை இரண்டாம் குறிச்சிக் கிராமத் தலைவராயிருந்தார். அல்ஹாஜ் எஸ்.இஸட்.எம்.மஷூர் மவுலானாவின் தந்தை. சமூகசேவையாளர்.

**அல்ஹாஜ் மு.க.ஆதம்பாவா மரைக்கார் :** தென்தெருப்பள்ளிவாசல் தருமகர்த்தாக்களிலொருவர். நிலச்சுவான்தாரர். செல்வந்தர். கிராம சேவகர் முகம்மது முகையதீனின் தந்தை. வியாபாரஞ் செய்து வந்தார்.

**அல்ஹாஜ் அ.ம.ஆதம்பாவா :** பிறப்புப் பதிவுகாரர். இவர் நெசவுத் தொழிலிலும் வியாபாரமுஞ் செய்து வந்தார். மௌலவி அபூஉபைதா அவர்களின் தந்தை.

**செ.இ.செய்யிது கலீல் மவுலானா :** செய்யிது அப்துல் காதர் மவுலானா மவுலவி, செய்யிது அப்துல் றஸ்ஸாக் மவுலானா, செய்யிது தாகா மவுலானா (மவுலவி) ஆகியோரின் தந்தை. சமய அறிஞர்.

**செ.உ.செ.ஐதுரூஸ் மவுலானா மவுலவி :** செய்யிது முகம்மது சாலிகு மவுலானா, செய்யிது செயின் மவுலானா, செய்யிது அப்துல் பாரி

மவுலானா (மவுலவி) ஆகியோரின் தந்தை. வியாபாரம் செய்தார். அதிக நாளைக் கொழும்பில் கழித்தார்.

**எஸ்.கே.எம்.செய்யிது அப்துல் றஸ்ஸாக் மவுலானா :** வடதெருப் பள்ளிவாசல் கதீபாக பலகாலம் சேவை செய்தார். செய்யிது ஹசன் மவுலானா (ஆசிரியர்), செய்யிது இஸ்மாயில் மவுலானா அதிபர் ஆகியோரின் தந்தையாவார். வியாபாரம் செய்தார்.

**செ.ம.அப்துல் கரீம் மவுலவி :** அறபியாசிரியராகப் பலகாலம் கடமை செய்தவர். வாஜிது, மாஜிது மவுலவி ஆகியோரின் தந்தை.

**அகமது லெவ்வை ஆலிம் :** பலகாலம் அறபி ஆசிரியராகக் கடமை செய்தார். அப்துல்லாஹ் ஆசிரியரின் தந்தை.

**யூ.எல்.அப்துஸ் ஸமது மவுலவி :** அறபியாசிரியர், பொறியியலாளர், நியாஸ் முதலியோரின் தந்தை.

**அல்ஹாஜ் மு.ம.அசனார் :** பிறப்புப் பதிவுகாரர். சிறந்த பட்டுச் சோமனங்கள் நெய்து வந்தார். அதிபர் அப்துல் றகீமின் தந்தை. நெசவு ஸ்தாபனம் ஒன்றை நடாத்தி வந்தார்.

## பழைய பருமரங்களும் ஒழிந்த தாவரங்களும்

கிராமப் பெயரைச் சுமந்து கொண்டிருக்கும் மிகப் பெரிய மருதமரம். முன்னர் இங்கு குடியிருந்த தமிழர் காலத்தது. மருதமரத்தடி முனைக்கு வள்ளத்தைச் செலுத்தச் சொன்னார்கள். அந்த இடம்தான் ஊரின் ஆரம்பம்.

ஊர் தோன்றிய காலத்துக் காட்டு மரங்களில் இரண்டு தேற்றா மரங்கள் நின்றன. ஒன்று மஸ்ஜிதுன்னூர் வளவிற்கு அண்மையில் வெளியில் நின்றது. ஆலங்கேணிக்கு அண்மையில் கேணிப் பள்ளதாக்கில் நின்றது, மற்றையது. இரண்டும் ஏழெட்டு முழச் சுற்றளவுள்ளவை.

முஸ்லிம்கள் குடியேறி மஸ்ஜித்துன்னூர் (அவக்கலியப்பா பள்ளி) உற்பத்தியானபோது கண்ட ஆலமரம் ஒன்று ஊருக்கு உயர்ந்து, உயர்ந்த பள்ளி ஆலமரம் எனப் பாடல் பெற்றது. அதேகாலத்தில் ஊருக்கு வெளியே ஊரின் அடக்கஸ்தலமாக தேர்ந்தெடுத்த ஆலடியில் (இப்பொழுது அல்மனார் வித்தியாலய ஆரம்ப பிரிவு வளவில்) நின்றது ஒரு பெரிய ஆலமரம். அது சமீபத்தில்தான் பெருங் காற்றால் தள்ளப்பட்டது. விழாக்காலங்களில் ஊருக்கு உதவியது. தற்போது

வடதெரு அடக்கஸ்தலத்தில் ஒரு பெரிய ஆலமரம் நின்றது. மஸ்தார் ஆலமரம் என்று அதனைக் கூறுவர்.

ஊரின் மத்தியில் ஒரு பெரிய புளியமரம் நின்றது. அது மிகப் பழைமை வாய்ந்தது. ஊர் தோன்றிய காலத்துத் தாவளங்கள் அதனடியில் தரித்து நிறுத்தப்பட்டிருந்ததை நான் பார்த்திருக்கிறேன். அது ஆலடி அடக்கஸ்தலத்துக்கு அண்மையில் தெற்குப் புறமாயிருந்தது.

வெள்ளையர் ஆட்சி ஆரம்பித்து மேட்டு வட்டைக்காணி பகிர்ந் தளிக்கப்பட்ட போது நவியான்குளம் ஆரம்பிக்குமிடத்தில் நின்றது, ஒரு பெரிய வம்மி மரம். அது கமக்காரருக்குத் தங்க நிழல்தரு மரமாக உதவியது. பெருங்காற்று அதனைத் தள்ளிவிட வடதெருப்பள்ளிவாசல் கட்டுமான வேலைக்கு அது உபயோகமானது.

ஊருக்குக் குறுக்கே வடக்குத் தெற்காகச் செல்லும் பிரசித்த தெரு அப்பொழுது ஒற்றையடிப் பாதையாயிருந்தது. வெள்ளையர் ஆட்சிக்கு வந்தபோது அந்தத் தெருவிற்குக் கல்பதித்து றோட்டாக்கினார்கள். அந்த றோட்டின் இரு மருங்கிலும் நிழல்வாகை மரங்களை நட்டி வளர்த்தனர். அவை பாதசாரிகளுக்குக் களைப்பாறும் நிழல்களாயுதவின. சமீப காலத்தில் தான் அந்தப் பெரிய மரங்கள் சாய்ந்தும் தறித்தும் ஒழிக்கப்பட்டன.

மஸ்ஜிதுல் கபீர் ஆரம்பித்த காலத்தில் அதன் முன்புறமாக நீண்ட ஒரு பகுதி நிலம் பள்ளிவாசலுக்குச் சொந்தமாக்கப்பட்டது. அந்நிலத்தில் வரிசையாக நிழலுக்காக ஆலமரங்கள் நடப்பட்டிருந்தன. பள்ளிவாசலைச் சுற்றியும் நிழல்வாகை மரங்கள் வளர்ந்திருந்தன. அவையெல்லாம் பாரிய மரங்களாயிருந்ததை நான் கண்டிருக்கிறேன்.

கவுசியரின் வளவில் மிகப் பெரிய முள்முருங்கை மரம் ஒன்று நின்றது. ஊரெங்கும் புனகு மரங்கள் நின்றன. அவையெல்லாம் இல்லாமல் போயின. வெல்லையென்றொருவகை மரம் ஊரில் பல இடங்களில் காணப்பட்டது. அது இப்பொழுது இல்லை. ஊரில் கிழக்குக் கரைப் புறத்தில் காயான் பற்றைகள் காணப்பட்டன. அவை குடியேறியோரால் அகற்றப்பட்டன. இப்பொழுது இல்லை. பச்சைக் கதிகால்களாக வேலிக்கு உபயோகப்படுத்திய எத்தனையோ தாவரங்கள். கிளிசீரியா என்னும் சீமைக்கிளுவை 1938ல் இங்கு அறிமுகமான போது மறந்து விடப்பட்டன.

**15**

# அலியார்ப் போடி குடியின் வரலாறு

கண்டி மன்னன் செனரதன் காலத்தில் இலங்கையில் மேற்குக் கரைப்பிரதேசத்தை அடிப்படுத்தி ஆட்சி செய்த போர்த்துக்கீசர் தமது இந்து சமுத்திர வர்த்தகத்துக்குப் போட்டியாக அமைந்த அரேபிய முஸ்லிம்களோடு கொண்ட வெறுப்புக் காரணமாகத் தமது ஆட்சிக் குட்பட்ட முஸ்லிம்களை வெகுவாகத் துன்புறுத்தினர். அன்னாரின் கெடுபிடிக்கு ஈடுகொடுக்க முடியாத முஸ்லிம்கள் கண்டி மன்னனைச் சரணடைந்தனர். அவன் அவர்களுக்கு அடைக்கலமளித்துத் தனது ஆட்சிக்குட்பட்ட கிழக்குக்கரைப் பிரதேசத்தில் குடியமர்த்தினான்.

அவர்களின் ஒரு பகுதியினர் சம்மாந்துறையை அடுத்துள்ள சொறிக்கல்முனையில் குடியேறினர். அவர்கள் அங்கு வாழ்ந்து வருங்காலத்தில் கத்தோலிக்க குருமார் அங்கு வந்து தமது மார்க்கப் பிரசாரத்தைத் தொடங்கினர். அங்கு வாழ்ந்த பழங்குடியினரான மீனவர் அவர்களின் மார்க்கத்தைத் தழுவினர். முஸ்லிம்களிடம் அவர்களின் பிரசாரம் பலனளிக்கவில்லை. அதனால் முஸ்லிம்களுடன் வெறுப்புக் கொண்டு அவர்களுக்கு இன்னல் பல விளைவித்தனர். அந்தத் தமிழ் மீனவர் அனைவருமே கத்தோலிக்க மதத்தினராகி முஸ்லிம்களின் எதிரிகள் போலாயினர்.

மேற்குக் கரையில் தமது உடைமைகளைத் நிராகரித்து வெளியேறக் காரணமாயிருந்த கத்தோலிக்கரே மீண்டும் இங்கிருந்து நிலம் பெயரக் காரணமாயிருந்தனர். தமது உயிரினும் தமது மதமே பெரிதென மதிக்கும் முஸ்லிம்கள் இனியும் அங்கு வாழாது நிம்மதியாகச் சுதந்திரத்துடன் வாழ எண்ணி அண்மையில் சிறு தொகையினராக முஸ்லிம்கள் வாழும் மருதமுனைக்கு வந்து, தெற்குப் புறமாக இருந்த வெற்றிடத்தில் குடியமர்ந்தனர். அவர்களே ஆலங்குடியாராவார். தென்தெருவில் பள்ளிவாசல் ஒன்று அமையக் காரணராயிருந்தவர்களும் அவர்களே.

சொறிக்கல் முனையிலிருந்து குடிபெயர்ந்து வந்தவர்களில் அலியார் என்பவரும் ஒருவர். இளவல். புத்திசாலி. வியாபார நோக்குடையவர். இங்கு வாழ்ந்தவர்கள் பருத்தி நாட்டிப் பஞ்செடுத்து நூல் நூற்று

குளித்தறியில் நெசவு செய்து வருவதைத் தெரிந்து கொண்ட அவர் இந்தியாவில் உற்பத்தியான நூல் தூத்துக்குடியிலிருந்து பாய்க்கப்பல் மூலம் மட்டக்களப்பில் இறக்குமதியாவதை அறிந்து இங்கிருந்து வள்ளத்தின் மூலம் மட்டக்களப்புக்குச் சென்று நூல் வாங்கிக் கொண்டு வந்து இங்குள்ள நெசவாளருக்கு விற்பனை செய்து பெரும் பொரு ளீட்டினார். நிலபுலங்களை வாங்கினார். அதனால் அலியார்ப் போடி என மக்கள் அவரை அழைத்தனர். இந்த வியாபாரத்தில் காத்தான்குடி தொடர்பும் ஏற்பட்டது. அப்பொழுது காத்தான்குடியில் ஒரு பெண்ணை மணஞ் செய்து இங்கே அழைத்து வந்து வாழ்ந்து கொண்டிருந்தார். அந்தப் பெண்ணுக்குப் பிறந்த பெண் மகவின் பிற்சந்ததியினரே அலியார்ப்போடி குடியினராவர். இன்று ஐம்பதுக்கும் மேற்பட்ட வயது வந்த் வரியிறுப்பாளர்களையும் 200 க்கு மேற்பட்ட பெண் பிள்ளை களையும் கொண்டுள்ள இந்தப் பெருங்குடிக்கு நான் மூத்தவனாக இருந்து வருகிறேன்.

இக்குடியில் பல கல்விமான்களும் பல அரச சேவகர்களும், பல வசதி படைத்தவர்களும் தோன்றியுள்ளனர்.


அலியார் மரைக்கார் ஆதம்பாவா மரைக்கார், இறமுளான் முகம்மது செய்னுத்தீன் மரைக்கார், அனஸ் லெவ்வை மரைக்கார் செயினுலாபிதீன் மரைக்கார் ஆகிய மூவரும் இன்று இக்குடியின் தலைவர்களாயிருந்து வருகின்றனர். மரைக்காயரே இல்லாதிருந்த காலத்தில் எனது பெரும் முயற்சியால் ஒரு மரைக்கார் நியமனம் பெற்றார். ஜமாஅத்தினர் பெருகவே ஒருவர் மூவராய் அதிகரிக்கப்பட்டது. நம்பிக்கையாளர் சபையில் அங்கத்துவம் தரவேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறேன்.

ஆ.மு.ஷரிபுத்தீன்

**குறிப்பு:**

இந்நூலிலுள்ள வரலாற்றுக் குறிப்புகள் 1980ம் ஆண்டுடன் நிறைவுறுவதாக நான் அனுமானிக்கின்றேன். இதற்குப் பின்னரான வரலாறு ஆவணப்படுத்தப்பட வேண்டும். அதனைப் பொறுப்புள்ள கல்விமான்கள் செய்யும் கடமைப்பாடுடைய-வர்களாவர்.

- பதிப்பாசிரியர்



## மருதமுனை வரலாறு


இயற்கை அழகும் இலக்கிய வளமும் பொருந்தியது கிழக்கு. முந்தியதை இறைவனும் பிந்தியதை அது பெற்றெடுத்த தவப்புதல்வர்களும் அம்மண்ணுக்கு அளித்தார்கள் என்பது வழக்கு.

இத் தவப்புதல்வர்களின் ஒருவரான புலவர்மணி அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் கிழக்கு மண்ணின் மூத்த தவப்புதல்வரும் தமிழ்ப் பேரறிஞருமான சுவாமி விபுலானந்த அடிகளாரின் மாணவர். புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளையால் புலவர்மணி என்று அணிப்பெயரளிக்கப்பட்டவர்.

சீறா மற்றும் புதுகுஷ்ஷாம் காப்பியங்களுக்கும் உரை செய்தவர். புலவர் சின்னாலிம் அப்பாவின் "ஞானரைவென்றான்" நூலை அச்சில் தந்து அறிமுகஞ்செய்தவர். பல தமிழ் இலக்கிய நூல்களை அள்ளிப் பருக ஆக்கித் தந்தவர். தனது "நபிமொழி நாற்பது" வெண்பா நூலுக்காக 1967ல் சாஹித்ய விருதை பெற்றவர்.

கிழக்கிலங்கையின் முதலாவது தமிழ் முஸ்லிம் ஆசிரியராகப் பணி துவங்கித் தலைமை ஆசிரியராகவும் வட்டாரக் கல்வியதிகாரியாகவும் உயர்ந்தவர். இலங்கையின் முதல் சுயபாஷா வட்டாரக் கல்வியதிகாரி என்ற பெருமை பெற்றவர். தனது பிறந்த ஊரின் கல்விக்காகவும் உயர்ச்சிக்காகவும் வாழ்நாளெல்லாம் ஊழியம் செய்தவர்.

அவரது கையெழுத்துப் பிரதிகளுக்குள் கண்டெடுக்கப்பட்ட "மருதமுனை வரலாறு" என்ற இந்த நூலின் ஊரின் வரலாற்றைத் தெளிவாகவும் ரசிக்கத்தக்கதாகவும் நடுநிலைப் பார்வையுடனும் அவர் சொல்லியிருப்பதானது அவரது எழுத்து நடையின் அழகைச் சொல்வது. தான் வாழும் ஊரின் வரலாறே தன் வரலாறு என்பதைக் கற்றவருக்கும் மற்றவருக்கும் உணர்த்துவதற்கும் ஒரு பிரதேசத்தின் வரலாறு எவ்வாறு எழுதப்பட வேண்டும் என்பதற்கும் உதாரணமாகி உயர நிற்கும் நூல் இது.



**அஷ்ரஃப் சிஹாப்தீன்**
செயலாளர்
இலங்கை இஸ்லாமிய இலக்கிய ஆய்வகம்

ISBN 978-955-0122-00-4 **விலை 350.00**